Sangathamil
# சங்கத்தமிழ்

குரல் – 69 | சர்வதேச மின் செய்தித்தாள் | மார்ச் 15 2024

# ஈகைத்தீயினில் வந்தமர்தாள் ஒரு செந்தமிழ் மாது



# அன்னை பூபதி

**19.03.1988**

உண்ணாநோன்புப் போராட்டம் ஆரம்பித்த நாள்

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

NISHANTHAN LAW OFFICE
SERVICES
• Purchasing a Residential Property
• Selling a Residential Property
• Residential Mortgage Refinancing
• Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
* AUDIT
* REVIEW ENGAGEMENT
* NOTICE TO READER
* BUSINESS ADVISORY
* CONTROLLERSHIP SERVICES
* CORPORATE TAXES
* PERSONAL TAXES
* FINANCIAL PLANNING
* CRA AUDITS
* PAYROLL
* BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Ideal Auto Tech Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

JRS AUTO TECH
Call Subas
Cell: 416-206-9489
Office: 416-628-4399
AC $99.99 +
OIL CHANGE $49.99 +
USED TIRE $59.99 +
BRAKES JOB $249.99 +
7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
JRSAUTOTECH@HOTMAIL.CA

வெள்ளி அச்சுப் பதிப்பக நூல் வெளியீட்டாளர்கள்
Silver Print House
Digital Printing, Graphics & Publication
4775 Yarmarok Crt,
Mississauga Ontario L5R 0A6.
உங்களது தேவையே எங்களது சேவை
மேலதிக தொடர்புகளுக்கு : முகுந்தன் சிவதாசன்
Contact: Mukunthan (437) 423 - 5460
silverprinthouse@gmail.com

RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
1286 Kenndy Rd, Unit 03
Scarborough ON M1P 2L5
Office: 416.270.1111
Fax: 416.270.7000
Kajenpillai@gmail.com
www.remaxace.com
Kajan Kasippillai
Sales Representative
Dir: 416.930.4608

RE/MAX COMMUNITY
வீடு, வியாபாரம், காணி வாங்க விற்க அழையுங்கள்
Tharuma Somasunderampillai
Sales Representative
Dir: 416.268.6098
Bus: 416.287.2222
Fax: 416.282.4488
Email: tharuma.soma@gmail.com
Web: www.tharuma.com
1265 Morningside Ave, Suite 203
Toronto ON M1B 3V9

BUY | SELL | LEASE | INVEST
வீடு வாங்கணுமா விற்கணுமா
VARAN SUBRAMANIAM
SALES REPRESENTATIVE
647-295-5672
varanrealtor@gmail.com
RE/MAX COMMUNITY Realty Inc. Brokerage
RAISING YOUR VALUE
LOVE WHERE YOU LIVE

## விளம்பரத் தொடர்புக்கு அழையுங்கள்: 437.345.4203

# Sangathamil சங்கத்தமிழ்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

சர்வதேச மின் செய்தித்தாள்

## www.sangathamil.ca

# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

எமது போராளிகள்
குடும்பத்தைத் துறந்து,
கல்வியைத் துறந்து,
இளமையின் இன்பங்களைத் துறந்து,
சுதந்திரம் என்ற
இலட்சியத்திற்காகத் தமது
உயிரையும் துச்சமாக மதித்து
போராட்டக் களத்தில்
குதித்திருக்கின்றார்கள்.
இவர்களை
ஆயுதப் போராட்டப் பாதைக்குத்
தள்ளியது சிங்கள அரச
பயங்கரவாதமேயன்றி
வேறொன்றுமல்ல.







# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**
437 345 4203

**மின்னஞ்சல்** (Email)
sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)
www.sangathamil.ca


அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# எல்லாளன் நடவடிக்கையில் முக்கியபங்காற்றிய லெப். கேணல் தமிழ்மாறன்



22.10.2007 அன்றைய நாளை தமிழ் மக்கள் மட்டுமல்ல, சிங்கள மக்களும் ஏன் உலக இராணுவ வல்லுனர்களும் இலகுவில் மறந்து விடமாட்டார்கள். எல்லாளனைத் தோற்கடித் ததாகப் பெருமைகொண்ட சிங்கள இனத்திற்கு, யார் எல்லாளன் என்பதை தமிழீழ தேசியத் தலைவர் காண்பித்த நாள் அது. ஏன் இந்த உலகமும் எல்லாளனை அறிந்துகொண்டது அந்த நாளில்தான்.

இந்த எல்லாளன் நடவடிக்கை ஒரு சில மணி நேரங்களுக்குள் நடந்து முடிந்துவிட்டபோதும், இதற்கான திட்டமிடல்களும், பயிற் சிகளும், வேவுகளும் மிக நீண்ட காலமாக இடம்பெற்றன. இந்த வெற்றிக்காக கொடுக்கப்பட்ட விலையும் மிகவும் அதிகம். இந்த வெற்றிக்காக 21 அற்புதமான போராளிகள் தங்கள் உயிர்களை விலையாகக் கொடுத்திருக்கின்றார்கள். இவர்களின் உயிர்த் தியாகமும், இந்தத் தாக்குதலுக்கான காத்திருப்புகளும், விட்டுக் கொடுப்புக்களும், இழப்புக்களும் வீண்போகவில்லை, வீண் போகவும் மாட்டாது.

ஒரு ஆண்டிற்கும் மேற்பட்ட கடும் பயிற்சியில்தான் இந்த எல்லாளன் பிறப்பெடுத்தான். இதற்கான வேவு நடவடிக்கைகள் ஆண்டுக்காணக்காக நடைபெற்றன. வேவுப் போராளிகளின் நடவடிக்கையினால்தான் அந்தப் பிரமாண்டமான தளத்தின் பல உண்மைகள் கொண்டுவந்து சேர்க்கப்பட்டன. அநுராதபுரம் விமானப்படைத் தளத்திற்கான வேவு நடவடிக்கைக்கென சிறப்பு அணியாக நான்கு பேர் கொண்ட வேவு அணி ஒன்று உருவாக் கப்பட்டிருந்தது. அந்த வேவு அணியின் பொறுப்பாளராக லெப். கேணல் தமிழ்மாறன் நியமிக்கப்பட்டிருந்தார்.

அநுராதபுர வான்படைத் தளத்தினை முழுமையாக வேவு அணியினர் கண்காணித்து ஒளிப்படம் (வீடியோ) எடுத்து, எங்கு எங்கு காவலரண்கள் இருக்கின்றன. அங்கு பொருத்தப்பட்ட ஆயுதங்கள் என்ன, எந்த எந்தப் பகுதிகளில் விமானங்கள் தரித்து நிக்கின்றன என்பன தொடர்பான முழுமையான தகவல்கள் வேவு அணியினரால் சேகரிக்கப்பட்டிருந்தது. இந்தத் தகவல்களை உள்வாங்கி எல்லாளன் நடவடிக்கைகான செயற் திட்டங்கள் தமிழீழ தேசியத் தலைவரால் நேரடியாக வகுக்கப் பட்டு, படையப் புலனாய்வுத்துறை பொறுப்பாளராக இருந்த றெட்ணம் மாஸ்ரர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இந்தத் தாக்குதலுக்காக 21 கரும்புலிப் போராளிகள் தேர்ந்தெடுக் கப்பட்டிருந்தனர். அத்துடன், இந்தத் தாக்குதலுக்கான திட்டம் வெளியில் அல்ல போராளிகளின் உயர் மட்டங்களில் கூட தெரியாத அளவிற்கு மிகவும் இரகசியம் காக்கப்பட்டிருந்தது. இந்தத் தாக்குதலுக்காக ஒருங்கிணைக்கப்பட்டிருந்த 21 கரும் புலி போராளிகளிடமும் தாக்குதலுக்கான திட்டங்கள் நேரடியாக விபரிக்கப்படும். இந்தத் தகவல்களை உள்வாங்கி தாக்குதல் திட்டங்களை இந்த அணிக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்த சிறப்பு கரும்புலி லெப்.கேணல் இளங்கோ ஏனைய கரும்புலிப் போராளிகளுக்கும் அத்திட்டத்தை புரியவைப்பான்.

இந்தக் கரும்புலி அணியினருக்கான பயிற்சிகள் ‘அல்லா-4’ என்ற பயிற்சித் தளத்தில் சிறப்புற ஒழுங்கமைக்கப்பட்ட இடங் களில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. சில தேவைகள் கருதி வேறு இடங்களிலும் நகர்வுப் பயிற்சிகள் நடைபெற்றுக் கொண டிருந்தன. பயிற்சி ஆசிரியருடன் லெப்.கேணல் இளங்கோவும் ஒரு பயிற்சி ஆசிரியராக அன்று செயற்பட்டுக்கொண்டிருந்தான்.

இந்நிலையில் தாக்குதலுக்கு முன்னான மாற்றங்கள் குறித்து அறிந்துகொள்வதற்காக அநுராதபுர வான்படைத் தளத்திற்கான இறுதி வேவு நடவடிக்கை லெப்.கேணல் தமிழ்மாறன் தலைமையிலான வேவு அணியினர் மேற்கொண்டிருந் தார்கள். அந்த இறுதி வேவு நடவடிக்கையே 8 மாத காலப் பகுதியாக நடைபெற்றது.



அனைத்து தரவுகளும் உறுதிப்படுத்திக்கொண்டு, இறுதி வேவு பார்த்துவிட்டு தளம் திரும்பிக் கொண்டிருக்கையில்தான் அந்த வெடிவிபத்து இடம்பெற்றது. சிங்களக் கிராமங்களின் ஊடாக அனுராதபுர காட்டுப்பகுதியில் வேவுப் போராளிகள் சென்று கொண்டிருந்தபோது, அந்தபகுதியில் பொருத்தி வைக்கப்பட் டிருந்த கட்டுக்குழல் துவக்கில் அகப்பட்டு தமிழ்மாறன் காயம் அடைகின்றான். காயத்துக்கான முதலுதவியுடன் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதி நோக்கி வேவு அணியினர் நகர்கின்றார்கள். இவர்களின் வருகைக்காக அன்று மன்னார் மாவட்டத்தின் எல்லைப் பகுதி ஒன்றில் தளபதி றெட்ணம் மாஸ்ரர் அவர்களும், லெப்.கேணல் இளங்கோவும் காத்திருக் கின்றார்கள்.

அடம்பன் பகுதியில் வேவு அணியினர் இவர்களை சந்திக்கின் றார்கள். அங்கிருந்து வாகனம் ஒன்றில் கிளிநொச்சி நோக்கி பயணத்தை தொடர்கின்றார்கள். இந்த காலகட்ட பகுதியில் சிறீலங்காவின் ஆழ ஊடுருவும் படையினர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஊடுருவி கிளைமோர் தாக்குதல்களை பரவலாக நடத்திக்கொண்டிருந்தார்கள். அந்நிலையில் இவர்களது வாகனமும் சிறீலங்காப் படை யினரின் கிளைமோர் தாக்குலுக்கு இலக்காகின்றது. ஆனால் உயிர்சேதம் ஏதுவும் ஏற்படவில்லை. உடனடியாக வாகனத்தில் இருந்த இளங்கோ மற்றும் வேவு அணி போராளிகள் காட்டுக்குள் இறங்கி தாக்குதல் தொடுத்து, எதிரியை விரட்டிக் கலைத்தார்கள்.

அன்று அந்தக் கிளைமோர் தாக்குதலில் இவர்களுக்கு ஏதும் நடந்திருந்தால், எல்லாளன் நடவடிக்கை அன்றே இடைநிறுத் தப்பட்டிருக்கும். இவ்வாறான சூள்நிலையில்தான் அன்றைய இறுதி வேவு தகவல்களுடன் போராளிகள் தலைமைப் பீடத்தினை சென்றடைந்து அங்கு அனைத்தையும் பற்றி விபரிக்கின்றார்கள். பின்னர் கரும்புலிகள் அணியினருக்கு விளங்கப் படுத்துகின்றார்கள். எல்லாளன் நடவடிக்கைக்குரிய மாதிரிப் (மொடல்) பயிற்சியும் முடிந்துவிட்டது. மாதிரிப் பயிற்சி முடிந்து விட்டால் இனி இறுதிச் சண்டைதான் என்ற மனசந்தோசதம் போராளிகள் மத்தியில் வந்துவிடும். இதன்பின்னர்தான் தலைவருடன் படம் எடுத்து, உணவு உண்டு அளவளாவி பேசி விடைபெறுகின்றார்கள். யாருக்கும் தெரியாமல் ஊர் மக்கள் உலாவிய அந்த வீதியால்தான் அநுராதபுரம் நோக்கி நகர்கின்றார்கள். அந்த 21 சிறப்புக் கரும்புலிகளும் அந்த இரவுப் பொழுதில் தாம் உலாவிய நகர்களுக்கு விடை

கொடுக்கின்றார்கள். இவர்கள் நகர்ந்து சொல்லவேண்டிய தூரம் 50 கிலோ மீற்றருக்கு அதிகம் என்றுதான் சொல்ல வேண்டும்.

காட்டுக்குள்ளால் தங்களுக்கு தேவையான வெடிமருந்து உணவுகளுடன் எத்தனையோ ஆறுகளை தாண்டிசெல் லவேண்டிய தேவை. இவ்வாறு நகர்ந்து சென்றுதான் தமது இலக்கினை அடைந்துகொள்கின்றார்கள். இவர்களை அந்த வேவு அணி போராளிகள்தான் இலக்குவரை கொண்டுசென்று விடுகின்றார்கள். உண்மையில் சிங்கப்படையினைபோல் பிணந்தின்னும் கழுகுகளாக அவர்கள் போகவில்லை. இறுதி யாக தலைவர் அவர்கள் கூறிய வார்த்தைகளை மனதில் சுமந் தபடியே சென்றார்கள். “இதுமுற்றுமுழுதாக படைத்தளம். அங்கு உங்கள் வீரத்தைகாட்டுங்கள். ஆனால் படை அதிகாரிகள் யாரினாவது குடும்பங்கள், பிள்ளைகள் அங்கு நிற்கக்கூடும். தாக்குதல் நடக்கேக்க அவர்களை பத்திரமாக அகற்றி, அவைய ளுக்கு ஒன்றும் நடக்காமல் பாத்துக்கொள்ளுங்கள்” என்ற தலைவரின் அக்கறையையும், மனித நேயத்தையும் அந்தக் கரும்புலி அணியினர் புரிந்துகொண்டிருந்தனர்.

தலைவர் அவர்கள் கூறிய வார்த்தைளை நினைவிற்கொண்டு



அந்தக் கரும்புலி மறவர்கள் சிங்களத்தின் குகைக்குள் புகுந்துகொள்கின்றார்கள். அந்தவீரர்களின் ஒவ்வொரு நகர்வும் தலைமைப்பீடத்திற்கு தெரியப்படுத்திக்கொண்டிருந்தார்கள். 21 சிறப்பு கரும்புலிகள் தமிழீழ எல்லை கடந்து எதிரியின் எல்லைக்குள் புறப்பட்ட கணம் முதல் தலைவர் அவர்கள் அந்த வீரர்கள் பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தார். அன்று அதி காலை பொழுது நகர்ந்துகொண்டிருக்கின்றது.

முதன்நாள் இரவு சில தளபதிகளை தலைவர் அவர்கள் தனது இடத்திற்கு அழைத்திருந்தார். காரணம்தெரியாமலேயே தள பதிகள் அங்கு கூடியிருந்தனர். அப்போது, ‘இன்று உங்களுக்கு எல்லாளனை காட்டபோகின்றேன்’ என்று சொல்லிவிட்டு அடுத் துவரும் தகவல்களுக்காக தளபதிகளும் தலைவரும் காத்தி ருக்கின்றார்கள். பெரும் இலட்சிய நெருப்பை சுமந்து செல்லும் அந்த வீரர்கள் உச்சமான சாதனை புரிந்து தமிழீழ மண்ணின் வரலாறாக வேண்டும் என நினைத்துக்கொண்டிருக்கையில், இலக்கினை அடைகின்றார்கள் கரும்புலிகள்.

இந்த சிறப்பு கரும்புலிகள் அணியினருக்கு வழிகாட்டி அநுராத புர தளத்திற்குள் கொண்டுசென்று விட்ட வேவு அணியினர், தகவல்களை தலைமைபீடத்திற்கு தெரியப்படுத்தி, உறுதிப்படுத் துவதற்காக ஒளிப்படம் எடுக்கின்றார்கள். தாக்குதல் தொடங்கு வதில் இருந்து அநுராதபுரம் தீ மூழும்வரை ஒளிப்படம் எடுத் தவர்கள், கரும்புலிகள் அணியினரின் அனைத்து செயற் பாடுகளையும் தொலைத்தொடர்பு ஊடாக கேட்டுக்கொண்டு அதனை தலைமைப்பீடத்திற்கு தெரியப்படுத்திக்கொண்டும் நின்றார்கள்.

அதிகாலை 1.30 மணி, அனுராதபுர வான்படைத்தளம் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கின்ற வேளையில், உள்நுழைந்தவர்கள், அதிகாலை 3.00 மணிக்கு தாக்குதலைத் தொடுக்கின்றார்கள். 21 கரும்புலிகள் சுமார் ஏழு மணி நேரம் அப்பெரும் தளத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்திருந்தது ஒரு பெரும் சாதனை. சண்டை 10.00 மணிக்கு இறுதிக் கரும்புலியின் வீரச்சாவுடன் நிறைவுக்கு வருகின்றது. இலக்குகளை தாக்கி அழித்துவிட்டு பெரும் வெற்றியைத் தமிழ் மக்களுக்கு பெற்றுக கொடுத்துவிட்டு கரும்புலிகள் அனைவரும் விழிகளை மூடிக்கொண்டார்கள்.

இவர்களின் வீரச்சாவை உறுதிப்படுத்திக்கொண்டுதான் லெப். கேணல் தமிழ்மாறன் தலைமையிலான வேவு அணியினர் தாயகம் நோக்கி திரும்புகின்றார்கள். கரும்புலி அணியினரின் தாக்குதலுக்கு பக்கபல உதவியாக விடுதலைப் புலிகளின் வான்புலிகளும் குண்டுகளை வீசி அநுராதபுரம் வான்படைத் தளத்தின் மீது தாக்குதல் தொடுத்துவிட்டு தளம் திரும்பி விடுகின் றார்கள். எதிரியின் சரமாரியான தாக்குதலுக்கு மத்தியிலும் வான்புலிகள் நடத்திய இந்தத் தாக்குதல் வான் புலிகளின் தாக் குதல் வரலாற்றில் ஒரு மைல்கல் என்றுதான் கூறவேண்டும்.

இந்நிலையில் சிறீலங்காப் படைக்கு உதவிக்கு வந்த உலங்கு வானூர்தி ஒன்றும் சுட்டுவீழ்த்தப்படுகின்றது. ஒரு சில மணி நேரங்களுக்குள் பல கோடி பெருமதியான போர் விமானங் களையும், இராணுவ தளவாடங்களை இழந்தது. இந்த அவமானத்தை தாங்கமுடியாத சிங்களத் தலைமைகளும், சிங்களப் படையினரும் தமது ஆற்றமையினை அந்தப் போராளிகளின் வித்துடல்கள் மீது காண்பித்தார்கள். அந்த வழித்தோன்றல் நாகரீகம் சிங்களத்தோடு கூடப்பிறந்தது என் பதை முள்ளிவாய்கால் வரையான படுகொலைகளின் சாட்சியங் களும் இப்போது எடுத்துக்காட்டுகின்றன.

அன்று அந்த 21 சிறப்பு கரும்புலிகளும் அநுராதபுரம் வான் படைத் தளத்தில் மட்டும் தீயினை மூட்டவில்லை, பெரும் விடுதலைத் தீயினை உலகில் பரந்துவாழும் தமிழ் மக்களின் இதயங்களில் மூட்டியிருக்கின்றார்கள். நிச்சயம் தமிழீழம் அமைப்பது உறுதி அந்த மாவீரர்களின் இலட்சிய கனவு நனவாவதும் உறுதி.

லெப். கேணல் தமிழ்மாறன். இந்த வீரனை எல்லோருக்கும் வெளியில் தெரியாது. அந்த 21 சிறப்பு கரும்புலிகளுடன் ஒன்றாக அதிகம் பழகியவன். ‘எதிரியே உன் படுக்கையைத் தட்டிப்பார் அதற்குக் கீழும் கரும்புலி உறங்குவான்’ என்ற கவிஞரின் வரிகளில் வேவுப் புலிகளையும் சேர்க்கவேண்டும் என்று சொல்லும் அளவிற்கு அநுராதபுர வான்படைத் தளத்தினுள் சிங்களபடைக்கு அருகில் ஒன்றாக படுத்து உறங்கிய ஒரு துணிச்சல் மிக்க புலி.



சிங்களப் படையின் பெரும் இன அழிப்புப் போரில், முள்ளி வாய்க்கால் வரை எதிர்நின்று சமராடிய வீரன். அந்த முள்ளி வாய்க்கால் மண்ணிலேயே விதையாக வீழ்ந்தான்…!

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.






# ஆசையோடு தேசம் காண இருந்தவருக்கு இந்தி அதிகாரம் எமனானது!

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

மார்ச் 01, 2024



தமிழர் தேசக் கனவோடு தாயகம் பிரிந்து, இந்திய ஒன்றியத்தின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக் கில் குற்றஞ்சாட்டப்பட்டு, முழுமை பெறாத நீதி விசாரணை யால் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஏழு தமிழர்களில் ஒருவராக 33 ஆண்டுகள் சிறை வாழ்வை அனுபவித்து தாயகம் காண காத்திருந்த தில்லையம்பலம் சுதேந்திரராஜா எனும் இயற் பெயருடைய சாந்தன் அவர்கள் விரைவில் நாடு திரும்புவார் எனும் தமிழர்களின் எதிர் பார்ப்பும் தாயையும் தாய் மண்ணையும் காண வேண்டும் என்னும் இறுதி ஆசையும் நிறைவேறாமலேயே அவர் உயிர்பிரிந்த செய்தி தமிழர் இதயங்களைக் கனக்க வைத்துள்ளது என யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

சாந்தனின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து இன்றைய தினம் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

பெற்ற மகனை ஒரு முறையாவது உயிருடன் பார்த்து விட வேண்டுமென்ற தாய்க்கும் - மகனுக்கும் இடையிலான 33 ஆண்டுகள் பாசப் போராட்டத்தில் சாந்தன் அவர்களின் இழப்பு அனைவரையும் வெடித்தழ வைக்கின்றது. மரணம் நிகழ்ந்த 28 ஆம் திகதி காலையில்க் கூட மகன் வருவான் என்று கோவில் தீர்த்தத்துடன் காத்திருந்த தாய்க்கு வாழ்நாள் ஏக்கம் கனவாய்ப் போனது பெருந் துயர்!

ஏதும் அறியா இளைஞனாக தமிழகம் வந்தவரை மூன்று தசாப்த காலத்திற்கும் மேலாகச் சிறைப்படுத்தி, சித்திரவதை செய்து நீண்ட நெடிய சட்டப் போராட்டங்களின் பின்னர் 11.11.2022 ஆம் திகதி இந்திய ஒன்றிய உச்ச நீதிமன்றம் விடுதலை செய்த பின்னரும் இயற்கை நீதிக்கு முரணாக தொடர்ந்து 15 மாதகாலம் திருச்சி சிறப்பு முகாமில் தடுப்பில் வைத்திருந்து உடல், உள ரீதியாய் பலவீனப்படுத்தி சிறுகச் சிறுகச் கொன்று தாயையும் தாய் மண்ணையும் காண ஆவல் கொண்டிருந்தவரை இன்று உயிரற்ற சடலமாய் அனுப்பி வைத்திருக்கிறது இந்தியம்.

பாரத தேசத்தின் பிராந்திய நலன்களிற்கு எதிராகச் செயற் பட்டு தொடர்ந்தும் அவமதித்து வரும் சிறீலங்கா அரசுடன் நட்புப் பாராட்டும் காந்தி தேசம், தங்களின் அற்ப பூகோள நலன்களிற்காக தங்களை நோக்கி என்றுமே நேசக்கரம் நீட்டும் ஈழத்தமிழ் மக்களைத் வஞ்சிப்பதென்பது அந்த நாடு இதுவரைகாலமும் தான் கொண்ட வரலாற்றிற்கும் பெருமைகளிற்கும் இழுக்கானதாகும். அன்று முதல் இன்று வரை காந்தியின் பெயர் கொண்டு, புரியும் கொடுரங் களால் தனக்கு மேல் போர்த்திய போர்வைகளைந்து நிர்வாணமாய் நிற்கின்றது காந்தி தேசம்.

29.02.2024 அன்று நடந்த நீதிமன்ற வாதங்களில் தமிழக அரசு வழக்கறிஞரின் கூற்றுப்படி தமிழக அரசே சாந்தன் அவர்களை விடுவிப்பதில் காலந்தாழ்த்தியது எனும் துயரச் செய்தி, எமக்காய் தமிழக உறவுகளும் தமிழக அரசும் நிற்பார்கள் என்று நம்பும் ஈழத்தமிழ் மக்களிற்கு துரோகச் செய்தியாய்ப் போனது இன்னுமொரு பெருந் துயரம்!

சாந்தன் அவர்களைத் தாயகம் அழைத்து வருவதற்கு இறுதி ஒரு மாதகாலத்திற்குள் காணப்பட்ட ஏதுநிலையை குறிப்பிட்ட சில காலங்களிற்கு முன்னதாகவேனும் உருவாக்கிட நடவடிக்கை ஏதும் எடுத்திருந்தாற் கூட பெற்ற தாயைக் காண வேண்டும் எனும் இறுதி ஆசையையேனும் நிறைவேற்றிக் கொடுத்திருந்திருக்கலாம். ஆனால், ஏழு தமிழர்கள் இந்திய ஒன்றிய உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட ஒன்றாண்டு காலப்பகுதிக்குள் ஈழத்தமிழ் அரசியல் தலைமைகள் கூட்டாக ஒரு தீர்க்ககரமான தீர்மானங்களெதனையும் மேற்கொள்ளாது, அசமந்தமாகவும் அலட்சியப் போக்குடனும் செயற்பட்டமை என்பது மன்னிக்க இயலாத கண்டனத்திற்குரியதொன்று.




நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட பின்னரும் இயற்கை நீதிக்கு விரோதமாக சிறப்பு சித்திரவதை முகாம்களில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ள எஞ்சியுள்ளவர்களையும் விடுதலை செய்து ஈழத்தமிழர்களை சிதைத்தெடுக்கும் சித்திரவதை முகாமிற்கு இனியாவது முடிவுரையெழுத இந்திய ஒன்றிய, மாநில அரசுகளை வேண்டுகின்றோம்.

ராஜீவ்காந்தி கொலையில் குற்றஞ்சாட்டப்பட்ட ஏனைய மூன்று ஈழத்தமிழர்களையும் அவர்கள் விரும்பும் இடங்களில் வசிப்பதற்கு அனுமதிக்க வேண்டுவதோடு, தாயகம் திரும்ப எவரேனும் விரும்பினால் அவர்களை அழைத்து வர இனியாவது உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஈழத்தமிழ் அரசியல் தரப்புக்களையும் சிறீலங்கா, இந்திய அரசுகளையும் வலியுறுத்துகின்றோம்.

நீதியைக் காத்து நிலைநாட்டுவதில் பக்கம் சாராமல் இந்திய உச்ச நீதிமன்றம் மரண தண்டனை விதிக்கப்பட்ட காலம் முதல் அவர்களின் விடுதலைக்கான காலம் வரையில் காலத்திற்குக் காலம் எத்தனையோ வாய்ப்புக்களை வழங்கியும் இந்திய ஒன்றிய அரசும் தமிழக அரசும் தொடர்ச்சியான சட்ட செயற்பாடுகளின் மூலம் தாமதப்படுத்தியமை என்பது ஈழத்தமிழ் மக்களின் மீதான கசப்புணர்வையே வெளிப்படுத்தியிருப்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது. இனிமேலாவது ஈழத்தமிழ் மக்களின் உரிமைகளிற்கு விரோதமான செயல்களிற்கு முற்றுப் புள்ளி வைத்து, ஈழத்தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்க உளச்சுத்தியுடன் இந்திய அதிகாரம் செயற்பட வேண்டுகின்றோம் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மாவீரர் சாந்தனின் மறைவிற்கு யாழ். பல்கலைக்கழகத்தில் வணக்கம் செலுத்தும் வகையில் கறுப்புக் கொடி!

மார்ச் 01, 2024

மறைந்த மாவீரர் சாந்தனுக்கு வணக்கம் செலுத்தும் வகையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகம் எங்கும் கறுப்புக் கொடி பறக்கவிடப்பட்டுள்ளது.


இந்திய முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று விடுவிக்கப்பட்ட சாந்தன், திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்தார்.

அவர் இலங்கை திரும்பலாம் என கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி இந்திய மத்திய அரசு அனுமதி வழங்கியிருந்தது.

இந்நிலையில், கல்லீரல் செயலிழப்பு காரணமாக சென்னை ராஜிவ் காந்தி அரசு மருத்துவமனையில் சாந்தன் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடந்த 28ஆம் திகதி மாரடைப்பு காரணமாக அவர் உயிரிழந்ததாக அறிவிக்கப் பட்டது.







# தீவகத்தின் நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலைதீவும் அதானி கிரீன் எனர்ஜி நிறுவனத்திற்கு விற்பனை!

மார்ச் 02, 2024



இலங்கையின் வடபுலத்தினை சுருட்டுவதில் இந்திய அரசு மும்முரமாகியுள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் உள்ள 3 தீவுகளில் கலப்பின புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைப்பை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தம் இன்று (01) கைச்சாத்திடப் பட்டுள்ளது.




இந்திய அரசின் 11 மில்லியன் அமெரிக்க டொலர் முழு நிதி மானியத்தின் கீழ், நெடுந்தீவு, அனலைதீவு மற்றும் நயினாதீவில் மார்ச் 2025க்குள் கலப்பின புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைப்பைப் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே இலங்கையின் மன்னார் பகுதியில் அதானி நிறுவனத்தின் திட்டத்திற்கு முறைகேடாக அனுமதி தர அந் நாட்டு அரசு அமைப்புகள் முயற்சித்து வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

திட்டத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு உள்ளிட்ட ஆய்வுகள் அனைத்தும் அதானி நிறுவனத்திற்கு சாதகமாக நடத்தப்பட்டு அறிக்கை கொடுக்கப்பட்டிருப்பதாக புகார் எழுந்துள்ளது.

உலகிலேயே பறவைகள் இடம்பெயர்ந்து செல்லும் முக்கியமான எட்டு இடங்களில், தெற்கு ஆசிய மார்க்கத்தின் சொர்க்கமாக இலங்கை திகழ்கிறது. பல ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர் தூரம் கடந்து, சுமார் 30 நாடுகளில் இடம்பெயர்ந்து இந்த பறவைகள் இலங்கைக்கு வருகின்றன. ஆண்டுக்கு சுமார் ஒன்றரை கோடி பறவைகள் இலங்கைக்குள் பிரவேசிப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. இலங்கைக்குள் பறவைகள் பிரவேசிக்கும் பிரதான மார்க்கமாக மன்னார் உள்ளது.

இந்நிலையில், புலம்பெயர் பறவைகள் இலங்கைக்குள் வராத காலங்களில், அரசு நிறுவனங்கள் அறிவியல்பூர்வமற்ற சுற்றுச் சூழல் மதிப்பீட்டு அறிக்கையை தயாரித்து, அதானி கிரீன் எனர்ஜி சிறீலங்கா நிறுவனத்திற்கு, கற்றாலை மின்உற்பத்தி திட்டத்தை வழங்குவதற்கு தயாராகி வருவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளது.

# தமிழீழ மண்ணில் சாந்தனின் புகழுடல்!

மார்ச் 02, 2024

அரசியல் கைதி தில்லையம்பலம் சுதேந்திரராஜா (சாந்தன்) அவர்களது புகழுடல் நாளை ஞாயிற்றுக்கிழமை மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படவுள்ள நிலையில் நாளை தினமான ஞாயிற்றுக்கிழமையினை தமிழ் தேசிய துக்கதினமாக அனுஸ்டிக்க பொது அமைப்புக்கள் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளன.

நாளைய தினமான ஞாயிற்றுக்கிழமையினை தமிழ் தேசிய துக்கதினமாக அனுஸ்டிக்க பொது அமைப்புக்கள் இன்று சனிக்கிழமை ஒன்று கூடி தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ள குரலற்றவர்களின் குரல் அமைப்பின் இணைப்பாளர் முருகையா கோமகன் நாளை தினம் தேவையற்ற களியாட்ட நிகழ்வுக்களை தவிர்த்து அமரர் சாந்தனிற்கு அனைவரும் திரண்டு வந்து வணக்கம் செலுத்த அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழகத்தில் நோய்வாய்ப்பட்டு உயிர் துறந்த அரசியல் கைதி தில்லையம்பலம் சுதேந்திரராஜா (சாந்தன்) அவர்களது புகழுடல் நாளை ஞாயிற்றுக்கிழமை மக்கள் வணக்கம் செலுத்த ஏதுவாக அவரது தாய் மண்ணிற்கு எடுத்துவரப்படவுள்ளது.

நாளை காலை 8மணிக்கு வவுனியாவில் மக்கள் வணக்கத்துக்கு வைக்கப்படும் சாந்தனின் புகழுடல் தொடர்ந்து மாங்குளம் பகுதிக்கு 9.00 மணிக்கு எடுத்துவரப்படவுள்ளது.


தொடர்ந்து காலை 10.30 மணிக்கு கிளிநொச்சியில் மக்கள் வணக்கத்தின் பின்னராக யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப் படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கொடிகாமம் நெல்லியடி ஊடாக அவரது பிறந்த மண்ணான உடுப்பிட்டிக்கு எடுத்துவரப்பட்டு வல்வெட்டித்துறை தீருவிலில் பிற்பகல் 2.00 மணி முதல் 4.00 மணிவரை மக்கள் வணக்கத்துக்கு வைக்கப்படவுள்ளது.

மாலை அவரது வீட்டிற்கு எடுத்துச்செல்லப்படும் புகழுடல் அடுத்த தினமான திங்கட்கிழமை அவரது குடும்ப மயானமான எள்ளங்குளம் மயானத்தில் அடக்கம் செய்யப்படவுள்ளது.

வவுனியா, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் முன்னெடுக்கப்படவுள்ள புகழ் வணக்க நிகழ்வுகளில் வேறுபாடுகளை களைந்து அனைவரையும் அணி திரண்டு வணக்கம் செலுத்த அழைப்பு விடுத்துள்ள பொது அமைப்புக்கள் அனைத்து இடங்களிலும் நீதி கோரியும் துக்கதினத்தை நினைவு கூரும் வகையில் கறுப்பு கொடிகளை தொங்கவிடவும் கோரிக்கை விடுத்துள்ளன.

இறுதி நினைவு வணக்கம் நடாத்தப்படவுள்ள வல்வெட்டித்துறை தீருவிலில் அனைவரையும் திரண்டுவர அழைப்பு விடுத்துள்ள பொது அமைப்புக்கள் இறுதிக்கிரியைகள் நடைபெறும் திங்கட்கிழமை குடும்பத்தவர்கள் மற்றும் ஊர் மக்கள் வணக்கம் செலுத்தவும் ஒத்துழைக்க கோரிக்கை விடுத்துள்ளன.




# யாழ். வலிகாமம் வடக்கு பகுதியில் 34 வருடங்களுக்கு பின்னர் ஆலயத்தில் வழிபாடு!

மார்ச் 02, 2024

யாழ்ப்பாணம் வலி வடக்கு பகுதிகளில் உள்ள ஆலயங்களுக்கு சுமார் 34 வருடங்களின் பின்னர் சென்று வழிபட சிங்கள இராணுவத்தினர் அனுமதி வழங்கி இருந்தனர்.

வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள ஆலயங்களுக்கு சென்று, பிரதி வெள்ளிக் கிழமைகளில் வழிபட இராணுவத்தினர் கட்டுப்பாடுகளுடன் அனுமதி வழங்கியுள்ளனர்.

கடந்த 23ஆம் திகதி சில ஆலயங்களுக்கு இராணுவத்தினர் அழைத்து சென்று இருந்த நிலையில், நேற்றைய நாள் வெள்ளிக்கிழமை கட்டுவான் முத்துமாரியம்மன் ஆலயம் மற்றும் மானம்பிராய் பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றுக்கு அழைத்து சென்று இருந்தனர்.

அதன் பொது ஆலயத்திற்கு 30 பேர் வரையில் சென்று இருந்தனர். அவர்களை இராணுவத்தினர் தமது பேருந்துக்களில் அழைத்து சென்று, ஆலய சூழலில் வழிபாடுகள் நடாத்தி வழிபட அனுமதித்து, பின்னர் மீண்டும் ஆலயத்தில் இருந்து மக்களை தமது வாகனத்தில் அழைத்து வந்து உயர்பாதுகாப்பு வலய எல்லை பகுதியில் இறக்கி விட்டனர்.

கடந்த 1990ஆம் ஆண்டு தீபாவளி தினத்தன்று, சிறீலங்கா இராணுவ நட வடிக்கை காரணமாக அப்பகுதிகளில் இருந்து தாம் வெளியேறிய பின்னர், 34 வருட காலமாக எமது சொந்த இடங்களுக்கு மீள திரும்ப முடியாதவாறு , எமது பகுத்து உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படுகிறது.

34 வருடங்களின் பின்னர் ஆலய வழிபாட்டிற்கு அனுமதி வழங்கி, எம்மை அழைத்து சென்று ஆலயத்தில் வழிபட விட்டு, மீண்டும் அழைத்து வந்துள்ளனர்.



மிக விரைவில் எம்மை நிரந்தரமாக சொந்த இடங்களில் மீள குடியமர அனுமதி வழங்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.







# திருக்கோவிலில் இல்மனைட் அகழ்வுக்கு எதிராக மீண்டும் பொதுமக்கள் போராட்டம்!

மார்ச் 01, 2024

திருக்கோவில் பிரதேசத்தில் இடம்பெற்று வருகிற இல்மனைட் அகழ்வினைத் தடை செய்யக் கோரி திருக்கோவில் பிரதேச மக்களினால் இன்றைய நாள் (01) கண்டனப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

திருக்கோவில் மணிக்கோபுர சந்தியில் போராட்டம் ஆரம் பிக்கப்பட்டு பேரணியாக திருக்கோவில் பிரதேச செயலாளர் அலுவலம் வரை சென்று இல்மனைட் அகழ்வினை நிறுத்தக் கோரி மக்களினால் மகஜர் கையளிக்கப்பட்டது.

திருக்கோவில் பிரதேசத்தில் இல்மனைட் அகழ்வு இடம்பெற்று வந்த நிலையில் பிரதேச மக்களின் எதிர்ப்பின் காரணமாக பிரதேச அபிவிருத்திக் குழு மற்றும் மாவட்ட அபிவிருத்திக் குழக் களின் தீர்மானங்களுக்கு அமைய தடை செய்யப்பட்டிருந்தது.

தற்போது அத்தீர்மானங்களை மீறி மீண்டும் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதை அறிந்த மக்கள் இன்றைய நாள் அகழ்வு நடவடிக்கையை எதிர்த்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக நிலவுகின்ற இந்த பிரச் சினை தொடர்பில் பிரதேச சபையோ, பிரதேச செயலகமோ எவ்வித அனுமதியும் இதுவரை வழங்கவில்லை.

இந்த விடயம் தொடர்பில் இதற்கு முன்னரும் மக்களால் மகஜர் வழங்கப்பட்டு மாவட்ட அரசாங்க அதிபருக்கு தெரியப்படுத் தப்பட்டுள்ளது. இன்று வழங்கப்பட்ட மகஜர் தொடர்பிலும் மாவட்ட அரசாங்க அதிபருடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும் என்ற பிரதேச செயலாளரின் உறுதிக்கு அமைய போராட்டம் நிறைவு பெற்றது.



இக்கண்டணப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் த.சுரேஸ், மக்கள் விடுதலை முன்னணியின் பொத்துவில் தொகுதி அமைப்பாளர் ரவீந்திர குணவர்தன, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அம்பாறை மாவட்ட இளைஞர் அணித் தலைவர் துசானந்தன் உள்ளிட்ட அரசியற் கட்சிகளின் பிரதிநிகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிகள், உள்ளூார் அரசியல் பிரதிநிகள், பிரதேச பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, 'இல்மனைட் அகழ்வினை உடன் நிறுத்து', 'எங்கள் வளம் எமக்கு வேண்டும்', 'எங்கள் வளங்களைச் சுரண்டாதே', 'கொள்ளையர்களே வெளியேறு', 'இல்மனைட் அகழ்வைத் தடை செய்' போன்ற வாசகங்கள் குறிப்பிடப்பட்ட பதாதைகளை பேராட்டக்காரர்கள் ஏந்தியவாறு கோசங்களை எழுப்பினர்.





# கிளிநொச்சி – பளை இயக்கச்சியில் தென்னிலங்கையை சேர்ந்தவர்கள் காடழித்து காணிகளை கைவசப்படுத்த முயற்சி!

மார்ச் 02, 2024

கிளிநொச்சி பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இயக்கச்சி பகுதியில் கடந்த சில நாட்களாக தென்னிலங்கையை சேர்ந்த பெரும்பான்மை இனத்தைவர்கள் சிலர் காடுகளை வெட்டி காணியை கைவசப்படுத்திக்கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடு பட்டுள்ளதாக பிரதேச பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக ஆனையிறவுக்கும் இயக்கச்சிக்கும் இடையில் ஏ9 வீதிக்கு கிழக்கு பக்கமாக உள்ள காட்டுப் பகு தியில் இயந்திர உபகரணங்கள் மூலம் பெரும்பான்மை இனத் தைச் சேர்ந்த சிலர் காடுகளை வெட்டி பல ஏக்கர் பரப்பளவில் காணிகளை பிடிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த பிரதேசத்துக்கு அருகில் சிங்கள இராணுவ முகாம் ஒன்றும் இருக்கிறது என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர், பளை பொலிஸார், கிராம அலுவலர் உள்ளிட்டவர்களின் கவனத்துக்கு கொண்டு சென்றதாகவும், ஆனால் இதுவரை எவ்வித நட வடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவிக்கும் பொது மக்கள், தாம் சிலர் காடுகளை அழித்து அப்புறப்படுத் துபவர்களிடம் சென்று விசாரித்தபோது அவர்கள் பதிலளிக் கவில்லை என்றும் கூறுகின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் இக்காடழிப்பு விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி உகந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.





# சாந்தனின் உடலுக்கு பெருந்திரளானோர் திரண்டு கண்ணீருடன் வணக்கம் செலுத்தினர்!

மார்ச் 02, 2024

திருச்சி சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த சாந்தன், உடல் நலக்குறைவு ஏற்பட்டதை அடுத்து காலமானார்.






இந்நிலையில் அவரது உடல் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு எடுத்து வரப்பட்டு பிரேத பரிசோதனைகளுக்காக நீர்கொழும்பு அரச வைத்தியசாலையில் வைக்கப்பட்டது. பிரேத பரிசோதனை முடிவின் பின்னர் அவரது உடல் வவுனியா விற்கு எடுத்து வரப்பட்டது.

வவுனியா முன்னாள் போராளிகள் நலன்புரிச்சங்கத்தின் அலுவலகத்திற்கு முன்பாக இன்று (03) காலை 7.30 மணி யளவில் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் சாந்தனின் உடல் வைக் கப்பட்டு வணக்கம் செலுத்தப்பட்டதுடன், பின்னர் ஊர்வலமாக வவுனியா பழைய பேரூந்து நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அங்கு பெருந்திரளான பொதுமக்கள் கலந்துகொண்டு கண் ணீருக்கு மத்தியில் அவரது உடலுக்கு வணக்கம் செலுத்தினர். அதனைத்தொடர்ந்து தொடர்ந்து அங்கிருந்து ஊர்வலமாக மாங்குளம் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டது.

# சாந்தனின் உயிரிழப்பிற்கு சிறீலங்கா அரசும் உடந்தையே!

## அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா. சத்திவேல்

மார்ச் 02, 2024

இலங்கையை சேர்ந்தவர்களை இந்திய நீதிமன்றம் விடுதலை செய்த பின்னரும் சிறப்பு முகாம் எனும் சித்திரவதை முகாமுக்குள் அடைத்து வைத்திருப்பதை இலங்கை அரசும் அறிந்திருந்தும் அறியாதது போல், சாந்தனின் உயிரிழப்பிற்கு உடந்தையாக இருந்தது என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் நேற்று (01.03.2024) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றவாளிகளாக்கப்பட்டு சிறை வாழ்வை அனுபவித்தவர்களை இந்திய உச்ச நீதிமன்றம் விடுவித்த போதும் அவர்களின் சுதந்திரத்தை பறித்த இந்திய மத்திய மற்றும் தமிழக மாநில அரசுகள் தமது அரசியல் வன்மத்தை தீர்த்துக் கொள்வதற்காக மீண்டும் அவர்களை சிறப்பு முகாம் எனும் சித்திரவதை முகாமுக்குள் அடைத்து வைத்தது.

குறிப்பாக சாந்தன் தான் நேசித்த தாய் நிலத்தை காண வேண்டும் எனும் எதிர்பார்ப்பையும், அவர் தாய் மற்றும் சகோதர உறவுகள் மீது வைத்திருந்த அவரின் அன்பு பாசத்தையும், மகனை காண வேண்டும் அரவணைக்க வேண்டும் எனும் தாயின் அன்பு பாச உணர்வுகளையும் ஒருங்கே கொலை செய்துள்ளன.



இதனை இந்தியாவின் தர்ம சக்கரமும் காந்திய கொள்கையும் எந்த வகையில் அங்கீகரிக்கப் போகின்றன. இந்திய மத்திய மற்றும் தமிழக மாநில அரசுகளின் வன்ம பன்மை கொலையினை அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு வன்மையாக கண்டிப்பதோடு சிறப்பு முகாம் எனும் சித்திரை வதை முகாமிலிருந்து ஏனையவர்களையும் உடனடியாக விடுவித்து தனது தார்மீக நீதி கடமையை நிறைவேற்ற வேண்டும் என்பதோடு சாந்தனின் தாய் மற்றும் உறவுகளோடு துயர் பகிர்ந்து அரசியல் களப்போராளி சாந்தனுக்கு வீர வணக்கத்தையும் தெரிவிக்கின்றது.

இலங்கையை சேர்ந்தவர்களை இந்திய நீதிமன்றம் விடுதலை செய்த பின்னரும் சிறப்பு முகாம் எனும் சித்திரவதை முகாமுக்குள் அடைத்து வைத்திருப்பதை இலங்கை அரசும் அறிந்திருந்தும் அறியாதது போல் சாந்தனின் உயிரிழப்பிற்கு உடந்தையாக இருந்தது.

மேலும் "தங்களை விடுவிக்க வேண்டும்" என்று பெப்ரவரி மாதத்தின் ஆரம்பத்திலேயே உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பித்திருக்கின்றார்கள். இவர்களின் விடுதலையை இந்திய தமிழக மற்றும் ஈழ தமிழ் உணர்வுமிக்க எந்த ஒரு அரசியல் சக்திகளும் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் அரசியல் நாடகமாடினர்.

அவர்களும் சேர்ந்தே சாந்தனை கொலை செய்திருக்கின்றனர். இவர்களும் குற்றவாளிகளே. சாந்தனின் தாய் தன்னுடைய மகனின் விடுதலைக்காக போகாத கோயில்கள் இல்லை. வேண்டாத தெய்வங்கள் இல்லை. பதில் கிடைக்காத நிலையில் தமிழர் தாயக அரசியலுக்கு எதிரான அரசியல்வாதிகளிடமும் விடுதலைக்காக வேண்டி நின்றார். இவர்களும் துரித நடவடிக்கைக்கு இலங்கை இந்திய அரசுகளை பலவந்தப்படுத்தவில்லை.

சாந்தனின் உயிரிழப்பிற்கு இவர்களும் பதில் சொல்ல வேண்டியவர்களே. உச்சநீதிமன்றம் விடுவித்த பின்னரும் சட்டத்தை



காரணம் காட்டி சிறப்பு முகாமுக்குள் தள்ளி நோய் நிலைக்குள் வீழ்த்தி சாந்தனை கொலை செய்தவர்கள் ஏனையவர்களையும் கொலை செய்யப் போகின்றார்களா என்று கேட்கின்றோம். உண்ணாவிரதம் இருந்து காந்தீய வழியில் கோரிக்கைகளை முன்வைத்த திலீபனை கொலை(1987) செய்தவர்கள் தொடர்ந்து யுத்தம் என்ற போர்வையில் நூற்றுக்கணக்காணக்கானோரை கொன்று குவித்தனர்.

பெண்களை விதவைகளாக்கினர். பலரின் வாழ்வை மிதித்தழித்தனர்.அதே வரிசையில் தற்போது சாந்தனையும் கொலை செய்துள்ளனர். இவர்களிடத்திருந்து அரசியல் நீதியை இனியும் எதிர்பார்க்க முடியுமா? பூகோள அரசியல் சூழ்நிலையில் தமிழர்கள் மீது நல்லெண்ண அடையாளத்தை வெளிப்படுத்த சாந்தன் உள்ளிட்டோரை நீதிமன்றம் விடுதலை செய்த உடனேயே சுதந்திரமான நடமாட்டத்திற்கு இடமளித்து அவர்கள் போக வேண்டிய இடங்களுக்கு செல்வதற்கு அவர்களுக்கான பயண ஒழுங்குகளை துரிதப்படுத்தி இருக்கலாம். ஆனால் அதனை நிறைவேற்ற தவறியது ஏன்?

அரசியல் போராளிகள் எதற்கும் துணிந்தவர்கள் அவர்கள் சிறை கூடத்தையும் சித்திரக்கூடமாக காண்பார்கள் அதனை அரசியல் ஆன்மீகத்தின் பயிற்சியை களமாக்கி மகிழ்வார்கள் தமது விடுதலையை விட தாம் நேசித்த மண்ணின் மக்களின் விடுதலையை நேசிப்பார்கள் அவர்களின் உயிர் மூச்சு அதுவாகவே இருக்கும் உயிர் மூச்சுக்கு மரணம் கிடையாது களமாடி வீர மரணம் அடைந்து மாவீரர்களின் உயிர் மூச்சோடு சாந்தனின் உயிர் மூச்சும் கலந்துவிட்டது.

இவ் உயிர் மூச்சும் தமிழர் தாயக விடுதலை அரசியலுக்கு பெரும் உந்து சக்தியாகவே இருக்கும். ஆயிரமாயிரம் போராளிகள் தாய் மண்ணிற்காக உயிர் தியாகமாகியுள்ளனர் .

அவர்களின் வரிசையிலே சாந்தனும் உள்ளடங்குவார். இவரின் வாழ்வின் இறுதி நிகழ்வுகளில் எவரும் கட்சி அரசியல் செய்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். அதுவே தாயக அரசியல் விடுதலைப் பயணத்திற்கு வலு சேர்க்கும் என்பதோடு எதிரிகளுக்கு எமது சக்தியை காட்டவும் துணை செய்யும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் வீட்டுக்கு கொண்டு செல்லப்பட்ட சாந்தனின் புகழுடல்!

மார்ச் 04, 2024

சாந்தனின் புகழுடல் வல்வெட்டித்துறையில் உள்ள தமிழீழத் தேசியத் தலைவரின் வீடு அமைந்திருந்த வளாகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு , இறுதி வணக்கம் செலுத்தப்பட்டது







# தமிழீழ மக்களின் கண்ணீர் வெள்ளத்தில் வவுனியாவில் இருந்து... சாந்தன் அவர்களின் இறுதிப் பயணம்!

மார்ச் 02, 2024

இந்திய அரசின் சதியால் மறைந்த சாந்தனின் உடல் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் வைக்கப்பட்டு, வவுனியாவில் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டபோது, தமிழீழ மக்கள் திரண்டு கண்ணீர் மல்க இறுதி மரியாதை செலுத்தினர்.




















# தமிழீழ மக்களின் கண்ணீர் வெள்ளத்தில் கிளிநொச்சி மண்ணில் சாந்தன் அவர்களின் மக்கள் இறுதி வணக்கம் செலுத்தினர்!

மார்ச் 03, 2024

ராஜீவ் கொலைவழக்கில் தண்டனை அனுபவித்து, சிறையிலிருந்து விடுதலையாகி பின்னர் தமிழ்நாட்டில் மாரடைப்பால் உயிரிழந்த சாந்தனுக்குகிளிநொச்சியில் உணர்வுபூர்வமாக வணக்கம் செலுத்தப்பட்டது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கொண்டு செல்லப்படும் சாந்தனின் புகழுடலுக்கு வவுனியா தொடக்கம் யாழ்ப்பாணம் வரை பல இடங்களில் இறுதி வணக்க நிகழ்வுகள் நடந்து வருகிறது.

சாந்தனின் உடல் கிளிநொச்சியை வந்தடைந்ததும், ஏ9 வீதியிலிருந்து மக்கள் அணிவகுப்புடன், கிளிநொச்சி பொதுச்சந்தைக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த இறுதி வணக்க நிகழ்விடத் துக்கு எடுத்து செல்லப்பட்டது.

மூத்த போராளி காக்கா ஈகைச் சுடரை ஏற்றி வைத்தார். பின்னர் தேசிய உணர்வுக் கொடியை போர்த்தி மலர் மாலை அணிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் இறுதி வணக்கம் செலுத்தினார்.

தொடர்ந்து, முன்னாள் போராளிகள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் உள்ளிட்டோர் மலர் மாலை அணிவித்து தேசிய உணர்வுக் கொடி போர்த்தி வணக்கம் செலுத்தினர். பின்னர், மக்கள் இறுதி வணக்கம் செலுத்தியதுடன் வணக்க நிகழ்வுகள் இடம்பெற்றது.

















# சிறைச்சாலையை விட கொடுமையானது சிறப்பு முகாம்!

## தமிழக சட்டத்தரணி புகழேந்தி

மார்ச் 03, 2024

சிறைச்சாலையை விட கொடுமையானது சிறப்பு முகாம். அதில் இருந்து வெளியேறி தன் தாயின் கையால் ஒரு வாய் உணவு சாப்பிட வேண்டும் என்பதே சாந்தனின் ஆசையாக இருந்தது என தமிழக சட்டத்தரணி புகழேந்தி தெரிவித்துள்ளார்.

வல்வெட்டித்துறையில் நேற்றைய தினம் இடம்பெற்ற சாந்தனுக்கான இறுதி வணக்க நிகழ்வின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

2005 ஆம் ஆண்டு முதல் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக தொடர்ச்சியாக வழக்காடி வருகின்றேன்.

சுமார் 32 ஆண்டுகளுக்கு பின் விடுதலை செய்யப்பட்ட போது சாந்தன் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார். எனினும், சிறப்பு முகாமில் அடைக்கப்பட்ட போது மிகவும் துன்பத்திற்கு ஆளானார்.

சிறையை விட கொடுமையானது சிறப்பு முகாம். சிறையில் 32 ஆண்டுகளை உடல் ஆரோக்கியத்தோடு கழித்த சாந்தன், சிறப்பு முகாமில் ஒரு ஆண்டு கூட இருக்க முடியவில்லை.

காரணம் அது 120 சதுர அடிகொண்ட ஒரு சிறிய அறையாகும். இந்த அறையில் முருகனும், சாந்தனும் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

வாரத்திற்கு ஒரு முறை அல்லது இரு முறை நானும், நளினி மற்றும் எனது உதவியாளர் நேரில் சென்று பார்த்துவிட்டு வருவோம். எனினும், ஆறு மாதங்களுக்கு பிறகு சாந்தன் உடல் மெலிந்து காணப்பட்டார்.

அவருக்கு சிகிச்சையளிக்க முருகன் வற்புறுத்தினார். ஆனால் சாந்தன் “எனக்கு ஒன்றுமில்லை, என் அம்மா கையால் ஒரு வாய் சாப்பிட்டால் போதும்” என்றார்.

நான் ஊருக்கு போய் அம்மாவின் கையால் ஒரு கை சாப்பிட்டால் போதும், எனக்கு எந்த நோயும் வராது” என்று சாந்தன் கூறினார்.

எனினும், அவருக்கு ஏற்பட்ட உடல் நல குறைவு காரணமாக சென்னை ராஜீவ் காந்தி அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.



சாந்தனை காப்பாற்றிவிடலாம் என்ற நம்பிக்கை இருந்தது. எப்படியாவது ஊருக்கு அனுப்பி விடலாம் என்ற நம்பிக்கை இருந்தது. அதற்கான சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

ஆனாலும் அத்தனை நடவடிக்கைகளையும் மீறி சாந்தன் உடல்நல குறைவால் கடந்த 28ஆம் திகதி காலை உயிரிழந்தார்.” என தெரிவித்தார்.

# இறுதியில் சாந்தனின் உயிரற்ற புகழுடலாக தாயாரிடம் வந்து சேர்ந்தார்!

மார்ச் 03, 2024

சாந்தனின் புகழுடல் அவரது குடும்பத்தினரிடையே கண்ணீர் மனங்களை கனக்க கையளிக்கப்பட்டுள்ளது.



உணர்வு பூர்வமான இறுதி நிகழ்வுக்கள் மக்களையல்ல



ஊடகவியலாளர்களை கூட பணி தாண்டி தாக்கியிருக்கின்றது.

உயிரற்ற பூவுடலாய் தாயை அடைந்த சாந்தனை “யாரும் அழ வேண்டாம். வாங்கோ என்ர குட்டி அண்ணா” எனப் பதிகம் பாடி, ஆரத்தி எடுத்து தன்னனின் பூவுடலை வரவேற்றார் தங்கை. திரண்டிருந்த சனத்தின் மனம் விம்மி வெடித்தது.



இதுபோதும் - என் சந்ததி பல நூற்றாண்டுகளுக்கு “உங்கள்” சதி பேசும் என நிலை தகவல் பதிந்துள்ளார் சிரேஸ்ட ஊடகவியலாளர் ஒருவர்.

அதே வேளை எப்படித் தாங்கிக் கொள்வது என்றே புரிய வில்லை அண்ணனை வரவேற்பதா அல்லது குளறி அழுவதா என்று சாந்தனின் வித்துடல் ஆலாத்தி எடுத்து அவருடைய குடும்பத்தினரால் ஆசையை நிறைவேற்றும் விதமாக வர வேற்று கூட்டிச் செல்லப்பட்டு “ஓம் நமசிவாய” பாடல் எல்லோ ராலும் பாடப்பட்டு மீளாத் துயில் கொள்ளுகிறார் என பதிவிட் டுள்ளார் மற்றொரு ஊடகவியலாளர்.

# இந்திய மீனவர்களைத் தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தி யாழப்பாணத்தில் பேரணி!

மார்ச் 05, 2024

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களைத் தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் மீனவர்கள் இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு மாகாண கடற்தொழிலாளர் இணையம் மற்றும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் இலங்கை மீனவர் மக்கள் தொழிற்சங்கம் உள்ளிட்ட மீனவ அமைப்புக்கள் இணைந்து யாழ். மாவட்ட செயலகம் முன்பாக இன்று காலை கவனயீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகம் வரை பேரணியாகச் சென்றனர். இதன்போது இந்தியத் துணைத் தூதரகத்துக்குச் செல்லும் வழியில் பொலிஸார் இடைமறித்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

தூதரகம் முன்பாகப் பேரணியைச் செல்லவிடாது வரியல் போட்டு பொலிஸார் இடைமறித்ததுடன் மீனவ அமைப்புக்களின் எட்டு பிரதிநிதிகளை சந்திப்பதற்கு அனுமதி வழங்கினர்.

இதற்கமைய தூதரகத்துக்குள் சென்ற பிரதிநிதிகள் தங்களது கோரிக்கைகள் அடங்கிய மகஜரைக் கையளித்தனர்.

இந்தநிலையில், பொலிசாரால் இடைமறிக்கப்பட்ட போராட்டக் காரர்கள், “இலங்கை மீனவர்களின் கடல் வளத்தை அழிக் காதே”, “தமிழக மீனவர்களின் அத்துமீறலைத் தடுத்து நிறுத்து”, “எமது கடல் வளப் பாதுகாப்பை உறுதி செய்” உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு இலங்கை - இந்திய அரசுகளுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.









# சாந்தனின் வித்துடல் வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் விதைப்பு!

மார்ச் 04, 2024

தமிழகத்தில் சாகடிக்கப்பட்ட சாந்தனின் வித்துடல் வடமராட்சி எள்ளங்குளம் துயிலும் இல்லத்தில் மக்களின் இறுதி வணக்கத்துடன் விதைக்கப்பட்டுள்ளது.



ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு முப்பத்து இராண்டு வருடங்களுக்கு மேலாக சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட போதும் தொடர்ந்து சிறப்புமுகாமில் தடுத்து வைக்கப்பட்டு தாயகம் திரும்ப இருந்த நிலையில் திடீரென உயிரிழந்திருந்திருந்தார்.

இந்நிலையில் சாந்தனின் புகழுடல் தாயகத்திற்கு எடுத்து



வரப்பட்டு பல்வேறு இடங்களிலும் நேற்று ஞாயிற்றுக்கிழமை மக்கள் இறுதி வணக்கத்துக்காக வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் உடுப்பிட்டியில் உள்ள அவரது பிறந்த வீட்டில் இறுதி நிகழ்வுகள் நடைபெற்று தொடர்ந்து வல்வெட்டித்துறையில் தலைவர் பிரபாகரனின் பிறந்த வீட்டிலும் இறுதி வணக்கம் செலுத்தப்பட்டிருந்தது.

உயிரிழந்த தனது மகன் சாந்தனிற்கு தாயார், உணவு ஊட்டியமை உணர்வுபூர்வமாக நிகழ்ந்தேறியது.

தனது தாயின் கையால் ஒரு வேளை உணவு உண்ண வேண்டும் என்பது சாந்தனின் இறுதி ஆசையாகவும், தமது மகனுக்கு பல்சுவை உணவுகளை சமைத்துக் கொடுக்க வேண்டும் என்பது சாந்தனின் தாயின் இறுதி ஆசையாகவும் இருந்திருந்தது.

அதனைத் தொடர்ந்து பெருமளவிலான மக்கள் புடைசூழ நல்லடக்கத்திற்காக உடல் எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்ல வளாகத்திற்கு எடுத்து வரப்பட்ட போது வீதிகளில் திரண்ட



மக்கள் தமது இறுதி வணக்கத்தை செலுத்தியிருந்தனர்.

இறுதியாக எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் உற்றார் உறவினர் நண்பர்கள் போராளிகள் எனப் பெருமளவிலா





னோரின் கண்ணீர் கதறலுடன் புகழுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

























# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணியை மீள் ஆரம்பிக்க இதுவரை நிதி கிடைக்கவில்லை!

மார்ச் 04, 2024



முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் பகுதியில் 29.06.2023 அன்று கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி அகழ்வு தொடர்பான வழக்கானது இன்று திங்கட்கிழமை (04) முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் இடம் பெற்ற வழக்கு விசாரணைகளில் முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா, முல்லைத்தீவு மாவட்ட செயலக பிரதம கணக்காளர் மயில்வாகனம் செல்வரட்ணம், கொக்கிளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி,கொக்கிளாய் பகுதி கிராம அலுவலர், சட்டத்தரணிகளான வீ.எஸ். நிரஞ்சன், கணேஸ்வரன், தனஞ்சயன், ருஜிக்கா ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

குறித்த வழக்கின் அகழ்வு பணியினை திட்டமிட்டபடி நடாத்த நிதி கிடைக்கபெறவில்லை என தெரிவிக்கப்பட்ட நிலையில், குறித்த வழக்கு ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதிக்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குதொடுவாய் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழியின் முதல் கட்ட அகழ்வானது 06.09.2023 அன்று ஆரம்பமாகி பதினொரு நாட்கள் நடைபெற்று 17 உடற்பாகங்கள் மீட்கப்பட்ட நிலையில் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

மீண்டும் அகழ்வின் இரண்டாம் கட்ட பணிகள் கடந்த 20.11.2023 அன்று ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக ஒன்பது நாட்கள் நடைபெற்று 40 எலும்புக்கூட்டு தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளதுடன் இரண்டாம் கட்ட அகழ்வுபணி இடைநிறுத்தப்பட்டிருந்தது.

அத்தோடு, அகழ்வு ஆய்வு நடவடிக்கையின் இறுதி நாட்களில் மேற்கொள்ளப்பட்ட ஸ்கான் பரிசோதனை மூலம் மனித புதைகுழிக்கு மேற்கு பக்கமாக இரண்டு மீற்றர் நீளத்திற்கு உடலங்கள் காணப்படுவதாக பரிசோதனை மூலம் கண்டறியப்பட்டிருந்தது.

அதனையடுத்து குறித்த அகழ்வுப்பணியின் மூன்றாவது கட்டம் இவ்வருடம் மார்ச் மாதம் நடைபெற திட்டமிடப்பட்டிருப்பதையும் குறிப்பிடத்தக்கது.

# கிழக்குப் பல்கலைக்கழக பொங்குதமிழ் தூபியில் சாந்தனுக்கு இறுதி வணக்கம் செலுத்தப்பட்டது!







# மூவரின் உயிருக்கும் உத்தரவாதம் இல்லை!

## தமிழக சட்டத்தரணி புகழேந்தி

மார்ச் 05, 2024

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்டு திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய மூவரின் உயிருக்கும் இந்நிமிடம் வரை உத்தரவாதம் இல்லையென சட்டத்தரணி புகழேந்தி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் இன்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறப்பு முகாம் என்பது சிறையை விட மிகவும் கொடூரமானது எனவும் தெரிவித்தார்.

சிறப்பு முகாம் என்பதே மரணக் கொட்டடி ஆகும். சாந்தன் இறப்பதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னர் அங்கிருந்த மற்றொருவர் உயிரிழந்தார். சிறப்பு முகாம் மூடப்பட வேண்டும். அங்கிருப்பவர்கள் உடன் வெளியிடங்களுக்கு மாற்றப்பட வேண்டும்.

முன்பு அது பெண்களுக்கான சிறையாக இருந்தது. இன்று அதன் பெயரை சிறப்பு முகாம் என்று மாற்றியுள்ளனர். மற்றப்படி அது சிறைதான்.

இங்கு பல்வேறு கட்டுப்பாடுகளை தற்போது விதித்துள்ளனர். பல பாதுகாப்பு வேலிகளை அமைத்து இந்த மூவரையும் தடுத்து வைத்துள்ளனர்.

திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சாந்தன் கல்லீரல் தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 28 ஆம் திகதி உயிரிழந்தார்.

"சாந்தன் 32 ஆண்டுகள் மன உறுதியுடன் சிறையில் இருந்தார். ஆனால், ஒரு வருடத்திற்குள் அவர் திருச்சி சிறப்பு முகாமில் மன நோயாளியாக மாற்றப்பட்டார். உடல் அளவிலும் செயற்பட முடியாத அளவிற்கு மாறினார்.




சிறப்பு முகாமின் வடிவமைப்பு என்பது மிகவும் கொடுமையானது. இந்நிலையில், அங்கிருக்கு முருகன், ரொபட் பாயஸ் மற்றும் ஜெயகுமார் ஆகியோரை உடன் மீட்க வேண்டும்.

அதற்கு இலங்கையில் இருக்கக் கூடிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முயற்சி எடுக்க வேண்டும். தமிழகத்தில் இருக் கும் அரசியல் கட்சிகளுக்கு நாங்கள் அழுத்தம் கொடுக் கின்றோம்.

இரு தரப்பினரும் இணைந்து செயற்பட்டு அங்கிருக்கும் மூவரையும் காப்பற்ற வேண்டும். அதற்காக நான் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன் எனவும் புகழேந்தி தெரிவித்தார்.

# யாழ். சுழிபுரத்தில் திடீரென முளைத்துள்ள புத்தர்; போராட அழைப்பு!

மார்ச் 06, 2024

யாழ்ப்பாணம் சுழிபுரம் பகுதியில் திடீரென முளைத்துள்ள புத்தர் சிலைக்கு எதிராக போராட அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.





இலங்கை கடற்படையினரால் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளமையால் அப்பகுதி உள்ளூர் மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது.

சுழிபுரம் சவுக்கடி பிள்ளையார் ஆலயத்திற்கு பின் புறமாக உள்ள அரச மரத்தின் கீழ் புதிய புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் திடீரென முளைத்துள்ள புத்தர் சிலையை அங்கிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என உள்ளூர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடகிழக்கில் தொடரும் இராணுவ மயமாக்கலின் பின்னணியில் படையினரது பங்கெடுப்புடன் புத்தர் சிலைகள் நிறுவப்படுவது தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது.

இதனிடையே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவிற்கும் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸிற்கும் இடையில் முக்கிய சந்திப்பு ஒன்று இன்றைய தினம் பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்றுள்ளது.

உயர்பாதுகாப்பு வலயக்காணிகள் விடுவிப்பு தொடர்பில் பேசப்பட்டு வருகின்ற நிலையில் சந்திப்பு நடைபெற்றுள்ளமை கவனத்தை ஈர்த்துள்ளது.

# யாழ். சுழிபுரம் புத்தர் சிலை விவகாரம்; பாரிய போராட்டம் வெடிக்கும்!

## க. சுகாஸ் எச்சரிக்கை

மார்ச் 06, 2024

யாழ்ப்பாணம் – சுழிபுரம் சவுக்கடி பிள்ளையார் ஆலய பகுதியில் வைக்கப்பட்ட புத்தர் சிலையை அகற்றாவிட்டால் பாரிய போராட்டம் வெடிக்கும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ரணில் ஜனாதிபதியாக வந்ததன் பின்னர் இவ்வாறான ஆக்கிரமிப்புகள் மிகத் தீவிரம் பெற்றுள்ளதாகவும் அதன் மற்றுமொரு பரிமாணம் தான் இந்த புத்தர் சிலை என அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

சட்டத்தரணி சுகாஸ் உள்ளிட்ட குழுவினர் நேற்றையதினம் (5.3.2024) இரவு புத்தர் சிலை வைக்கப்பட்ட பகுதிக்கு சென்று அதனை பார்வையிட்டனர்.

அங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் சுகாஸ் மேலும் தெரிவிக்கையில், "சுழிபுரத்திலே புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டதாக எங்களுக்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து நாங்கள் இங்கே வந்த நிலையில் இந்த தகவல் உண்மையானது.

அத்தோடு குறித்த புத்தர் சிலையானது சவுக்கடி பிள்ளையார் கோவிலுக்கு பின்பாகவும் இராணுவ முகாமிற்கு முன்பாகவும் வைக்கப்பட்டுள்ளதுடன் இது திட்டமிட்ட ஒரு ஆக்கிரமிப்பு.

மேலும் கோயிலை ஆக்கிரமிக்கின்ற வகையிலே இந்த புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளமையால் இதை நாங்கள் அனுமதிக்க முடியாது.

ஏனென்றால் தமிழர் தாயகம் எங்கும் தற்சமயம், ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக வந்ததன் பின்னர் ஆக்கிரமிப்புகள் மிகத் தீவிரம் பெற்றுள்ளதோடு அதனுடைய அடுத்தகட்ட பரிமாணம் தான் இந்த புத்தர் சிலை.

இந்த புத்தர் சிலையை உடனடியாக அகற்றும்படி நாங்கள் இராணுவத்தினரிடம் கூறுவதுடன் நீங்கள் அதனை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்க விட்டால் நாங்கள் வெகு விரைவில் இந்தப் பிரதேசம் மக்களோடும் மற்றும் இராணுவ முகாமை சுற்றியுள்ள அமைப்புகளுடனும் கதைத்து விட்டு விசேடமாக கடற்றொழிலாளர் அமைப்புகளுடன் கதைத்து விட்டு இதற்கு எதிராக பாரிய போராட்டங்களை முன்னெடுக்க இருக்கின்றோம்.

அத்தோடு எப்போது அந்தப் போராட்டங்கள் என நாங்கள் மக்களுக்கு அறிவிப்பதோடு மக்கள் அனைவரும் இந்த இடத்திற்கு வர வேண்டும் அவ்வாறு இல்லையேல் தமிழர் தாயகம் பறிபோகும் இதை எவராலும் தடுக்க முடியாது.




நாங்கள் கதைப்பதை கூட இராணுவம் அச்சுறுத்தி படம் எடுக்கின்றமையால் தங்களைக் கதைக்க வேண்டாம், படம் எடுக்க வேண்டாம் என அச்சுறுத்தல் செய்கின்றார்கள்.

இந்நிலையில் இந்த அச்சுறுத்தலை தாண்டித்தான் நாங்கள் இந்த இடத்தில் நிற்கின்றோம் ஏனென்றால் இது நமது மக்களின் எதிர்கால இருப்புடன் சம்பந்தப்பட்ட விடயமென்பதால் மக்களே வெளிப்படையுங்கள் அல்லது இந்த நாட்டில் தமிழர்கள் வாழ முடியாத நிலை ஏற்படப் போகின்றது" என அவர் தெரிவித்துள்ளார்.

# வெடுக்குநாறிமலை விபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் உட்பட மூவர் காயம்!

மார்ச் 08, 2024

வெடுக்குநாறி மலையில் குடிநீர் எடுத்துச்சென்ற உழவு இயந்திரம் விபத்துக்குள்ளானதில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட 3 பேர் காயமடைந்துள்ளனர்.

அதில் ஒருவர் நெடுங்கேணி வைத்தியசாலயில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் வருகை தந்த மக்களுக்கு குடிநீர் வழங்க காவல் துறை மறுப்பு தெரிவித்தமையால் அங்கு பொலிசாருக்கும், பக்தர்களுக்கும் இடையில் பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது.

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தின் சிவராத்திரி வழிபாடுகள் காலை முதல் இடம்பெற்றன.

இதன்போது காலை முதல் வீதி தடைகளைப் போட்டிருந்த காவல் துறை ஆலய வளாகத்திற்குள் குடி நீர் எடுத்துச் செல்ல இடையூறு விளைவித்திருந்தனர். கடுமையான வாய்த்தர்க்கத்துக்கு மத்தியில் குடிநீர் விநியோகம் முன்னெடுக்கப்பட்டது.

குடிநீர் எடுத்துச்சென்ற உழவு இயந்திரம் விபத்துக்கு உள்ளானதிலேயே மூவர் படுகாயமடைந்துள்ளனர்.



# புங்குடுதீவின் வளங்களை அழிப்பதற்கு எதிராக மக்கள் போராட்டம்!

மார்ச் 05, 2024



புங்குடுதீவு உள்ளூர் வளங்களை அழிப்பதற்கெதிரான கவன யீர்ப்பு போராட்டமொன்று இன்றைய நாள் செவ்வாய்க்கிழமை புங்குடுதீவு கடற்தொழிலாளர்கள் சங்கத்தினரால் முன்னெடுக கப்பட்டது.

கடலட்டைப் பண்ணை எனும் பெயரில் உள்ளூர் மீனவர்களை முற்றாக புறக்கணித்து இலாப நோக்கில் வெளிமாவட்டங்களை சேர்ந்தவர்களுக்கும், தென்னிலங்கையை சேர்ந்தவர்களுக்கும் கடலட்டை பண்ணைகள் அமைப்பதற்குரிய அனுமதிகளை கடற்தொழில் அமைச்சு வழங்குவதற்கு எதிராகவும் பாரம்பரிய மீன்பிடி தொழிலை அழிப்பதற்கு எதிராகவும் ,

புங்குடுதீவில் நடைபெற்றுவருகின்ற சட்டவிரோத மண் அகழ்வை உடனடியாக தடுக்கக்கோரியும்

புங்குடுதீவு கிராமத்தில் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வருகின்ற கால்நடை வளத்தை பாதுகாக்க கோரியும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# முருகன், ரொபட் பயஸ் உள்ளிட்டவர்களையாவது உயிருடன் விடுதலை செய்யுங்கள்!

## யாழ். மாவட்ட எம்.பி. சிவஞானம் சிறீதரன்

மார்ச் 06, 2024

இந்திய சிறையில் இருக்கின்ற முருகன், ரொபட் பயஸ் உள்ளிட்டவர்களையாவது உயிருடன் விடுதலை செய்து அவர்களுடைய குடும்பத்தோடு அவர்கள் சேர நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர், இந்தியப்பிரதமர் மற்றும் இலங்கை அரசிடம் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பி. யான சிவஞானம் சிறீதரன் வேண்டுகோள் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06) இடம்பெற்ற வரித்திருத்தச் சட்டமூல திருத்தங்கள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

இன்றைய நாள் 16 வருடங்களுக்கு முதல் எங்களுடைய மண்ணிலே மாமனிதர் கிட்டினன் சிவனேசன் இலங்கையினுடைய படையினரால் ஆழ ஊடுருவும் படை என்ற பெயரில் மிக மறைமுககொலை செய்யப்பட்டிருந்தார் இந்த பாராளுமன்றத்தினுடைய உறுப்பினராக இருந்த சிவனேசன் அநியாயமாக கொல்லப்பட்டார்.

இதேவேளை இந்தியாவிலேயே சிறையில் அடைக்கப்பட்டு பின்னர் விடுதலை ஆகியும் கூட வீடு வர முடியாமல் சில நாட்களுக்கு முதல் மரணத்தை தழுவிக் கொண்ட சாந்தனுக்கும் நான் இந்த இடத்திலே எங்களுடைய அஞ்சலிகளை செய்து கொள்கிறேன்

தன்னுடைய தாயைப் பார்க்க, உறவினர்களை பார்க்க தன்னுடைய ஊரை பார்க்க துடியாய் துடித்த 20 வயதில் புறப்பட்ட இளைஞன் 53 வயதைக் கடந்து சடலமாக வரவேண்டிய மிகப்பெரிய நெருக்கடியும் ஒரு மன உளைச்சலும் இந்த மண்ணிலே ஏற்பட்டிருப்பது மிகப்பெரிய ஆதங்கம்

இது தொடர்பாக நான் மனோகணேசன் எம்.யுடன் சென்று இலங்கையினுடைய வெளியுறவுத் துறை அமைச்சர் அலிசப்ரி மற்றும் நாட்டினுடைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆகியோரிடம் பேசி இருந்தேன் அதேபோல இந்தியாவிலே இருக்கிற இலங்கை தூதரகத்தினுடைய தூதரக அதிகாரியையும் கூட தொடர்பு கொண்டு சாந்தனின் வருகைக்காக பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் அந்த முயற்சிகள் தோல்வி கண்டிருந்தது. உயிருடன் வீட்டுக்கு வர ஆசைப்பட்ட சாந்தனின் உயிரற்ற உடல் மட்டும்தான் இங்கு வந்தது என்பது மக்கள் மனங்களிலே மிகப்பெரியவேதனையையு ஏற்படுத்தியுள்ளது.

எனவே தற்போது இந்திய சிறையில் இருக்கின்ற முருகன்



ரொபட் பயஸ் உள்ளிட்டவர்களையாவது உயிருடன் விடுதலை செய்து அவர்களுடைய குடும்பத்தோடு அவர்கள் சேர வேண்டும் அதற்கு உயர்ந்த சபையின் ஊடாக தமிழ்நாட்டினுடைய முதலமைச்சரையும் பாரதத்தினுடைய பிரதமரையும் இலங்கையினுடைய அதிகாரிகளையும் அவர்களை இந்த மண்ணிலே தங்களுடைய குடும்பத்தோடு சேர்ந்து வாழக்கூடிய வகையிலே ஒரு ஏற்பாட்டை செய்ய வேண்டும் என்று முன்வைத்துள்ளார்.

# சிவராத்திரி முன்னேற்பாடு; வெடுக்குநாறிமலை பூசகர் கைது!

மார்ச் 07, 2024

வெடுக்குநாறிமலை ஆலய பூசகர் மதிமுகராசா சிறீலங்கா சிங்கள காவல்துறையால் கைதுசெய்யப்பட்டுள்ளார். நாளைய தினம் நடைபெறவுள்ள சிவராத்திரி விழா ஏற்பாடுகளை செய்த வேளையில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முன்னதாக வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் கோயில் சிவராத்திரி விழா ஒழுங்குபடுத்தல்களுக்கு சென்ற பூசகரும், நாளைய தேவைகளுக்காக எடுத்துச்செல்லப்பட்ட தோரணங்கள், வாழைமரங்கள், தண்ணீர் பௌசர் போன்றன இலங்கை காவல்துறையால் தடுத்துவைக்கப்பட்டிருந்தது.

அத்தோடு சிவராத்திரிகாகன ஒழுங்குபடுத்தல்களுக்கு சென்றவர்களின் தேசிய அடையாள அட்டைகள், சாரதி அனுமதி பத்திரங்கள், தொலைபேசிகள் போன்றனவும் காவல்துறையால் பறிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே உலகெங்கும் வாழும் இந்துக்களால் அனுஸ்டிக்கப்படும் மகாசிவராத்தியை முன்னிட்டு சிறீலங்கா ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டு மக்களுக்கு தனது வாழ்த்துச் செய்தியை தெரிவித்துள்ளார்(?).

“உலகெங்கிலும் உள்ள இந்து பக்தர்களினால், அனைத்து உயிர்களையும் துன்பத்திலிருந்து விடுவிக்க சிவபெருமானிடம் செய்த பிரார்த்தனையை நினைவு கூறுவதாக அமைந்திருக்கிறது.

மகா சிவராத்திரி தினத்தில் இந்து மக்களினால் ஏற்றப்படும் ஒளியானது, முழு இலங்கை மக்களின் வாழ்விலும் ஒளியேற்றுவதாக அமையட்டும் என பிரார்த்திக்கின்றேன்.” என குறிப்பிடப்பட்டுள்ளது.



# வெடுக்குநாறிமலை ஆதி சிவன் கோவில் பூசகர் சிவத்திரு மதிமுகராசா கைது; அகில இலங்கை சைவ மகா சபை கண்டனம்!

மார்ச் 08, 2024

வெடுக்குநாறி மலை ஆதி சிவன் கோவில் மகா சிவராத்திரி பூசை ஏற்பாடுகளுக்கு சென்ற பூசகர் சிவத்திரு மதிமுக ராசாவை கைது செய்தமை மிகப் பாரதூரமான சைவத்தமிழர்களின் அடிப்படை வழிபாட்டுரிமையை மீறும் செயல் என அகில இலங்கை சைவ மகாசபை கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

அக் கண்டன அறிக்கை வருமாறு,

உலகம் பூராகவும் உள்ள சைவர்களின் மிக உன்னதமான முதன்மையான விரதம் சிவராத்திரி ஆகும்.

அந்த வகையில் வன்னி சிவப் பிராந்தியத்தில் வவுனியா மாவட்டத்தில் உள்ள தொன்று தொட்டு தமிழ்ச் சைவர்கள் வழிபட்டு வரும் ஆதி சிவன் கோவிலின் மகா சிவராத்திரி வழிபாடுகளுக்கு சென்ற பூசகர் மிக மோசமான முறையில் கைது செய்யப்பட்டமையையும் பக்தர்களின் வழிபாடுகளிற்கு ஆலய பரிபாலன சபையினரின் பூசை ஏற்பாடுகளுக்கு பலத்த இடையூறு விளைவிக்கப்பட்டு துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டமை சைவசமயிகளிற்கு தாங்கொணாத வலியை ஏற்படுத்தி உள்ளது.

இது இலங்கையின் சைவசமயிகளின் வழிபாட்டு உரிமைக்கு விடுவிக்கப்பட்ட பாரிய அச்சுறுத்தலும் அதே நேரம் சைவ சமய மதகுருவை மோசமாக நடாத்தி கைது செய்தமை மன்னிக்க முடியாத பாரதூரமான சம்பவமாகும்.

உடனடியாக பூசகர் சிவத்திரு மதிமுகராசாவை விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்துவதுடன்

நீதிமன்ற உத்தரவுகளையும் மீறி தன்னிச்சையாக செயற்பட்ட நெடுங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பொலிசார் மீது அரசு உரிய ஒழுங்கு நடவடிக்கையை மேற்கொள்ள வலியுறுத்தி நிற்கின்றோம்.

அதேநேரம் இன்றைய மகா சிவராத்திரி வழிபாடுகளிற்கு எந்த வித இடையூறுகளையும் மேற்கொள்ளாமல் இருப்பதை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்பதை இலங்கை தழுவிய சைவ சமயிகள் சார்பாக அகில இலங்கை சைவ மகா சபை வலியுறுத்தி நிற்கின்றது.

மிகுந்த இன்னல்களை தொடர்ச்சியாக சந்தித்து எமது பூர்வீக வழிபாட்டு உரிமையை விட்டுக்கொடுக்காத அதற்காக இத்துணை தியாகங்களை செய்து வரும் வெடுக்குநாறி மலை ஆதி சிவனின் தமிழ்ச்சைவக் குடிகளிற்கு தலைமைப் பூசகர் மற்றும் பரிபாலன சபைக்கு முழுமையான ஆதரவை வெளிப்படுத்தி நிற்கின்றோம்.

இந்த உன்னத சைவர்களின் வழிபாட்டு மகா சிவராத்திரி தினத்திலே ஏற்பட்டுள்ள அனைத்து துன்பங்களையும் தீர்த்து அருள் புரிய முழுமுதற் பரம்பொருள் ஆதி சிவனை மனமுருகிப் பிராத்திக்கின்றோம்.

அகில இலங்கை சைவ மகா சபை

# வெடுக்குநாறி மலையில் சிறீலங்காப் பொலிசாரின் காட்டுமிராண்டித்தனம்!

மார்ச் 08, 2023

வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலய பகுதிகளில் தற்போது பொங்கலுக்கான ஏற்படுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் ஆலய வளாகத்தை பொலிஸாரும் தொல்பொருள் திணைக்களத்தினுடைய அதிகாரிகளும் கண்கானித்து வருகின்றனர்.



குறிப்பாக ஆலய வளாகத்திற்குள் இரண்டு தரப்பினரையும் பொலிசார் அனுமதித்துள்ளதோடு அந்நேரத்தில் முரண்பாடுகள் ஏற்பட்டால் இரண்டு தரப்பினரையும் கைது செய்வோம் என தெரிவித்துள்ளனர்.

இது மட்டுமன்றி ஆலய வளாகத்திற்குள் தண்ணீரை கொண்டுவர பொலிசார் தடைசெய்துள்ளனர். இதனால் ஆலயத்தில் அன்னதானம் வழங்கும் செயற்பாடுகள் முடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் , சிவஞானம் சிறீதரன் மற்றும் வேலன் சுவாமிகள் ஆகியோர் கலந்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வவுனியாவில் வெடுக்குநாறிமலை ஆலயத்தில் பூஜை வழிபாடுகளுக்கு செல்லும் பக்தர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பொலிசார் செயற்பட்டு வருகின்றனர்.

ஆலயத்திற்கு செல்லும் பிரதான வீதியில் பொலிசார் வீதித் தடுப்புக்களை வைத்துள்ளதால் ஆலயத்தின் வழிபாடுகளுக்கு செல்லும் மக்கள் வாகனம் மூலம் செல்ல முடியாத நிலமை காணப்படுவதோடு நீண்ட தூரம் நடந்து செல்லவேண்டிய நிலை உள்ளது.

மேலும் ஆலயத்திற்கு கொண்டு செல்லப்படும் பொருட்கள் பொலிசாரால் சோதனையிடப்பட்ட பின்னரே அனுமதிக்கப்படுகிறது.

இதேவேளை பௌத்த பிக்கு தலைமையில் மூன்று வாகனங்



களில் பெரும்பான்மையினத்தை சேர்ந்தவர்களும் வருகைதந்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட ஆலய பூசகர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு



வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி நிகழ்வுகளை நடாத்தலாமென நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள போதும் பொலிஸாரும், இராணுவத்தினரும் தொடர்ச்சியாக அங்கு வழிபட வருபவர்களை தடுத்துவருகின்றனர்.







# 'முடிவில்லா துயரம் தான் தமிழ் தாயின் தலைவிதியா?' முல்லைத்தீவு பேரணியில் மக்கள் கோசம்!

மார்ச் 08, 2024

சர்வதேச மகளிர் தினமான இன்றுகாலை 10 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மகளிர் தினத்தை முன்னிட்டும், முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்தின் ஏழு வருட பூர்த்திக்கு ஆதரவு தெரிவித்தும் இன்று இப்போராட்டத்தை முன்னெடுத்து வருவதாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்தனர்.


இந்த போராட்டத்துக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் வடக்கு, கிழக்கின் எட்டு மாவட்டங்களை சேர்ந்த உறவினர்கள், தெற்குப் பகுதியில் இருந்து வருகை தந்த மதகுரு செறாட் ஜெயவர்த்தன உள்ளிட்ட குழுவினர் ஆதரவு வழங்கியிருந்தனர்.

இதன்போது 'இராணுவத்தை நம்பி கையளித்த பிள்ளைகள் எப்படி காணாமலாக்கப்பட்டார்கள்', 'நீதி தேவதை ஏன் கண்மூடிவிட்டாய்?', 'சர்வதேசமே இன்று பெண்கள் தினமா? பெண்கள் ஒடுக்கப்படும் தினமா?', 'முடிவில்லா துயரம் தான் தமிழ் தாயின் தலைவிதியா?', '55ஆவது தொடரிலாவது எமக்கு நீதி கிடைக்குமா?', 'கால அவகாசம் வேண்டாம் முறையான நீதி விசாரணையே வேண்டும்', 'பெண்கள் நாட்டின் கண்களா? இல்லை கண்ணீருக்காக கண்களா?' போன்ற பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாதைகளை தாங்கியவாறு போராட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினர்.











# வெடுக்குநாறிமலை சிவராத்திரி பூசை வழிபாடுகள்; பலர் கைது!

மார்ச் 09, 2024

வெடுக்குநாறி மலையில் சிவராத்திரி பூஜை வழிபாடுகள் நேற்று வெள்ளிக்கிழமை (08) மாலைவேளையில் நடைபெற்றுகொண்டிருந்த போது சற்று பதற்றநிலை அதிகரித்தது. இதனால் பலர்கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் தாக்குதல் சம்பவமும் இடம்பெற்றுள்ளது.




வெடுக்குநாறி மலையில் சிவராத்திரி பூஜை வழிபாடுகள் நடைபெற்றுகொண்டிருந்த போது பொலிஸார் மாலை ஆறமணியுடன் அனைத்து வழிபாடுகளையும் முடிவுக்கு கொண்டுவருமாறு தெரிவித்திருந்தனர்.

இருப்பினும் தொடர்ந்தும் பூஜை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டதால் அங்கு பதற்றமான சூழநிலை ஏற்பட்டது.

அன்னதானம், பொங்கல் மற்றும் பூஜை பொருட்கள் ஆகியவற்றை பொலிசார் அப்புறப்படுத்தியுள்ளனர்.

இதன்போது அங்கு பூஜை வழிபாடுகளை மேற்கொண்டிருந்த ஆறு பேர் கைது செய்யப்பட்டார்கள்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் வேலன் சுவாமிகள், ஆலயத்தின் நிர்வாக செயலாளர் து. தமிழ்ச்செல்வன் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் தவபாலன் உள்ளிட்ட பலர் கைதுசெய்யப்பட்டிருந்ததுடன் வழிபாடுகளில் கலந்துகொண்ட பெண்களையும் அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நல்லிணக்க இடைக்கால செயலக பணிப்பாளருக்கு சிவில் சமூகப்பிரதிநிதிகள் கடிதம்!

மார்ச் 09, 2024

உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையின் இடைக்கால செயலகமானது அதன் கலந்தாராய்வு செயன்முறையின்போது போரினால் பாதிக்கப்பட்ட வட, கிழக்கு மக்களுடன் விரிவான கலந்துரையாடல்களை முன்னெடுக்கத்தவறியிருப்பதாகவும், நிலைமாறுகால நீதிப்பொறிமுறையில் மிகமுக்கிய தரப்பினரான வட, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களைச் சந்திப்பதற்கு அச்செயலகம் முயற்சிக்கவில்லை எனவும் மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூகப்பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதுமாத்திரமன்றி சமாதானம் மற்றும் நல்லிணக்கத்துக்கான பாதையென்பது சம்பந்தப்பட்ட தரப்பினர் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதுடன், அர்த்தமுள்ள நடவடிக்கைகயை முன்னெடுப்பதன் மூலமே சாத்தியமாகும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து சட்ட மற்றும் சமூக நிதியம், விழுது, வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு, சூழலியல் நீதிக்கான மக்கள் கூட்டிணைவு, பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு, குரலற்றவர்களின் குரல் உள்ளிட்ட 34 சிவில் சமூக அமைப்புக்களும், மைத்ரேயி ராஜசிங்கம், ஷ்ரீன் ஸரூர், அம்பிகா சற்குணநாதன், சகுந்தலா கதிர்காமர், ஜெயதீபா புண்ணியமூர்த்தி உள்ளிட்ட 40 சிவில் செயற்பாட்டாளர்களும் கையெழுத்திட்டு உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையின் இடைக்கால செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அசங்க குணவன்சவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் சுட்டிக்காட்டியிருப்பதாவது:

உத்தேச உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் ஆராய்வதற்காக கடந்த மாதம் 9 மற்றும் 26 ஆம் திகதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலில் பங்கேற்றமை உள்ளடங்கலாக எம்மில் சிலர் உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையின் இடைக்கால செயலகத்துடன் தொடர்புபட்டு செயலாற்றிவருகின்றோம்.

அதன்படி இந்த உத்தேச ஆணைக்குழு தொடர்பில் தமது கரிசனைகளையும், அரசாங்கத்துக்கான நிபந்தனைகளையும் உள்ளடக்கி வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் சிவில் சமூக அமைப்புக்களால் கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட 4 அறிக்கைகளை மீண்டும் உங்களது கவனத்துக்குக் கொண்டுவருகின்றோம். தமிழ்மக்கள் மத்தியில் நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கும், தமிழர்களுக்கும் அரசுக்கும் இடையிலான உறவில் ஏற்பட்டிருக்கும் விரிசலை சீரமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே அவ்வறிக்கைகளில் முன்வைக்கப்பட்டிருந்த பிரதான நிபந்தனையாகும். இருப்பினும் அவ்வறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த நிபந்தனைகளில் குறைந்தபட்சம் ஒன்றையேனும் நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தற்போதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. இது தமிழர்களுக்கான தீர்வை வழங்குவதற்குரிய நேர்மையான அரசியல் தன்முனைப்பின்றி உண்மை, நீதி மற்றும் இழப்பீடு என்பன சாத்தியமில்லை என்ற எமது கரிசனை நியாயமானதே என்பதைக் காண்பிக்கின்றது.

அதேபோன்று உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையின் இடைக்கால செயலகமானது அதன் கலந்தாராய்வு செயன்முறையின்போது போரினால் பாதிக்கப்பட்ட வட, கிழக்கு மக்களுடன் விரிவான கலந்துரையாடல்களை முன்னெடுக்கத்தவறியமை எமது சந்தேகத்தை மீளுறுதிப்படுத்துகின்றது. அதுமாத்திரமன்றி கடந்த மாதம் 9 மற்றும் 26 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்ற கலந்துரையாடல்களில் பங்கேற்பதற்கு வடக்கு, கிழக்கைச்சேர்ந்த மிகச்சில அமைப்புக்களுக்கும், சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்குமே அழைப்புவிடுக்கப்பட்டிருந்தது. நிலைமாறுகால நீதிப்பொறிமுறையில் மிகமுக்கிய தரப்பினரான வட, கிழக்கு மாகாணங்களைச்சேர்ந்த வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களைச் சந்திப்பதற்கு உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையின் இடைக்கால செயலகம் முயற்சிக்கவில்லை. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 1983 - 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும், அதற்குப் பின்னரும் இடம்பெற்ற மோதல்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுமென உத்தேச உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலத்தில் கூறப்பட்டுள்ள போதிலும், சம்பந்தப்பட்ட சமூகத்துடன் போதியளவிலான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் புதியதொரு தீர்மானத்தைக் கொண்டுவரவேண்டிய அவசியமில்லை என சர்வதேச சமூகத்தை கருதவைக்கும் ஒரு முயற்சியாகவே அரசாங்கம் இந்த ஆணைக்குழுவை முன்மொழிந்திருக்கிறது



என நாம் கருதுகின்றோம். தமிழ்ச்சமூகத்துக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட மீறல்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்டுவதுடன், தமிழர்களின் பல தசாப்தகாலத் துயரத்துக்குத் தீர்வை வழங்குவதே அரசாங்கத்தின் உண்மையாக நோக்கமாக இருந்தால், வட, கிழக்கு சிவில் அமைப்புக்களால் ஏற்கனவே வெளியிடப்பட்ட 4 அறிக்கைகளிலுள்ள சில நிபந்தனைகளையாவது அரசாங்கம் நடைமுறைப்படுத்தும்.

வட, கிழக்கில் உள்ள சிவில் சமூகப்பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், செயற்பாட்டாளர்கள், வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் மற்றும் முன்னாள் போராளிகள் உள்ளிட்டோர் பாதுகாப்புத்தரப்பினரின் தொடர் கண்காணிப்புக்கும், ஒடுக்குமுறைகளுக்கும், மீறல்களுக்கும் உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் வடக்கு, கிழக்கு மக்களின் குரலுக்கு செவிசாய்க்குமாறும், அவ்விரு மாகாணங்களையும் சேர்ந்த சிவில் சமூகப்பிரதிநிதிகளால் ஏற்கனவே வெளியிடப்பட்ட 4 அறிக்கைகளில் உள்ள நிபந்தனைகளையும் நடைமுறைப்படுத்துமாறும் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். சமாதானம் மற்றும் நல்லிணக்கத்துக்கான பாதையென்பது சம்பந்தப்பட்ட தரப்பினர் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதுடன், அர்த்தமுள்ள நடவடிக்கைகயை முன்னெடுப்பதன் மூலமே சாத்தியமாகும் என்று அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# எமது நிலத்தை எம்மிடம் ஒப்படையுங்கள் தபால் அட்டை மூலம் கோரிக்கை அனுப்பிவைப்பு!

மார்ச் 09, 2024

நிலத்தை இழந்த மக்களின் குரல் அமைப்பின் ஊடாக 'எமது நிலத்தை எம்மிடம் மீள ஒப்படையுங்கள்' எனும் தொனிப்பொருளில் வட மாகாண ரீதியாக முப்படைகள் வசமுள்ள மக்களின் காணிகளை விடுவிக்கக் கோரி, தபால் அட்டை மூலம் ஜனாதிபதியை கோரும் நடவடிக்கை மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்று வருகிறது.




வட மாகாண ரீதியாக மக்களின் காணிகளை அரசாங்கம் மற்றும் முப்படையினர் கையகப்படுத்தி, அந்த காணிகளில் வணிக செயற்பாடுகள் மற்றும் விவசாய செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், காணிகளின் உரிமையாளர்கள் தமது காணியின்றி வாடகை வீடுகளில் வசித்து வருகின்றனர்.

மக்களின் காணிகளில் குடியிருக்கும் இராணுவத்தினர், அந்த காணிகளை விடுவித்து, மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற



அடிப்படையில் ஜனாதிபதியின் காரியாலயத்துக்கு ஐயாயிரம் தபால் அட்டைகளை அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முப்படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பல்வேறு காணிகளை சேர்ந்த மக்களை இணைத்து ஜனாதிபதிக்கான தபால் அட்டையை அனுப்புவதற்கான பணிகள் நேற்று (07) மேற்கொள்ளப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முப்படைகளினால் அபகரிக்கப்பட்டிருக்கின்ற முக்கியமாக கேப்பாப்புலவு வட்டுவாகல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் தமது காணிகள் முப்படைகளினால் அபகரிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் உள்ள மக்களை இணைத்து இவர்களினூடாக தபால் அட்டைகளை அனுப்பி வைக்கும் நிகழ்வு நேற்றைய தினம் இடம்பெற்றது.

சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் முன்னதாக காணி உரிமையாளர்கள் மெசிடோ நிறுவன பிரதிநிதிகள், சூழலியல் மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனத்தின் பிரதிநிதிகள் காணியை இழந்த மக்களுக்கிடையில் விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

அதனைத் தொடர்ந்தே, தபால் அட்டைகளை பூர்த்தி செய்த மக்கள் முல்லைத்தீவு அஞ்சல் அலுவலகத்துக்குச் சென்று, அங்கு தபால் அட்டைகளை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தனர்.




# யாழ். சுழிபுரத்தில் புத்தர் சிலை அகற்றப்பட்டதால் போராட்டம் கைவிடப்படுகின்றது!

மார்ச் 08, 2024

சுழிபுரத்தில் புத்தர் சிலை அகற்றப்பட்டதால் போராட்டம் கைவிடப்படுவதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் அறிவித்துள்ளார்.

குறித்த பகுதியில் புத்தர் சிலை வைத்ததால் அதனை அகற்றுமாறு கோரி இன்று வெள்ளிக்கிழமை போராட்டம் ஒன்றினை நடாத்துவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் சுழிபுரத்தில் புத்தர் சிலை அகற்றப்பட்டதால் போராட்டம் கைவிடப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

போராடினால் மட்டுமே இனம் வாழும். போராட்டங்களால் எதையும் சாதிக்க முடியாதென்பவர்கள், இனியாவது எம்மோடு கைகோர்ப்பார்கள் என்று நம்புகின்றோம். இனத்துக்காக இறுதிவரை விடிவுவரை போராடுவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.



# உலகிற்கு எமது நிலையினை அரசாங்கம் வெளிப்படுத்தி இருக்கிறது!

## இந்து மன்றம் – யாழ்ப்பாணப் பலகலைக்கழகம்

மார்ச் 10, 2024

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் அடிப்படை வழிபாட்டுரிமையை மீறிய செயலானது உலகிற்கு எமது நிலையினை அரசாங்கம் வெளிப்படுத்தி இருக்கிறது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து மன்றம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து மன்றம், வெடுக்குநாறி மலை ஆதி இலிங்கேசுவரர் கோவில் மகா சிவராத்திரி தின பொலிஸ் அராஜகங்களை கண்டித்து வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் ஜோதியான சிவபெருமானுக்குரிய விரதங்களுள் தலையாய விரதமே மகா சிவராத்திரி, வருடத்தில் ஒருமுறை வரும் இவ் விரதமானது இராத்திரி வேளை நான்கு சாம பூசைகளை மேற்கொண்டு இரவு முழுவதும் சிவனடியார்கள் கண்விழித்து சிவபெருமானை பூஜித்து சிவசிந்தையில் வழிபாடு மேற்கொள்வது மரபாகும்.

இவ் மகாசிவராத்திரி தினத்திதை முன்னிட்டு தொன்று தொட்டு தமிழ்ச் சைவர்கள் வழிபட்டுவரும் வெடுக்குநாறிமலை ஆதி இலிங்கேசுவரர் கோவில் மகா சிவராத்திரி தின விசேட பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு நீதிமன்றம் வழங்கிய கட்டகளையின் படி பூசை வழிபாடுகள் ஒழுங்கமைக்கப்ட்டுள்ள நிலையில் ஆலய பூசகர் கைது செய்யப்பட்டமையும், வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொதுமக்களை பலவந்தமாக அகற்றியதுடன் மாலை ஆறு மணியளவில் அங்கிருந்து அனைவரையும் வெளியேறுமாறு பணித்துள்ளனர்.

சைவர்களின் வழிபாட்டு உரிமையினையும், சைவ விழுமியங்களையும், புனித சடங்குகளையும் அவமதிக்கும் சம்பவங்கள் தமிழர்களின் தொன்மையான புனித பூமியில் இடம்பெற்றிருக்கிறது. அதன் உச்சகட்டமாக வெகுதூரத்தில் இருந்து வந்து விரதமிருந்து பூசை வழிபாட்டில் ஈடுபட்டிருந்த பக்தர்களது வழிபாடுகளை தடுத்தும், வழிபாட்டில் ஈடுபட்ட பெண்களை கழுத்தை பிடித்து இழுத்து வீசியதுடன், தவறேதும் செய்யாத சிவனடியார்கள் விரதமிருந்து பூசையில் ஈடுபட்ட தருணம் மோசமாக கைதுசெய்யப்பட்டு தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், சப்பாத்துக் கால்களுடன் வழிபாட்டிடதுக்குள் நுழைந்து பூசை மற்றும் படையல் பொருட்களையும் பொலிசார் காலால் அப்புறப்படுத்தியதுடன், கோவிலில் நிகழ்ந்து கொண்டிருந்த யாகத்தையும் தடுத்து நிறுத்தியது போன்ற பொலிசாரது மிலச்சத்தனமான செயலானது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும்.

ஆலய வளாகத்திற்கு குடிநீர் தாங்கியை உள்ளே அனுமதிக்காது வழிபாட்டிற்கு சென்ற சிறுவர்கள் பெண்கள் பக்தர்கள் என பலர் அவதிப்பட்ட நிலையில் ஆலய வழிபாட்டிற்காக பக்தர்களின் தாகசாந்திக்கு கொண்டுவரப்பட்ட நீர் தாங்கியினை பொலிசாரால் ஆலயத்தில் இருந்து மூன்று கிலோமீற்றருக்கு முன்னரே தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததும், குடி தண்ணீருடன் ஆலயத்திற்கு கொண்டு வரப்பட்ட உழவு இயந்திரத்தினை உள்ளே அனுமதிக்காது அதனை உள்ளே அனுமதிக்குமாறு பக்தர்கள் அரைமணிநேர போராட்டத்தினை மேற்கொண்டமையும் குடிநீரை தடுத்து அடிப்படை தேவைகளில் ஒன்றான குடிநீரை வழங்க மறுத்த ஈனச் செயலானது இலங்கை பொலிசாரது மனிதநேயமின்மையினை குறித்து ஒட்டுமொத்தமாக மிகுந்த வேதனைக்குள்ளாக்கி இருக்கிறது.

இலங்கையில் சமய நல்லிணக்கம் வலியுறுத்தப்பட்டு வரும் சூழலில் இந்த செயற்பாடுகள் இடம்பெற்றிருப்பது மத நல்லிணக்கம் தொடர்பான ஐயப்பாடுகளை ஏற்படுத்துவதாக இருக்கின்றது. சமயங்கள் மனிதனை அக ரீதியாக மேம்படுத்தக் கூடியன வழிபாடுகளும் இறை சார்ந்த நம்பிக்கைகளும் மனிதனை மனிதனாக பக்குவப்படுத்துகின்றனவே தவிர ஒரு மதத்தினை மத வழிபாட்டினை நிந்திப்பதோ நிந்தனை செய்வதோ அல்லது தடுத்து நிறுத்துவதோ பொருத்துமற்ற ஒன்றாகவே கருதப்படும், சமயங்கள் சார்ந்த அரசியல் என்பது மக்களை முரண்பட்டுக் கொள்ளவும் இனரீயாக பிளவுபடுத்திக் கொள்ளவும் வழிசமைக்கும். ஆகவே சமயங்கள் மனிதர்களை பக்குவப்படுத்திக் கொள்வது எனும் வகையில் ஒவ்வொரு இனம்




சார்ந்தவர்களும் பல்வேறுபட்ட நம்பிக்கைகளுடன் வாழ்ந்து வருகிறார்கள்.அவர்களுடைய நம்பிக்கைகள், வழிபாடுகள், வழிபாட்டுத்தலங்கள் சிதைக்கப்படுவதோ அல்லது அவர்களுக்கான வழிபாடுகள் மறுக்கப்படுவதோ, ஒரு சுதந்திரத்தன்மை என்பது வழிபாட்டு முறையில் தடுக்கப்படுகிறது என்பது தான் அர்த்தமாக கருதப்படும்,

இந்த அடிப்படையிலே சைவர்களுடைய மிக முக்கியமான ஒரு வழிபாடு சிவராத்திரி தினம். இந்த வழிபாட்டில் இவ்வாறான அசம்பாவிதங்கள் நடைபெற்றது என்பது உண்மையில் சைவர்களாகிய ஒவ்வொருவரையும் மிகவும் மனரீதியாக வேதனைப் படவைக்கிறது, அவர்களுடைய வழிபாடுகளை சிதைப்பதனூடாக ஒரு இனத்தினுடைய பண்பாட்டு அடையாளங்களை கேள்விக்குட்படுத்துதல் என்பது உண்மையிலே ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகவே இருக்கிறது. இவ் அடிப்படை வழிபாட்டுரிமையை மீறும் செயலானது உலகிற்கு எமது நிலையினை இவ் அரசாங்கம் வெளிப்படுத்தி இருக்கிறது. இவ்வகையில் வெடுக்குநாறி மலை ஆதி இலிங்கேசுவரர் கோவிலில் நடைபெற்ற மோசமான வழிபாட்டுரிமை மீறல் மற்றும் மனிதநேயமின்மை சம்பவங்களை மிக கண்டித்தும் கைது செய்ப்பட்ட பக்தர்களை விடுவிக்ககோரியும் வலியுறுத்தி நிற்கின்றோம். இலங்கை பொலிசாரது அட்டூழியங்களையும், இலங்கை அரசின் இவ்வாறான செயலை இந்து மன்றமாக கண்டித்து நிற்கின்றோம் – என்றுள்ளது.

# தமிழர்கள் மீது தொடந்தும் தாக்குதல்களை தடுத்து நிறுத்த அயல் நாடு வெளிநாடுகள் உதவிசெய்ய வேண்டும்!

## ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் தவத்திரு அகத்தியர் அடிகளார்

மார்ச் 12, 2024

வடக்கு, கிழக்கில் தமிழர்கள் மீதும் இந்து ஆலயங்கள் மீதும் தொடர்ந்தும் தாக்குதல்கள் தடுத்த நிறுத்த அயல்நாடு வெளிநாடுகள் உதவிசெய்ய வேண்டும் என ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் தவத்திரு. அகத்தியர் அடிகளார் தெரிவித்தார்.

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி வழிபாடுகளை முன்னெடுத்தவர்களை அநாகரிக முறையில் தூக்கிவீசி, கைதுசெய்து, வழிபாட்டைக் காட்டுமிராண்டித்தனமாகக் குழப்பிய பொலிசாரின் படுபாதகச் செயலைக் கண்டித்தும், வழிபாட்டு உரிமையை நிலைநாட்டும் வகையிலும் நல்லூர் ஆதீன முன்றிலில் திங்கட்கிழமை (11) கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது இப் போராட்டத்தின் போதே இதனைத் தெரிவித்தார்



அவர் மேலும் தெரிவிக்கையில்

தமிழர்கள் மீதும் அவர்கள் வழிபாட்டு இடங்கள் மீதும் தொடர்ந்தும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. நீதிமன்ற கட்டளையை மதிக்காத நாடாகவே எமது நாடு விளங்குகிறது இதனை அருவருக்கத்தக்கதாகவே நாங்கள் உணருகின்றோம் அத்தகைய நீதியைத்தான் நாங்கள் அடுக்கடுக்காக கண்டுகொண்டு இருக்கிறோம் இது ஒரு நாட்டுக்கு ஆரொக்கியமானதல்ல அரசுக்கு ஆரோக்கியமானதல்ல எனவே நாங்கள் எங்கள் உரிமையை நிலை நிறுத்துவதற்காக எத்தகைய முயற்சிகளை நாங்கள் எடுப்போம் இதனை அயல்நாடு, வெளிநாடு பார்த்துக் கொண்டிருக்கிறது. காந்தி தேசம் பார்த்துக்கொண்டிருக்கிறது வெளிநாடுகள் ஒன்றிணைந்து நாம் உரிமையுடன் வாழ வழிசெய்ய வேண்டும் அதுவரை ஜனநாயக முறையில் போராடுவோம் என்றார்.

# வெடுக்குநாறி மலையில் திட்டமிட்ட பௌத்த ஆக்கிரமிப்பு முன்னெடுப்பு; சிறீதரன், கஜேந்திரன் சுட்டிக்காட்டியுள்ளனர்!

மார்ச் 10, 2024

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தினை பௌத்த அடையாளமாக மாற்ற வேண்டுமென்ற திட்டமிட்ட ஆக்கிரமிப்பு முன்னெடுக்கப்படுவதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட சிவராத்திரி பூஜைவழிபாடுகள் தடுத்து நிறுத்தப்பட்டு, பொதுமக்கள் எதேச்சதிகாரமாக வெளியேற்றப்பட்டமை தொடர்பில் கருத்துவெளியிடுகையிலேயே அவர்கள் மேற்கணடவாறு தெரிவித்தனர்.

இந்நிலையில் சிவஞானம் சிறீதரன் தெரிவிக்கையில்,

வெடுக்குநாறிமலை ஆலயம் இந்திய அமைதிப்படைகள் இலங்கையில் இருந்தபோதும், விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தபோதும் பூஜைவழிபாடுகள் இடம்பெற்று வந்தவொரு ஆலயமாகும்.

அதுமட்டுமன்றி, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக வரலாறும் இதற்கு காணப்படுகின்றது. அவ்வாறான நிலையில் எமது மக்கள் மரபு ரீதியாக வழிபட்டு வந்த இந்த ஆலயத்தில் சிவராத்திரியை முன்னிட்டு முன்னெடுத்த விசேட வழிபாடுகளை பொலிசார் காட்டுமிராண்டித்தனமாக செயற்பட்டு தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இந்தச் செயற்பாடு கண்டிக்கதக்கது என்பதோடு, தற்போதும் தென்னிலங்கை சிங்கள, பௌத்த தேசியவாதிகள் அரசாங்கத்தின் கட்டமைப்புக்கின் துணையுடன் ஆக்கிரமிப்பைச் செய்வதற்கு எவ்வளவு தூரம் முனைகின்றார்கள் என்பதற்கு மிகச் சிறந்த உதாரணமாகும் என்றார்.

இதேவேளை, செல்வராசா கஜேந்திரன் தெரிவிக்கையில்,

தமிழர்களுக்கு பூர்வமாகவுள்ள பகுதிகளை தொல்பொருளின் பெயரால் முதலில் அடையாளப்படுத்துவதும் பின்னர் பௌத்த அடையாளங்களை அங்கு நிறுவுவதும் தொடர்ச்சியாக தாயகப் பிரதேசங்களில் முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடாகிவிட்டது.

சிவராத்திரி பூஜை நிகழ்வுகளுக்காக நாம் வெடுக்குநாறி மலைக்குச் சென்றபோது அங்கு பௌத்த தேரர்கள் வருகை தந்தமைக்கான நோக்கம் என்ன?

அவர்கள்,வெடுக்குநாறி மலையில் தமது அடையாளங்களை



அமைத்து தமது ஆக்கிரமிப்பை விஸ்தரிப்பதனையே நோக்காகக் கொண்டு அங்கு வருகை தந்திருந்தார்கள்.

ஆகவே, தென்னிலங்கையின் திட்டமிட்ட ஆக்கிரமிப்புக்கள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன என்பதற்கு வெடுக்குநாறி மலை மீண்டும் சாட்சியாகின்றது.

அதுமட்மன்றி, பொலிஸாரும், அரச படைகளும் பெரும்பான்மை இனத்துக்கும், தேரர்களுக்கும் சாதகமாக செயற்படுகின்றார்கள் என்பதும் இங்கு நிரூபிக்கப்பட்டுள்ளது.

அவர்கள், வழிபாட்டுக்காகச்சென்ற மக்களை நடத்திய விதமும், மக்களின் பிரதிநிதியான என்னை கையாண்ட முறைமையும் அதற்கு சான்றாகின்றது என்றார்.

# சுமார் 2,000 ஆண்டுகள் பாரம்பரியம் வெடுக்குநாறி மலை!

மார்ச் 09, 2024

சுமார் 2,000 ஆண்டுகள் பாரம்பரியம் வெடுக்குநாறி மலைக்கு இருக்கின்றது. 300 மீட்டர் உயரமான மேற்படி மலையின் அடிவாரத்திலுள்ள தமிழ் பிராமிய கல்வெட்டிக்கள், வட்டெழுத்துக்கள் இந்த ஆலய சூழலின் தொன்மைக்கு சான்று பகிர்கின்றன.

இங்குள்ள பிராமி எழுத்துக்களோடு இணைந்த எச்சங்களும், நாக வழிபாடும், நீர்ப்பாசன கட்டமைப்புகளும் விஜயன் வருகைக்கு முன்னரான தமிழ் நாகர்களின் தொன்மையின் அடையாளமாக இருக்கின்றன. இந்த பண்பாட்டு மலையின் உச்சியில் ஆதிலிங்கேஸ்வர் என்கிற சிவலிங்கம் அமைந்துள்ளது.

5 தலைமுறையினருக்கு மேலாக சைவமக்களின் வழிபாட்டு தலமாக ஆதிலிங்கேஸ்வர் இருக்கின்றார். ஆனால் 2018 ஆம் ஆண்டு முதல் மேற்படி ஆலய வழிபாடுகள் மீது இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் துணையுடன் பிக்குகள் வன்முறையை ஏவி விட்டு வருகின்றார்கள். இதற்கு தொல்லியல் திணைக்களம் துணை நிற்கின்றது.

ஒரு தடவை இங்குள்ள சிவலிங்கம் கூட அடித்து நொறுக்கப்பட்டு இருந்தது. ஆலய பூசகர்கள், அறங்காவலர் சபை உறுப்பினர்கள் கூட பல தடவை கைது செய்து இம்சிக்கபட்டுள்ளார்கள்.

இன்று சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்டபொதுமக்கள் நீதிமன்ற தீர்ப்புகளை உதாசீனம் செய்து கைது செய்ய பட்டுள்ளார்கள். குழந்தைகளுக்கு கூட குடிநீரை அனுமதிக்காமல் இம்சித்துள்ளார்கள்.

வரலாற்று உண்மைகளை மறைத்து வெடுக்குநாறி மலை சூழல் "வட்டமான பர்வத விகாரை" என்கிற பௌத்த ஆலயத்தின் நிலம் என அடையாளப்படுத்த முயலுகின்றார்கள். அதாவது 2 தூபிகளின் (Stupas) இடிபாடுகள் இங்குள்ளதாக மேதானந்த எல்லாவல தேரர் எழுதிய கற்பனை கதை மூலம் இதை நிரூபிக்க பாடுபடுகின்றார்கள்.

பாரம்பரிய வழிபாட்டு உரிமையை மறுத்து பூர்விக நிலத்தை அத்துமீறி சிதைப்பது பண்பாட்டு படுகொலை Cultural Genocide இல்லையா ?



# தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி முல்லை. கேப்பாப்பிலவு மக்களால் மனு கையளிப்பு!

மார்ச் 11, 2024

முல்லைத்தீவு - கேப்பாப்பிலவு மக்கள் தமது காணிகளை விடுவிக்கக் கோரி இன்றைய தினம் திங்கட்கிழமை முல்லைத் தீவு மாவட்ட செயலரிடம் மகஜர் கையளித்துள்ளனர்.

மாவட்ட செயலகத்துக்குச் சென்ற கேப்பாப்பிலவு மக்கள் மாவட்ட செயலரை சந்தித்து கலந்துரையாடியதுடன் ஜனாதிபதிக்கு மாவட்ட செயலர் ஊடாக மனு கையளித்துள்ளனர்.

பல வருடகாலமாக தாம் தமது காணிகளை இழந்து சிரமங்களுக்கு மத்தியில் வாழ்வதாகவும் தமது காணிகளை விரைவில் விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் இதன்போது தெரிவித்துள்ளனர்.

கேப்பாப்பிலவு மக்களின் ஒரு பகுதியினரின் காணிகள் விடுவிக்கப்பட்ட போதிலும் பாடசாலை, வைத்தியசாலை, தேவாலயம் உள்ளிட்ட முக்கிய மக்களின் குடியிருப்புக்கள் சிறீலங்கா இராணுவகட்டுப் பாட்டிலேயே இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# யாழ். வலி. வடக்கில் 33 வருடங்களின் பின் சொந்த மண்ணில் கால் பதித்த மக்கள்!

மார்ச் 11, 2024

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு பகுதியில் கடந்த 33 வருட காலமாக இராணுவ உயர்பாதுகாப்பு வலயமாக இருந்த சுமார் 67 ஏக்கர் காணி நேற்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை காணி உரிமையாளர்களிடம் மீள கையளிக்கப்பட்டது.

அவற்றுள் காங்கேசன்துறை தெற்கு மற்றும் மயிலிட்டி தெற்கு ஆகிய இரு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள காணிகளுக்குள் செல்ல சிறீலங்கா இராணுவத்தினர் இன்றைய நாள் திங்கட்கிழமை அனுமதி வழங்கியுள்ளனர்.

காங்கேசன்துறை தெற்கு 235 கிராம சேவையாளர் பிரிவில் 20.3 ஏக்கர் காணிகளும் , மயிலிட்டி தெற்கு (தென்மயிலை) 240 கிராம சேவையாளர் பிரிவில் 24 ஏக்கர் காணிகளும் விடுவிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை நேற்றைய நாள் விடுவிக்கப்பட்ட காணிகளில் பெரும்பாலான காணிகளில் இருந்து சிறீலங்கா இராணுவத்தினர் முற்றாக வெளியேறாத நிலையில் இன்னமும் ஓரிரு நாட்களில் காணிகளில் இருந்து தாம் வெளியேறிய பின்னர் உங்கள் காணிகளுக்குள் நீங்கள் வர முடியும் என தம்மை சிறீலங்கா இராணுவத்தினர் திருப்பி அனுப்பியதாக சில காணி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.











# வெடுக்குநாறி மலை அடாவடித்தனத்தைக் கண்டித்து மட்டக்களப்பில் போராட்டம்!

மார்ச் 11, 2024



வவுனியா- வெடுக்குநாறிமலை ஆலயத்தில் வழிபட சென்ற மக்கள் மீது பொலிசார் மேற்கொண்ட அடாவடித்தனத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும், பொலிசாரை கண்டித்தும், மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு முன்னால் இன்று கண்ட ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பொலிசாரின் அடாவடித்தனத்தை எதிர்த்து மட்டக்களப்பு பொது அமைப்புக்கள் ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்தன. இதனை யடுத்து இன்று காலை 10 மணிக்கு காந்தி பூங்காவிற்கு முன் னால் பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரன், மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், சீ.யோகேஸ்வரன், பா.அரியநேந்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தேசிய அமைப்பாளர் த.சுரேஸ், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், இந்து கிறிஸ்தவ மதகுருமார் கட்சி ஆதரவாளர்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்டோர் ஒன்று கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.







# வெடுக்குநாறி மலையில் நடந்த வற்றுக்கு எதிராக நல்லூரிலும் கவனயீர்ப்பு!

மார்ச் 11, 2024



வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்ட பூசகர் உள்ளிட்ட எண்மரையும் விடுதலை செய்ய வலியுறுத் தியும் சிவராத்திரி வழிபாட்டினை தடுத்தமையினை கண்டித் தும் நல்லூரில் இன்று திங்கட்கிழமை கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

ஆதீனங்கள் மற்றும் கிறீஸ்தவ மத தலைவர்கள்,அரசியல் பிரதிநிதிகள் என நூற்றிற்கும் மேற்பட்டவர்கள் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நல்லை ஆதீனத்தின் முன்னதாக இன்று மாலை கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

நேற்றைய தினம் மட்டக்களப்பில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் இன்று யாழில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.











# வெடுக்குநாறி மலையில் கைதானவர்களுக்கு கைவிலங்குடனேயே மருத்துவ சிகிச்சை!

மார்ச் 11, 2024

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்ட பூசகர் உள்ளிட்ட 8 பேரும் கைவிலங்குகளுடன் வைத்திய சாலையில் தொடர்ந்தும் சிகிக்சை பெற்று வருகின்றனர்.

மகா சிவராத்திரி தினத்தன்று வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மீது பொலிசார் தாக்குதல் மேற் கொண்டதாக நீதிமன்றின் கவனத்திற்கு சட்டத்தரணிகள் கடந்த சனிக்கிழமை கொண்டு வந்திருந்தனர். இதனையடுத்து நேற் றைய நாள் ஞாயிற்றுக்கிழமை குறித்த 8 பேரையும் மன்றின் உத்தரவுக்கமைய வவுனியா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியிடம் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் அழைத்து சென்றிருந்தனர்.

இதன்போது குறித்த 8 பேரினதும் உடல் நிலையை கருத்தில் கொண்டு அவர்களை வவுனியா வைத்தியசாலையில் சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கைவிலங்குடன் அவர்கள் வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



# வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேசுவரர் ஆலயத்தில் வழிபாடு செய்தது குற்றமா? மீண்டும் 19ம் திகதி வரை 08 பேர் விளக்கமறியல்; தொல்பொருளை சேதப்படுத்தியதாக பொய் குற்றச்சாட்டு!

மார்ச் 12, 2024

வெடுக்குநாறிமலை கைது செய்யப்பட்ட ஆலய பூசகர் 8 பேர் மீதும் தொல்பொருள் சின்னங்கள் தொடர்பான சட்டத்தை ஏவி விட்டு இருக்கின்றார்கள்.

தொல்பொருள் சின்னங்கள் தொடர்பான சட்டம் ஆங்கிலேயரி னுடைய ஆட்சிக் காலத்திலே 1940 ஆம் ஆண்டு 9 ஆம் கட் டளை சட்டமாக நிறைவேற்றப்பட்டது. 1955 ஆம் ஆண்டு அது திருத்தப்பட்டது.

பின்னர் 1998 இலும் பின்னர் இறுதியாக 2005 ஆம் ஆண் டிலும் இந்த சட்டம் திருத்தப்பட்டது.

இவ் திருத்தங்களின் கீழ் தொல்லியல் பகுதியை அனுமதியின்றி ஆய்வு செய்தல், தொல்லியல் சின்னங்களை, தொல்லியல் பொருட்களை பாதித்தல், அவற்றை அழித்தல், உருமாற்றம் செய்தல் ஆகியன குற்றங்கள் என சொல்லி இருக்கின்றார்கள். குறிப்பாக மேற்படி குற்றங்களானது சட்டப் பிரிவு 15C இன் கீழ் பிணை வழங்கப்பட முடியாத ஒரு குற்றங்கள் என சொல்லப்பட் டுள்ளது.

மேற்படி சட்டத்தில் வரலாற்று ரீதியாக, விஞ்ஞான ரீதியாக உறுதிப்பாடு இல்லாமல் எந்தவொரு இடத்தையும் தொல்லியல் சின்னம் என அறிவிப்பதற்கு அமைச்சருக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கிறது.

அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு தொல்லியல் திணைக் களம் வரலாற்று ரீதியானவோ விஞ்ஞான ரீதியானவோ ஆதார மின்றி வெடுக்குநாறிமலை சிவன் ஆலயத்தை பௌத்த தொல்லியல் பகுதியாக அறிவித்து இருந்தது.

ஆனால் 2014 ஆம் ஆண்டு முதல் ஆலயம் நெருக்கடிகளை சந்திக்கின்றது.

பிக்குகளின் பின்னணியில் இயங்கிய தெற்கு குழு மேற்படி மலை கற்களை அகல முற்பட்டது முதல் நெருக்கடி தீவிரமானது இந்த நெருக்கடிகளுக்கு எதிராக கடந்த 10 வருடங்களாக குறித்த ஆலய நிர்வாகம் பல வழிகளில் போராடி வருகின்றது.

சட்டங்கள் ஊடாகவும் , வெகுசன போராட்டங்கள் ஊடாகவும் ஆலய நிர்வாகம் வழிபாட்டு உரிமைக்காக தனது சக்திக்கு மீறி போராடி வருகின்றது. ஆலய பூசகர் உட்பட்ட நிர்வாகிகள் பல தடவை கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கடந்த வருடம் ஆலய விக்கிரங்களை கூட அடித்து நொறுக்கி இருந்தார்கள். ஆலய விக்கிரங்களை நொறுக்கும் போது சேதமடையாத தொல்லியல் பகுதி சிவராத்திரி வழிபாட்டின் போது சேதமடைந்தாக ஆலய பூசகர் உட்பட 8 பேர் மீதும் தொல் லியல் பகுதிக்கு சேதாரம் ஏற்படுத்தினார்கள் என பொய்யாக ஆதாரங்களை சோடித்து தொல்பொருள் சின்னங்கள் தொடர் பான சட்டத்தின் கீழ் பிணை வழங்க முடியாத வழக்கை தாக்கல் செய்து இருக்கின்றார்கள்.

இந்த கைது மற்றும் வழக்கு தமிழ் மக்களுக்கும் அவர்களின் அரசியல் பரப்பிற்கு விடப்படும் எச்சரிக்கை.

வடக்கு கிழக்கில் 2,000 இற்கும் அதிகமான பௌத்த தொல் லியல் சின்னங்களை அடையாளப்படுத்தியுள்ளதாக தொல் லியல் திணைக்களம் சொல்லும் நிலையில் இதை எப்படி எதிர் கொள்ளப் போகிறோம் என்பதில் மேலும் சிக்கல்களை சந்திக்க போகின்றோம். எல்லாவற்றிற்கும் மேலாக சாதாரண விளிம்பு நிலை மனிதர்களின் சிவ வழிபாடு குற்றமாக்கபட்டு அவர்கள் விலங்கிட்டு கைது செய்து கொண்டு போகும் காட்சிகள் கொடுமையாக உள்ளது














# வெடுக்குநாறி மலையில் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக் கோரி உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் குதித்துள்ளனர்!

மார்ச் 13, 2024

பிணை அனுமதி இலங்கை காவல்துறையின் எதிர்ப்பினால் மறுக்கப்பட்டுள்ள நிலையில் வெடுக்குநாறிமலையில் சிவராத் திரி வழிபாடுகளில் ஈடுபட்டபோது கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர்கள் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் குதித்துள்ளனர்.

வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கடந்த சிவராத்திரி தினத்தன்று கைதுசெய்யப்பட்ட ஆலயபூசகர் உள்ளிட்ட 8 பேரையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதிமன்று செவ்வாய்க்கிழமை (12) உத்தரவு பிறப்பித்துள்ளது.

அதனையடுத்து அவர்கள் வவுனியா சிறைச்சாலையில் நேற்று செவ்வாய்க்கிழமை (12) மீள அடைக்கப்பட்டனர்.இந்நிலையில் தங்களை விடுதலைசெய்யகோரி அவர்கள் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

முன்னதாக நீதிமன்றிற்கு கொண்டுசெல்லப்படும் போதே அவர்கள் உணவினை எடுத்திருக்கவில்லையென தெரிய வருகின்றது. இந்நிலையில் இன்று புதன்கிழமையும் அவர்கள் உணவினை உட்கொள்வதற்கு மறுத்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட எட்டுபேரில் ஆலயபூசாரியார் த.மதிமுகராசா, து.தமிழ்ச்செல்வன், தி.கிந்துயன்,சு.தவபாலசிங்கம், விநாயக மூர்த்தி ஆகிய ஐவரே உணவுத் தவிர்ப்பு போராட்டத்தினை



முன்னெடுத்துள்ளனர்.

# வெடுக்குநாறி மலையில் கைது செய்யப்பட்டவர்களை விடுவியுங்கள்; கஜேந்திரன் எம்.பி. கோரிக்கை!

மார்ச் 13, 2024



வெடுக்குநாறி மலையில் கைது செய்யப்பட்டவர்களின் உடல் நிலை மோசமடைவதற்கு முன்னர் அவர்களை விடுவிக்க வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் நாடாளு மன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

வெடுக்குநாறி ஆலயத்தில் கைது செய்யப்பட்ட 8 பேரையும் வவுனியா சிறைச்சாலையில் இன்று(13) பார்வையிட்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிவராத்திரி வழிபாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் வைத்து பொலி சாரினால் பொய் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் பொலி சாரால் கைது செய்யப்பட்ட 8 பேருக்குமான விளக்கமறியல் நீடிக்கப்பட்டிருந்தது.

எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைப்பதாக நீதிமன்றம் அறிவித்திருந்தது.

கடந்த காலங்களில் இதே வவுனியா நீதிமன்றம் வழங்கிய தீர்ப் புக்களுக்கு கட்டுப்பட்டு அந்த தீர்ப்புக்களின் பிரகாரம் வழி பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது ஆலய பூசகர், ஆலய நிர்வாகத்தினர், பக்தர்கள் என 8 பேரை பொய் குற்றச்சாட்டின் அடிப்படையில் பொலிஸார் கைது செய்தனர்.

19 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளதாக நீதி மன்றத்தால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் விரக்தி அடைந்த 8 அப்பாவிகளும் சிறைச்சாலையில் பெரும் குழப்பம் அடைந் திருக்கிறார்கள்.

அதில் 5 பேர் உண்ணாவிரதம் இருக்கின்றார்கள். நேற்று (12) காலை முதல் உணவை எடுக்க மறுத்து உண்ணாவிரதம் இருக்கின்றார்கள்.

இதன்காரணமாக என்ன ஆகுமோ என்ற அச்சம் அவர்களது குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ளது. 8 பேருமே எந்தக் குற்றமும் செய்யாத அப்பாவிகள்.

சிறீலங்கா அரசு அதாவது தொல்பொருள் திணைக்களம், வன வளத் திணைக்களம், பொலிசார் கூட்டிணைந்து சிங்கள பௌத்த மயமாக்கல் திட்டத்தின் கீழ் அந்த இடத்தில் வழிபாட்டில் ஈடுபடுகின்ற தமிழர்களை விரட்டியடித்து அந்த இடத்தில் பௌத்த மயமாக்கலுக்கு எடுத்த முயற்சி வெற்றியளிக்காத நிலையில், ஆலய பூசகரையும் பக்தர்களையும் கைது செய் திருப்பதன் மூலம் எதிர்காலத்தில் அந்தப் பகுதிக்கு யாரும் செல்ல முடியாத அச்சநிலையை ஏற்படுத்துவதற்காக நடவடிக் கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

அவர்களை கைது செய்த பின்னரே தொல்பொருள் திணைக் களம், வனவளத் திணைக்களம் என்பவற்றிடம் கடிதங்கள் பெறப்பட்டு அப்பாவிகளை குற்றவாளிகளாக்கப்பட்டுள்ளது.


இவ்வாறான பொய் குற்றச்சாட்டில் உள்ள 8 பேரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். இதில் ஆலய பூசகர் உள்ளிட்ட 5 பேர் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். இவர்கள் உடல் மோசமடைவதற்கு முன்னர் விடுவிக்கப்பட வேண்டும்.

இவர்கள் விடுவிக்கப்படாவிட்டால் உடனடியாக வடக்கு - கிழக் கில் போராட்டம் முன்னெடுக்கப்படும். இதற்கான முன்னெடுப் புக்கள் பொது அமைப்புக்கள் மற்றும் சமய அமைப்புக்கள் முன்னெடுத்துள்ளனர்.

பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்திய நெடுங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவர் அந்த பொறுப்பில் இருந்து நீக்கப்பட வேண் டும். இனவாத செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும். புலம் பெயர் வாழ் தமிழ் மக்களும் அவர்களை சிறையில் இருந்து விடுவிக்க இராஜதந்திர அழுத்தங்களை கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன் எனத் தெரிவித்தார்.

# வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தில் நடைபெற்ற அரசகட்டமைப்பின் அத்துமீறல்களுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை பாராளுமன்றை புறக்கணிக்குமாறு கோரிக்கை!

மார்ச் 13, 2024



வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தில் நடைபெற்ற அரசகட்டமைப்பின் அத்துமீறல்களுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை பாராளுமன்றை புறக்கணிக்கும் தீர்மானத்தை தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எடுக்க வேண்டும் என ஒருங் கிணைந்த தமிழர் கட்டமைப்பு கோரியுள்ளது.

இது தொடர்பில் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் சார்பில் தலைமை ஒருங்கிணைப்பாளர் அகத்தியர் அடிகளார், பாராளு மன்ற உறுப்பினர்களுக்கு கோரிக்கை கடிதங்களை அனுப் பியுள்ளார்.

அக்கடிதத்தில்,

மகா சிவராத்திரி தினத்தில் வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தில் நடைபெற்ற அரசகட்டமைப்பின் அத்துமீறல்கள் மற்றும் காவல்துறையினரின் அட்டூழியங்கள் என்பவற்றின் தொடர் விளைவாக ஆலய பூசகர், தர்மகர்த்தாக்கள் உட்பட எண்மர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதையும் தாங்கள் அறிவீர்கள்.

இந்த நிலையில் இலங்கையில் வட கிழக்கில் தொடர்ச்சியாக சைவ ஆலயங்கள் குறிப்பாக, புராதன ஆதி சிவன் ஆலயங் களில் வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டு தமிழர்கள் மீது போலி வழக்குகள் பதிவு செய்வதும் அதே நேரம் அவை அரச இயந் திரத்தின் உதவியுடன் குறிப்பாக காவல்துறை, தொல்லியல், வனவள திணைக்களங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு உள் ளூர் தமிழ் மக்கள் சொல்லொணாத்துயரை அனுபவிப்பதும் தொடர்கதையாக உள்ளது.

எத்தனையோ கண்டன அறிக்கைகள் வெளியிட்டும், கவனயீர்ப் புக்கள் நடைபெற்ற போதும் அவை எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கு போன்று எவ்விதப் பலனும் இல்லாமல் ஆகி விட்டது.

இந்நிலையில் அரசிற்கு பாரிய அழுத்தத்தை பிரயோகிக்கவும், சிங்களப் பொதுசனங்களினதும் சர்வதேச கவனத்தையும் ஈர்த்து இந்த பிரச்சனைகளுக்கு முடிவு கொண்டு வர வேண்டிய நிலையிலும் ஜனநாயக ஒத்துழையாமை போராட்ட வடிவங் களில் ஒன்றாகிய பாராளுமன்றை உரிய தீர்வு கிடைக்கும் வரை புறக்கணிக்கும் தீர்மானத்தை எடுத்து உதவுமாறு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களை தமிழ் பொது அமைப்புக்கள், மத நிறுவனங்கள், சிவில் சமூகம் சார்பாக ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பினராகிய நாம் கோரி நிற்கின்றோம்.

அந்தவகையில் தாங்களும் ஒரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப் பினர் என்ற வகையில் இத்தீர்மானத்தினை எடுத்து இப் போராட் டத்திற்கு வலுச்சேர்க்குமாறு கோரிநிற்கின்றோம் என குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# "எனது கணவரின் சாவுக்கு கடற்படையும் காரணம்" படுகொலை செய்யப்பட்ட வட்டுக்கோட்டை இளைஞனின் மனைவி தெரிவிப்பு!

மார்ச் 13, 2024

எனது கணவரின் சாவிற்கு காரைநகர் கடற்படையும் ஒரு காரணம் என உயிரிழந்த இளைஞனின் மனைவி குற்றம் சாட்டியுள்ளார்.



காரைநகர் பகுதிக்கு கணவன் மனைவி சென்று விட்டு திரும்பும் வழியில், கணவன் மனைவியை கடத்தி சென்ற வன்முறை கும்பல் கணவனை படுகொலை செய்துள்ளது.

இது தொடர்பில் உயிரிழந்தவரின் மனைவி தெரிவிக்கையில் ,

காரைநகருக்கு சென்று விட்டு, மோட்டார் சைக்கிளில் நானும் எனது கணவரும் வீடு திரும்பும் வேளையில், பொன்னாலை பாலத்திற்கு அருகில் எம்மை வழிமறித்த கும்பல் வாகனத்தில் எம்மை கடத்த முயற்சித்தனர்.

அவ்வேளை, நானும் கணவரும் அவர்களிடம் தப்பித்து அரு கில் இருந்த கடற்படை முகாமிற்குள் தஞ்சம் புகுந்தோம். கடற்



படையினர் எம்மை அங்கிருந்து விரட்டினார்கள்.

"எங்களை கடத்த போறாங்க, எங்களை காப்பாற்றுங்க" என கடற்படையிடம் மன்றாடினோம். ஆனால் அவர்கள் எங்களை முகாமில் இருந்து துரத்தினார்கள்

அவ்வேளையிலே எம்மை அவர்கள் வாகனத்தில் கடத்தி






சென்றனர்.

கடற்படையினர் மனிதாபிமானத்துடன் நடந்து கொண்டு, எமக்கு அடைக்கலம் கொடுத்து இருந்தால், எனது கணவரின் உயிர் பிரிந்திருக்காது. எனது கணவரின் சாவுக்கு கடற்படையும் ஒரு விதத்தில் காரணம் என தெரிவித்தார்.

அதேவேளை, கடற்படையினர் அடைக்கலம் கொடுக்காது இருந் தாலும், தமது முகாமிற்கு அருகில் வாகனத்துடன் நின்ற கும் பலை துரத்தி விட்டு, இவர்களை அனுப்பி வைத்திருக்கலாம். அல்லது வட்டுக்கோட்டை பொலிசாருக்கு தகவல் வழங்கி இருக் கலாம். கடற்படையின் கண் முன் இருவரை வாகனத்தில் வந்தவர்கள் கடத்தி சென்ற போதும் கடற்படையினர் அதனை தடுக்கவோ, கடத்தல் சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிசாருக்கு தகவல் வழங்காமை இருந்தமை கடற்படை மீதும் எங்களுக்கு சந்தேகம் வருகிறது என உயிரிழந்த இளைஞனின் உறவினர்கள் தெரிவித்தனர்.




# கனடாவின் முன்னாள் பிரதமர் பிறயன் மல்ரோனி காலமானார்!

மார்ச் 01, 2024

கனடாவின் முன்னாள் பிரதமர் பிறயன் மல்ரோனி தனது 84ம் வயதில் காலமானார். கனடாவின் 18ம் பிரதமராக முல்ரொனி கடமையாற்றியுள்ளார்.

குபெக் மாகாணத்தின் Baie-Comeau ல் உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த குடும்பமொன்றில் மல்ரோனி பிறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் பிரதமர் ஜோன் டெபின்பேர்க்கரின் ஆலோசகர் என்ற அடிப்படையில் மல்ரோனி தனது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்துள்ளார்.

1983ம் ஆண்டு கொன்சர்வடிவ் கட்சியின் தலைவராக தெரிவாகிய மல்ரோனி, 1984ம் ஆண்டில் கனடாவின் பிரதமராக தெரிவு செய்யப்பட்டார்.

மல்ரோனி தனது பதவிக் காலத்தில் நாட்டில் பல்வேறு மாற்றங்களை செய்தவர் என புகழாரம் சூட்டப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்கள் புகலிடம் கோரி முதல் தடவையாக கப்பலில் கனடா வந்தடைந்த நாட்டின் பிரதமராக மல்ரோனி பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறுபான்மை சமூகங்களுக்கு நீதி வழங்கும் விவகாரத்தில் மல்ரோனி சிறந்த தலைமைத்துவத்தைக் கொண்டிருந்தார் என பாராட்டப்படுகின்றது.



# முன்னாள் பிரதமர் மல்ரோனியின் மறைவிற்கு ஜஸ்டின் ட்ரூடோ இரங்கல்!

மார்ச் 01, 2024

கனடாவின் முன்னாள் பிரதமர் பிறயன் மல்ரோனியின் மறைவிற்கு பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ இரங்கல் தெரிவித்துள்ளார்.

மல்ரோனியின் மறைவுச் செய்தி பெரும் கவலையை ஏற்படுத்தியதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டை பெருமைப்படுத்துவதற்காக தொடர்ச்சியாக உதவியதாகத் தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட ரீதியில் தமக்கு வழங்கிய அறிவுரைகள் மிகவும் பயனுள்ளவை என ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

மல்ரோனி மிகவும் கருணையுள்ளம் கொண்டவர் எனவும் நாட்டின் நலனுக்காக அயராது உழைத்தவர் எனவும் தெரிவித்துள்ளார்.

1984ம் ஆண்டு முதல் 1993ம் ஆண்டு வரையில் கனடாவின் 18ம் பிரதமராக மல்ரோனி வகித்தார்.



# கனடாவில் வாகனத் திருட்டினால் உரிமையாளர்களுக்கு நெருக்கடி நிலை!

மார்ச் 04 2024

கனடாவில் வாகனத் திருட்டுச் சம்பவங்களினால் அதன் உரிமையாளர்கள் மற்றுமொரு நெருக்கடியையும் எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

கனடாவில் கார் திருட்டுச் சம்பவங்கள் குறைவடையவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

கார் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் பல்வேறு தகவல்கள் வெளியிடப்பட்டாலும், திருட்டுச் சம்பவங்களில் குறைவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு களவாடப்படும் வாகனங்கள் குறித்த அனைத்து விதமான கட்டணங்களையும் உரிமையாளர்கள் செலுத்த நேரிடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக காப்புறுதி கட்டணங்கள் செலுத்த நேரிடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வாகனங்களை பயன்படுத்தாமலேயே காப்புறுதிக் கட்டணங்கள் உள்ளிட்ட பல்வேறு கட்டணங்களை செலுத்த நேரிடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



# கனடாவின் வட்டி வீதம் குறித்து விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பு!

மார்ச் 06, 2024

கனடாவில் வட்டி வீதங்களில் மாற்றமில்லை என அந்நாட்டு மத்திய வங்கி அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இதன்படி தற்பொழுது பேணப்பட்டு வரும் வங்கி வட்டி வீதமான ஐந்து வீதம் தொடர்ந்தும் அதே அளவில் பேணப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின், பணவீக்க நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கொள்கைகள் வகுக்கப்படுவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

வங்கி வட்டி வீதங்களை குறைப்பது தற்போதைக்கு பொருத்தமற்றது என மத்திய வங்கியின் ஆளுனர் ரிப் மெக்கலம் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டின் நடுப்பகுதி வரையில் பணவீக்கம் சுமார் மூன்று வீதமாக காணப்படும் என எதிர்பார்ப்பதாகவும் அதன் பின்னர் அது குறையும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் பணவீக்கம் 2.9 வீதமாக காணப்பட்டது.

செங்கடலில் கப்பல்கள் மீதான தாக்குதல்கள் உள்ளிட்ட மத்திய கிழக்கு போர் பதற்றம், உக்ரைன் - ரஸ்ய போர் போன்ற பல காரணிகளினால் பொருட்களின் விலை அதிகரிப்பு ஏற்படும் சாத்தியம் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனால் வட்டி வீதங்களை தற்போதைக்கு திருத்தி அமைப்பது பொருத்தமற்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10ம் திகதி வங்கி வட்டி வீதம் குறித்த அடுத்த அறிவிப்பு வெளியிடப்பட உள்ளது.




## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

# ஐந்து இலட்சம் பேருக்கு குடும்ப வைத்தியர்களின் சேவை இல்லை!

மார்ச் 05 2024

கனடாவின் ரொரான்ரோவில் ஐந்து லட்சம் பேருக்கு குடும்ப வைத்தியர்களின் சேவை கிடைக்கப் பெறுவதில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

ஒன்ராரியோ குடும்ப வைத்தியர் கல்லூரியின் தலைவர் டாக்டர் மேகலா குமணன் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2026ம் ஆண்டளவில் குடும்ப வைத்தியர்களின் சேவையை பெற்றக்கொள்ள முடியாதவர்களின் எண்ணிக்கை ஒரு மில்லியனாக உயர்வடையலாம் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

குடும்ப வைத்திய சேவைகளை வழங்குவதில் பெரும் சவால் நிலைமைகள் காணப்படுவதாக தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் அதிக எண்ணிக்கையிலான குடும்ப வைத்தியர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக்கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.

நிர்வாக சிக்கல்கள் வேலைப்பளு போன்ற காரணிகளினால் குடும்ப வைத்தியர்கள் தொடர்ந்தும் சேவையில் நீடிக்க விரும்புவதில்லை என தெரிவித்துள்ளார்.

ஒன்றாரியோ மாகாணத்தில் 2.3 மில்லியன் பேருக்கு குடும்ப வைத்தியர்களின் சேவை கிடைக்கப் பெறுவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

குடும்ப வைத்திய சேவையை மேம்படுத்தும் நோக்கில் அண்மையில் அரசாங்கம் சில சாதகமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.



# இலங்கையர்கள் ஆறு பேர் ஒட்டாவாவில் படுகொலை!

மார்ச் 07, 2024

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில் பகுதியில் உள்ள வீடொன்றில் வசித்து வந்த இலங்கை குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் தாய் மற்றும் அவரது நான்கு பிள்ளைகள் மற்றும் வீட்டில் வசித்து வந்த 40 வயதுடைய ஆண் ஒருவர் உள்ளிட்ட 06 பேர் உயிரிழந்துள்ளனர்.

குழந்தைகளின் தந்தை பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நான்கு குழந்தைகளும் ஏழு வயதுக்குட்பட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கனடாவில் கல்வி கற்கும் 19 வயதுடைய ஃபேப்ரியோ டி சொய்சா என்ற இலங்கையர் என ஒட்டாவா பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

கொலைக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை.

இந்தச் சம்பவம் முதலில் துப்பாக்கிச் சூடு என அறிவிக்கப்பட்ட நிலையில், பின்னர் ஆயுதமொன்றால் கொலைகள் மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தில் நான்கு பிள்ளைகளின் தாயான 35 வயதுடைய தர்ஷனி பண்டாரநாயக்க அவரது பிள்ளைகளான 07 வயதுடைய இனுக விக்கிரமசிங்க, 4 வயதான அஸ்வினி விக்கிரமசிங்க 02 வயதான றின்யானா விக்கிரமசிங்க மற்றும் 02 மாதங்களான கெலீ விக்கிரமசிங்க ஆகியோரும், அவர்களது வீட்டில் வசித்து வந்த 40 வயதுடைய காமினி அமரகோன் ஆகியோரே படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தில் கொலையான நான்கு பிள்ளைகளின் தந்தையான தனுஷ்க விக்ரமசிங்க என்பவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.




# இலங்கையர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு கனடாப் பிரதமர் இரங்கல்!

மார்ச் 07, 2024

கனடாவின் ஒட்டாவாவில் இலங்கைர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ இரங்கல் வெளியிட்டுள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இந்த இரங்கலை வெளியிட்டுள்ளார்.

படுமோசமான ஓர் வன்முறைச் செயல் எனவும் இந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடும்பம் மற்றும் அவர்களது நண்பர்களுக்கு சமூகம் உதவும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இவ்வாறான நெருக்கடியான தருணங்களில் கனடியர்கள் வழமையாகவே உதவுவார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த கொடூர சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை பொலிசார் மேற்கொள்வார்கள் எனவும் அது குறித்த தகவல்களை வெளியிடுவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் கனடிய எதிர்க்கட்சித் தலைவர் பியே பொலியெவ் இரங்கல் வெளியிட்டுள்ளார்.

இந்த கோரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கல்களை வெளியிட்டுக் கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.



# கனடாவில் ஆசிரியர் பணிகளில் அதிகளவு வெற்றிடங்கள்!

மார்ச் 12, 2024

கனடாவில் பாடசாலைகளில் ஆசிரியர் பணிகளுக்கு அதிகளவில் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவின் பல பாடசாலைகளில் தொழில்சார் தகுதியற்றவர்கள் ஆசிரியர்களாக கடமையாற்றி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கியூபெக் மாகாணத்தில் மட்டும் இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் சுமார் 8500 ஆசிரியர் பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆசிரியர் பதவி வகிக்கத் தகமையுடைய தொழில்சார் கற்கை நெறிகளை பூர்த்தி செய்தவர்கள் சில மாகாணங்களில் தங்களது சேவையை வழங்க விரும்புவதில்லை என தெரிவிக்கப்படுகின்றது.


கனடாவின் பல பகுதிகளில் ஆசிரியர்களுக்கு கடுமையான தட்டுப்பாட்டு நிலைமை நீடித்து வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆசிரியர் பதவி வெற்றிடங்களை சமாளிக்கும் வகையில் பாடசாலை நிர்வாகங்கள் பூரண தகுதியற்றவர்களை ஆசிரியர் கடமையில் அமர்த்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கியூபெக் மாகாணத்தில், கடந்த 2020 மற்றும் 2021ம் ஆண்டில் ஆசிரியர்களாக பணியாற்றிய மூன்று லட்சம் பேருக்கு ஆசிரியர் தொழில் தகமை கிடையாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆசிரியப் பணியில் ஈடுபடுவோருக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்படாத காரணத்தினால் பலர் ஆசிரிய தொழிலை விரும்புவதில்லை என தெரிவிக்கப்படுகின்றது.





"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது."

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*

# கனடாவில் வீட்டு வாடகைத் தொகை மேலும் அதிகரிப்பு!

மார்ச் 12 2024

கனடாவில் வீட்டு வாடகைத் தொகை மேலும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பெப்ரவரி மாதம் கனடாவில் சராசரி வாடகைத் தொகை 2193 டொலர்களாக பதிவாகியுள்ளது.

கடந்த 2023ம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த வாடகைத் தொகையானது 10.5 சதவீத்தினால் அதிகரித்துள்ளது.

கடந்த 2023ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தின் பின்னர் வெகுவாக வாடகைத் தொகை அதிகரித்த மாதமாக கடந்த பெப்ரவரி மாதம் கருதப்படுகின்றது.

ஒரு படுக்கை அறையைக் கொண்ட வீடு ஒன்றின் வாடகைத் தொகை கடந்த பெப்ரவரி மாதம் 1920 டொலர்களாக காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு ஆண்டு காலப் பகுதியில் கனடாவில் வாடகைத் தொகையானது 21 வீதம் அல்லது மாதாந்த வாடகைத் தொகை சராசரியாக 384 டொலர்களாக உயர்வடைந்துள்ளது.




# 'எடிசன் திரை விருது' விழாவில் கனடா நாட்டில் இருந்து தமிழ் மாணவர்கள் பங்கேற்பு!

மார்ச் 13, 2024




உலகத் தமிழர்களால் இணைய வாக்குகள் பெற்று தேர்ந்தெடுக்கப்படும் தமிழ் திரை கலைஞர்கள் விருது பெரும் நிகழ்வில் கனடா நாட்டு தமிழ் மாணவர்கள் நடனம் ஆட உள்ளனர். மார்ச் 24ஆம் தேதி சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள வர்த்தக மையத்தில் நடைபெறவுள்ள 16 ஆம் ஆண்டு எடிசன் திரை விருது நடைபெற உள்ளது.

அந்நிகழ்வில் பல்வேறு நாடுகளில் உள்ள தமிழ் திரை கலைஞர்கள் தன்னார்வ இசையமைப் பாளர்கள், நடன மணிகள், பின்னணிப் பாடகர்கள் ஆகியோர் தமிழ்நாட்டில் உள்ள திரை கலைஞர்களுடன் இணைந்து கலை நிகழ்வு நடத்த உள்ளனர். அதில் குறிப்பாக 2015 ஆம் ஆண்டு எடிசன் திரைபிரதில் தன்னார்வ இசையமைப்பாளராக கலந்து கொண்டு நிகழ்ச்சி நடத்திய கனடாவைச் சேர்ந்த ராம் அகராதி அவர்கள் தமிழகத்தில் உள்ள முன்னணி நடன கலைஞர்களுடன் இணைந்து கனடாவில் வாழும் தமிழ் மாணவர்களுக்கு நடனம் பயிற்றுவித்து அவர்களை இவ்வாண்டு நடக்கும் எடிசன் திரையுறுதில் நடனமாட உள்ளனர். இதன் மூலம் கனடா தமிழ் மாணவர்களுக்கு தமிழ் திரை உலகில் வாய்ப்புகளை பெறவும், தங்களின் திறமைகளை பல்வேறு நாட்டு தொலைக்காட்சிகளில் மூலம் தமிழர்கள் அறியவும் எடிசன் திரை விருது மேடை அவர்களுக்கு உதவியாக இருக்கும் என எடிஷன் திரை விருது குழு தலைவர் செல்வகுமார் தெரிவித்தார். குறிப்பாக இவ்வாண்டு இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், லண்டன், கனடா நாட்டு கலைஞர்கள் பங்கேற்று கலை விருந்து படைக்க உள்ளனர்.



# அமெரிக்காவில் இறைச்சி உற்பத்தி தொடர்பிலான நடைமுறை குறித்து கனடா அதிருப்தி!

மார்ச் 13, 2024

அமெரிக்கரிவல் இறைச்சி உற்பத்தி தொடர்பில் புதிய நடைமுறையொன்று அறிமுகம் செய்யப்பட உள்ளமை குறித்து கனடா தனது கரிசனையை வெளியிட்டுள்ளது.

"அமெரிக்காவின் உற்பத்தி" மற்றும் "அமெரிக்காவின் தயாரிப்பு" போன்ற லேபல்களுடன் மட்டுமே இறைச்சி மற்றும் முட்டை வகைகள் விற்பனை செய்யப்பட வேண்டும் என்ற நடைமுறை அறிமுகம் செய்யப்பட உள்ளது.

எதிர்வரும் 2026ம் ஆண்டிலிருந்து அமெரிக்காவில் இந்த புதிய நடைமுறை அறிமுகம் செய்யப்பட உள்ளது.

அமெரிக்காவிலேயே பிறந்து அமெரிக்காவிலேயே வளர்ந்த மிருகங்களின் இறைச்சி உற்பத்திகளை மட்டும் விற்பனை செய்யவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அமெரிக்க விவசாய திணைக்களம் இது தொடர்பிலான அறிவிப்பினை வெளியிட்டிருந்தது.

எனினும்,இந்த திட்டத்திற்கு கனடிய அரசாங்கம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

கனடிய விவசாய அமைச்சர் லோரன்ஸ் மெக்யூலி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மேரி நெக் ஆகியோர் கூட்டாக இணைந்து இந்த நடைமுறை குறித்த அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

இந்த நடைமுறையானது இரு நாடுகளினதும் வர்த்தக உறவுகளை பாதிக்கும் வகையிலானது என சுட்டிக்காட்டியுள்ளனர்.



அமெரிக்க மற்றும் கனடிய இறைச்சி, கால்நடை துறைகள் இணைந்து செயற்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# கனேடியர் கொல்லப்பட்ட விவகாரம்; இந்தியாவின் பங்கு தொடர்பில் சந்தேகம் எழுப்பியுள்ள நாடு!

மார்ச் 13, 2024

கனடாவில் கனேடியர் ஒருவர் கொல்லப்பட்டதன் பின்னணியில் இந்தியா இருப்பதாக கனடா பிரதமர் குற்றம் சாட்டிய விடயம் இரு நாடுகளுக்கிடையிலான தூதரக உறவுகளில் பெரும் பிளவை ஏற்படுத்திய விடயம் அனைவரும் அறிந்ததே.

இந்நிலையில், கனடாவின் கூட்டாளி நாடொன்று, கனேடியர் கொல்லப்பட்ட விடயத்தில் இந்தியாவின் பங்களிப்பு குறித்து தற்போது சந்தேகம் எழுப்பியுள்ளது.

கனடாவில் கனேடியர் ஒருவர் கொல்லப்பட்டதன் பின்னணியில் இந்தியா இருப்பதாக கனடா குற்றம் சாட்டிய விடயத்தில், 'Five-Eyes Intelligence' என்னும் அமைப்பு கனடாவுக்கு ஆதரவு தெரிவித்திருந்தது.

அந்த அமைப்பில், கனடா, அமெரிக்கா, பிரித்தானியா, நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் உள்ளன.

இந்நிலையில், அந்த அமைப்பிலுள்ள நியூசிலாந்து, கனடாவில் கனேடியர் ஒருவர் கொல்லப்பட்டதன் பின்னணியில் இந்தியா இருப்பதாக கனடா குற்றம் சாட்டிய விடயம் தொடர்பில் சந்தேகம் எழுப்பியுள்ளது.

இந்தியாவுக்கு அரசு முறைப்பயணமாக வந்துள்ள நியூசிலாந்து துணைப்பிரதமரான Winston Peters, இந்தியா மீதான கனடாவின் குற்றச்சாட்டு தொடர்பில் சந்தேகம் எழுப்பியுள்ளார்.

நியூசிலாந்தின் துணைப்பிரதமரான Winston Peters, அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சரும்கூட. இந்திய ஊடகம் ஒன்றிற்கு பேட்டியளித்த அவர், நான் ஒரு பயிற்சி பெற்ற சட்டத்தரணி என்னும் முறையில் பார்க்கும்போது, வழக்கு எங்கே, ஆதாரம் எங்கே, கண்டுபிடிக்கப்பட்டதாக கூறப்பட்ட விடயம் எங்கே, இங்கே, இப்போது, அப்படி ஏதாவது ஆதாரம் இருக்கிறதா, அப்படி ஒன்று இல்லையே என்று கூறினார்.




'Five-Eyes Intelligence' என்னும் அமைப்பிலுள்ள மற்ற நாடுகள் கனடாவுக்கு ஆதரவு தெரிவித்துவரும் நிலையில், நியூசிலாந்தின் நிலைப்பாடு சற்று மாறியுள்ளது அதன் துணைப் பிரதமரின் கூற்றிலிருந்து தெரியவந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

# தமிழக செய்திகள்



# உண்மையான விடுதலையை தமிழ்நாடு அரசு வழங்கவில்லை!

## அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி

மார்ச் 02, 2024

32 ஆண்டுகால நீண்ட சிறைவாசத்திற்குப் பிறகு உச்சநீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட வயது முதிர்ந்த 3 இலங்கைத் தமிழர்களுக்கு உண்மையான விடுதலையை தமிழ்நாடு அரசு வழங்கவில்லை என்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்து இருக்கிறார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "தமிழக சிறையில் 32 ஆண்டுகால நீண்ட சிறைவாசம் அனுபவித்த இலங்கைத் தமிழர்கள் ராபர்ட் பயஸ், ஜெயகுமார், முருகன், சாந்தன் ஆகியோர் 11.11.2022 அன்று உச்சநீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். இலங்கை குடிமக்கள் என்பதால் அயல் நாட்டிற்கு அனுப்பும்வரை நடமாட்டத்திற்கு கட்டுப்பாடுகள் விதித்து

ஏற்கெனவே 32 ஆண்டுகள் சிறையில் வாழ்க்கையை இழந்தவர்கள், விடுதலைக் காற்றை சுவாசிக்கப் போகிறோம் என்று பெருமூச்சு விடும்பொழுது, மீண்டும் சிறப்பு முகாம் எனும் கொடூரம் அவர்களது வாழ்க்கையில் அரங்கேறும் என்று சற்றும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

அதிலும், சிறையில் இருக்கும் அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்பட்டு, மூச்சு முட்ட தனிமைச் சிறையினில் அடைக்கப்படுவோம் என்று நிச்சயமாக எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். இதனால், கடுமையான மன உளைச்சலுக்கும், உடல் உபாதைகளுக்கும் ஆளாக்கப்பட்டு இவர்கள் அனைவரும் தவித்து வந்துள்ளனர். சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டதன் நோக்கமே அவர்களை வெளிநாட்டிற்கு அனுப்ப வேண்டும் என்பது தான். முகாமில் அடைக்கப்படுவதற்கு முன்பே கூட, எந்த நாட்டிற்கு





திருச்சி சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில், கடந்த மாதம் சிறப்பு முகாமின் இத்தகைய மனிதத் தன்மையற்ற நிர்வாகத்தின் காரணமாக சாந்தன் அவர்களின் உடல்நிலை மிகவும் மோசமடைந்து, எழுந்து நிற்கக்கூட முடியாமல் பல நாட்கள் சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சாந்தன், கடந்த 28.2.2024 அன்று உடல்நலக் குறைவால் மரணமடைந்துள்ளது, தமிழக மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அங்கு அவர்கள், சக முகாம்வாசிகள் யாருடனும் பேசவோ பழகவோ, உடற்பயிற்சி, நடைபயிற்சி செய்யவோ அனுமதி மறுக்கப்பட்டு தனிமை அறையில், சிறை போலவே அடைக்கப்பட்டிருந்தனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

செல்லப்போகிறீர்கள் என்று அவர்களுடைய விருப்பத்தை அரசு அதிகாரிகள் கேட்டபொழுது, அவர்கள் இலங்கை சென்றால் ஆபத்து மற்றும் தங்களுக்கு அங்கு வாழ்வாதாரம் எதுவும் இல்லை என்றும், அதனால் வெளி நாடுகளில் வாழும் தங்களுடைய குடும்பத்தினருடன் செல்ல விரும்புவதாகவும் தெரிவித்திருந்தனர். ஆனால், இன்றைய நாள்வரை அவர்கள் விரும்பும் வெளிநாட்டிற்கு அனுப்பி வைப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட அரசு எந்தவித முடிவும் எடுத்ததாகத் தெரியவில்லை.

இது தொடர்பாக, விடுதலையானவர்கள் தங்களை இலங்கை துணைத் தூதரகத்திற்கு அழைத்துச் செல்லும்படியும், முகாமில் மறுக்கப்படும் அடிப்படை மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் மாவட்ட ஆட்சியர், தமிழ் நாடு முதலமைச்சர், UNHCR என தொடர்ச்சியாக பல்வேறு கோரிக்கை மனுக்களை அளித்தபோதும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுத்தபாடில்லை

என்று தெரிவித்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. உதாரணமாக, நடைபயிற்சிக்கு அனுமதி கேட்டு பல மாதங்கள் ஆன நிலையில், இந்த விடியா திமுக அரசு குறைந்தபட்சம் இந்த கோரிக்கைக்குக் கூட செவி சாய்க்கவில்லை என்பதில் இருந்தே அவர்கள் எத்தகைய மனிதத் தன்மையற்ற முறையில் நடத்தப்படுகிறார்கள் என்பதை விளங்கிக் கொள்ள முடியும். கருணாநிதி முதலமைச்சராக இருந்தபொழுது, ஏப்ரல் 2010-ஆம் ஆண்டு பிரபாகரன் அவர்களுடைய வயதான தாயார் உடல் நலக் குறைவு காரணமாக மருத்துவ சிகிச்சைக்காக முதலில் சென்னைக்கு வந்தபொழுது, அவருக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க மறுத்து விமானத்தில் இருந்து இறங்கவிடாமல் திருப்பி அனுப்பியது அப்போதைய மைனாரிட்டி திமுக அரசும், மத்திய காங்கிரஸ் அரசும்தான்.

அதேபோன்று இன்று, விடுதலை பெற்ற சாந்தனை காலத்தே வெளிநாடு செல்ல மத்திய அரசுடன் பேசி, உரிய அனுமதி வாங்கித் தராத காரணத்தால், இறுதிக் காலத்தில் தனது குடும்பத்தினருடன் வாழ முடியாமல் மரணமடைந்துள்ளதற்கு இந்த நிர்வாகத் திறனற்ற, மனிதாபிமானமற்ற விடியா திமுக அரசே முழு பொறுப்பை ஏற்க வேண்டும். இனியாவது, மீதமுள்ள மூன்று பேரின் கோரிக்கைகளை உடனடியாகப் பரிசீலித்து, கண் பார்வை குறைபாடு ஏற்பட்டு தவறான சிகிச்சையில் ஒரு கண்ணில் பார்வையை இழந்த ஜெயகுமார் மற்றும் உடல்நலக் குறைவால் அவதியுறும் இராபர்ட் பயஸ் மற்றும் முருகன் ஆகியோரது கடைசி காலத்தில், எஞ்சிய வாழ்நாளை அவர்களுடைய குடும்பத்தினருடன் வசிப்பதற்கு, திருச்சி முகாமில் தனிமைச் சிறையில் இருந்து அவர்கள் விரும்பும் நாடுகளுக்குச் செல்ல தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு, இந்திய வெளியுறவுத் துறையையும், விடியா திமுக அரசின் முதலமைச்சரையும் வலியுறுத்துகிறேன்." என்று குறிப்பிட்டு உள்ளார்.

# சாந்தனின் உயிர் திட்டமிட்டு பறிக்கப்பட்டது சிறப்பு முகாமில் உள்ள முருகன் தெரிவிப்பு!

மார்ச் 04, 2024

சாந்தன் தாய் மண்ணில் கால் வைக்க முதல் அவர் உயிரை திட்டமிட்டு பறித்துள்ளார்கள். இதுவே எங்கள் மூவருக்கும் நடக்க போகிறது என்பது தெரிகிறது என இன்றும் சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முருகன் தெரிவித்துள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சாந்தனுடன் கைது செய்யப்பட்டு, தண்டனை அனுபவித்து, விடுவிக்கப்பட்ட பின்னரும், இலங்கை திரும்ப முடியாது, சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முருகன், சாந்தனின் இறுதி வணக்க நிகழ்வில் ஒலி நாடா ஊடாக உரையாற்றும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

33 வருடங்களாக சிறையில் சாந்தனுடன் காலத்தை கழித்தவன். இன்று அவர் உயிருடன் இல்லை. அவருக்கு மக்கள் கூடி அஞ்சலி செலுத்துகின்றனர்.

எங்கள் போராட்டத்தை அழிக்க பல சக்திகள் முயன்றன. அதில் ஒன்று தான் ராஜீவ் காந்தி கொலை. அதில் நாங்கள் பலியாக்கப்பட்டவர்கள். எங்கள் ஊடாக எங்கள் மக்களுக்காக போராடியவர்களை நசுக்க பின்னப்பட்ட சதி வலைகள்.

போராட்டத்தை அழிக்க தொடர்ச்சியாக அச்சுறுத்தல்களை வழங்க மக்கள் மத்தியில் பயத்தை விதைக்க குறியீடாக பயன்படுத்தப்பட்டவர்களே நாம்.

சாந்தனின் உயிர் திட்டமிட்டு பறிக்கப்பட்டதே. சாந்தனுக்கு அநீதி இழைக்கப்பட்டதை மக்கள் வெளிப்படுத்தும் போதே, திரும்ப திரும்ப செய்ய மாட்டார்கள். நாதியற்றவர்கள் என்றால், திரும்ப திரும்ப நசுக்கவே செய்வார்கள்.

சாந்தன் தாய் மண்ணில் கால் வைக்க முதல் உயிரை பறித்துள்ளார்கள். இதையே தான் எங்கள் மூவருக்கும் செய்ய போகிறார்கள்.

32 வருடங்களாக சிறையில் மனதையும் , உடலையும் திடமாக வைத்திருந்த ஒருத்தர், சிறப்பு முகாமில் ஒரு வருடத்திற்கு எவ்வாறு இப்படி மாறி போனார். இதில் எங்களுக்கு நியாயமான சந்தேகம் இருக்கு.

மக்களின் அஞ்சலி ஊடாக வெளி உலகுக்கு எமக்கு இழைக்கப்பட்ட அநீதி தெரிய வர வேண்டும் என தெரிவித்தார்.



முருகன்

# தமிழை உயர் நீதிமன்ற அலுவல் மொழியாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## பாமக நிறுவனர் இராமதாஸ்

மார்ச் 05, 2024

சென்னை உயர் நீதிமன்றத்தின் அலுவல் மொழியாக தமிழை அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி சென்னையில் 25 பேர் சாகும்வரை உண்ணாநிலைப் போராட்டம் மேற்கொண்டுள்ளனர். உண்ணாநிலை இன்று ஏழாவது நாளை எட்டியுள்ள நிலையில், அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற மத்திய, மாநில அரசுகள் இன்று வரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாதது கண்டிக்கத்தக்கதாகும் என்று பாமக நிறுவனர் இராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், "சென்னை எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கத்திற்கு அருகில், தமிழை சென்னை உயர் நீதிமன்ற அலுவல் மொழியாக்க வேண்டும் என்ற கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி உயர் நீதிமன்றத்தில் தமிழ் மக்கள் இயக்கம், உயர் நீதிமன்றத்தில் தமிழ் வழக்குரைஞர் செயல்பாட்டுக் குழு ஆகியவற்றின் சார்பில் 25 பேர் கடந்த பிப்ரவரி 28-ம் தேதி முதல் சாகும்வரை உண்ணாநிலை போராட்டம் மேற்கொண்டிருக்கின்றனர்.

இதுதொடர்பாக தமிழக சட்டப்பேரவையில் 2006-ம் ஆண்டு டிசம்பர் 6-ம் நாள் நிறைவேற்றப்பட்டு, 7ம் நாள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட தீர்மானத்திற்கு ஒப்புதல் பெற வேண்டும் என்பது தான் போராட்டக் குழுவினரின் முதன்மைக் கோரிக்கையாக உள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தின் அலுவல் மொழியாக தமிழை அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வழக்கறிஞர்களும், தமிழ் ஆர்வலர்களும் நடத்தி வரும் இந்தப் போராட்டத்திற்கு பாட்டாளி மக்கள் கட்சி அதன் முழுமையான ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறது. அதற்கான தார்மிகக் கடமை எனக்கு உள்ளது. காரணம், சென்னை உயர்நீதிமன்றத்தின் வழக்காடும் மொழியாக தமிழை அறிவிக்கக் கோரும் தீர்மானத்தை 2006ம் ஆண்டு டிசம்பர் 6ம் தேதி அப்போதைய தமிழக முதல்வர் கருணாநிதி கொண்டு வந்து நிறைவேற்றியதற்கு காரணமே நான் தான். உயர் நீதிமன்றத்தின் அலுவல் மொழியாக தமிழை அறிவிக்க வேண்டும் என்ற எனது தொடர் வலியுறுத்தலை ஏற்று தான் அத்தகைய தீர்மானத்தை கருணாநிதி கொண்டு வந்தார். அதை கருணாநிதியே பல்வேறு தருணங்களில் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

தமிழக சட்டப்பேரவையின் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு, சென்னை உயர் நீதிமன்றத்தின் அலுவல் மொழியாக தமிழை அறிவிக்க மத்திய அரசுக்கு எந்த தடையும் இல்லை. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 348(2)வது பிரிவின்படி உயர் நீதிமன்ற ஆட்சி மொழியாக இந்தி அல்லது சம்பந்தப்பட்ட மாநிலத் தின் மொழியை அறிவிக்க குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு. இதைப் பயன்படுத்தி அலகாபாத், மத்தியப் பிரதேசம், பிகார், இராஜஸ்தான் ஆகிய உயர் நீதிமன்றங்களின் வழக்காடும் மொழியாக இந்தி அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தின் அலுவல் மொழியாக தமிழை அறிவிக்கலாமா? என்ற உச்ச நீதிமன்றத்திடம் மத்திய அரசு கருத்து கேட்டது தான் பெரும் தவறாகும். உச்ச நீதிமன்றம் அனுமதி அளிக்காததால் தான் தமிழ் இன்னும் உயர்நீதிமன்ற அலுவல் மொழியாகவில்லை.

ஓர் உயர்நீதிமன்றத்தின் அலுவல் மொழியாக அந்த மாநிலத் தின் மொழியை அறிவிப்பது குறித்து உச்சநீதிமன்றத்திடம் கருத்துக் கேட்கத் தேவையில்லை என்று சட்டம் மற்றும் நீதித்துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழு பல அறிக்கைகளை தாக்கல் செய்துள்ளது. இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தின் கருத்தைக் கேட்கும் நடைமுறையை கைவிடும்படி கடந்த 2015ம் ஆண்டே உள்துறை அமைச்சகத்துக்கு சட்டத் துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழு கடிதம் அனுப்பியுள்ளது. ஆனால், அதன் மீது கடந்த 9 ஆண்டுகளாக உள்துறை அமைச்சகம் முடிவெடுக்காததும் தமிழுக்கு பின்னடைவு ஏற்படுவதற்கு காரணம் ஆகும்.

சென்னை உயர் நீதிமன்றத்தின் அலுவல் மொழியாக தமிழை அறிவிக்கக் கோரும் தீர்மானம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு 18 ஆண்டுகள் ஆகிவிட்டன. அந்தத் தீர்மானம் தமிழ் நாடு அரசுக்கே திருப்பி அனுப்பப்பட்டு 15 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. ஆனாலும், தமிழை உயர்நீதிமன்றத்தின் அலுவல் மொழியாக அறிவிக்க அதன் பிறகு தமிழகத்தை ஆட்சி செய்த அரசுகள் எதையும் செய்யவில்லை.






கடந்த 6 ஆண்டுகளில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிகளாக இருந்த அனைவரும் உயர்நீதிமன்றங்களில் மாநில மொழிகளை அலுவல் மொழியாக்க ஆதரவு தெரிவித்து வருகின்றனர். குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்டோரும் இந்தக் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இத்தகைய சூழலில் சென்னை உயர்நீதிமன்றத்தின் அலுவல் மொழியாக தமிழை அறிவிப்பதற்கான நடைமுறை என்ன? என்பதை அறிந்து தமிழக அரசு செயல்படுத்தியிருக்க வேண்டும். ஆனால், பல முறை நான் வலியுறுத்தியும் அதை செய்யத் தமிழக அரசு தவறி விட்டது. தமிழ் மீது அவர்களுக்குள்ள அக்கறை அவ்வளவு தான்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் அலுவல் மொழியாக தமிழை அறிவிக்க வேண்டும் என்பது ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக வலியுறுத்தப்பட்டு வரும் கோரிக்கை ஆகும். அது இன்னும் கோரிக்கையாக இல்லாமல் செயல்வடிவம் பெறுவது மத்திய, மாநில அரசுகளின் கைகளில் தான் உள்ளது. எனவே, மத்திய அரசுக்கு உரிய அழுத்தம் கொடுத்து சென்னை உயர் நீதிமன்றத்தின் அலுவல் மொழி தமிழ் என்ற ஐம்பதாண்டு கால கனவு நனவாவதை உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்." இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# குடியுரிமை திருத்த சட்டத்தை திரும்ப பெற வேண்டும்; அரசியல் தலைவர்கள் வலியுறுத்தல்!

மார்ச்12, 2024




இஸ்லாமியர்களை வஞ்சிக்கும் குடியுரிமை திருத்த சட்டத்தை மத்திய அரசு திரும்ப பெற வேண்டும் என பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்ட அறிக்கை:

**நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான்:** இஸ்லாமியர்களைத் தனிமைப்படுத்தியும், இலங்கை தமிழர்களை புறக்கணித்தும் கொண்டு வரப்பட்டுள்ள குடியுரிமைத் திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்த மத்திய அரசு ஆணை வெளியிட்டிருப்பது கண்டனத்துக்குரியது. வேற்றுமையில் ஒற்றுமை காணும் பன்முகத்தன்மை கொண்ட நம் நாட்டை மத ரீதியாகப் பிரிக்கவே பாஜகவின் இச்செயல் வழிவகுக்கும்.

**அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி:** மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தும் வகையில் தேர்தல் ஆதாயத்துக்காக குடியுரிமை திருத்தச் சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மாபெரும் வரலாற்று பிழையை மத்திய அரசு செய்துள்ளது.

அகதிகளுக்காக கொண்டுவரப்பட்ட இந்த சட்டத்தை இஸ்லாமியர்களுக்கும், இலங்கை தமிழர்களுக்கும் எதிராக அமல்படுத்த நினைத்தால் அதை அதிமுக ஒருபோதும் அனுமதிக்காது. இதற்கு எதிராக நாட்டு மக்களுடன் இணைந்து அதிமுக ஜனநாயக ரீதியாகவும் போராடும்.

**தமிழக காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை:** தேர்தல் தேதி அறிவிப்பதற்கு சில நாட்களே இருக்கும் நிலையும் குடியுரிமை சட்டத் திருத்தம் நடைமுறைக்கு வந்திருக்கிறது. இது அனைத்து குடிமக்களுக்கும் சம உரிமை வழங்கும் அரசியலமைப்பு சட்டத்தின் 14-வது பிரிவை மீறும் செயலாகும்.

தேர்தல் நன்கொடை விவகாரத்தில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் ஏற்பட்டுள்ள கடுமையான பாதிப்பை திசைதிருப்பவே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இஸ்லாமியர்களையும், இலங்கை தமிழர்களையும் வஞ்சிக்கும் சிஏஏ திட்டத்தை தமிழகத்துக்குள் அனுமதிக்க மாட்டோம்.

**மதிமுக பொதுச்செயலாளர் வைகோ:** காஷ்மீர் சிறப்பு உரிமைப் பறிப்பு, பாபர் மசூதி இடிப்பு வழக்கில் மோசடியான தீர்ப்பு, தேசிய குடிமக்கள் பதிவேடு, குடியுரிமை திருத்தச் சட்டம் என இந்தியாவை சட்டப் பூர்வமாகவே இந்து ராஷ்டிரமாக அறிவிப்பதற்கான நடவடிக்கைகளில் பாஜக ஈடுபட்டு வருகிறது.

குடியுரிமை சட்டத் திருத்தம் இந்தியாவில் குடிபெயர்ந்து வாழ்ந்து வரும் முஸ்லிம்களை மட்டும் தனிமைப்படுத்தி, ஒதுக்குகிறது. இதனை நடைமுறைப்படுத்த ஆணை பிறப்பித்திருப்பது கடும் கண்டனத்துக்குரியது.

**தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த்:** மதத்தால், மொழியால், ஜாதியால், உணர்வால் ஒற்றுமையாக இணைந்து கலாச்சாரம் நிறைந்த நாடாக உலக நாடுகளுக்கு எடுத்துக்காட்டாக இந்தியா திகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில் குடியுரிமை திருத்த சட்டத்தின் மூலம் நாட்டு மக்களை பிளவுபடுத்துவதை தேமுதிக என்றைக்கும் ஏற்காது.

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் முத்தரசன்:** மக்களவை தேர்தல் நெருங்கும் நேரத்தில் குடியுரிமை திருத்தச் சட்டத்தை அறிவித்திருப்பது மக்கள் கவனத்தை திசை திருப்பி, மத உணர்ச்சிகளை தூண்டி அரசியல் ஆதாயம் தேடும் முயற்சியாகும். பாஜக அரசின் வன்மமும், வெறுப்பும் நிறைந்த இந்த அறிவிப்பை உடனடியாக திரும்பப் பெற வேண்டும்.

**மநீம தலைவர் கமல்ஹாசன்:** பாஜக அரசு குடியுரிமை திருத்தச் சட்டத்தை அமல்படுத்த உள்ளதாக அறிவித்திருப்பது கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 2019-ல் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்தபோதே அதை எதிர்த்து தமிழகத்தில் முதல்முதலாக உச்ச நீதிமன்றத்தை நாடியது மநீம கட்சிதான். மக்களை மதம், மொழி, இனத்தால் பிளவுபடுத்தும் முயற்சிகளை முறியடிப்போம். தேசம் காப்போம்.

**தவாக தலைவர் தி.வேல்முருகன்:** மத்திய அரசின் குடியுரிமைச் சட்ட திருத்தம் இந்தியாவில் குடிபெயர்ந்து வாழ்ந்துவரும் இஸ்லாமியர்களை மட்டும் தனிமைப்படுத்தி, ஒதுக்குகிறது. இது ஜனநாயகத்துக்கும், மதசார்பின்மைக்கும் எதிரானது. இந்தியாவின் அடித்தளத்தையே இது சிதைத்துவிடும்.

**தவெக தலைவர் விஜய்:** சமூக நல்லிணக்கத்துடன் நாட்டு மக்கள் அனைவரும் வாழும் சூழலில், பிளவுவாத அரசியலை முன்னிறுத்திச் செயல்படுத்தப்படும் இந்திய குடியுரிமை திருத்தச் சட்டம் போன்ற எந்த சட்டமும் ஏற்கத்தக்கது அல்ல. தமிழகத்தில் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்த மாட்டோம் என ஆட்சியாளர்கள் உறுதி அளிக்க வேண்டும்.

இவர்களுடன் தமிழ்நாடு முஸ்லீம் லீக் நிறுவனத் தலைவர் வி.எம்.எஸ்.முஸ்தபா, தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் பொதுச் செயலாளர் ஆர். அப்துல் கரீம், இந்திய தேசிய லீக் மாநில தலைவர் முனிருத்தீன் ஷெரீப் உள்ளிட்டோரும் வலியுறுத்தியுள்ளனர்.

# உலக செய்திகள்

## காசாவில் இதுவரை 30,800 பேர் பலி; 72, 298 பேர் காயம்!

மார்ச் 07, 2024



காசாவில் போரில் இசுரவேல் படைகளின் தாக்குதல்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை 30,800 என்று ஹமாஸ் நடத்தும் காசாவில் உள்ள சுகாதார அமைச்சகம் தெரிவித்தது.

இசுரவேல் மற்றும் பாலஸ்தீன போராளிகளுக்கு இடையே ஆறாவது மாதத்திற்குள் நுழைந்த போரின் போது பிரதேசத்தில் குறைந்தது 30,800 பேர் கொல்லப்பட்டதாக இன்று வியாழக்கிழமை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 83 பாலஸ்தீனியர்கள் இறந்துள்ளனர். அக்டோபர் 7 அன்று போர் வெடித்ததில் இருந்து காசாவில் 72,298 பேர் காயமடைந்துள்ளனர் என்று அமைச்சக அறிக்கை தெரிவித்துள்ளது.

## நைஜீரியாவில் துப்பாக்கி முனையில் 280 பள்ளி மாணவர்கள் கடத்தல்!

மார்ச் 08, 2024

நைஜீரியாவின் வடமேற்கே உள்ள பள்ளி ஒன்றில் கல்வி பயின்ற 280க்கு மேற்பட்ட மாணவர்கள் துப்பாக்கி முனையில் ஆயுதம் ஏந்திய நபர்களால் கடத்தப்பட்னர்.

நைஜீரியாவில் பணத்திற்காக பள்ளி மாணவர்கள் அடிக்கடி கடத்தப்படுவது வழக்கமான நிகழ்வாகும்.

கடுனா மாநிலத்தில் அமைந்துள்ள குரிகா பள்ளியில் இக் கடத்தல் சம்பவம் நேற்று வியாழக்கிழமை நடந்தது. இதனை அப்பளியில் கடமையாற்றும் ஆசிரியரான சானி அப்துல்லாஹி மற்றும் குடியிருப்பாளர்கள் உறுதி செய்துள்ளனர். எனினும் கடத்தப்பட்ட மாணவர்களின் சரியா எண்ணிக்கை எவரும் தெரியவில்லை.

துப்பாக்கி ஏந்தியவர்கள் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்ட போது பல மாணவர்கள் பள்ளி ஊழியர்களுடன் தப்பிச் சென்றதாக சானி அப்துல்லாஹி கூறினார்.

ஒவ்வொரு குழந்தையும் திரும்பி வருவதை நாங்கள் உறுதி செய்வோம். நாங்கள் பாதுகாப்பு நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறோம் என கடுனா மாநில ஆளுநர் உபா சானி செய்தியாளர்களிடம் கூறினார்.

சில நாட்களுக்கு முன்னர் வடகிழக்கு நைஜீரியாவின் போர்னோ மாகாணத்தில் உள்ள தொலைதூரப் பகுதியில் பல பெண்கள் இஸ்லாமிய கிளர்ச்சியாளர்களால் கடத்தப்பட்டனர்.

கடந்த செப்டம்பரில், ஜம்ஃபாரா மாநிலத்தில் உள்ள பல்கலைக் கழகத்தில் இருந்து 30க்கும் மேற்பட்டவர்களை துப்பாக்கிதாரிகள் கடத்திச் சென்றனர்.



2021 ஆம் ஆண்டு ஜம்ஃபாராவில் உள்ள ஜாங்கேபே நகரில் உள்ள பெண்கள் உறைவிடப் பள்ளியில் இருந்து 300க்கும் மேற்பட்ட மாணவிகள் கடத்தப்பட்டனர் என்பது நினைவூட்டத்தக்கது.

## இரமழானின் முதல் நாளில் 67 பாலஸ்தீனியர்கள் பலி!

மார்ச் 12, 2024

பாலஸ்தீனியர்கள் புனித இரமழான் நோன்பை ஆரம்பித்த நிலையில், கடந்த 24 மணி நேரத்தில் இசுரவேல் நடத்திய தாக்குதலில் 67 பேர் கொல்லப்பட்டதாக காஸாவின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

காசாவில் உள்ள பாலஸ்தீனியர்கள் புனித இரமலான் மாதத்திற்காக நேற்றுத் திங்கட்கிழமை உண்ணாவிரதத்தைத் தொடங்கினர். ஏனெனில் பட்டினி முழுவதும் பசி மோசமடைகிறது மற்றும் வளர்ந்து வரும் மனிதாபிமான நெருக்கடி தொடர்பாக இசுரவேலுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது.

இசுரவேலிய தாக்குதல்களால் கொல்லப்பட்ட 67 பேரின் உடல்கள் கடந்த 24 மணி நேரத்தில் மருத்துவமனைகளுக்கு கொண்டு வரப்பட்டதாகவும், போர் தொடங்கியதில் இருந்து பாலஸ்தீனியர்களின் இறப்பு எண்ணிக்கை 31,112 க்கும் அதிகமாக இருப்பதாக காசாவின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அமைச்சகம் அதன் எண்ணிக்கையில் குடிமக்கள் மற்றும் போராளிகளை வேறுபடுத்தவில்லை. ஆனால் இறந்தவர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெண்கள் மற்றும் குழந்தைகள் என்று கூறுகிறது.



இதற்கிடையில், முஸ்லிம்களின் நோன்பு மாதமான இரமலான் மாதத்தின் முதல் நாளில் நூற்றுக்கணக்கான பாலஸ்தீனியர்கள் முக்கிய ஜெருசலேம் புனித தலத்தில் பிரார்த்தனைகளில் கலந்து கொண்டனர்.

நேற்று திங்கட்கிழமை நண்பகல் அல்-அக்ஸா மசூதி வளாகத்தில் உள்ள கூட்டம் முந்தைய ஆண்டுகளை விட மிகவும் சிறியதாக இருந்தது. சில நுழைவாயில்களில் இசுரவேலியப் படைகள் பாதுகாப்புக் காரணங்களைக் கூறி சில வழிபாட்டாளர்களைத் திருப்பி அனுப்பினர். இருப்பினும், ஒரு நுழைவாயிலில் வழிபாட்டாளர்கள் நிறுத்தப்படாமல் இசுரவேலியப் படைகள் தாக்கி விரட்டுவதை செய்வதைக் காணொளியில் காண முடிந்தது.

அல்-அக்ஸா மசூதி இஸ்லாமியத்தின் மூன்றாவது புனித தலமாகும். இது ஒரு மலை உச்சியில் கட்டப்பட்டுள்ளது. இது யூதர்களுக்கும் இது மிகவும் புனிதமான இடமாகும். அவர்கள் அதை கோயில் மவுண்ட் என்று குறிப்பிடுகிறார்கள். ஏனெனில் இது பழங்காலத்தில் இரண்டு யூத கோவில்களின் இருப்பிடமாக இருந்தது என்று யூதர்கள் கூறுகிறார்கள்.

இந்த மசூதி நீண்ட காலமாக இசுரவேல்-பாலஸ்தீன மோதலில் ஒரு முக்கிய புள்ளியாக இருந்து வருகிறது. சமீப ஆண்டுகளில் இசுரவேல் அதிக எண்ணிக்கையிலான யூதர்களை வளாகத்திற்குச் செல்ல அனுமதித்ததால் பதட்டங்கள் அதிகரித்துள்ளன. இது பாலஸ்தீனத்தை இசுரவேல் கையகப்படுத்த அல்லது பிரித்து வைக்க விரும்புகிறது என்ற அச்சத்தை தூண்டியுள்ளது.

முக்கிய மத தீவிர தேசியவாதிகளை உள்ளடக்கிய இசுரவேலின் அரசாங்கம், அத்தகைய திட்டங்கள் எதுவும் இல்லை என்று மறுக்கிறது. காசாவில் போர் மூண்டுள்ள நிலையில், இந்த ஆண்டு முஸ்லிம் வழிபாட்டாளர்களுக்கு சாதாரண அணுகலை அனுமதிப்பதாக இசுரவேலிய அதிகாரிகள் கூறியுள்ளனர்.



விடியற்காலை முதல் சாயங்காலம் வரை நோன்பு நோற்பதற்குரிய புனித மாதமான இரமலான் மாதத்தில் இசுரவேலியப் படைகளை எதிர்கொள்ளுமாறு பாலஸ்தீனியர்களுக்கு ஹமாஸ் அழைப்பு விடுத்துள்ளது.

ஐந்து மாதப் போர் காஸாவின் 2.3 மில்லியன் மக்களில் 80மூ மக்களைத் தங்கள் வீடுகளில் இருந்து வெளியேற்றி, நூறாயிரக் கணக்கான மக்களைப் பஞ்சத்தின் விளிம்பிற்குத் தள்ளியுள்ளது.

காசா பகுதியில் உதவித் தொகையை எகிப்து தீவிரப்படுத்தியுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சகம் கூறியது. மேற்கு நாடுகள் வானிலிருந்து விமானங்கள் மூலம் உணவு உதவி வழங்கப்பட்டு வருகிறது.

பாலஸ்தீனிய அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் நிவாரணம் மற்றும் வேலை முகமை காசாவின் வடக்கில் நிலைமையை துயர்கரமானது என்று விவரித்துள்ளது.

# MORTGAGE

- ⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- ⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- ⇒ Private Mortgage (No Income Verification)
- ⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- ⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- ⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- ⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgageclinicccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

**305 Milner Ave, Unit 301**
**Toronto ON M1B 3v4**
**(Markham & HWY 401)**



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4






# தமிழீழப் பெண்ணினம் விடுதலை பெறவேண்டும்!

–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –



பெண் அடிமைத் தனத்தின் விலங்குகளை உடைத்தெறியாத எந்த ஒரு நாடும், எந்த ஒரு சமூகமும் முழுமையான சமூக விடுதலையைப் பெற்றதாகக் கூறமுடியாது. ஏனென்றால், பெண் விடுதலையே சமூக விடுதலையை முழுமை பெறச்செய்கிறது. பெண்கள் சுதந்திரமாக, கௌரவமாக, சமத்துவமாக வாழ வழி செய்யும் ஒரு மக்கள் சமூகமே உயரிய பண்பாட்டின் உன்னத நிலையை அடையமுடியும்.

எமது போராட்டம் தேச விடுதலையை மட்டும் நோக்காகக் கொண்டதல்ல. தேசத்தின் விடுதலையுடன் சமூக விடுதலையையும் இலக்காகக்கொண்டே நாம் போராடி வருகின்றோம். சமூக விடுதலை என்ற குறிக்கோளில் பெண் விடுதலை பிரதான இடத்தை வகிக்கின்றது. சகல ஒடுக்குமுறைத் தடைகளிலிருந்தும் தமிழீழப் பெண்ணினம் விடுதலை பெறவேண்டும். அப்பொழுதே சமூக விடுதலையானது அர்த்தமுடையதாக முழுமைபெற முடியும் என்பது எமது நிலைப்பாடு.

பெண் ஒடுக்குமுறை என்பது ஒரு சமூகப்பிரச்சினை. நீண்ட நெடுங்காலமாக எமது பண்பாட்டு வாழ்வில் ஆழப் புரையோடி நிற்கும் சமூகக்கொடுமை. இந்தச் சமூக அநீதியை வேரோடு பிடுங்கி எறிய எமது இயக்கம் உறுதி பூண்டு நிற்கிறது. இந்த இலட்சியத்தை நாம் வெற்றிகரமாக சாதித்து முடிப்பதாயின் பெண்களின் ஆதரவும் பங்களிப்பும் அவசியம். தமிழீழப் பெண்ணினம் எமது விடுதலை இயக்கத்துடன் அணி சேர்ந்து இந்தப் புரட்சியை முன்னெடுக்க முன்வரவேண்டும்.



உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
லஷ்மி பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6




PSP
PSP MOTORS
QUALITY USED CARS
Dealers in all kinds of used Motor Vehicles
பல வருடம் அனுபவம் கொண்ட நம்பிக்கையான ஸ்தாபனம்
தரமான பாவித்த ஜப்பானிய வாகனங்கள்
நியாயமான விலையில் கிடைக்கும்
WE'LL BUY YOUR USED VEHICLE EVEN IF YOU DON'T WANT TO BUY OURS!
T. Udayakumar
PSP MOTORS 416.871.0450
30 Old Kennedy Road Unit B Markham ON. L3R 0L6
www.pspmotors.com I info@pspmotors.com




HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000





அழைப்பிதழ்
சொற்கோ வி.என். மதிஅழகன்
தமிழ் ஒலிபரப்பில் பொற்காலப் பதிவு
நூல் அறிமுகவிழா
காலம் :
23.03.2024 (சனிக்கிழமை) பிற்பகல் 2.00 மணி
இடம் :
ஸ்காபரோ சிவிக் சென்ரர் மண்டபம்
SCARBOROUGH CIVIC CENTRE AUDITORIUM
300 Borough Drive ON.M1P 4N7
மேற்படி நிகழ்வு கனடா தமிழ்
எழுத்தாளர் இணையத்தின் ஆதரவில்
பல்கலைவித்தகர் அகணி சுரேஸ்
(தலைவர். கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்)
அவர்களின் தலைமையில் இடம்பெறவுள்ளது என்பதை
மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கின்றோம்
நூல் அறிமுகவிழாவில் பங்கேற்று சிறப்பிக்க
உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
நன்றி
அன்புடன்
வி.என். மதிஅழகன்
மற்றும்
விழா ஒருங்கமைப்பாளர்கள்

# விடிவிற்காய் எழுவோம்!




**விடிவிற்காய் எழுவோம்**
இரவொன்று கரைந்துபோக
இன்னும் சில நேரம் மீதமிருக்கும்
புதுநாளின் பிறப்பிற்காய்
புள்ளினங்கள் பாட்டுப் பாடும்
ஒரு அதிகாலைப் பொழுது அது.
பனிமழையில் நனைந்தெழுந்த
பனைமரங்கள் சிலிர்த்து நிற்கும்.
பற்றைகளும் கூட – ஒரு
புத்துணர்ச்சி பெற்றிருக்கும்,
பட்டாசு வெடி போல
கிட்டவாய் சத்தம் எழும்
முன்னுக்கு பின்னுக்கு
முதுகிற்கு மேலாக – எம்
உயிரைத் தொட்டணைக்க
உலங்குவானூர்திக் குண்டு துடிக்கும்.

இன்று வரை அருகிருந்து
அம்மாவின் கதை சொன்ன
அன்பு நண்பியின்
ஆயுதம் அணைத்திருந்த
கரம் விறைத்து வீழும்,
செங்குருதி இம் மண்ணில்
புதிதாய் படம் வரையும்.

இம் மண்ணின்
இளம் புதல்வி ஒருத்தியின்
உயிர் இழந்த உடலொன்று
எம்முடன் இருக்கும்.
கனல் கக்கும் எம்விழிகள்
கலங்கி இருக்க – அவள்
கைப்பிடித்த துப்பாக்கி
கரம் மாறும்.
சட சடக்கும்,
எம் வேகம் அதிகரிக்க
பட்டாசு வெடிச் சத்தம்
தூரக் கேட்கும்.

பெற்றெடுத்த புதல்வி
பெருமகளாய்ப் போனதனால்
பூமித்தாயின் சோகநிலையாய்
மௌனம் பிறப்பெடுக்கும்
சிதைந்துபோன பனைமரமும்
சிறகொடிந்த குருவிகளும்
பற்றி எரிந்த பற்றைகளும்
எம் மண்ணின் விடுதலைக்காய்
ஏந்திய வடுக்களால்
இன்னும் நிமிர்ந்து நிற்கும்.

குச்சொழுங்கைக் குறுகணிகளும்
குவிந்திருந்து குண்டுகளாய் மாற
தீர்மானம் எடுக்கும்,
குருதிச் சேற்றில்
புதியும் என் கால்கள்
குறிக்கோளை நோக்கி
விரைந்தோடும்.
நினைவுகளைத் தாங்கும்
என் வழிகள்
அடுத்த விடியலுக்காய்
காத்திருக்கும்...

-மேஜர் பாரதி

# வானத்திலிருந்து யாழ்ப்பாணத்தைப் பார்த்த மாணவர்கள்!

11.03.2024



சிறீலங்கா விமானப்படையின் 73ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடக்கில் “நட்பின் சிறகுகள்” என்ற தலைப்பில், 125 மில்லியன் ரூபாய் பெறுமதியான அபிவிருத்தித் திட்டங்களை விமானப்படை முன்னெடுக்கின்றது. இதில் 73 பள்ளிக்கூடங்களை புனரமைக்கும் திட்டமும், பள்ளிக்கூடங்களுக்கு 73000 புத்தகங்களை வழங்குவதும் அடங்கும். “நட்பின் சிறகுகளின்” ஒரு பகுதியாக இம்மாதம் ஆறாந் திகதியிலிருந்து பத்தாம் திகதி வரையிலும் யாழ் முற்ற வெளியில் - Air Tattoo 2024 -எயார் டாட்டு 2024 என்ற பெயரில் ஒரு கல்வி மற்றும் தொழில்நுட்பக் கண்காட்சி இடம்பெற்றது. இக்கண்காட்சியில் விமானப்படையினரின் செயற்பாடுகள் தொடர்பான தொழில்நுட்ப விளக்கங்களும் வான சாகசங்களும் இசை அணிநடைகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. அது ஒரு கல்வி மற்றும் தொழில்நுட்பக் கண்காட்சி என்ற அடிப்படையில் பாடசாலைப் பிள்ளைகள் இதில் உள்வாங்கப்பட்டுள்ளார்கள்.

விமானங்களின் இயக்கங்கள் தொடர்பாக மாணவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். மேலும் மாணவர்களுக்கு சிறிது நேரம் ஹெலிகாப்டரில் பயணம் செய்ய வாய்ப்புத் தரப்பட்டது. மாணவர்களும் உட்பட பெற்றோரும் எனையவர்களும் விருப்பத்தோடு உலங்கு வானூர்திகளில் ஏறிப் பயணம் செய்வதை காணக்கூடியதாக இருக்கிறது. வடக்கில் உள்ள வெவ்வேறு பாடசாலைகள் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிள்ளைகளுக்கு ஹெலிகாப்டரில் பறப்பதற்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டது. அவர்கள் அதை விருப்பத்தோடு அனுபவித்தார்கள். வானத்திலிருந்து யாழ்ப்பாணத்தைப் பார்ப்பதில் அவர்களுக்கு ஆர்வம் இருக்கும். முதலாவது பறப்பு அனுபவம் அவர்களுக்குப் பரவசமூட்டக்கூடும். ஆனால் இதே வானத்தை அவர்களுடைய பெற்றோர்களும் பெற்றோர்களின் பெற்றோர்களும் பயத்தோடும் பிரார்த்தனைகளோடும் அண்ணாந்து பார்த்த ஒரு காலம் உண்டு என்பதை அவர்களுக்கு யார் சொல்லிக் கொடுப்பது?




15ஆண்டுகளுக்கு முன்பு தமிழர்களுக்கு வானம் ஒரு மரணக் கூரையாக காணப்பட்டது. வானில் போர் விமானங்கள் தோன்றும் போது இந்த பிள்ளைகளின் பெற்றோரும் பெற்றோரின் பெற்றோரும் பதுங்கு குழிகளுக்குள் ஓடி ஒளித்தார்கள். அவ்வாறு பதுங்கு குழிகளுக்குள் புகலிடம் தேடிய சிலருக்கு பதுங்கு குழியே புதை குழியாகவும் மாறியதுண்டு. யுத்தம் வாழ்க்கையை விடவும் நிச்சயமானது போல தோன்றிய அக் காலகட்டத்தில் சிறீலங்காவின் வான் படை தமிழ் மக்கள் மீது குண்டுகளைப் போட்டது. வானத்தையும் காற்றையும் கிழித்துக் கொண்டு போர் விமானங்கள் தமிழ் மக்களின் தலைகளை நோக்கி குத்திப் பதிந்தன.

பயணிகள் போக்குவரத்து விமானம் ஆகிய “அவ்ரோ” ரக விமானங்களில் இருந்து தொடங்கி சியா மாசற்றிஅன்ரனோவ் புக்காரா் கிபிர் சூப்பர்சோனிக் மிக் சீனத் தயாரிப்பான லூ12 முதலாய் பல்வேறு நாட்டு தயாரிப்புகளும் தமிழ் மக்களின் இரவுகளையும் பகல்களையும் கனவுகளையும் குண்டுகளால் பிளந்தன.

ஈழப் போரின் முதலாவது கட்டத்தின்போது பயன்படுத்தப்பட்ட அவ்ரோ என்று அழைக்கப்படும் பயணிகள் விமானம் பீப்பாய்க் குண்டுகள் என்று தமிழ் மக்களால் அழைக்கப்பட்ட குண்டுகளை வீசியது. சில சமயங்களில் பீப்பாய்களில் குண்டுகளுக்கு பதிலாக மனித மலம் நிரப்பப்பட்டிருந்தது. அப்படித்தான் சீனத் தயாரிப்பான Y12 விமானத்தை தமிழ் மக்கள் சகடை என்று அழைத்தார்கள். மெதுமெதுவாக மிக உயரத்தில் பறந்து போகும் அந்த விமானத்திலிருந்து எவ்வளவு பெரிய குண்டைப் போட முடியுமோ அவ்வளவு பெரிய குண்டு போடப்பட்டது. ஒரு குண்டு ஒரு பெரிய வீட்டை அப்படியே தரைமட்டமாக்கியது.

ஈழப் போரின் அடுத்தடுத்த கட்ட வளர்ச்சிகளின் போது மிக நவீன குண்டு வீச்சு விமானங்கள் அரங்கினுள் பிரவேசித்தன. அவை காற்றையும் வானத்தையும் கிழித்துக்கொண்டு குத்தி பறந்து குண்டுகளை வீசின. சந்தைகள், சாவடிகள், பாடசாலைகள், கோயில்கள், தேவாலயங்கள் என்று பொதுசன இலக்குகளின் மீதும் குண்டுகள் வீசப்பட்டன. நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். அல்லது உடல் உறுப்புகளை இழந்தார்கள். சொத்துக்களை இழந்தார்கள்.

குண்டு வீச்சு விமானங்கள் மட்டுமல்ல, கண்காணிப்பு விமானங்கள் அதாவது வேவு விமானங்களும் தமிழ் மக்களின் இரவுகளையும் பகல்களையும் வேவு பார்த்தன. நான்கு கட்ட ஈழப் போர்களின் போதும் வானில் வேவு விமானங்கள் நிரந்தரமாக ரீங்காரமிட்டபடி பறந்தன. குறிப்பாக இறுதிக்கட்டப் போரில் வானில் வேவு விமானங்கள் சூரியனைப் போல சந்திரனைப் போல நட்சத்திரங்களைப் போல நிரந்தரமாக காணப்பட்டன.

சோளகக் காற்று பலமாக வீசும் காலங்களில் யாழ்ப்பாணத்தின் கரையோரப் பகுதிகளில் பட்டங்கள் பறக்க விடப்படும். பிரம்மாண்டமான பட்டங்களில் விண் பொருத்தப்படும். காற்றில் விண் அதிரும் பொழுது ஒரு வித ரீங்கார ஒலியை எழுப்பும். யுத்தம் இல்லாத காலங்களில் சோழகக் காற்று வீசும் இரவுகளில் பட்டங்களின் விண் ஒலி வானத்தில் நிரந்தரமாக உறைந்து நிற்கும். அதுபோலவே யுத்த காலங்களில் வேவு விமானங்களின் ரீங்கார ஒலி வானில் நிரந்தரமாக உறைந்து நின்றது. இறுதி கட்டப் போரின் இறுதி நாளுக்கு பின்னரும் அது கேட்டது.

சிறீலங்கா விமானப்படை தமிழ் மக்களை வீட்டுக்கும் பதுங்கு குழிக்கும் இடையே கிழிபட வைத்தது. போரில் குண்டுகளை, துண்டுப் பிரசுரங்களை வீசிய அதே வான் படை ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்தபின் நல்லூர் தேர்த் திருவிழாவில் பூக்களைத் தூவியது.

அந்தப் போரில் பயன்படுத்தப்பட்ட தொழிநுட்பம் இப்பொழுது முற்ற வெளியில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருக்கின்றது. ஒரு காலம் தமிழ் மக்களைக் கொல்லும் கருவிகளாக காணப்பட்டவை இப்பொழுது கண்காட்சிப் பொருட்களாக வைக்கப்பட்டிருப்பது ஒரு மாற்றம்தான். காங்கேசந்துறை வீதியில் அமைந்திருக்கும் “ஃபொக்ஸ் ரிசோர்ட்ஸ்” என்று அழைக்கப்படுகின்ற விருந்தினர் விடுதியில் யுத்தகாலத்தில் வெட்டப்பட்ட பதுங்கு குழிகள் காட்சிக் கூடங்களாக மாற்றப்பட்டுள்ளன.

அந்தக் கட்டிடம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் யாழ்ப்பாணம் இருந்த காலகட்டத்தில் அவர்களுடைய பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் தலைமையகமாக இருந்தது. அந்தக் கட்டடத்துக்கு கீழே பாதுகாப்பான பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டிருந்தன.



ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின் அக்கட்டிடத்தின் உரிமையாளர் அதை விருந்தினர் விடுதியாக மாற்றியுள்ளார். அங்கிருந்த பதுங்கு குழி ஞாபகச் சின்னமாக ஒரு “ஷோகேஸ் பீசாகப்” பேணப்படுகின்றது. அதன் சுவர்கள் செப்பனிடப்பட்டு, அழகாக்கப்பட்டு, அது ஓர் ஓவியக் கூடமாக, உல்லாசப் பயணிகளைக் கவரும் காட்சிப் பொருளாக மாற்றப்பட்டிருக்கிறது. அங்கே ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. ஒரு காலம் துர்க்கனவாகக் காணப்பட்ட பதுங்குழி, இப்பொழுது ஃபொக்ஸ் விருந்தினர் விடுதியில் காட்சிப் பொருளாகப் பராமரிக்கப்படுகின்றது. அது ஒரு விருந்தினர் விடுதியின் விளம்பர உத்தி.

ஆனால் முற்றவெளியில் நடப்பது என்ன? ஒரு காலம் தமிழ் மக்களின் தலைகளின் மீது மலத்தைக் கொட்டிய கொலைக் கருவிகளும் கொலை வாகனங்களும் இப்பொழுது முற்ற வெளியில் காட்சிப் பொருட்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. ஒரு தொகுதி யுடியூப்பர்கள் அதை ஒளி பரப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இந்த மாற்றம் மேலோட்டமானது என்பதுதான் இங்குள்ள பிரச்சினை. போர் ஒரு விளைவு. அது மூல காரணம் அல்ல. மூல காரணம் இன ஒடுக்குமுறையாகும். இன ஒடுக்குமுறை எங்கிருந்து வருகிறது? தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ள மறக்கும் பொழுதுதான். தமிழ் மக்களின் தேசிய இருப்பை அழிக்க முற்படும்பொழுதுதான் இன முரண்பாடுகள் ஆயுத மோதலாக மாறின. எனவே போர் ஒரு விளைவு. இன ஒடுக்குமுறைதான் மூல காரணம். அது இப்பொழுதும் உண்டு. கண்காட்சியில் கலந்துகொள்ளும் படைப் பிரதானிகளின் பாதுகாப்புக்காக நடுப்பகல் வேளைகளில் பலாலி வீதி நீட்டுக்கும் பிரதான சந்திகளில் படையினர் நிறுத்தப்பட்டிருந்தார்கள். இக்கட்டுரை எழுதப்படுகையில், வெட்டுக்குநாறி மலையில் சிவராத்திரியை அனுஷ்டிப்பதற்கு தமிழ்மக்கள் போராட வேண்டியிருக்கிறது.



இன முரண்பாடுகளை நீக்கும் விதத்தில் இனப்பிரச்சினைக்கு இன்றுவரையிலும் தீர்வு வழங்கப்படவில்லை. இப்போதுள்ள ஜனாதிபதி அதை வடக்கின் பிரச்சினை என்று வர்ணிக்கிறார். அவருக்கு முன்பிருந்த கோட்டாபய அதனை பொருளாதாரப் பிரச்சினை என்று வர்ணித்தார். ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த 15 ஆண்டுகளின் பின்னரும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை. அவ்வாறு தீர்வு காணப்படுவதற்குரிய அரசியல் திடசித்தம் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

எனவே போரின் மூல காரணங்கள் அப்படியே இருக்கத்தக்கதாக, யுத்தவெற்றியின் நினைவுச் சின்னங்களைப் பேணும் ஒரு படைத்தரப்பு, தனது போர்க்கருவிகளையும் போர் வாகனங்களையும் காட்சிப் பொருட்களாக கண்காட்சியில் வைப்பது என்பது, போர் தொடர்பான கொடுமையான நினைவுகளை மறக்கச் செய்யும் உள்நோக்கமுடையது.மிலன் குந்தேரா கூறுவதுபோல “அதிகாரத்துக்கு எதிரான மனிதர்களின் போராட்டம் எனப்படுவது மறதிக்கு எதிரான நினைவுகளின் போராட்டமே” மாணவர்களுக்கு மறதிக்கு எதிரான ஞாபக சக்தி இருக்க வேண்டும். அது கற்றலுக்கு அவசியம். அதைவிட அவசியம் தமது சொந்த வரலாற்றை மறந்துவிடாமலிருக்க.

ஈழத் தமிழர்கள் தாயகத்துக்கு வெளியே அதிக தொகையில் வாழும் நாடு கனடா. அங்கு இனப்படுகொலையை நினைவு கூர்ந்து அது தொடர்பான அறிவை அடுத்த தலைமுறைக்கு கடத்தும் நோக்கோடு இனப்படுகொலை அறிவூட்டல் வாரம் ஒன்றை அந்த நாட்டின் அரசாங்கம் பிரகடனப்படுத்தியிருக்கிறது. அதாவது அடுத்தடுத்த தலைமுறை தமிழ் பிள்ளைகளுக்கு இனப்படுகொலை தொடர்பாக அறிவூட்டப்பட ஓர் ஏற்பாடு. ஆனால் தாயகத்தில் இனப்படுகொலை புரிந்ததாக தமிழ் மக்கள் குற்றம் சாட்டும் ஒரு படைத்தரப்பின் விமானங்களை தமிழ் மாணவர்களே “எங்களுடைய விமானங்கள்” என்று கூறுகிறார்கள். ஆயின், தமிழ் மக்கள் அரசியல் ரீதியாகவும் தோற்கடிக்கப்படுகின்றார்களா?

நன்றி: நிலாந்தன்




# குடாரப்புத் தரையிறக்கம் 26.27.28.29 மார்ச்.2000!

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் மிகவும் புகழ்பெற்ற ஒரு வரலாற்று நிகழ்வாகவும், ஆனையிறவின் வீழ்ச்சிக்கு காத்திரமான அடித்தளம் அமைத்துக்கொடுத்த ஒரு தரையிறக்கமாகவும் திகழ்ந்தது தான் குடாரப்புத் தரையிறக்கம் ஆகும். இது தான் ஓயாத அலைகள் மூன்றின் கட்டம் நான்கின் தொடக்கம் ஆகும். இந்நிகழ்வானது வட தமிழீழத்தில் உள்ள யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பகுதியின் நாகர்கோவில் தெற்கு ஊர்நிலதாரி பிரிவிற்குட்பட்ட “குடாரப்பு” சிற்றூரின் தெற்கிலும், செம்பியன்பற்று வடக்கு ஊர்நிலதாரிப் பிரிவிற்குட்பட்ட “மாமுனை” சிற்றூரின் வடக்கிலுமாக இரண்டு சிற்றூர்களின் கடற்கரையிலும் 26.03.2000 ஆம் ஆண்டு இரவு 8:45 மணிக்கு முதலாவது தரையிறக்கம் நடந்தேறியது. இவையே மேற்கொண்டு நடைபெறப்போகும் தாக்குதல்களின் உவர்க்கத்தலையாக பயன்படுத்தப்பட்டன.

புலிகளின் போரியல் வரலாற்றில் இதற்கு முன்னரும் (மண்டைதீவில், புல்லாவெளியில், கிழக்கரியாலையில்-அறுகுவெளியில்) பின்னருமாக (அல்லைப்பிட்டியில், எருக்கலம்பிட்டியில், சிறுத்தீவில், நெடுந்தீவில், அளம்பிலில்) பல்வேறு தரையிறக்கங்களை அவர்கள் செய்திருந்தாலும் அனைத்தைக் காட்டிலும் பெரியதானதும் சிறப்புடையதானதுமாக விளங்குவது இதுவெயாகும். இத்தரையிறக்கத்தினை தமிழீழ நடைமுறையரசின் கடற்படையான கடற்புலிகள் நிகழ்த்திக் காட்டினர். இவர்கள் 1200 தரைப்புலிகளை 11கிமீ காவிச் சென்று சிங்களப் பகைவனின் காவலரண்களுக்குப் பின்னால் இருந்த குடாரப்பு-மாமுனை சிற்றூரில் தரையிறக்கினர். பின்னால் வரப்போகும் போராளிகளின் வெற்றிக்கு வித்திடும் விதமாக முன்சென்ற சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் இரு அணியினர் 26 ஆம் திகதி இரவு 7 மணி சொச்சத்திற்குத் தரையிறக்கப்பட்டனர். பின்னர் மேற்கொண்டு ஏனைய போராளிகளும் இரவு 8:45 முதற்கொண்டு தரையிறக்கப்பட்டனர். இத்தரையிறக்கமானது அடுத்த நாள் காலை 10மணிவரை நீடித்தது.

இப்பேர்பட்ட வரலாற்று மாட்சிமைமிக்க இத்தரையிறக்கமானது ஈழத்து வரலாற்று ஆசிரியர்களால் இரண்டாம் உலகப் போரின்போது செருமனியின் நோர்மண்டியில் நேசநாட்டுக் கூட்டுப்படைகளால் மேற்கொள்ளப்பட்ட தரையிறக்கத்தோடு ஒப்பிடப்படுவதாகும்.

முதற் தரையிறக்கத்தின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் 14 போராளிகள் வீரச்சாவினைத் தழுவிக்கொண்டனர். அப்புலிவீரர்களது வித்துடல்கள் தலைவரின் அறிவுறுத்தல்படி குடாரப்பிலேயே விதைக்கப்பட்டதோடு பின்னாளில் ஆனையிறவு கூட்டுப்படைத்தளம் புலிகளால் பரம்பப்பட்டு கைப்பற்றபட்டபின், அவர்கள் விதைக்கப்பட்ட இடத்தில் இத்தரையிறக்கம் தொடர்பான நினைவுக்கல்லொன்று இத்தரையிறக்கத்தினை தலைமையேற்று நடாத்திய கட்டளையாளர் கேணல் பால்ராஜ் (நோய்ச்சாவிற்குப் பின் பிரிகேடியராக தரநிலை உயர்த்தப்பட்டார்) அவர்களால் 26.03.2003 அன்று திரைநீக்கம் செய்யப்பட்டு வரலாற்று ஞாபக இடமாக 2009 தமிழீழத் தமிழர் இனப்படுகொலை நடந்தேறும்வரை வரை பேணப்பட்டது. அந்நினைவுக்கல்லானது பின்னாளில் சிங்கள வல்வளைப்புப் படைகளால் இடித்தழிக்கப்பட்டது.

குடாரப்புத் தரையிறக்கம் மேற்கொள்ளப்பட்ட வடமராட்சிக் கிழக்கிற்கு மற்றுமொரு சிறப்பும் உண்டு. அதாவது அமரர் கல்கியின் “பொன்னியின் செல்வன்” புதினத்தில் இச்செம்பியன்பற்றுப் பகுதியில் சோழப் பேரரசின் படைகள் தரையிறங்கியதாக குறிப்புகள் உள்ளதாக கடற்புலிகளின் சிறப்புக் கட்டளையாளர் கேணல் சூசை அவர்கள் தெரிவித்திருந்தார். இப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தில்தான் மீண்டும் தமிழர் சேனை மற்றுமொரு தரையிறக்கத்தினை நடாத்தியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாவணக்கட்டில் இத்தரையிறக்கம் தொடர்பான தகவல்களை மட்டுமே வழங்கியிருக்கிறேன். அதாவது இத்தரையிறக்கம் மேற்கொள்ளப்பட்டதில் இருந்து தரையிறங்கியோருக்கான தரைவழி வழங்கல் பாதை திறக்கப்பட்ட 29.03.2000 வரையிலான 4 நாட்களில்(26,27,28,29) வடமராட்சி கிழக்குப் பகுதியில் நடந்தவை தொடர்பான தகவல்கள் மட்டுமே இதனுள் உள்ளது. இத்தாவில் பெட்டிச்சமர் முதல் ஆனையிறவுத் தளம் அதிர்ந்து வீழ்ந்தது வரையிலான ஆனையிறவுச் சமர் தொடர்பான ஏனைய அனைத்துத் தகவல்களும் பிறிதொரு ஆவணக்கட்டில் விரிவாக வழங்கப்படும். அத்துடன் இவ் ஆவணக்கட்டில் நான் குறிப்பிடும் அனைத்து படைத்துறை தரநிலைகளும் 2000 ஆம் ஆண்டில் தமிழர் சேனையின் கட்டளையாளர்கள் மற்றும் போராளிகள் பெற்றிருந்தவையாகும். வரலாற்றை தக்கவைப்பதற்காகவும் குழப்பம் ஏற்படுவதை தவிர்ப்பதற்காகவுமே இவ்வாறு செய்கிறேன். மேலும், இவ்வாவணக்கட்டானது எதிர்வரப்போகும் ஒரு ஆவணக்கட்டின் ஓர் உறுப்பு என்பதையும் முன்கூட்டியே அறிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.


‘தரையிறங்கிய போராளிகளோடும் தன் மெய்க்காவலர்களோடும் விரக்களியாற்றின் சதுப்பு நிலத்தினூடாக விடியப்புறம்போல் இத்தாவில் சமர்க்களம் நோக்கி நகரும் கட்டளையாளர் கேணல் பால்ராஜ் அவர்கள். இப்படிமமானது ஈழத்தமிழரின் வரலாற்றுப் புகழ்மிக்க படிமமாகும்.’

•குறிப்பு: இதனை ஒரு வரலாற்று ஆவணமாக பாதுகாக்கும் பொருட்டு இதனுள் நான் எழுதப் போகும் தகவல்கள் யாவும் - படைத்துறையின் படைக்கலன்கள் - எமது தாய்மொழியான தமிழில் மட்டுமே எழுதப்பட்டிருக்கும்.

1. Artillery - சேணேவி
2. Howitzer - தெறோச்சி
3. Mortar - கணையெக்கி
4. Tank - தகரி
5. Garrison - தானைவைப்பு

கட்டளையாளர்கள் மற்றும் சமர் ஒழுங்கு

இதனுள் இத்தரையிறக்கத்தில் நேரடியாக பங்கெடுத்த படையணிகளின் விரிப்பு உள்ளது.

ஓயாத அலைகள் மூன்று கட்டம்-4 ஒருங்கிணைப்புக் கட்டளையாளர்: கேணல் பானு

**தரைப்புலி முதன்மைக் கட்டளையாளர்கள்:**

தரையிறக்கத் தலைமைக் கட்டளையாளர்: கேணல் பால்ராஜ்

முதற் கணத் தரையிறக்கக் கட்டளையாளர்கள் - சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் துணைக் கட்டளையாளர் லெப். கேணல் நேசன்.

இவரின் கீழ் மேஜர் கோபித் மற்றும் மேஜர் இலக்கியன் தலைமையில் இரு அணிகள்

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி - சிறப்புக் கட்டளையாளர் லெப். கேணல் இராஜசிங்கன்

மாலதி படையணி - சிறப்புக் கட்டளையாளர் லெப். கேணல் யாழினி - விதுசா (பிரிகேடியர் விதுசா)

சோதியா படையணி - சிறப்புக் கட்டளையாளர் லெப். கேணல் மேழிகா - துர்க்கா (பிரிகேடியர் விதுசா)

கிட்டு பீரங்கிப் படையணியின் கணையெக்கிப் பிரிவு - லெப். கேணல் தர்சன்

இம்ரான் பாண்டியன் படையணி

விக்டர் கவச எதிர்ப்புப் படையணி - தாக்குதல் கட்டளையாளர் லெப். கேணல் இளங்கீரன் - சேட்டன்

மயூரன் குறிசூட்டுப் பிரிவு - கட்டளையாளர் பெயர் அறியில்லை

ராதா விமான எதிர்ப்பு அணி - கட்டளையாளர் பெயர் அறியில்லை

சிறப்பு எல்லைப்படை - கட்டளையாளர் பெயர் அறியில்லை. (இவர்கள் சாள்ஸ் அன்ரனியோடு இணைக்கப்பட்டிருந்தனர்.)

கட்டம் மூன்றின் போது கட்டளையாளர் வேந்தன் அவர்கள் இவர்கட்கு தலைமை தாங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எல்லைப்படை - கட்டளையாளர் பெயர் அறியில்லை.

கள மருத்துவப்பிரிவு - தரையிறக்கப்பட்டவர்களுள் அறியப்பட்ட சில படைய மருத்துவர்களின் பெயர்கள்: மருத்துவர் வித்தகி, மருத்துவர் அருள்நங்கை, மருத்துவர் தணிகை, மருத்துவர் லெப். கேணல் இசைவாணன், மற்றும் மருத்துவர் சத்தியா.

**கடற்புலி கட்டளையாளர்கள்:**

அறியப்பட்டோர்...

கடற்புலிகளின் சிறப்புக் கட்டளையாளர்: கேணல் சூசை

சாள்ஸ் சிறப்புக் கடற்தாக்குதல் அணி: லெப். கேணல் செழியன்

கடல் வழங்கல் கட்டளையாளர்: மேஜர் எழிற்கண்ணன்

**வலு**

தரையிறக்கப்பட்ட மொத்தப் போராளிகள்: 1200 பேர்.
இவர்களில் ஆண் போராளிகள்: 600 பேர்
இவர்களில் பெண் போராளிகள்: 600 பேர் ; ஆதாரம்: புதினம், 5 சூன் 2006
ஒவ்வொரு சண்டை உருவாக்கத்திலும் இருந்த ஆளணி எண்ணிக்கை எவ்வளவு என்பது வெளியிடப்படவில்லை.
கவசவூர்திகள்: பயன்படுத்தப்படவில்லை.
படைக்கலங்களில் குறிப்பிடத்தக்கவை: எஸ்.பி.ஜி.-9 போன்ற பின்னுதைப்பற்ற சுடுகலன்கள், 120 மிமீ கணையெக்கிகள், 81/82 மிமீ கணையெக்கிகள், 107 மிமீ பல்குழல் உந்துகணை செலுத்தி மற்றும் ஏனைய கனவகை சுடுகலன்கள் படகுகள் மூலம் காவிச் செல்லப்பட்டு தரையிறக்கப்பட்டன.
சண்டைப்படகுகள்: 7 (ஆதாரம்: “மீண்டும் யாழ் மண்ணில் பதிந்த எம் தடங்கள்”)

- இவற்றுள் 2 வோட்டர் ஜெட்கள் (ஒன்றில் சிபியு - 4 பொருத்தப்பட்டிருந்தது) மற்றும் சில (பெயர் அறியில்லா) சண்டைப் படகுகள் பயன்படுத்தப்பட்டதாக அவர்களின் நிகழ்படங்கள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. இதை விட வேறேதும் பயன்படுத்தப்பட்டதா என்பது தெரியவில்லை.

தரையிறக்க கலன்கள்: எண்ணிக்கை அறியில்லா கட்டைப்படகு (Dinghy) வகையைச் சேர்ந்த புளூ இசுரார் (Blue Star), தனுசா மரைன் (Dhanusa Marine), நீல் மரைன் (Neil Marine) மற்றும் சானே (Shaane) வகுப்புப் படகுகள் மற்றும் உப்பயானங்கள் (Inflatable boats) ஆகியவற்றில் ஆளணிகளும் படைக்கலன்களும் கொண்டுசெல்லப்பட்டு தரையிறக்கப்பட்டன.

தரையிறக்கப்பட்ட சேணேவிகள்: 60மிமீ, 81/82 மிமீ, 120மிமீ கணையெக்கிகள்.

சேணேவி சூட்டுவலிமை (வெளியிலிருந்து): 85மிமீ தெறோச்சி, 122 மிமீ தெறோச்சி, 130 மிமீ தெறோச்சி மற்றும் இதர கணையெக்கிகள்

**இழப்புகள்**

தமிழீழ விடுதலைப்புலிகள்:

வீரச்சாவடைந்த போராளிகள்: 48 பேர்

முதற் தரையிறக்கத்தின் போது சிறீலங்காக் கடற்படையுடனான கடற்சமரில் மட்டும் சில படகுகளுடன் 14 போராளிகள் வீரச் சாவடைந்ததாக தவிபு ஆல் அறிவிக்கப்பட்டது. மேற்கொண்டு நடைபெற்ற சமர்களில் சில அதிகாரிகள் தவிர கட்டளை யாளர்கள் யாரையும் இழக்கவில்லை. 27/3 அன்று கடற்புலி மேஜர் எழிற்கண்ணன் அவர்கள் வழங்கல் நடவடிக்கையில் காயமுற்றார்.



'வித்தான 14 மாவீரர்களின் வித்துடல்கள் விதைக்கப படுகின்றன"



| திகதி | செம்பியன்பற்றுக் கடற்பரப்பு | | செம்பியன்பற்று | | வெற்றிலைக்கேணி கடற்பரப்பு | | வெற்றிலைக்கேணி | | மருதங்கேணி | | ஆழியவளை கடற்பரப்பு | | மாமுனை | | வத்திராயன் | | தாளையடி | | உடுத்துறை | | குடாரப்பு | | பளை | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ |
| 26/03 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | 1 | 0 | 1 |
| 27/03 | | 2 | 1 | | 1 | | 5 | | | | 1 | | 1 | 7 | 5 | | 3 | 1 | | | 1 | | 1 | | 19 | 10 |
| 28/03 | | | | | | | 2 | | 1 | | | | 1 | | | | 2 | | | | | | | | 6 | |
| 29/03 | | | | | | | 2 | | 1 | 2 | | | | 3 | | | 1 | 1 | 1 | 1 | | | | | 5 | 7 |
| மொத்தம் | 0 | 2 | 1 | 0 | 1 | 0 | 9 | 0 | 2 | 2 | 1 | 0 | 2 | 10 | 5 | 0 | 6 | 2 | 1 | 1 | 1 | 0 | 1 | 1 | 30 | 18 |
| | 2 | | 1 | | 1 | | 9 | | 4 | | 1 | | 12 | | 5 | | 8 | | 2 | | 1 | | 2 | | 48 | |

'இதனுள் குடாரப்பு தரையிறக்கம் மற்றும் அதனோடான சமர் களின்போது வடமராட்சி கிழக்குப் பகுதியில் வீரச்சாவடைந்த போராளிகளின் விரிப்பு மட்டும் உள்ளது. இவற்றோடு இத்தரை யிறக்கத்திற்காக பளையில் சேணேவித்தளம் செயலிழக்கச் செய்து வீரச்சாவடைந்த 2 கரும்புலிகளையும் சேர்த்திருக் கிறேன். தரையிறக்கத்தோடு தொடர்பின்மையாதலால் ஏனைய இடங்களில் வீரச்சாவடைந்தோரை இவ்வட்டவணையினுள் சேர்க்கவில்லை.

காயமடைந்தோர்: அறியில்லை
சண்டைப்படகுகள்:
சண்டை ஆரம்பித்த பின்னர் 26 ஆம் திகதி இரு சண்டைப் படகுகளும், 27 ஆம் திகதி ஒரு சண்டைப்படகும் சேதமாகின. ஆதாரம்: "மீண்டும் யாழ் மண்ணில் பதிந்த எம் தடங்கள்"

**தரையிறக்கக் கலன்கள்:**

26 ஆம் திகதி இரவு நடுச்சாமத்தில் லெப். கேணல் யாழினி / விதுசா அவர்களை இறக்கிவிட்டு திரும்பிச் சென்றுகொண் டிருந்த படகு கடலில் எரிந்து மூழ்கியது. ஆதாரம்: "வேருமாகி விழுதுமாகி"

இவற்றைத் தவிர வேறு ஏதாவது படகு மூழ்கியதா என்பது பற்றிய எந்தவொரு குறிப்புகளும் இல்லை.

தரையிறக்கிய பெரும்பாலான கட்டைப்படகுகள் திரும்பிச் சென் றன வெகுசில அங்கேயே தரித்து நின்றன, அவசரத் தேவைக் காக.

சிறீலங்கா படைத்துறை:

கொல்லப்பட்ட படையினர்: 100+

மீட்கப்பட்ட இடங்களில் நூற்றுக்கணக்கான சிங்களப் படையின ரின் சடலங்கள் சிதறிக் கிடப்பதை நேரில் கண்டதாக பல பொதுமக்கள் தமிழ்நெற் செய்தியாளரிடம் தெரிவித்திருந்தனர் என தமிழ்நெற் செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.
காயமடைந்தோர்: அறியில்லை.

**நினைவுக்கற்கள்**

தரையிறக்க நினைவுக்கல்

'முதற் தரையிறக்கத்தின்' போது தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் வீரச்சாவடைந்த 14 போராளிகளது வித்துடல்கள் தலைவரின் அறிவுறுத்தல்படி குடாரப்பிலே விதைக்கப்பட்டத. இப்போராளிகள் விதைக்கப்படும் முன்னர் யாழ் மாவட்ட முன் னாள் கட்டளையாளரான லெப். கேணல் செல்வராசா வலத்து வாரியவை,

"நிச்சயமாக இவர்களின் இந்த இடம் தமிழீழம் மீட்கப்படுகின்ற காலப்பகுதியில் ஒரு புனித பிரதேசமாக, எங்கள் வீரவரலாற் றினை சொல்லுகின்ற பூமியாக, எங்கள் தாக்குதல் சம்பவத்தை சித்தரிக்கின்ற ஒரு கல்வெட்டாக, நிச்சயமாக விளங்கும்... "



'முன்னாள் யாழ் மாவட்டக் கட்டளையாளர் லெப். கேணல் செல்வராசா வீரவணக்க உரையாற்றுகிறார்"



பின்னாளில் ஆனையிறவு கூட்டுப்படைத்தளம் புலிகளால் மீட்கப்பட்டபின், அவர்கள் விதைக்கப்பட்ட இடத்தில், இத்தரை யிறக்கம் தொடர்பான ஓர் நினைவுக்கல்லானது இத்தரையிறக் கத்தினை தலைமையேற்று நடாத்திய கட்டளையாளர் கேணல் பால்ராஜ் அவர்களால் 26.03.2003 அன்று திரைநீக்கம் செய்யப்பட்டு வரலாற்று ஞாபக இடமாக 2009 இல் தமிழீழத் தமிழர் இனப்படுகொலை நடந்தேறும்வரை வரை பேணப் பட்டது.



**சேணேவித்தள அழிப்பு நினைவுக்கல்**

பளையில் இருந்த ஆட்டிவத்த என்ற சேணேவித்தளம் மீதான கரும்புலித் தாக்குதலில் வீரச்சாவடைந்த 2 தரைக்கரும் புலிகளின் நினைவாக அச்சேணேவித்தளம் இருந்தவிடத்தில் எழுப்பப்பட்ட நினைவுக்கல். இஃது அவர்களின் பெற்றோரால் 28.03.2003 அன்று திரைநீக்கம் செய்யப்பட்டது.




**படிமங்கள்**



'குடாரப்புத் தரையிறக்கத் திட்டமிடலின்போது"

குடாரப்புத் தரையிறக்கத்திற்கு முதல் சந்திப்பின் போது அறி வுரைகள் புலற்றுகிறார் கேணல் சூசை



'உட்கரையில் இரு மிராஜ் வகுப்புப் படகுகளும் ஒரு வோட்டர் ஜெட் வகுப்புச் சண்டைப்படகும் நிற்பதைக் காண்க'

வெற்றிலைக்கேணி நோக்கி சுண்டிக்குளம் ஊடாக இழுத்துச்செல்லப்படும் கணையெக்கிகள்



"120 மிமீ கணையெக்கியை களப்பு நீரினூடாக இழுத்துச் செல்லும் பெண் போராளிகள்"



"120 மிமீ கணையெக்கிகளை களப்பு நீரினூடாக இழுத்துச் செல்லும் ஆண் போராளிகள்"

ததரையிறக்கத்திற்குச் செல்வோருக்கு அறிவுரைகளை புலற்றும் கட்டளையாளர்கள்



‘குடாரப்புத் தரையிறக்கத்திற்குச் செல்லும் போராளிக்கு அறிவுறுத்தல்கள் வழங்குகிறார், தரையிறக்கத் தலைமை கட்டளையாளர் கேணல் பால்ராஜ்’



‘குடாரப்பில் தரையிறங்கி இத்தாவிலில் உள்ள கண்டிவீதியை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்போகும் அணிகளிற்கு அறிவுரை புலற்றும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புக் கட்டளையாளர் லெப். கேணல் ராஜசிங்கன்”





‘கடற்கரையில் வைத்து கடற்புலிகளின் சிறப்புக் கட்டளையாளர் கேணல் சூசை தரையிறங்கப்போவோருக்கு அறிவுரைகள் புலற்றுகிறார்”

**அறிவுரைகளை செவிமடுக்கும் போராளிகள்**



‘தரையிறங்கப்போகும் தரைப்புலிகளுக்கு அறிவுரைகள் வழங்கும் கடற்புலித் தலைமையும் அதை செவிமடுக்கும் ஆண் போராளிகளும்”



‘தரையிறங்கப்போவோரில் ஒரு தொகுதி பெண் போராளிகள்’



‘தரையிறங்குவோர் கொண்டுசெல்லப்போகும் கனவகை படைக்கலன்கள்”

**வெற்றிலைக்கேணியின் கோவிலடி கடற்கரையிலிருந்து தரையிறங்க ஆயத்தமாகுகின்றனர், போராளிகள்**









**வழங்கல்கள் கொண்டு செல்லும் கட்டைப்படகு கடலேற்ற ஆய்த்தமாய்**





**கடலேற்றப்படும் தரையிறக்கக் கலங்கள்**



‘வெற்றிலைக்கேணி கோவிலடிக் கடற்கரையிலிருந்து ஒரு உப்பயானத்தில் கடலேறும் போராளிகள்’



‘தரையிறங்க வேண்டிய அணிகள் வெற்றிலைக்கேணி கோவிலடிக் கடற்கரையிலிருந்து கடலேற்றப்படும் போது அதைக் கரையில் நின்றபடி கவனிக்கும் கடற்புலிகளின் சிறப்புக் கட்டளையாளர் கேணல் சூசை, தரையிறக்க படைத்தொகுதி கட்டளையாளர் கேணல் பால்ராஜ், ஒருங்கிணைப்புக் கட்டளையாளர் கேணல் பானு’

குடாரப்பு/மாமுனையில் காலை வேளையில் தரையிறக்கம் நடந்துகொண்டிருக்கும் காட்சி. கடற்புலிகளின் கட்டைப்படகுகள் மற்றும் உப்பயானங்கள் (இறப்பர் படகுகள் எனப்படும்) ஈடுபட்டிருக்கின்றன. அவற்றில் பெண் போராளிகள் அமர்ந்திருக்கின்றனர்



தரையிறக்கத்தின் பின் புன்னையடி வைரவர் கோயிலடியிலிருந்து 1 1/2 கிமீ நீளமான விரக்களி ஆற்று நீரூடாக சதுப்பு நிலங்களைக் கடந்து இத்தாவிலை அடையும் போது…





‘இதுவம் ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்கப் படிமமே”



ஓயாத அலைகள் 3 நடவடிக்கையின்போது குடாரப்பு பகுதியில் படகுகள் மூலம் தரையிறங்கி கண்டி வீதியை நோக்கி நகரும் பெண்போராளிகள்



'இத்தாவில் பெட்டி நோக்கி நகரும் தமிழரின் ஆர்பிஜி கொமாண்டோக்கள்'



'குடாரப்பில் தரையிறக்கிய கொஞ்ச நேரத்திற்குப் பின், அடுத்து செய்ய வேண்டிய செயற்பாடுகள் குறித்து கட்டளையாளர் கேணல் பால்ராஜ் விளக்கும் போது'

**குடாரப்புத் தரையிறக்கத்தின் போது தரையிறக்கத்திற்குக் காப்பு வழங்கும் கடற்புலிகளின் சண்டைப்படகுகள்**



**குடாரப்புத் தரையிறக்கத்தின் போது தரையிறக்கத்திற்கு பாதுகாப்பு வழங்கும் கடற்புலிகளின் "வோட்டர் ஜெட்" வகுப்புச் சண்டைப்படகுகள்**





'வோட்டர் ஜெற்றின் முதன்மைச் சுடுகலனாய் இருப்பதுவே சிபியு-4 ஆகும். (சிதிலமடைந்த திரைப்பிடிப்புத் தான்.) அண்மையாக்கப்பட்ட படிமம். சிபியு-4 தெளிவாகத் தெரிகிறது பாருங்கள்.'

**வசமான தாழையடியும் வசப்படுத்தியோரும்...**





"வசமான தாழையடியினுள் நடந்து செல்லும் தமிழீழ சிறப்புப் படையினர் (கரும்புலிகள்)"



"தாளையடியில் சிங்களவரிடமிருந்து பிடிக்கப்பட்ட காவலரண்களில் போராளிகள் நிலைகொண்டுள்ளனர்"



"தாளையடி துணை அஞ்சலகத்தினுள் நிற்கும் இம்ரான் பாண்டியன் படையணியின் விக்டர் கவச எதிர்ப்புப் படையணியினர்""



## காலக்கோடு

1.03.2000 - கொடியேற்றப்பட்டு படையணிகளுக்கான பயிற்சிகள் மாதிரி தளத்தில் தொடங்கப்படுகின்றன. அதிகாரிகளானோர் "அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி"க்கு மேலதிக பயிற்சிக்காக அனுப்பப்படுகின்றனர்.

(பயிற்சிகள் முடிவுற்றன)

24.03.2000 பகல் - கரும்புலிகள் தங்கள் ஆயுதங்களுக்கு நீர்க்காப்பிட்டு வெடிபொருட்களை சரிபார்த்து தம்மை தயார்ப்படுத்துக்கொண்டிருக்கின்றனர்.

24.03.2000 மாலை - 15 இற்கும் மேற்பட்ட கரும்புலிகளை ஏற்றிய இரு உப்பயானங்கள் வெற்றிலைக்கேணிக் கடற்கரையிலிருந்து கடலில் இறக்கப்பட்டு குடாரப்பு நோக்கிய தம் பயணத்தை ஆரம்பித்தன. இவ்வணிக்கு தரைக்கரும்புலி மேஜர் மறைச்செல்வன் தலைமை தாங்கினார்.

24.03.2000 இரவு - குடாரப்புப் பகுதியில் கரும்புலிகள் தரையிறக்கப்பட்டு இலக்கு நோக்கி நகர்கின்றனர்.

25.03.2000 காலை - போராளிகள் பேருந்துகள் மற்றும் உழுபொறிகள் மூலம் சுண்டிக்குளம் நீரேரிக்கு அருகில் ஏற்றிப் பறிக்கப்படுகின்றனர். அற்றைநாளே அனைவரும் அந்த 3 கிமீ நீள நீரேரியினைக் கடக்கின்றனர்.

25.03.2000 இரவு - கடந்தவர்கள் 10கிமீ பயணித்து கட்டைக்காட்டினை அடைகின்றனர்.

25.03.2000 யாமம் - எதிரியின் காவல்வேலிக்குப் பின்னால் நகர்ந்த கரும்புலிகள் அகிலன்வெட்டையை வந்தடைகின்றனர்.

26.03.2000 காலை - அனைவரும் ஒரு பரந்தவெளியில் ஒன்று கூடினர். போராளிகள் வரிசையாய் அணிவகுத்து நிற்கின்றனர்; தரையிறக்கத் தாக்குதல் தொடர்பான அறிவுரைகள் கட்டளையாளர்களால் வழங்கப்படுகின்றன.

26.03.2000 நண்பகல் - பின்னர் நடவடிக்கைக்கான உலர் உணவுகள் (அதிக கலோரிகள் கொண்ட சொக்லெட்டுகள் வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டு போராளிகளுக்கு பக்குகளில் (Pocket) எடுத்துச்செல்ல வழங்கப்பட்டது) மற்றும் மேலதிகப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. மதிய உணவு வழங்கப்படுகின்றது கூச்சலும் கும்மாளமுமாக இருக்கின்றது அவ்விடம்.

26.03.2000 பிற்பகல் - படகேறும் பயிற்சிக்கு அணித்தலைவர்கள் செல்கின்றனர் போராளிகள் தத்தமது பொருட்களை சரி பார்த்துவிட்டு வந்து நின்ற உழுபொறிகளில் ஏறி வெற்றிலைக்கேணி கோவிலடி கடற்கரையினை வந்தடைகின்றனர்.

26.03.2000 மாலை - கேணல் சூசை தரையிறங்கப்போகும் போராளிகளுக்கு நம்பிக்கையூட்டுகிறார். தெற்கில் இருந்து வடக்காக வானூர்தி ஒன்று பறந்துபோனது. சிறிது நேரத்தில் வழமையான எறிகணைகள் அவ்விடத்தில் வீழ்கின்றன. போராளிகள் உடைந்த சிங்களத்தின் காப்பரண்களுக்குள் காப்பெடுக்கின்றனர். தரையிறக்க அணிகளை படகேற்றி அனுப்பும் பணியிற்கு லெப். கேணல் மங்களேஸ் பொறுப்பாகச் செயற்படுகிறார். உதவிக்கு லெப். கேணல் பாக்கி செயற்படுகிறார்.

26.03.2000 இரவு 6:40ற்கு முன் - முதலில், இத்தாவில் பகுதிக்குள் நகர்த்தப்படவேண்டிய அணிகள் கடலேறின. இவற்றைத் தொடர்ந்து கடற்புலிகளின் சேமத்திற்கான (நளஉழசவ) சண்டைப்படகுகள் கடலேறின.

26.03.2000 இரவு 6:40 - குறித்த நேரத்தில் தரையிறக்க அணிகளைக் கொண்ட தரையிறக்கக் கலத்தொகுதிகள் புறப்படுகின்றன. நீரின் போக்கைத்தவிர இவர்களுக்கு வேறெந்தச் சிக்கலும் ஏற்படவில்லை.

26.03.2000 இரவு - தாழையடி கதுவீ தளத்தில் இருந்த சிங்களப் படையினருக்கு ஐயமேற்பட்டதால் சிங்கள டோறா சுற்றுக்காவல் படகுகள் உலாவத் தொடங்க கடற்புலிகளின் படகுகள் வழிமறிக்க விரைகின்றன. தரையிறக்க கலங்களின் வேகம் அதிகரிக்கப்படுகின்றது.

(முதலாவது கணத்தின் தரையிறக்கம் நிகழ்கிறது. லெப். கேணல் நேசன் தலைமையிலான ஏழு படகுகளில் சென்ற சாள்ஸ் அன்ரனியின் இரு அணிகள் குடாரப்பில் கால்பதிக்கின்றனர். கண்டிவீதியை பிளந்ததுவாக நிலை கொள்வதற்காக இத்தாவில்-இந்திரபுரம் நோக்கி கமுக்கமாக நகர்கின்றனர்.)

26.03.2000 இரவு 8:30 - முட்டுப்பட்டு கடற்சமர் வெடிக்கின்றது. 6 டோறாக்கள் கடலில் நிற்கின்றன. தரையிறக்க கலன்களை அண்மித்த டோறாக்களை போக்குக்காட்டி வேறிடத்திற்கு வலிந்திழுத்துச் செல்கின்றனர், கடற்புலிகள்.

26.03.2000 இரவு 8:45 - முதற் கலத்தொகுதி தரையிறங்கியது, கட்டளையாளர் கேணல் பால்ராச்சுடன். (11 கிமீ கடற்பயண ஏற்றிப்பறித்தல் தொடர்கின்றது)

26.03.2000 இரவு 9:30 - 10:00 - குடாரப்பு-மாமுனை கடற்கரைகளை இலக்குவைத்து டோறாக்கள் தரை நோக்கிய தாக்குதலைத் தொடங்குகின்றன. எம்மவருக்கு உயிரிழப்புகள் ஏற்படவில்லை. சமநேரத்தில் எறிகணைகளும் வீழத்தொடங்குகின்றன.

26.03.2000 நடுச்சாமம் 11:32- இவற்றிற்கிடையில் பளை "ஆட்டிவத்த" சேணேவித் தளமானது 11 பேர் கொண்ட தரைக் கரும்புலிகளால் செயலிழக்க செய்யப்படுகின்றது. அங்கிருந்த 11 தெறோச்சிகளும் அழிக்கப்பட்டதோடு ஒட்டுமொத்த சேணேவித் தளமும் அதிகாலைவரை செயலிழக்க செய்யப்படுகின்றது. இதில் 2 கரும்புலிகள் வீரச்சாவடைகின்றனர் கடலில் கடற்புலிகளின் சண்டைப்படகுகள் 2 சேதமடைந்து கட்டியிழுத்துச் செல்லப்படுகின்றன.

26.03.2000 நடுச்சாமம் 11:30 - ஏ9 வீதியின் இத்தாவில்-இந்திரபுரப் பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் வருகிறது

26.03.2000 நடுச்சாமம் 11:00 - 12:00 - திரும்பிச் சென்று கொண்டிருந்த கட்டளையாளர் விதுசா பயணித்த படகு அடிவேண்டி ஏற்கனவே சேதமடைந்திருந்ததால் எரிந்து மூழ்குகிறது.

27.03.2000 அதிகாலை 3:00 - டோறாக்களின் எண்ணிக்கை 19 ஆக உயர்கிறது. சமநேரத்தில் தரையில் இருந்து 5 தகரிகள் கடலை நோக்கி சுட்டுக்கொண்டிருக்கின்றன.

27.03.2000 காலை 7:00-7:30 - போராளிகள் வந்தது தெரியாமல் மக்கள் நடமாட்டத்தை தொடங்குகின்றனர். இவர்களை கண்ட சிலர் தத்தமது வீடுகளுக்கு அருகில் நின்றவர்களுக்கு தேநீர் முதலிய சிற்றுணாக்கள் வழங்குகின்றனர். மக்களை பாதுகாப்பான இடங்களை நோக்கிச் செல்லுமாறு போராளிகள் பணிக்கின்றனர். மாமுனைத்தளம் கைப்பற்றப்படுகிறது, மாலதி படையணியால்.

(மேற்கொண்டு சமர் நடக்கிறது. சிங்களப் படைகளின் கடல்-தரை தாக்குதல் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. இரு தரப்பினது எறிகணை வீச்சும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. சமநேரத்தில் கடல் வழியான வழங்கல்கள் நடந்து கொண்டிருக்கின்றன.)

27.03.2000 காலை 6:00-9:00 - கடும் கடற்சமரால் ஆளணிகளை ஏற்றிய தரையிறக்கக் கலங்கள் மிகவும் மெள்ளமாக




கடலிலே நகர்கின்றன.

27.03.2000 காலை 10:00 அளவில் - தரையிறக்கம் முடிவிற்கு வருகிறது. முழு ஆளணியும் தரையிறக்கப்பட்டு விடுகின்றன. முதற் தரையிறக்கத்தின் போது கடலில் சிறீலங்காக் கடற்படையுடனான சமரில் வீரச்சாவடைந்த 14 போராளிகளின் வித்துடல்களும் தலைவரின் அறிவுறுத்தலின்படி குடாரப்பிலேயே விதைக்கப்படுகின்றன.

27.03.2000 நண்பகல் - பின்னுதைப்பற்ற சுடுகலன்களும் வெடிபொருட்களும் கணைகளும் வந்துசேர்கின்றன் கடல் வழங்கலணி கட்டளையாளர் மேஜர் எழிற்கண்ணன் காயமடைகின்றார். படகு தரைதட்ட கள மருத்துவயிடம் நோக்கி கொண்டுசெல்லப்படுகின்றார்.

27.03.2000 மாலை - தரையிறங்கியோர் தாழையடித் தாக்குதலுக்கான வேவுகளில் ஈடுபடுகின்றனர். தெற்கிலிருந்து (வெற்றிலைக்கேணிப் பக்கத்தால்) தாழையடி நோக்கி கடற்புலிகளின் சூட்டி தரைத்தாக்குதல் அணி உள்ளடங்கிய கேணல் தீபனின் படைத்தொகுதி முன்னேறிக்கொண்டிருக்கின்றது. அவர்களை வழிமறித்து சிங்களவரின் 5/6 தகரிகள் தீரமுடன் சமராடுகின்றன. அவை உதவிக்கு வந்த கடற்புலி படகுகளையும் விரட்டியடிக்கின்றன. இதனால் புலிகள் 500-600 மீ கைப்பற்றிய நிலப்பகுதியை விட்டு பின்வாங்குகின்றனர்.

(இவற்றிற்கிடையில் கடற்புலிகளின் மற்றொரு படகும் சேதமடைந்து கட்டியிழுத்துச் செல்லப்படுகின்றது. ஏனைய நான்கு படகுகள் மட்டும் தொடர்ந்து சமராடுகின்றன, தளம் திரும்பாமல்!)

28.03.2000 அதிகாலை 2:30 - புலிகள், தாழையடி நோக்கி தெற்கில் இருந்து அதிவிரைவாக மீண்டொருமுறை உடைத்துக்கொண்டு முன்னேறுகின்றனர்.

28.03.2000 காலை - தாழையடித் தளம் மீதான தாக்குதலுக்கு திட்டம் தீட்டப்படுகிறது் அன்றைய உணவும் கடல் வழியாக வந்து சேர்கின்றது. பெரும் சிரமத்திற்கு நடுவிலும் கடல்வழியான வழங்கல் நடைபெறுகிறது் தரையிறங்கியோரால் ஏற்கனவே ஏ9 வீதி இந்திரபுரத்தில் ஊடறுக்கப்பட்டு கட்டுப்பாடில் வைக்கப்பட்டிருக்கிறது. இத்தாவில் பெட்டிச் சமர் நடந்துகொண்டிருக்கிறது.

(கணைகள் மற்றும் கனவகை படைக்கலன்கள் கொணர்தல், காயமடைந்த போராளிகளை வன்னித் தளத்திற்கு அனுப்புதல், வித்துடல்கள் காவுதல் மற்றும் உணவு கொணர்தல் என ஓயாமல் சுழல்கின்றனர் கடற்புலிகள்)

28.03.2000 நண்பகல் - தரையிறங்கியோரே சமைக்கத் தொடங்குகின்றனர். சமையலில் அவ்வூர் பொதுமக்களின் உதவியையும் நாடிப் பெற்றுக்கொள்கின்றனர். மக்களில் சிலர் நேரடியாக உதவுகின்றனர் இத்தாவில் பெட்டி களமுனைக்கு மட்டும் உணவு சென்றடைவதில் சிக்கல் தொடர்கிறது.

28.03.2000 பிற்பகல் 4:00 - கடற்புலிகளின் கடல் நடவடிக்கைகள் ஓய்விற்கு வருகின்றன.

28.03.2000 சாமம் 11:00 -12:00 - தாழையடி தளம் மீதான கடும் தாக்குதல் தொடங்குகிறது.

29.03.2000 - சமையல் நடந்து கொண்டிருந்த இடம் மீது வான்குண்டுவீச்சு நடக்கின்றது. உயிர்சேதமின்றி சமையல் காரப் பொதுமக்களும் போராளிகளும் தப்புகின்றனர். இடமும் மாற்றியமைக்கப்படுகின்றது.

29.03.2000 நண்பகல் 1:00 - வெற்றிலைக்கேணி கடற்கரை வழியாக உடுத்துறையிலிருந்து வத்திராயன் பொக்ஸ் வரை தொடர்ந்து முன்னேறிச் சென்ற கட்டளையாளர் கேணல் தீபனின் படைத்தொகுதியின் தாக்குதலாலும், குடாரப்பில் தரை யிறங்கி மாமுனையைக் கைப்பற்றி செம்பியன்பற்று கடற்கரை வழியாக வந்த படையணிகளின் தாக்குதலாலும் மருதங் கேணியில் இருந்த தாழையடித் தளம் தமிழரிடம் வீழ்கிறது.



29.03.2000 பிற்பகல் - மருதங்கேணிச் சந்தி படைத் தளமும் கைப் பற் றப் பட் டு தரையிறங்கியோரும் தரைவழியால் வந் தோருமாக இவ்விடத்தில் கைகுலுக்குகின்றனர். தரையிறங்கியோருக்கான 12 கிமீ நீள தரைவழி வழங்கல் பாதையும் திறக்கப்படுகின்றது. இதன் காரணமாக கிட்டத்தட்ட 15 கிமீ நீளமும் 2 கிமீ அகலமுமான 30 சதுர கிமீ நிலப்பகுதி புலிகளால் மீட்கப்பட்டது.

இத்தோடு ஓயாத அலைகள் மூன்றினது கட்டம் நான்கின் முதலாம் கட்டம் நிறைவடைந்து படையணிகள் யாவும் இரண்டாம் கட்டத்திற்கு நகர்கின்றன.

**வானிலை**

வெப்பநிலை: துல்லியமான வானிலை கிடைக்கப்பெறவில்லை. ஆனாலும் வேருமாகி விழுதுமாகி புத்தகத்தில் இருக்கின்ற குறிப்புகளின் அடிப்படையிலும் ஆனையிறவுச்சமர் நிகழ் படத்தின் அடிப்படையிலும் பார்க்கும்போது வானிலை வழக்கமான சூரிய வெப்பத்தோடுதான் இருந்துள்ளது. அதேபோல் தரையிறக்கம் நிகழ்ந்து 21 ஆண்டுகள் கழித்து அவ்விடத்தில் உள்ள வெப்பநிலையும் 28 - 31 தான். எனவே இதுதான் அக் காலத்திலுமாக இருந்திருக்கக்கூடும். சிலவேளை தசம் அளவில் ஏதேனும் சிறு மாற்றம் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு.

நீரோட்டம்:
கடல் நீரோட்டமானது இவர்கள் தரையிறங்கத் தீர்மானித்திருந்த நாளிற்கு முன்னதான, “இரண்டொரு” நாட்களாக, வழமையைவிட வேறுபாடாக இருந்ததை வேருமாகி விழுதுமாகி என்ற புத்தகத்தில் கேணல் சூசை அவர்களின் அறிவுரை மூலம் நாம் அறியக்கூடியவாக உள்ளது.

“கடல் இரண்டொரு நாட்களாய் வழமையைவிட வித்தியாசமாய் இருக்கு. எண்டாலும் உங்களைத் தரையிறக்கிற பணி தடங்கலின்றி முடியும்...” - வேருமாகி விழுதுமாகி, பக்- 352


ஆனால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள “வழமையை விட வேறுபாடான” என்ற சொற்றொடரின் பொருள் பிடிபடவில்லை! அற்றை நாளில் மிகு அலைகள் எழுந்திருக்கக் கூடும் என்பது என் துணிபு.

**வரைபடம்**

**ஓயாத அலைகள்-3 கட்டம்-4 இன்** குடாரப்புத் தரையிறக்கத்தினை காட்டும் நிலவரைபடம்

‘படிமப்புரவு: வடமராட்சி தெற்கு வரைபடத்தில் நான் கீறியது. ; வெற்றிலைக்கேணி கோவிலடியில் இருந்து குடாரப்பு-மாமுனையில் கடற்புலிகள் தரையிறக்கிய கடல்வழியை வரைபடம் காட்டுகிறது. அடிவேண்டி மூழ்கினாலும் வேளைக்கு நீந்தி கரையைத் தொடுவதற்காக தரையிறக்க கலன்கள் கடற்கரையை அண்டியதாகவே நகர்ந்தன.“

தெற்காசியாவின் புத்தியல் காலத்தின் (Modern time) முதலாவது தரையிறக்கமான குடாரப்புத் தரையிறக்கமும் அதனோடான ஆனையிறவு மீட்புச் சமரும் (ஓயாத அலைகள்-3 கட்டம்-3 & 4)



‘படிமப்புரவு: “விடுதலைப்புலிகள்” இதழ்; தென்மராட்சியில் கடற்கரை ஓரமாக உள்ள தடித்த கோடு சிங்களவரின் மாற்றுவழி வழங்கல் பாதையாகும். “


**சமர்க்கள விரிப்புகள் தொடரும்...**



# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு


# கிளாலிப் படுகொலைகள் 02 ஜனவரி 1993 தொடக்கம் 29 யூலை 1993 வரை

யாழ் குடாநாட்டினையும் அதன் வெளி நிலப் பரப்பையும் ஊடறுத்துச் செல்லும் பிரதான தரைவழி மார்க்கம் ஆனையிறவு ஆகும். 1990 ஆம் ஆண்டு ஏப்பிரலுக்கு முன்னர் யாழ் குடாநாட்டிலிலுள்ள எட்டு இலட்சத்திற்கும் மேற் பட்ட மக்களின் போக்குவரத்து, விநியோகப் பாதையாக ஆனையிறவு ஊடான தரை வழிப் பாதையே அருந்தது. 1990ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மீண்டும் ஆரம்பமான போரின் விளைவால் தரைவழிப் பாதை மூடப்பட்டது.




இதன் பின்னர் யாழ் மக்களின் போக்குவரத்து நகர்வுகள், உணவு விநியோக மார்க்கங்கள் என்பன ஆனையிறவுக்கு மேற்குப் புறமாக அமைந்துள்ள பூநகரி-கேரதீவு சங்குப்பிட்டியினூடாக அமைந்தது. இப்போக்குவரத்து மார்க்கம் கடல் நீரேரியூடாக இருந்தது. மக்கள் பெருஞ்சிரமங்களிற்கு மத்தியில் கேரதீவு சங்குப்பிட்டியினூடான கடல்நீரேரியைக் கடப்பதற்கு பயணப் படகு (Ferry) ஒன்றைப் பயன்படுத்தினார்கள். இதன்மூலம் விநியோகப் பொருட்களைக் கொண்ட பாரவூர்திகள் பலமான வாகனங்கள் என்பன நகர்த்தப்பட்டன.

மக்கள் பயணஞ்செய்த இப்பாதையும் 1991 ஆம் ஆண்டில் பூநகரியை இராணுவத்தினர் கைப்பற்றியதனால் தடைப்பட்டது. பின்னர் யாழ் குடாநாட்டு மக்களின் போக்குவரத்துப் பாதையாக வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஊடான கடற்கரையோரப்பாதை இருந்தது. இதுவும் 1991 ஆம் ஆண்டு "ஒப்பறேசன் பலவேகயா-01" இராணுவ நடவடிக்கையின் மூலம் இராணுவதத்தினரால் கைபப்பற்றப்பட மக்களின் போக்குவரத்தும் தடைப்பட்டது.




குடாநாட்டு மக்கள் வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஊடான கடற்கரையோரப் பாதைக்கும் ஆனையிறவுக்குமிடையில் அமைந்த கொம்படிப் பாதையினைப் பயன்படுத்தினர். இப்பாதை பிரயாணத்திற்கு ஒவ்வாத பாதையாகக் காணப்பட்டது. அப்படியிருந்தும் இதனூடாக மக்கள் பயணித்தார்கள். இயற்கையால் பிரயாணத்திற்கு ஒவ்வாத பாதையாக விளங்கிய கொம்படிப் பாதையினூடு கடுந்துன்பங்களுக்கு மத்தியில் மக்கள் பயணித்தார்கள்.

"பலவேகய 02" இராணுவ நடவடிக்கை மூலம் இராணுவம் ஆனையிறவு, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு போன்றவற்றில் இராணுவத் தளங்களை தொடர் இராணுவ வேலிகளாக அமைத்ததனால் மக்கள் பயணஞ்செய்த இக் கொம்படிப் பாதையும் தடைப்பட்டது. இதன் பின்னர் யாழ் குடாநாட்டிற்கும் ஏனைய இடங்களுக்குமான வெளித் தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்ட நிலையில் எட்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களிற்கான உணவு, மருந்து உட்பட அனைத்து அத்தியாவசியப் பொருட்களையும் எடுத்துச் செல்வதற்கான பாதை இல்லாது தவித்த ஆயிரக்கணக்கான மக்கள், 1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கிளாலிக்கடல் நீரேரியினூடான கடற் போக்குவரத்தினை மேற்கொண்டார்கள்.

யாழ் குடாநாட்டையும், அதன் வெளி நிலப்பரப்பையும் ஊடறுத்து ஏறத்தாழ முப்பது மைல் உள்நுழைந்து, பொன்னாலைதொட்டு தலைமன்னார் வரை நீண்டு, பரந்த கடலால் நீரூட்டப்பட்டு இருந்தது யாழ்ப்பாணக் கடல் நீரேரி. கிளாலிக்கரையிலிருந்து மறுகரையில் ஆலங்கேணிவரை ஏறக்குறைய இருபது கடல்மைல் தூரங்கொண்ட இக்கடற்பிரதேசம் பயணங்களிற்கு, விநியோக மார்க்கங்களிற்கு ஒவ்வாததாக, அமைந்தாலும் பெருஞ்சிரமங்களின் மத்தியில் ஏறக்குறைய நான்கு மணித்தியாலம் பயணித்தே மறுகரையை அடைய முடியும். பகல் நேரங்களிற் பயணிக்க முடியாத நிலையிருந்து. இரவு நேரங்களிலேயே பயணிக்கக்கூடியதாக எட்டு குதிரை வலு கொண்ட இயந்திரப் படகுகள் மூலம் தமது பிரயாணங்களை மக்கள் மேற்கொண்டனர்.

1992ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்போக்குவரத்து மார்க்கத்தை தடைசெய்யும் நோக்கில் தாக்குதல்கள் கடல் நீரேரியின் இருபக்கமும் அமைத்திருந்த ஆனையிறவு இராணுவத்தளம் மற்றும் பூநகரி இராணுவத்தளம் ஆகியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. மேலும் வான்படையும் இத் தடைநோக்கிற்கு



உதவியது.

1993 ஆம் ஆண்டு ஜனவரி இரண்டாம் திகதி கிளாலியிலிருந்து ஆலங்கேணிக்குச் சென்று கொண்டிருந்த இயந்திரப் படகுகளில் இயந்திரப் பழுது காரணமாக நடுக்கடலில் நின்ற நான்கு படகுகளிலிருந்த பயணிகள் மீது மிக அண்மித்து வந்த கடற்படையினர் கூரிய ஆயுதங்களாலும், துப்பாகிகளாலும் தாக்கியதால் படகிற் பயணித்த அரச உத்தியோகத்தர்கள், மாணவர்கள் உட்பட முபப்த்தைந்து பேர் வெட்டப்பட்டும், சுடப்பட்டும் உயிரிழந்தாடகள். ஐம்பது பேர்வரையானவர்கள் காயங்களுடன் மறுநாள் காலை கரையினை அடைந்தார்கள்.

இச்சம்பவத்தில் உயிர் தப்பியவர்களில் ஒருவரான கந்தையா செல்லத்துரை (வயது 68) என்பவர் கிளாலிக்கடலில் ஏற்பட்ட சம்பவங்கள் பற்றி ஊடகங்களுக்கு மறுநாள் அளித்த பேட்டியில் விரிவாக வெளிப்படுத்தியிருந்தார்.




1993 ஆம் ஆண்டு ஜனவரி இரண்டு, யூலை இருபத்தொண்பது எனப் பல்வேறுபட்ட காலப் பகுதியிலுமாக 1993ஆம் ஆண்டு டிசம்பர் வரைக்கும் நூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கிளாலிக் கடற்பரப்பில் பயணித்த போது, கடற்படையினரின் தாக்குதல்களினால் உயிரிழந்துள்ளதுடன், நூறிற்கும் மேற்பட்டவர்கள் அங்கவீனமானார்கள். மேலும் நூற்றிஐம்பதிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். இச்சம்பவங்களில் கிளிநொச்சி மாவட்டக் கல்வி அதிகாரி உட்பட யாழ் பல்கலைக் கழக மருத்துவபீட மாணவர்கள், ஆசிரியர்கள், வெளிநாட்டிலிருந்து தமது உறவுகளைப் பார்வையிட வந்தவர்கள் எனப் பலதரப்பட்ட பொதுமக்களும் பாதிக்கப்பட்டார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இ.இன்பராசா இ.மி.ச.ஊழியர் 47
02. இ.ஜெராட் கடற்றொழில் 26
03. இளையதம்பி மகேஸ்வரி வீட்டுப்பணி 51
04. இளையதம்பி சிவசீலன் பல்.கலை மாணவன் 25
05. இரத்தினம் சிறீறஞ்சன் - 29
06. இரத்தினசிங்கம் எருமின் ஜசேக் இன்பராசா இ.மி.ச.ஊழியர் 47
07. ந.இராசன் கமம் 28
08. ந.கிளி கமம் 26
09. ந.இராசலிங்கம் வியாபாரம் 32
10. ந.நாகம்மா - 60
11. ந.துரை கமம் 36
12. நா.பரிமளம் - 37
13. க.கமலதாசன் கடற்றொழில் 17
14. க.செல்லத்துரை - 46
15. க.சிவானந்தன் வியாபாரம் 35
16. க.ஏகாம்பரம் கமம் 45
17. குப்புசாமி செல்லமுத்து - 45
18. கா.சின்னத்தம்பி கமம் 60
19. கதிரமலை ஜெயந்தி மாணவி 25
20. த.கமலராசன் மாணவன் 10
21. த.பூபதி வீ.பணி 28
22. த.றாகினி மாணவி 17
23. தர்மராஜா பகீரதன் - -
24. தம்பிஜயா ராகினி இல்லை 18
25. தற்பரநாதன் முகுந்தன் மாணவன் 20
26. ம.இராசையா கடற்றொழில் 23
27. ம.யோசப்யூட் கடற்றொழில் 18
28. முத்தையா சந்திரலீலா - 35
29. மதுரநாயகம் அமிர்தநாயகி - 39
30. மி.ஜேசுதாசன் மாணவன் 19
31. மிக்கேல் ஜேசுதாசன் மாணவன் 19
32. முருகேசு சடராசா கடற்றொழில் 40
33. அ.அடைக்கலம் சாரதி 63
34. அப்புக்குட்டி பரமசிங்கம் சாரதி 38
35. யோசெப்யேசுராஜா யேசுநாயகம் தனிதாஸ் கடற்றொழில் 18
36. தெ.கனகாம்பாள் வீட்டுப்பணி 42
37. செ.ரூபன் ஞானசீலன் கடற்றொழில் 19
38. செ.பாக்கியராசா கடற்றொழில் 30
39. செ.அருள்தாஸ் கடற்றொழில் 21
40. செல்வராசா பாக்கியராசா - 27
41. செல்லத்துரை சாந்தலிங்கம் கடற்றொழில் 50
42. ஞானசூரியர் வின்சன்நிக்கிளஸ் - 22
43. ஞானப்பிரகாசம் ஞானபாலன் படகோட்டி 32
44. ஞானபாலன் படகோட்டி 33
45. ச.பாலசுப்பிரமணியம் சுயதொழில் 54
46. சந்திரன் அருணானந்தி கூலி 29
47. சி.கனகலிங்கம் கடற்றொழில் 45
48. சின்னவன் கதிரவேலு - 44
49. சிவலிங்கம் அன்னபூரணம் - 40
50. சிவலிங்கம் செல்லத்துரை நீதிமன்ற ஊழியர் 45
51. சண்முகம் சபாநாதன் - 65
52. ரவீந்திரன் இந்திரவதனா - 41
53. ஏரம்பமூர்த்தி அசோகன் - 36

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. க.கணேந்திரநாதன் முகாமையாளர் 63
02. கந்தையா செல்லத்துரை - 68
03. கநத் சாமி மதியரசன் வியாபாரம் 20
04. தவராசா தயாளினி மாணவி 05
05. செல்வராசா குணசிங்கம் - 40
06. செல்வரத்தினம் ஜங்கரன் - 27
07. சின்னையா சந்திரகுமார் - 20
08. வி.,ன்பநாதன் கடற் றொழில் 37
09. விநாயகமூர்த்தி இன்பநாதன் - 26

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



30-07-1993

கிளாலிக் கடலில் நேற்றுக்காலை சிறிலங்கா கடற்படையினரால் கோரமாகக் கொல்லப்பட்ட பொதுமக்களில் பெண்மணி ஒருவரின் சடலத்தை முதலாவது படத்திலும், வயோதிபரின் சடலத்தை இரண்டாவது படத்திலும் காணலாம். படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள் நால்வரின் சடலங்கள் கரையில் வைக்கப்பட்டுள்ளதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# சுன்னாகச் சந்தைப் படுகொலை – 28 மார்ச் 1984

யாழ் மாவட்டத்தின் வலிகாமம் தெற்குப் பகுதியில் யாழ் நகரிலிருந்து பத்து கி.மீ. தூரத்தில் கே.கே.எஸ். வீதியில் சுன்னாகச் சந்திக்கு அருகில் சுன்னாகச் சந்தை அமைந்துள்ளது. யாழ் குடாநாட்டின் மிகப் பெருமளவான விவசாயப் பொருட்களை விற்பனை செய்யும் இடமாக இச்சந்தை அமைந்துள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி உட்பட பல மாவட்டங்களிலிருந்தும் உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருட்கள் இச்சந்தையில் விற்கப்பட்டன.

28.03.1984 அன் று மதியம் சுன்னாகம் பஸ் நிலையப் பகுதியிலும், சந்தைப் பகுதிகளிலும் தமது அன்றாட வேலைகளில் பெருமளவான மக்கள் கூடியிருந்தனர். திடீரென பஸ்நிலையப் பகுதிக்கு ட்ரக் வண்டியிலும், ஜீப்பிலும் வந்திறங்கிய விமானப் படையினர் பெரும் பரபரப்புடன் காணப்பட்டதுடன், யாரும் எதிர்பாராத வகையில் திடீரெனச் சுன்னாகப் பஸ் நிலையப் பகுதிகளிலும், சந்தையிலும் குழுமியிருந்த மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

விமானப் படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி அன்றைய தினம் தமது நாளாந்த அலுவல்களில் ஈடுபட்ட எட்டுப் பொதுமக்கள் உயிரிழந்ததுடன், ஐம்பது பொதுமக்கள் வரை படுகாயமடைந்தனர். சந்தை தீயூட்டப்பட்டதில் பல கடைகள் எரிந்து அழிந்தன. இதன் பின்னர் அவ்விடத்தை விட்டு விலகி மல்லாகப் பகுதியூடாக கே.கே.எஸ் வீதி வழியாக காங்கேசன்துறை நோக்கிச் சென்ற இராணுவத ்தினர் மல்லாகம் பகுதியில் தங்களது கண்களுக்குத் தென்பட்ட எல்லாப் பொதுமக்களையும் தாக்கினார்கள். இதில் ஒருவர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்தார்கள்.

அதனைத் தொடர்ந்து தெல்லிப்பளைப் பகுதிக்குச் சென்ற விமானப் படையினர் யூனியன் கல்லூரியில் பரீட்சை முடித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவர்கள், மற்றும் அங்கு நடமாடிய பொதுமக்கள் மீதும் தாக்குதலை நடத்தினார்கள், இதில் இருபத்தாறு மாணவர்கள் காயமடைந்ததுடன், அவ்வீதி வழியாகப் பயணம் செய்த இருபது பொதுமக்களும் காயமடைந்தார்கள். பின்னஉ விமானப் படையினர் பலாலி முகாமிற்கு திரும்பிச் சென்றார்கள்.

இச்சம்பவத்தின்போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது தொழில்)

01. கந்தையா பாலசுப்பிரமணியம், 52, பாதுகாவலர்
02. நாகலிங்கம் சிவசுப்பிரமணியம், 54, சந்தை மேற்பார்வையாளர்
03. தம்பிமுத்து சுந்தரலிங்கம், 38, தொழிலாளி
04. வல்லிபுரம் சின்னத்துரை, 68 வியாபாரம்
05. வைரவி தியாகராசா, 42. நெசவு
06. பசுபதி தவமணி, 43, வீட்டுப்பணி
07. நடராசா யோகராசா, 27, வியாபாரம்

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

# நாச்சிக்குடா படுகொலை – 16 மார்ச் 1996

வரலாற்றுப் புகழ்பெற்ற ஒரு தொன்மையான பிரதேசமாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரிப் பிரதேசம் விளங்குகின்றது. பண்டைய தமிழ் மன்னர்களின் தொன்மையான ஆட்சி மையமாகவும், வர்த்தக மையமாகவும் இது இருந்து வந்துள்ளது. அத்தோடு ஆரம்பகாலத்தில் கிளிநொசச்சி மாவட்டத்தில் அதிகூடிய மக்கள் தொகையினைக் கொண்ட பிரதேசசெயலர் பிரிவாகவும் பூநகரி இருந்தது. பூநகரிப் பிரதேசத்தில் பல மீனவர் குடியிருப்புக்களை உள்ளடக்கிய கிராமம் நாச்சிக்குடாக் கிராமம் ஆகும்.

16.03.1996 அன்று அதிகாலை 5:20 மணியளவில் வான்படையின் பைற்றரென அழைக்கப்படும் எம்.ஐ. இருபத்துநான்கு ரக உலங்கு வானூர்தி நாச்சிக்குடா அன்னை வேளாங்கன்னிப் பகுதியிலுள்ள மீனவர் குடியிருப்புக்கள் மீது தாக்குதலை நடாத்தியது. அவ்வேளை வீடுகளில் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த பெண்கள், குழந்தைகள் மற்றும் கடற்றொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்களென மொத்தமாக இருபது பேர் இத்தாக்குதலில் உயிரிழந்ததுடன், அறுபத்திரண்டு பேர் பலத்த காயங்களுக்கும் உள்ளானார்கள்.

நூற்றுக்கணக்கான மீனவக் குடிசைகள் எரிந்து சாம்பலாகின. சம்பவத்திற் காயப்பட்ட அனைவரும் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர், இறந்தவர்களை அவர்களது உறவினர்கள் அடக்கம் செய்தனர். இத்தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதி மீனவர்கள் இடம்பெயர்ந்து வேறிடங்களில் வாழ்கின்றனர். இச்சம்பவம் தொடர்பாக நாச்ச்சிக்குடாவைச் சேர்ந்த்த ஜேசுதாசன் ஆன்மேரி தெரிவிக்கையில்,

“என்னுடைய சொந்த இடம் நவாந்துறை யாழ்ப்பாணம். தற்போது கடற்கரை வீதி நாச்சிக்குடாவில் வசித்து வருகின்றேன். 1996ம் ஆண்டு மூன்றாம் மாதம் பதினாறாம் திகதி விடியற்காலை நாங்கள் நித்திரையாக இருக்கும் போது திடீரெனக் கடற்கரையோரமாக வந்த எம்.ஐ-இருபத்துநான்கு ரக உலங்கு வானூர்தி ஒன்று தாக்குதல் நடத்தியது. இதன்போது என்னசெய்வதென்று தெரியாத நிலையில் நாங்களனைவரும் சிதறி ஓடினோம். அதன்போது எங்களுடைய அண்ணையின் மகனுக்கும் மைத்துனரின் மகனுக்கும் காயம்பட்டது. எங்களுடைய உறவினர்கள் கை, காலை இழந்தனர். இச் சம்பவத்தில் ஐம்பதிற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இருபது பேர் சம்பவ இடத்திலும் உயிரிழந்தனர். காயமடைந்தவர்கள் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப், பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கடல்வழியாக யாழ்ப்பாண வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். விமானம் திரும்பவும் வருமோ என்ற பதற்றத்தின் மத்தியில் இறந்தவர்களை உறவினர்கள் அடக்கம் செய்தார்கள். அதன் பின்னர் நாங்கள் இடம்பெயர்ந்து போய் காடுகளில் வாழ்ந்தோம். கிட்டத்தட்ட ஒரு கிழமைக்கு மேல் தொழிலுக்கு கடலுக்குப் போகமுடியவில்லை. காட்டுக்குள் இருந்த நாங்கள் பின்னர் படிப்படியாக கடற்கரையில் குடியேறத் தொடங்கினோம்.

திடீரென ஒரு நாள் மாலை 5மணியளவில் இரணைமாதா நகர்ப் பக்கமாக இருந்து வந்த வானூர்தி எங்கள் குடியிருப்புக்கள் மீது தாக்குதல் நடத்தியதில் செய்வதறியாத நாங்கள் திரும்ப காடுகளுக்குள் ஓடினோம். நாம் தற்போதும் பயந்த நிலையிற் தான் கரையோரத்தில் இருக்கின்றோம்.”

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சூசைப்பிள்ளை அல்பேட் கடற்றொழில் 50
02. யூலியஸ் டெவின் குழந்தை 1
03. கனகசிங்கம் தர்சினி மாணவி 10
04. கந்தையா இரமேஸ்வரன் மாணவன் 18
05. கந்தசாமி செந்தில்குமார் மாணவன் 16
06. குவாட்டஸ்கேஸ் சின்ராசன் - -
07. தவரி வேலாஜி - 68
08. மரியநாயகம் திரேசம்மா - -
09. மரியதாஸ் எட்வின் கடற்றொழில் 30
10. மகேந்திரன் யாழினி மாணவி 18
11. அன்ரன் டயஸ்கா - -
12. அன்ரன் ஜெகதீபா மாணவி 12
13. ஆசைப்பிள்ளை அல்போன்ஸ் கடற்றொழில் 50
14. அருளானந்தம் சேவியர் விசிற்றம்மா வீட்டுப்பணி 55
15. அலபோன்ஸ் அமலோறப் வராணி வீட்டுபப்ணி 22
16. பொன்னம்பலம் செல்வராசா கடற்றொழில் 68
17. மேரி அமலினி மாணவி 18
18. சேவியர் கொன்சலா மாணவி 14
19. விக்ரர் லூசியா - 24

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. சூசைப்பிரபா குழந்தை 02
02. இமிறோன் - -
03. இராசம்மா - 30
04. இருதயசீலன் - 34
05. யூனிற்று மாணவன் 16
06. யூத் - 90
07. நாகராணி - 62
08. நாச்சியம்மா - 40
09. கனகம்மா - 65
10. கந்தசாமி - 52
11. புஸ்பாயினி மாணவி 08
12. பரிமளம் - 44
13. பத்மசிறி - 25
14. பிரியா குழந்தை 04
15. பவானி - 20
16. பற்றிக் - 62
17. தர்மராசா - 22
18. திரேசம்மா - 65
19. மகிந்தன் மாணவன் 07
20. மாசில்தா - 24
21. மதிஜெனி - 20
22. மதியோகராசா - 25
23. மனோகரன் மாணவன் 15
24. மனோதா - 16
25. டன் - 23
26. அன்னைமேரி - 37
27. அன்ரன் - 34
28. அன்ரனிக்குயின்ரஸ் யூனிதா மாணவி 16
29. ஆனந்தி - 23
30. அனிஸ்ரா மாணவி 06
31. அனுசியா மரியனிட்டா - 20
32. அமுதராசு மாணவன் 10
33. அருள்சீலன் தர்மஜோதி - 22
34. அருள்சீலன் அருள்மேரி குழந்தை 04
35. அருளம் மேரி - -
36. அரவிந்தன் மாணவன் 07
37. கொன்ஸ்பேனல் - 32
38. கொன்சியா குழந்தை 4
39. பொன்னம்பலம் - 43
40. தேவராசா - 45
41. மேரி சிங்கராசா - 30
42. மேரிகொன்சலா - 18
43. மேரிறீட் மரியா - 28
44. செபமாலை - 65
45. சேவியர் - 30
46. செல்வநாயகி - 31
47. செல்வநிதி - -
48. செல்வராணி - 25
49. சுப்பையா - 76
50. சுதர்சன் - 21
51. சித்திரா - 34
52. சசிரேகா - -
53. சரண்யா - -
54. விமலதாஸ் - 26
55. வளர்மதி - 30
56. இராஜ்குமார் மாணவன் 14
57. ரசுபாலன் - 18
58. எமில்டா குழந்தை 04
59. எல்டா மாணவன் 14

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

# பழைய வட்டக்கச்சி குண்டுவீச்சு – 26 மார்ச் 1998

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவிலுள்ள பழைய வட்டக்கச்சி என்னும் கிராமம் கிளிநொச்சி மாவட்டத்தின் புராதன காலக் குடியேற்றக் கிராமங்களில் முதன்மையான ஒரு கிராமமாகக் காணப்படுகிறது. இக்கிராமம் இரணைமடுக் குளத்தின் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் நீர் பெற்றுக் கொள்ளும் நெற்செய்கைப் பிரதேசமாகும். இதனால் இங்கு சிறுபோக நெற்செய்கையும் அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்றது.

பழைய வட்டக்கச்சிக் கிராமம் தற்போது பெரியகுளமென அழைக்கப்படுகிறது. இக்கிராமம் தனக்கென சில சிறப்பான இயல்புகளைக் கொண்டுள்ளது. வளமான மண்ணும் சிறந்த நீர் வளமும் இப்பிரதேசத்தில் இருப்பதனால் இப்பிரதேச மக்கள் செல்வச் செழிப்புடனும் கல்வி வளத்துடனும் வாழ்கின்றார்கள்.

இராணுவதத்தினர் 1996ஆம் ஆண்டு காலப்குதியில் கிளிநொச்சி நகரைக் கைப்பற்றும் நோக்கில் “சத்ஜெய” இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தனர். விமானத் தாக்குதல் எறிகணைத் தாக்குதல் என்பவற்றை நடத்தியபடி முன்னேறி, மக்களின் வாழ்விடங்களையும், சொத்துக்களையும் அழித்தனர். இதன்போது பல பொதுமக்களும் உயிரிழந்தார்கள்.

1998.03.26ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.00மணிக்கு கிளிநொச்சி வான் பரப்பினுள் பெரும் இரைச்சலுடன் நுழைந்த விமானப் படையின் இரண்டு கிபீர் விமானங்கள் வட்டக்கச்சிப் பிரதேசத்தைச் சுற்றி வட்டமிட்டன. முதலில் கண்டாவளை - வெளிக்கண்டற் பகுதியில் ஒரு குண்டினையும் அதனைத் தொடர்ந்து பழைய வட்டக்கச்சிப் பிரதேசத்திலுள்ள உடையார் என்றழைக்கப்படும் அருணாசலம் வேலாயுதம் என்பவரது வீட்டிலும், வீட்டிற்கு அண்மித்த பிரதேசத்திலும் ஐந்து குண்டுகளையும் வீசியது. இதன்போது வீட்டு முற்றத்தில் பனங்கிழங்கைச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்த இருவரும் வீட்டினுள்ளிருந்த டையாரின் மகளும் மற்றும் காணியில் வேலை செய்துகொண்டிருந்த இருவரும் முன் வீட்டில் ஒருவருமாக மொத்தம் ஆறு பேர் உயிரிழந்தார்கள். ஐந்து பேர் காயங்களுக்குள்ளானார்கள். காயமடைந்தவஉகள் தருமபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். இச்சம்பவத்தின் போது அருணாசலம் வேலாயுதத்தின் வீடு முற்றாக அழிந்ததுடன், அவருடைய இரண்டு உழவு இயந்திரங்கள், களஞ்சிய அறைகள் உட்பட அனைத்து உடமைகளும் அழிந்தன. அருணாசலம் வேலாயுதம் தெரிவிக்கையில், “எமது பகுதியில் நடந்த வான் தாக்குதலால் எனது மகளான மங்கயற்கரசி படுகொலை செய்யப்பட்டதுடன், எனது வீடு முற்றாக சேதமடைந்தது. இதில் ஐந்து பேர் உடல்சிதறிப் பலியானார்கள். எனது நெல்லு மூட்டைகள் யாவும் எரிந்துவிட்டன.”

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சண்முகம் தனபாலு தொழிலாளி 55
02. தியாகராசா பாலு தொழிலாளி 50
03. இராமநாதன் செல்லம்மா வீட்டுப்பணி 56
04. வேலாயுதம் மங்கயற்கரசி மாணவி 20
05. முத்தையா வசந்தகுமாரி வீட்டுப்பணி 26
06. கிஸ்ணசாமி வள்ளியம்மை வீட்டுப்பணி 65

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. வீரய்யா செல்வராசா - 40
02. கதிர்காமு பேபி - -
03. இராமநாதன் தேவகி - 23
04. பஞ்சலிங்கம் பாமினி அரசஊழியர் 32
05. வேலாயுதம் சிவகுமார் அரசஊழியர் 26

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

# உயர் பாதுகாப்பு வலயத்தில் 137 பேர் படுகொலை – 15.16. 17.03.2009

வன்னியின் “பாதுகாப்பான வலயத்திற்குள்” சிறீலங்கா இரா ணுவத்தின் ஷெல் மற்றும் துப்பாக்கிச் சூட்டில் சனிக்கிழமை இரவு முதல் 137 பேர் இறந்துள்ளனர் மற்றும் 200 க்கும் மேற் பட்டோர் காயமடைந்துள்ளனர். அவர்களில் குறைந்தது 18 பேர் மக்கள் வலையத்திற்குல் சிறீலங்கா இராணுவத்தின் நீண்ட தூர துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டுள்ளனர். இதற்கிடையில், செவ்வாய்க்கிழமை “பாதுகாப்பான வலயத்தின்” விளிம்புகளில் இலங்கை விமானப்படை வீசிய சுமார் 50 எண்ணிக்கையி லான பாரிய பதுங்கு குழி குண்டுகள் பொதுமக்கள் மத்தியில் அழிவை ஏற்படுத்தியது.

சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் 58 பொதுமக்கள் ஞாயிற்றுக்கிழமை கொல்லப்பட்டனர். நீண்ட தூரம் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 12 பொதுமக்கள் பலியாகினர். திங்கட்கிழமை, 29 பேர் ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்டனர் மற்றும் 6 பேர் சிறீ லங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். திங்கள்கிழமை 73 பொதுமக்கள் காயமடைந்தனர். செவ் வாய்க்கிழமை காலை ஷெல் தாக்குதலில் 32 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

மாத்தளன் மருத்துவமனைக்கு அருகில் திங்கட்கிழமை சிறீலங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் ICRC ஊழியர் கே. புலேந்திரராசா காயமடைந்தார் மற்றும் காயமடைந் தவர்களை மாற்றிய ICRC கப்பலில் ஏற்றப்பட்டார்.

இதேவேளை, 15 வயதுக்குட்பட்ட 12 சிறுவர்கள் உட்பட 52 பொதுமக்கள் திங்கட்கிழமை அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாத் தலான் வைத்தியசாலையின் மருத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஐந்து பேர் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.











**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**





# பச்சைப்புல்மோட்டை, வலைஞர்மடப் பகுதிப் படுகொலை 17.03.2009

17.03.2009 அன்று, சிறீலங்கா விமானப்படை தாக்குதல்கள் மற்றும் சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதல்களில் 84 பேர் கொல்லப்பட்டனர், 182 பேர் காயமடைந்தனர்.

செவ்வாய்க்கிழமை சிறீலங்கா அரசால் அறிவிக்கப்பட்ட பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படும் பச்சைப்புல்மோட்டை, வலைஞர்டம் பகுதிகளை குறிவைத்து சிறீலங்கா விமானப் படையின் குண்டுவீச்சு மற்றும் சிறீலங்கா சிங்கள இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் 52 பேர் கொல்லப்பட்டனர், 182 பேர் காயம் அடைந்தனர் என்று புலிகளின் குரலில் ஆரம்ப அறிக்கைகள் தெரிவிக்கின்றன. புலிகள் (VoT) மாலை ஒளிபரப்பு. முன்னதாக, காலையில், "பாதுகாப்பான வலயத்தின்" பிற பகுதிகளில் சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் 32 பொதுமக்கள் கொல்லப் பட்டதாக சுயாதீன வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விமானப்படையால் 12 முறைக்கு மேல் குண்டுகள் வீசப்பட்டன. 1,000 கிலோ எடை கொண்ட கனரக வெடிகுண்டுகள் "பாதுகாப்பு மண்டலம்" பகுதிகளிலும் அதன் எல்லைப் பகுதிகளிலும் வீசப்பட்டன.

# முல்லைத்தீவு பாதுகாப்பு வலயப் படுகொலை 19.20.21. - 03.2009

19. 20. 21.03.2009, மூன்று நாளில் முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்திற்குள் சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதலில் 102 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

முல்லைத்தீவில் முற்றுகையிடப்பட்ட பாதுகாப்பு வலயத்திற்குள் சிறீலங்கா இராணுவத்தின் பீரங்கித் தாக்குதல்களில் 46 பொது மக்கள் வெள்ளிக்கிழமை கொல்லப்பட்டனர். வெள்ளியன்று மாத்தளனில் இடம்பெயர்ந்தவர்களின் 6 தார்பாலின் தங்குமிடங்கள் மீது சிறீலங்கா இராணுவத்தின் எறிகணைகள் தாக்கியதில் 16 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இதற்கிடையில், ICRC காயமடைந்த பொதுமக்களை ஏற்றிச் சென்ற கடலோர இடத்திற்கு 300 மீட்டர் தொலைவில் காலை 11:00 மணியளவில் 4 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். வியாழகிழமை அன்று, 11 குழந்தைகள் உட்பட 39 பொது மக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் புதன்கிழமை பாதுகாப்பு வலயத்திற்குள் குறைந்தது 17 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.



வெள்ளிக்கிழமை அன்று, பொக்கானையில் மதியம் 1.00 மணியளவில் இடம்பெயர்ந்தோர் குடிசை மீது ஒரே ஷெல் தாக்கியதில் 6 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

எஞ்சிய உயிரிழப்புகள் முள்ளிவாய்க்கால், இரட்டைவாய்க்கால், வலைஞர்மடம் ஆகிய இடங்களில் பதிவாகியுள்ளன. பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட பொக்கனை மற்றும் மாத்தளன் பகுதிகளில் வியாழன் இரவு 11.00 மணிமுதல் கடும் எறிகணை வீச்சுக்கள் பதிவாகியுள்ளன.





# சிறீலங்கா இராணுவத்தின் பீரங்கி தாக்குதல்களில் வன்னி 'பாதுகாப்பு வலயத்திற்குள்' 42 பொதுமக்கள் படுகொலை 22.03.2009

சிறீலங்கா சிங்கள இராணுவம் சனிக்கிழமையன்று "பாதுகாப்பு வலயத்திற்குள்" பீரங்கி குண்டுத்தாக்குதலில், 42 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் GS (கிராம அதிகாரி ஒருவர் உட்பட சுமார் 80 பொதுமக்கள் காயமடைந்தனர்). இரணைப்பாலையில் தேங்காய் சேகரிக்கச் சென்ற குறைந்தது 7 பொதுமக்கள் விமானப்படையின் வான் தாக்குதலில் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல்களில் 128 பொதுமக்கள் படுகொலை - 23.24.2009

இலங்கை இராணுவத்தின் குறுகிய தூர மோட்டார் எறிகணைத் தாக்குதல்கள், ராக்கெட் உந்து குண்டுகள் (ஆர்பிஜி) தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கிச் சூட்டில் 19 குழந்தைகள் உட்பட 96 பொதுமக்கள் திங்கட்கிழமை "பாதுகாப்பு வலயத்திற்குள்" கொல்லப்பட்டனர். உள்ளூர் உதவி ஊழியர்கள் மற்றும் மருத்துவ அதிகாரிகள் படி, ஞாயிற்றுக்கிழமை 7 குழந்தைகள் உட்பட 32 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். திங்கட்கிழமை சிறீலங்கா இராணுவம் மோட்டார் துப்பாக்கிச் சூடு, ஆர்பிஜி தாக்குதல்களை முடுக்கிவிட்டு, "பாதுகாப்பு வலயத்திற்குள்" உள்ள புதுமாத்தளன் பகுதிக்குள் குளத்தின் மறுபுறத்தில் இருந்து துப்பாக்கிச் சூடு நடத்தியதில் சுமார் 160 பொதுமக்கள் காயமடைந்தனர். பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படும் பகுதியிலிருந்து பொதுமக்களை வெளியேற்றுவதை இலக்காகக் கொண்டு பகல் நேரத்தில் பொதுமக்கள் மீதான அதிகரித்த மற்றும் திட்டமிட்ட தாக்குதல்கள், படுகொலை இடம்பெற்றது. புதுமாத்தளனில் உள்ள தற்காலிக வைத்தியசாலைக்கு அருகில் மாலை 4 மணியளவில் 9 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். திங்கட்கிழமை. மருத்துவமனையின் பின்புறம் 400 மீட்டர் தொலைவில் குண்டுகள் விழுந்து வெடித்தது.

பொக்கனைய் பகுதியில் வீசிய 3 எறிகணைகள் 16 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். மாத்தளன் பகுதியில் அதி உயர் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

# சிறீலங்கா இராணுவம் மற்றும் விமானப் படையினரின் தாக்குதல்களில் ‘பாதுகாப்பு வலயத்திற்குள்’ 62 பொதுமக்கள் படுகொலை 24.03.2009

செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12:30 மணி முதல் பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படும் பகுதிகளுக்குள் உள்ள அனைத்து பகுதிகளிலும் ஷெல் தாக்குதல்களை சிறீலங்கா இராணுவம் முடுக்கிவிட்டுள்ளது, 62 பொதுமக்கள் கொல்லப்பட்டது மற்றும் பலருக்கு காயங்களை ஏற்படுத்தியது. பாதுகாப்பு வலயத்தின் மீது பீரங்கி மற்றும் மோட்டார் குண்டுகள் இரவில் தாக்கியதில் 27 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். வலைஞர்மடத்திற்கும் அம்பலவன்பொக்கனைக்கும் இடையில் பீரங்கி பொருத்தப்பட்ட கொத்துக் குண்டுகள் வெடித்ததில் பெரும் உயிர்ச்சேதம் ஏற்பட்டது. பாதுகாப்பு வலயத்திற்குள்ளான பச்சைப் - புல்மோட்டைச் சந்தியைச் சுற்றியுள்ள குடியிருப்புகளில் 12 வான்வழித் தாக்குதல்களுக்கு மேலதிகமாக செவ்வாய்க் கிழமை பகல் நேரத்தில் பாதுகாப்பு வலயத்தின் மீது RPG குண்டுகள், குறுகிய தூர மோட்டார்கள் மற்றும் நீண்ட தூர துப் பாக்கிச் சூடுகளை சிறீலங்கா இராணுவத்தினர் நிலை நிறுத்தியது. குறைந்த உயரத்தில் பறந்த சிறீலங்கா விமானப் படை குண்டுவீச்சாளர்களால் 70 க்கும் மேற்பட்ட குண்டுகள் வீசப்பட்டன, குறைந்தது 17 பொதுமக்கள் கொல்லப் பட்டனர்.

பொக்கனை, அம்பலவன்பொக்கனை, முள்ளிவாய்க்கால், மாத்தளன் மற்றும் வலைஞர்மடம் ஆகியவற்றை இலக்கு வைத்து எறிகணைத் தாக்குதல் சிறீலங்கா இராணுவத்தினரால் நடத்தப்பட்டது.

கடந்த 3 நாட்களுக்குள் 250க்கும் மேற்பட்ட காயமடைந்த பொது மக்கள் புதுமாத்தளனில் உள்ள தற்காலிக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதில் 21 பேர் மருத்துவமனையில் உயிரிழந்தனர்.



# முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்தின் மீதான தாக்குதல்களில் 131 பொதுமக்கள் படுகொலை - 26.03.2009

பல்வேறு உள்ளூர் தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளின்படி, வியாழக்கிழமை முழுவதும் பாதுகாப்பு வலயத்திற்குள் இலங்கை இராணுவம் மற்றும் சிறீலங்கா விமானப்படை நடாத்திய பல்வேறு வகையான தாக்குதல்களில் 32 குழந்தைகள் உட்பட 131 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

காயமடைந்த 252 பேரில் 49 பேர் குழந் தைகள். புதமாத்தலனிலிருந்து வலைஞர்மடம் வரையிலான 4 கி.மீ தூரத்தை இலக்காகக் கொண்டு சிறீலங்கா சிங்கள இராணுவம் ஆர்.பி.ஜி எறிகணைகளை, நீண்ட தூர துப்பாக்கிச் சூடு மற்றும் மோட்டார் ஷெல்களை வீசியது.

மாத்தளனில் இராணுவத்தினரின் ஆர்பிஜி தாக்குதலில் 10 வயதுக்குட்பட்ட 4 குழந்தைகள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் கொல்லப்பட்டனர். புதன்கிழமை துப்பாக்கிச் சூடு மற்றும் மோட்டார் தாக்குதல்களில் 31 பயணிகள் கொல்லப்பட்டனர். இதற்கிடையில், விமானப்படையின் குண்டுவெடிப்பில் 27 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

25 மார்ச் 2009 அன்று வன்னியில் 185 பொதுமக்கள காயமடைந்தவர்கள் மாத்தளனில் உள்ள தற்காலிக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிற்பகல் 3:00 மணியளவில் பொக்கனைக் பாதுகாப்பு வலயத்திற்குள் பல்குழல் ராக்கெட் தாக்குதல்கள் பதிவாகியுள்ளது. புதன். பொக்கனைக் கரையோரப் பகுதியில் உள்ள இடம் பெயர்ந்த மக்களின் குடிசை ஒன்றின் மீது MBRL ரொக்கட் தாக்குதலில் 4 குழந்தைகள் உட்பட 16 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். காயமடைந்த 27 பேரில் 9 பேர் குழந்தைகள். இறந்தவர்களில் பலர் MBRL தாக்குதலின் ஏற்பட்ட தீக்காயங்களால் இறந்தனர். MBRL மற்றும் பீரங்கித் தாக்குதலில் பொக்கனைப் பகுதியில் 27 சிறுவர்கள் உட்பட 11 குழந்தைகள் உட்பட 33 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 72 பேர் காய மடைந்தனர். MBRL தாக்குதல்களில் பல தார்பாலின் தங்கு மிடங்கள் மற்றும் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. பொக்கனையில் 3 கடைகள் நாசமாக்கப்பட்டன.

மாத்தளனில் இருந்து வலைஞர்மடம் வரையிலான 4 கிலோ மீற்றர் நீளமான பாதையை நோக்கி சிறீலங்கா இராணுவம் தடாகத்தின் மறுபுறத்தில் இருந்து துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 9 பயணிகள் உட்பட 17 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

அதிகாலை 4.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை அதே பகுதியில் மோட்டார் தாக்குதல் நடத்தப்பட்டது. ஒவ்வொரு 5 முதல் 10 நிமிடங்களுக்கும் குறைந்தபட்சம் ஒரு மோட்டார் ஷெல் அப்பகுதியைத் தாக்குகிறது, இதனால் 23 பேர் இறந்தனர். RPG ராக்கெட்டுகள், துப்பாக்கி மற்றும் மோட்டார் குண்டுகளை பயன்படுத்தி சாலை மற்றும் இடம்பெயர்ந்தவர்களின் சுற்றுப்புற தார்பாலின் குடிசைகள் மீது தாக்குதல் நடத்த சிறீலங்கா இராணுவத்தினர் சாலை தொடர்ந்து குறிவைக்கப்பட்டதால் காயமடைந்தவர்களில் பலர் மருத்துவ போக்குவரத்து இல்லாததால் காயங்களுக்கு ஆளானார்கள்.



TRO மற்றும் தமிழீழ காவல்துறை அதிகாரிகள் காயமடைந்தவர்களின் உயிரைக் காப்பாற்ற போராடினர்.

இதற்கிடையில், சிறீலங்கா விமானப்படைகளின் குண்டு வீச்சுகள் “பாதுகாப்பு மண்டலத்திற்குள்“ குறைந்தது 6 முறை நடாத்தினர். இரண்டு விமானப்படை குண்டுவீச்சாளர்கள் பச்சைப்-புல்மோடை மற்றும் முள்ளிவாய்க்கால் மீது தாக்குதல் நடத்தி, சுமார் 29 குண்டுகளை வீசினர், 6 குழந்தைகள், 12 பெண்கள் மற்றும் 3 முதியவர்கள் உட்பட 27 பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலில் 37 தார்பாய் தங்குமிடங்கள் அழிக்கப்பட்டன.

பாதுகாப்பு வலயத்திற்குள் புதனன்று சிறீலங்கா இராணுவம் மற்றும் சிறீலங்கா விமானப்படையினர் நடத்திய தாக்குதல்களில் சொத்துக்களுடன் கூடிய 85 தார்பாய் குடிசைகள் அழிக்கப்பட்டன.






# முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்தின் மீதான தாக்குதல்களில் 26.03.2009



# புதுமாத்தளன் தற்காலிக மருத்துவமனை மீதான தாக்குதல்களில் ஐந்து பொதுமக்கள் படுகொலை - 26.03.2009

வியாழன் அதிகாலை 4:00 மணி முதல் 4:30 மணி வரை சிறீலங்கா இராணுவம் புதுமத்தளனில் உள்ள தற்காலிக மருத்துவமனை மீது ராக்கெட் உந்து குண்டுகளால் (RPG) தாக்குதல் நடத்தியது, தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த ஐந்து நோயாளிகள் கொல்லப்பட்டனர். இரண்டு மருத்துவ ஊழியர்கள் உட்பட 11 பேர் காயமடைந்தனர். ஏற்கனவே ஷெல் தாக்குதலில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த ஆறு நோயாளிகளும், நோயாளிகளின் உறவினர்கள் 3 பேரும் ஆர்பிஜி தாக்குதலில் காயமடைந்துள்ளனர். இந்த தாக்குதலில் சமீபத்தில் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட மருந்துகளின் ஒரு பகுதியும் அழிக்கப்பட்டது.





# பாதுகாப்பு வலயத்திற்குள் 26.27.28.03.2009 அன்று 179 பொதுமக்கள் படுகொலை

26.27.28.03.2009, வியாழன், வெள்ளி மற்றும் சனி ஆகிய மூன்று நாட்களுக்குள் சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல்களில் 179 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களில் குறைந்தது 76 பேர் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகள். கொல்லப்பட்டவர்களில் குறைந்தது 16 கர்ப்பிணித் தாய்மார்களும் அடங்குவர். 15 வயதுக்குட்பட்ட 109க்கும் மேற்பட்ட குழந்தைகள் காயம் அடைந்துள்ளனர். சிறீலங்கா இராணுவத்தினால் வீசப்பட்ட ஆயிரக்கணக்கான குண்டுகளில் சுமார் 45% பாதுகாப்பு வலயத்தைத் தாக்கியுள்ளன. இதற்கிடையில், காயமடைந்த சிவிலியனை ஏற்றிச் செல்வதற்காக சனிக்கிழமையன்று கப்பலில் வந்த ICRC இன் வெளிநாட்டு ஊழியர் ஒருவர், கப்பலின் ஜன்னலை சேதப்படுத்தியதால், நீண்ட தூர துப்பாக்கிச் சூட்டில் கப்பல் மோதியதில், சிறிது நேரம் தப்பினார். வெள்ளிக்கிழமை, உள்ளூர் ICRC ஊழியர் பி. சதீஸ்குமார், சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் காயமடைந்ததாகக் கூறப்படுகிறது.

மற்றொரு செஞ்சிலுவை சங்க (ICRC அல்லது SLRC) ஊழியரின் மனைவி வெள்ளிக்கிழமை கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் காயமடைந்த நோயாளிகளை மாத்தளன் மருத்துவமனையில் இருந்து மாற்றுவதற்காக வந்த ICRC கப்பல் சுமார் 950 பேரை ஏற்றிச் செல்ல முடிந்தது.

தற்காலிக மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த ஐந்து காயமடைந்த நோயாளிகள் வியாழன் காலை சிறீலங்கா இராணுவத்தினரினால் ஏவப்பட்ட ராக்கெட் உந்து குண்டுகள் மருத்துவமனையைத் தாக்கியதில் கொல்லப்பட்டனர்.

பாசமலர் என்ற 25 வயது கர்ப்பிணித் தாயின் அடிவயிற்றில் காயம் ஏற்பட்டதில் 7 மாதக் கரு வெள்ளிக்கிழமை கொல்லப்பட்டது.

வியாழன் அன்று 59 பொதுமக்களும், வெள்ளிக்கிழமை 21 குழந்தைகள் உட்பட 63 பேரும், சனிக்கிழமை 57 பேரும் கொல்லப்பட்டனர். குறைந்தது 15 வயதுக்குட்பட்ட 109 குழந்தைகள் காயம் அடைந்துள்ளனர். அவர்களில் 31 பேர் 10 வயதுக்குட் பட்டவர்கள்.

மருத்துவ ஆதாரங்களின்படி, கொல்லப்பட்ட 16 கர்ப்பிணித் தாய்மார்களில் 9 பேர் கர்ப்பத்தின் இறுதிக் கட்டத்தில் இருந்தனர். பொக்கனை மற்றும் மாத்தளன் பிரதேசங்களிலேயே அதிகளவான கர்ப்பிணித் தாய்மார்களின் மரணங்கள் பதிவாகியுள்ளன.

வியாழன் இரவு வலைஞர்மடம் மற்றும் பொக்கனைக்கு இடையில் உள்ள இடம்பெயர்ந்த மக்களின் தங்குமிடங்களை குறிவைத்து, வெள்ளிக்கிழமை பகல் நேரத்தில் மாத்தளன் மற்றும் பொக்கனைக்கு இடையில், சிறீலங்கா இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல் மேற்கொண்டனர்.

ஐசிஆர்சி கப்பல் மூலம் சனிக்கிழமை 498 பேரும், வியாழன் அன்று 443 பேரும் மருத்துவமனையில் இருந்து மாற்றப்பட்டனர்.

பொக்கனைக்கும் மாத்தளனுக்கும் இடையில் உள்ள கிணற்றில் இரண்டு எறிகணைகள் தாக்கியதில் உடல்களை கழுவிக்



கொண்டிருந்த 10 இடம்பெயர்ந்த மக்கள் உயிரிழந்துள்ளனர்.

நான்கு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு முழு குடும்பமும் வியாழன் அன்று ஏரிக்கரை முழுவதும் சிறீலங்கா இராணுவ நிலைகளில் இருந்து வந்த ராக்கெட் தாக்குதலில் அழிக்கப்பட்டது.

பொக்கனை - மாத்தளன் எல்லையை குறிவைத்து நடாத்திய தாக்குதலில் வலைஞர்மடத்தில் அஜந்தா அபராஜிதன் என்ற பெண் கிராம (ஜிஎஸ்) அதிகாரி வியாழக்கிழமை கொல்லப்பட்டார்.

பாதுகாப்பு வலயத்திற்குள் இலங்கை விமானப்படையினரால் வான் தாக்குதல்களும் நடத்தப்பட்டுள்ளன.







# சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல்களில் 88 பொதுமக்கள் படுகொலை - 31.03.2009

திங்களன்று இலங்கை இராணுவத்தின் ஷெல் தாக்குதல்களில் 70 பொதுமக்கள் உயிர்கள் பலியாகியுள்ளன, மேலும் IDP குடியிருப்புகளுடன் தற்காலிக மருத்துவமனையை இணைக்கும் சாலையில் 18 பொதுமக்களைக் பலி. கொல்லப்பட்டவர்களில் 21 பேர் மற்றும் காயமடைந்த 156 பொதுமக்களில் 31 பேர் குழந்தைகள். சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதலில் 63 தார்பாய் குடிசைகள் அழிக்கப்பட்டன. சாலை முழுவதும் 50 கலிபர் இயந்திர துப்பாக்கியால் சுடப்பட்டதால், காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல பொதுமக்கள் சிரமப்பட்டனர். கரையோரப் புள்ளியான திடலில் இருந்து ICRC கப்பலுக்கு நோயாளிகளை ஏற்றிச் செல்ல படகுகளை ஏற்பாடு செய்யும் மீன்பிடி சங்கத்தின் தொழிலாளி உட்பட நான்கு பொதுமக்கள் சிறீலங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தனர்.

நோயாளிகளை ஏற்றிச் செல்வதற்கான ICRC கப்பல் கடந்த முறை துப்பாக்கிச் சூட்டில் சிக்கியதால் கரையை நெருங்கவில்லை. நோயாளிகள் மிகவும் கடினமான சூழ்நிலையில் படகுகள் மூலம் கப்பலுக்கு மாற்றப்பட வேண்டியிருந்தது. கப்பலில் வந்த ஐ.சி.ஆர்.சி அதிகாரிகள் தாக்குதல்கள் காரணமாக கரையை அடைய முடியவில்லை.

உயிரிழந்தவர்களில் 59 பேர் இரட்டைவாய்க்கால், முள்ளிவாய்க்கால், வலியஞர்மடம் ஆகிய மூன்று பிரதேசங்களில் கொல்லப்பட்டுள்ளனர்.

வாழைஞர்மடம் - இரட்டைவாய்க்கால் இடையே எறிகணை ஒன்று சாலையில் மோதியதில் 9 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

ஷெல் தாக்குதல் நாள் முழுவதும் தொடர்ந்தது. சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் சாலையில் இருந்த பல குடிசைகள் அழிக்கப்பட்டன.

சாலையோரம் இருந்த 6 சிறு கடைகள் சேதமடைந்தன. கொல்லப்பட்டவர்களில் 3 பேர் இந்தக் கடைகளின் உரிமையாளர்கள். சாலையில் கொல்லப்பட்ட 18 பொதுமக்களில் ஏழு பேர் அடை யாளம் காணப்படவில்லை. அடையாளம் தெரியாத சடலங்கள் தமிழர் புனர்வாழ்வு அமைப்பின் (டிஆர்ஓ) தொண்டர்களால் அடையாளம் காண இடமாற்றம் செய்யப்பட்டன.



வலைஞர்மடம் மற்றும் முள்ளிவாய்க்கால் பகுதியில் கொல்லப்பட்ட 17 பெண்கள், 9 குழந்தைகள், 1 குழந்தை மற்றும் 8 முதியவர்கள் உட்பட 39 பேர் உறவினர்களால் அடக்கம் செய்யப்பட்டனர்.

# சிறீலங்கா இராணுவத்தின் கொத்துக் குண்டுத் தாக்குதல்களில் 45 பொதுமக்கள் படுகொலை – 31.03.2009

இலங்கை இராணுவம் நடத்திய ஷெல் தாக்குதலில் 43 பொது மக்கள் செவ்வாய்க்கிழமை பகல் முழுவதும் கொல்லப்பட்டனர். அம்பலவன்பொக்கனை மற்றும் வலைஞர்மடம் பிரதேசத்தில் இன்று காலை 2 குடும்பங்களைச் சேர்ந்த 9 பேர் உட்பட 13 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்களில் 3 பேர் குழந்தைகள். துப்பாக்கிச் சூட்டில் 4 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பாதுகாப்பு வலயத்தில் உள்ள மருத்துவ மற்றும் உதவி பணியாளர்களின் கூற்றுப்படி, நாள் முழுவதும் 120 பொதுமக்கள் காயமடைந்தனர்.

செவ்வாய்கிழமை முழுவதும் பாதுகாப்பு வலயத்திற்குள் வேறு இடங்களில் நடந்த தாக்குதல்களில் மேலும் 32 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

98 பொதுமக்கள் புதுமாத்தளனில் உள்ள தற்காலிக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையில் இருந்து மதியம் 12.30 மணியளவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நோயாளிகளில் குறைந்தது 63 பேர் வலைஞர்மடத்தைச் சேர்ந்தவர்கள். மேலும் 22 பேர் காயமடைந்து மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர்.





















# 'பாதுகாப்பு வலயத்திற்குள்' 53 பொதுமக்கள் படுகொலை 30.03.2009

சிறீலங்கா இராணுவம் ஞாயிறு முழுவதும் தொடர்ந்து பீரங்கி, மோட்டார் மற்றும் நீண்ட தூர துப்பாக்கிச் சூடு நடத்தியதில் குறைந்தது 53 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் சுமார் 119 பேர் காயமடைந்தனர். மாத்தளனில் குறைந்தது 17 பொது மக்களும், பொக்கனையில் 18 பேரும், வலைஞர்மடத்தில் 15 பேரும் மற்றும் வலைஞர்மடத்தில் 15 பேரும் கொல்லப்பட்டனர். பச்சைப் புல்மோட்டையில் 3பேரும். இதற்கிடையில், 298 குடம்பங்களைச் சேர்ந்த 275 குழந்தைகள் உட்பட சுமார் 1,192 பொதுமக்கள் கடந்த 5 நாட்களுக்குள் தங்கள் தங்குமிடங்களை இழந்துள்ளனர், ஏனெனில் அவர்களின் தார்பாய் குடிசைகள் சிறீலங்கா இராணுவத்தினரின் தாக்குதலில் முற்றாக அழிக் கப்பட்டன.

# சாந்தன்:
# இரண்டு ஆயுள் தண்டனைகள்; இரண்டு பிரேத பரிசோதனைகள்!

04.03.2024

சாந்தன் இந்திய உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டவர். பொதுவாக இந்தியா இலங்கை போன்ற நாடுகளில் ஆயுள் தண்டனை எனப்படுவது விடுமுறை நாட்களைக் கழித்து பார்த்தால் 15 ஆண்டுகள். சிறை, சிறப்பு முகாம் போன்ற இடங்களில் சாந்தன் தடுத்து வைக்கப்பட்டிருந்தது 33 ஆண்டுகள். அப்படிப்பார்த்தால் அவர் இரண்டு ஆயுள் தண்டனைகளை முடித்துவிட்டார். அதற்கு பின்னரும் அவர் தாயகம் திரும்புவதற்கு அனுமதிக்கப்படவில்லை. தமிழகத்தில் உள்ள சட்டச் செயற்பாட்டாளர்கள் தமிழக அரசைக் குற்றஞ்சாட்டுகின்றார்கள்.



இந்த விடயத்தில் தாயகத்தில் உள்ள அரசியல்வாதிகளும் பொறுப்புணர்ந்து செயல்படவில்லை. இந்திய மண்ணில் பாரதூரமான குற்றச் செயல்களுக்காக தண்டிக்கப்பட்டவர்கள், விடுவிக்கப்பட்ட பின் அவர்கள் இந்தியர்களாக இருந்தால் வீட்டுக்கு போகலாம். வெளிநாட்டவர்களாக இருந்தால் நாடு கடத்தப்படுவார்கள். அல்லது இந்தியாவில் அவர்களைப் பொறுப்பேற்கக்கூடிய உறவினர்கள் இருந்தால் அவர்களிடம் போகலாம். சாந்தன் தாயகத்துக்கு வர விரும்பினார். தன் தாயுடன் இறுதிக் காலத்தைக் கழிக்க விரும்பினார். அவரோடு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏனையவர்கள் இப்பொழுதும் திருச்சி சிறப்பு முகாமில் தான். தண்டனைக் காலம் முடிந்த பின் விடுதலை செய்யப்பட்ட வெளிநாட்டவர்கள் அவர்களுடைய நாட்டுக்குத் திரும்பும் வரையிலும் அவ்வாறு தடுத்து வைக்கப்படுகின்றார்கள்.

விடுவிக்கப்பட்ட சாந்தன் நாட்டுக்குத் திரும்பினால் இலங்கைச் சட்டங்களின் பிரகாரம் அவருக்கு ஆபத்து ஏற்படுமா என்ற ஒரு பயம் அவருக்காக உழைத்த சட்டச் செயற்பாட்டாளர்கள் மத்தியில் காணப்பட்டது. நாட்டிலுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அது தொடர்பாக நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பி, உரிய அமைச்சரிடம் உத்தியோகபூர்வமாக ஒரு பதிலை பெறுவது நல்லது என்றும் அவர்களிற் சிலர் அபிப்பிராயப்பட்டார்கள். ஆனால் அது தொடர்பாக எடுக்கப்பட்ட முயற்சிகள் எவையும் வெற்றி பெறவில்லை. தமிழ் அரசியல்வாதிகளில் ஒருவருக்கு அது தொடர்பாக எழுதப்பட்ட மின்னஞ்சலுக்குப் பதில் கிடைக்கவில்லை. சில அரசியல்வாதிகள் எங்கே, யாரிடம் அதைக் கேட்க வேண்டுமோ அங்கே கேட்காமல், சாந்தனின் வீட்டுக்கு போய் அவருடைய தாயாரைக் கண்டு படமெடுத்துக் கொண்டார்கள்.

இவ்வாறு சாந்தனை விடுவிப்பதற்கு யாரிடம் கதைக்க வேண்டும்? எங்கே போராட வேண்டும்? என்பது தொடர்பாக தமிழ் அரசியல் சமூகம் தெளிவற்றுக் காணப்பட்டது. அல்லது பொறுப்போடு நடந்து கொள்ளவில்லை. அல்லது மூத்த சட்ட மற்றும் சிவில் சமூகச் செயற்பாட்டாளரான ஒருவர் கூறுவது போல அதற்கு வேண்டிய அரசியல் பெருவிருப்பம்-Political Will-அவர்களிடம் இருக்கவில்லை.

திருச்சி சிறப்பு முகாமானது இதற்கு முன்னிருந்த சிறைகளை விடக் கொடுமையானது என்று அங்கு இருப்பவர்கள் கூறுகிறார்கள். அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கையைச் சேர்ந்த போதைப் பொருள் வியாபாரிகள் சிறப்பு முகாமுக்குள் இருந்தபடியே தமது வியாபாரத்தைத் தொடர்ந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. அதன்பின் முகாமில் கட்டுப்பாடுகள் அதிகரித்தன. அது அரசியல் கைதிகளையும் பாதித்தது. சாந்தனைப் போன்றவர்கள் ஏனைய கைதிகளிடமிருந்து பிரிக்கப்பட்டு தனியறைகளில் வைக்கப்பட்டார்கள். சுற்றிவரக் கண்காணிப்பு. உடற் பயிற்சி செய்ய முடியாது. அவர்கள் தடுத்து வைக்கப்பட்ட அறைகளோடு கழிப்பறைகளும் இணைக்கப்பட்டிருந்தபடியால் வெளியே நடமாடுவதற்கும் வரையறைகள் இருந்தன. சிறைக்குள் சாந்தன் பெருமளவுக்கு ஒரு சன்னியாசி போலாகிவிட்டார் என்று வழக்கறிஞர் ஒருவர் சொன்னார். பெருமளவுக்குத் தனித்திருப்பதாகவும் எல்லாவற்றிலிருந்தும் விடுபட்டவர் போல காணப்பட்டதாகவும் அவர் சொன்னார். சிறப்பு முகாமில் அவர் சோறு சாப்பிடாமல் கஞ்சி மட்டும் தருமாறு கேட்பதாகவும் கூறப்பட்டது. சிறப்பு முகாமும் சாந்தனின் உடல் கெடுவதற்கு ஒரு காரணம். முடிவில் அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படும் ஒரு நிலை வந்த பொழுது மீண்டும் அவரது குடும்பத்தவர்கள் தமிழ்த் தேசிய அரசியற் சமூகத்தை அணுகினார்கள்.

அப்பொழுதும் தமிழ்த் தேசிய அரசியற் சமூகம் அதே மந்தத் தனத்தோடு பொறுப்பின்றி நடந்து கொண்டது. சாந்தனை நாட்டுக்குள் கொண்டு வருவது தொடர்பான முடிவை இலங்கையில் எடுக்க வேண்டியது வெளிவிவகார அமைச்சும் பாதுகாப்பு அமைச்சும்தான். சம்பந்தப்பட்ட அமைச்சுக்களோடு மிகவும் பிந்தித்தான், அதாவது அவர் இந்திய உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டு கிட்டத்தட்ட 14 மாதங்களின் பின்னர் அதிலும் குறிப்பாக அவர் இறப்பதற்குச் சில கிழமைகளுக்கு முன்புதான் தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது.

தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட நாடாளுமன்ற உறுப் பினர்கள் அந்த விடயத்தில் ஜனாதிபதியை, வெளி விவகார அமைச்சரை அணுகிய அதே காலப்பகுதியில் சாந்தனின் குடம் பத்தவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அணுகியிருக்கிறார்கள். மற்றொரு யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பின ராகிய அங்கஜனும் அதில் அக்கறை காட்டியிருக்கிறார். அதா வது சாந்தனின் விடயத்தில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட நாடாளுமன்ற உறுப் பினர்கள் மட்டுமல்ல, அதற்கு வெளியே உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச் சரும் அரசாங்கத்தை அணுகியதன் விளைவாகத் தான் நாடு திரும்புவதில் சாந்தனுக்கு இருந்த தடைகள் அகற்றப் பட்டன.

ஆனால், அப்பொழுது எல்லாமே பிந்திவிட்டது. விமானத்தில் பயணம் செய்ய முடியாத அளவுக்கு சாந்தன் நோயாளியாகி விட்டார் என்று ராஜீவ் காந்தி மருத்துவமனையின் டீன் ஒரு வழக்கறிஞரிடம் கூறியுள்ளார். முடிவில், சாந்தனின் உயிரற்ற உடலைத்தான் அவருடைய தாய்க்குக் காட்ட முடிந்தது. விடுதலை செய்யப்பட்ட பின்னரும் அவர் ஒரு கைதியாகவே இறந்தார். உயிருடன் இருக்கும் போது அவர் இரண்டு ஆயுள் தண்டனைகளை அனுபவித்தார். உயிர் பிரிந்தபின் அவ ருடைய உடலை இரண்டு தடவைகள் போஸ்மோர்டம் செய் திருக்கிறார்கள். முதலில் இந்தியாவில் பின்னர் இலங்கையில்.



சாந்தனுக்காக தாயகத்தில் உள்ள தமிழ் அரசியல் சமூகம் பெரிய அளவில் போராடவில்லை. இப்பொழுதும் சிறப்பு முகாம் களில் இருப்பவர்களை விடுதலை செய்யவதற்காக யார் போராடுகிறார்கள்? சாந்தனோடு சிறையில் வைக்கப்பட்டிருந்த இந்தியப் பிரஜையாகிய பேரறிவாளனை விடுவிப்பதற்காக அவ ருடைய தாயார் அற்புதம்மாள் தொடர்ச்சியாகப் போராடினார். ஒரு தாயின் நிகரற்ற போராட்டங்களில் அதுவும் ஒன்று. கிழக் கில் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்த அன்னை பூபதியின் போராட்டத்தைப்போல அது முன் னுதாரண மானது. ஈழத் தமிழ் அரசியலில் தாயக களத்துக்கு வெளியே நடந்த ஓர் அன்னை யின் மகத்தான போராட்டமாக அற்புதம் மாளின் 32 ஆண்டுகாலப் போராட்டம் காணப்பட்டது.

சாந்தனை விடுவிப்பதற்காக அல்லது நாட்டுக்குள் கொண்டு வருவதற்காக தமிழ் அரசியல் சமூகம் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய போராட்டம் எதையும் முன்னெடுத்திருக்கவில்லை. அது மட்டுமல்ல, சாந்தனை நாட்டுக்குள் கொண்டு வருவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதிலும் தமிழ் அரசியல்வாதிகளிடம் பொருத்தமான அணுகுமுறைகள் இருக்கவில்லை. சாந்தனின் குடும்பம் சலிப்படைந்து, களைப்படைந்து, ஒரு விதத்தில் விரக்தியடைந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நோக்கிப் போனது.

ஆனால் தமிழ் தேசியக் கட்சிகள் தங்கள் சொந்தக் கட்சிக்குள் பதவிப் போட்டி என்று வரும் பொழுது எப்படியெல்லாம் போராடுகிறார்கள்? கடந்த வாரம் தமிழ்த் தேசிய அரசியலின் இயலாமைகளை நிரூபித்த ஒரு வாரம். முதலாவது சாந்தனின் மரணம். இரண்டாவது தமிழரசுக் கட்சி நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டமை. அங்கே அவர்கள் புத்திசாலித்தனமாக நடந்தார்களா இல்லையா என்பது வேறு கதை. கட்சிக்குள் வந்த பிணக்கை கட்சிக்குள்ளேயே தீர்க்க முடியவில்லை என்பது ஒரு பாரதூரமான தோல்வி. அதனைத் தீர்ப்பதற்கு கட்சிக்கு வெளியேயும் சிவில் சமூகங்கள் இல்லை என்பது மற்றொரு தோல்வி. கடந்த 15 ஆண்டு காலத் தோல்விகளுக்கு அந்தக் கட்சி பொறுப்பு என்ற படியால் அது அழியட்டும்; அதன் வாக்குகள் தென்னிலங்கைக் கட்சிகளுக்குப் போனால்கூட பரவாயில்லை என்று கருதுமளவுக்கு சில சிவில் சமூகப் பிரதிநிதிகள் காணப்படுகிறார்கள் என்பது அதைவிடத் தோல்வி.

இது ஒரு தேர்தல் ஆண்டு. ஜனாதிபதித் தேர்தலில் தற்போதுள்ள நிலவரங்களின்படி அரச தரப்பு; எதிர்க்கட்சி; ஜேவிபி என்று மூன்று அணிகள் போட்டியிடக்கூடிய வாய்ப்புகள் தெரிகின்றன. தென்னிலங்கையில் படித்த நடுத்தர வர்க்கத்தின் மத்தியில் ஜேவிபி ஆதரவு அலை ஒன்று வீசுகிறது. அது வாக்குகளாக மாறுமா? இல்லையா? அல்லது அதை கண்டு பயந்து ஏனைய வலதுசாரிக் கட்சிகள் தங்களுக்கு இடையே ஐக்கியத்துக்கு போகுமா? இல்லையா? என்பதனை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

மேற்சொன்ன மூன்று தரப்புக்களும் போட்டியிட்டால், சிங்கள மக்களின் வாக்குகள் மூன்றாகப் பிரியும். அப்பொழுது தமிழ்த் தரப்பு ஒரு தீர்மானிக்கும் சக்தியாக மேலெழக்கூடிய வாய்ப்புகள் அதிகமாகும். ஆனால் அவ்வாறு அரசியல் களத்தில் துணிந்து புகுந்து விளையாடுவதற்கு யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. உள்ளதில் பெரிய கட்சி நீதிமன்றம் ஏறத் தொடங்கிவிட்டது. மற்றொரு கட்சி தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாக அறிவித்துவிட்டது. அதாவது துணிந்து புகுந்து விளையாடத் தயாரில்லை. ஒரு பொது வேட்பாளரை நிறுத்தப் போவதாகக் கூறிய குத்து விளக்குக் கூட்டணி அதைக் குறித்து பேசிக் கொண்டிருக்கிறதே தவிர செயல்படுவதாகத் தெரியவில்லை. தமிழரசுக் கட்சி தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்காவிட்டால் குத்து விளக்குக் கூட்டணி அந்தப் பரிசோதனையில் இறங்குமா?

இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் வெல்லப்போகும் கட்சி அல்லது கூட்டு, அடுத்த ஆண்டு அனேகமாக பொது தேர்தலை வைக்கும். தொடர்ந்து மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சி சபைத் தேர்தல் போன்றன வைக்கப்படலாம். அதாவது வரும் இரண்டு ஆண்டுகளும் தேர்தல் ஆண்டுகளாக அமையக்கூடிய வாய்ப்புகள் அதிகரிக்கின்றன. தமிழ் மக்கள் மத்தியில் இப்பொழுது மக்கள் இயக்கம் எதுவும் இல்லை. இருப்பதெல்லாம் தேர்தல் கேட்கும் கட்சிகள்தான். அடுத்தடுத்து வரும் இரு தேர்தல் ஆண்டுகளை எதிர்கொள்ள தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளிடன் என்ன உபாயம் உண்டு? நிர்ணயகரமான ஒரு காலகட்டத்தில், அரங்கில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக்கூடிய தரப்புக்களை இந்தியாவும் அமெரிக்காவும் ஏனைய பேரரசுகளும் அணுகிக் கையாள முற்படும் ஒரு காலகட்டத்தில், அரங்கில் துணிந்து புகுந்து விளையாட வேண்டிய தமிழ்த் தரப்பு என்ன செய்து கொண்டிருக்கிறது?

அரசியலில் துணிந்து புகுந்து விளையாடும் தரப்புகள்தான் ரிஸ்க் எடுக்கும். ரிஸ்க் எடுக்கும் தரப்புகள்தான் கனவுகளை நோக்கி யதார்த்தத்தை வளைக்கும். தலைமை தாங்கும். துணிந்து புகுந்து விளையாடும் தரப்புகள்தான் வரலாற்றை உருவாக்குகின்றன. உட்கட்சிச் சண்டையை நீதிமன்றத்துக்கு கொண்டு போகும் கட்சிகள் வரலாற்றை உருவாக்குவதில்லை. அதுமட் டுமல்ல தேர்தல் வரும்பொழுது தமிழ்த் திரைப் படங்களில் கடைசி நேரத்தில் விசிலடித்துக் கொண்டு வரும் போலீஸ்போல அறிக்கை விடும் சிவில் சமூகங்களும் வரலாற்றைத் தீர்மானிப் பதில்லை.

நன்றி: நிலாந்தன்


JATHU RENOVATION
Free!
ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free
Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
PTR
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# பொலனறுவையில் சோழர்கால 5ம் சிவாலயம் அருகே மூவேந்தவேளான் பற்றி குறிப்பிடும் கல்வெட்டு!



அபரணை-பொலனறுவை-மட்டக்களப்பு பெருந்தெருவான A11 வீதியோடு இங்குராங்கொடை செல்லும் வீதி இணைவதால் உருவாகும் ஒரு முச்சந்தி. அந்தச் சந்தியில் இறங்கி சுமார் 750 மீ இங்குராங்கொடை வீதியில் நடந்துசென்றீர்களென்றால் இடப்பக்கம் "நய்பெண விகாரை" என்ற வழிகாட்டிப் பலகையோடு கட்டட இடிபாடொன்றைக் காண்பீர்கள். இப்படியெல்லாம் மினக்கெட நேரமில்லை என்றால், கூகிள் வரைபடத்தில் ஆங்கிலத்தில் "Naipena Viharaya" என்றோ தமிழில் "ஐந்தாம் சிவாலயம்" என்றோ தேடி உங்கள் அமைவிடத்திலிருந்து தானியக்க பயணப்பாதையைப் போட்டு மெய்நிகர் அமை விடத்தைக் காணலாம்.

அதென்ன ஒரே இடத்துக்கு நய்பெண விகாரை, ஐந்தாம் சிவாலயம் என்று சம்பந்தமில்லாத இரு பெயர்கள்?

நய்பெண விகாரை என்பது உள்ளூர்ச் சிங்கள மக்கள் அந்த சிதைந்த கட்டடத்துக்கு வைத்த பெயர். நய்பெண என்றால் சிங்களத்தில் "நாகபடம்". அங்கு படமெடுத்தாடும் நாகபாம்பின் சிற்பமொன்று காணப்பட்டதால் அது அவ்வாறு அழைக்கப்பட்டிருக்கலாம் என்பது ஆய்வாளர் ஊகம். ஆனால் அக்கட்டடம் விகாரம் அல்ல; சிவன் கோவில். பொலனறுவையின் சிவாலயங்களும் திருமால் கோவில்களும் பிரித்தானியர் காலத்து அகழாய்வுகளில் அவை கண்டறியப்பட்ட ஒழுங்கில் இலக்கமிடப்பட்டிருக்கின்றன. அப்படி ஐந்தாவதாக அடையாளம் காணப்பட்ட சிவாலயம் என்பதால் இது ஐந்தாம் சிவாலயம். இதனோடு இணைந்தாற்போல தான் நான்காம் விண்ணகரம் (திருமால் கோவில்) அமைந்திருக்கிறது. சோழர்களின் ஈழத்தலைநகரான பொலனறுவையில் எட்டு சிவாலயங்களும் ஐந்து விண்ணகரங்களும் கண்டறியப்பட்டிருக்கின்றன. இலங்கை சுதந்திரமடைந்தபின்னர் சைவ வைணவக்கோவில்கள் பற்றி தொடர்ச்சியான



அகழாய்வுகள் நிகழவில்லை என்பதால், இன்னும் பல ஆலயங்கள் காடுகளில் மறைந்திருக்கலாம்.

இராசேந்திர சோழனால் இதே பொலனறுவையில் அமைக்கப்பட்ட வானவன் மாதேவீச்சரத்துக்கு இரண்டாம் சிவாலயம் என்று பெயர். நாம் நிற்கும் ஐந்தாம் சிவாலயத்தில் கிடைத்த கல்வெட்டொன்றின் மூலம், இக்கோவிலின் உண்மையான பெயர் "ஐந்நூற்றுவ ஈச்சரம்" என்பதை பேரா.சி.பத்மநாதன் வெளிப்படுத்தியிருக்கிறார்.

"திசையாயிரத்து ஐந்நூற்றுவர்" என்பது மத்திய காலத்தில் புகழ்பெற்றிருந்த ஒரு தென்னிந்திய வணிக கணம். இவர்களுக்கு வளஞ்செயர், நானாதேசிகள் என்ற பெயர்களும் இருந்தன. கடல்வழி வணிகத்தில் புகழ்பெற்றிருந்த ஐந்நூற்றுவரில் தமிழ் சமூகப்பிரிவுகள் பல இணைந்திருந்ததும், எண்ணெய் - நெய் - ஆடையணி - உணவு - பொன் உள்ளிட்ட பல பொருட்களை விற்கும் வணிகர்கள் இக்குழுக்களில் காணப்பட்டதும், தென்கிழக்காசியாவிலும் இவர்களது ஆதிக்கம் நிலவியதும் அங்கெல்லாம் கிடைக்கும் கல்வெட்டுக்களிலிருந்து நிரூபணமாகின்றது. இலங்கையைப் பொறுத்தவரை அனுராதபுரம், பொலனறுவை, திருக்கோணமலை, பதவியா, குருநாகல், களுத்துறை உள்ளிட்ட இடங்களில் ஐந்நூற்றுவரது வணிக நகரங்கள் அமைந்திருந்தன. இலங்கையில் அவர்கள் பௌத்தத்துக்கும் ஆதரவு வழங்கியதை, முதலாம் விசயபாகு காலத்துக்குப் பின் (1055 - 1110) பொறிக்கப்பட்ட வேளைக்காரரின் தமிழ்க்கல்வெட்டு சொல்கின்றது. ஐந்நூற்றுவ ஈச்சரம், இந்த வணிக கணத்தினராலேயே நிருமாணிக்கப்பட்டிருக்க வேண்டும்.

பொலனறுவையில் இருக்கும் சைவ - வைணவ வளாகங்களில் ஐநூற்றுவ ஈச்சரம் தான் மிகப்பெரியது. பொலனறுவையிலேயே மிக அதிகளவிலான சைவ வெண்கலச் சிற்பங்கள் இந்த வளாகத்தில் தான் மீட்கப்பட்டன. இங்கு பெறப்பட்ட பிள்ளையார், ஆடவல்லான், முருகன், காரைக்காலம்மை முதலிய பல சிற்பங்களை இன்றும் பொலனறுவை அரும்பொருளகத்தில் காணலாம்.

இங்குராங்கொடை வீதியில் நின்று இடப்புறம் ஐந்தாம் சிவாலயத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும் நாம், வலப்புறம் திரும்பினால் இரு கட்டடச்சிதைவுகளை காணலாம். அவற்றில் சற்று அப்பால் தென்படும் கோவில் இன்று மூன்றாம் சிவாலயம் என்று அறியப்படுகின்றது. வீதியோரமாக உள்ள இடிபாடு ஒரு சிறுமண்டபம். அதில் சுற்றிவர கற்றூண்கள் கொண்ட சதுர மேடையும் அதன் நடுவே நான்கு உயரமான தூண்கள் நிற்கும் சதுர வடிவப் பீடமும் காணப்படுகின்றன. மேடைக்கு ஏறிச் செல்ல படிகள் அமைந்துள்ளன. மேடையைச் சுற்றியுள்ள தூண்கள் பல சிதைந்து வீழ்ந்துவிட்டன.

இந்த இடிபாடு தொடர்பில் அறிஞர் மத்தியில் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. இது ஒரு நாட்டிய அரங்காக

இருந்திருக்கலாம் என்றும் சான்றோர் அமர்ந்து நீதி பகன்ற மன்றாக இருக்கலாம் என்றும், ஐந்நூற்றுவ ஈச்சரத்தைச் சூழக் காணப்பட்ட வணிகச் சந்தையின் மையமாக அமைந்திருக்கலாம் என்றும் பல ஊகங்கள் உள்ளன. இந்த மேடை எத் தேவைக்குப் பயன்பட்டது என்பது தெரியாவிட்டாலும் இதைக் கட்டிக்கொடுத்ததில் சோழர் குலப் பிரதானிகள் பலருக்கு பங்கிருக்கிறது என்பதை மட்டும் ஊகிக்கமுடிகின்றது. அதற்கு வலுவான சான்று இந்த மேடையின் நடுப்பீடத்தில் நிற்கும் நான்கு தூண்களும் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள நான்கு தமிழ்க் கல்வெட்டுக்களும்.

1. ^^ச்ரீ மோகநூருடையான் திருப்பூவண தேவன்.
2. ^^ச்ரீ தில்லைக்கரசு தியாக சிந்தாமணி மூவேந்த வேளாந்.
3. ^^ச்ரீ முகரிநாடாழ்வாந் மகள் கற்பகம்.
4. ^^ச்ரீ நல்லூருடையான் பஞ்சநெதிவாணந்

இக்கல்வெட்டுக்களிலிருந்து சோழநாட்டைச் சேர்ந்த முக்கியமான நான்கு அரசியல் பிரமுகர்களால் இம்மேடை அமைக்கப்பட்டிருப்பது தெரியவருகிறது. நீங்கள் இப்போது சென்றாலும் முதல் மூன்று கல்வெட்டுக்களை வாசித்துப் பார்க்க இயலும் (இணைக்கப்பட்ட விழியம், படம் காண்க). நான்காம் கல்வெட்டை இன்று காண இயலாது. அது தெரிந்தோ தெரியாமலோ சிதைக்கப்பட்டுவிட்டது. பேரா.சி.பத்மநாதன் இவற்றை வாசித்திருப்பதால், இந்தச் சிதைப்பு சில பத்தாண்டுகளுக்குள்தான் இடம்பெற்றிருக்கவேண்டும்.

மூவேந்தவேளான் என்பது சோழர் கால நிலவுடைமையாளர்கள் பலர் தங்களுக்குச் சூட்டிக்கொண்ட பட்டம். தில்லைக்கரசு, தியாகசிந்தாமணி ஆகிய இரண்டும் முறையே சோழரின் முக்கிய வழிபாட்டிடங்களான சிதம்பரம், திருவாரூர் ஆகிய கோவில்களில் வீற்றிருக்கும் சிவபெருமானின் பெயர்கள். அவற்றுள் ஒன்று இம்மண்டபத்தை அமைத்தவனும் மூவேந்த வேளான் என்ற பட்டம் பெற்றிருந்தவனுமான சோழ அலுவலனின் இயற்பெயராக இருக்கக்கூடும்.

சீர்காழிக்கு அருகே சம்பந்தர் திருமணத்தில் சோதியில் கலந்ததாகச் சொல்லப்படும் திருநல்லூர்ப்பெருமணம் இன்று ஆச்சாள்புரம் என்று அழைக்கப்படுகின்றது. அந்த ஊரின் பழைய பெயர் நல்லூர். "சந்திரசேகரன் பஞ்சநதிவாணன்" என்பவன் அக் கோவிலைக் கட்டி அம்மனையும் பதிட்டை செய்ததாக, மூன்றாம் குலோத்துங்க சோழனின் முப்பத்திரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (= பொபி 1210ஆம் ஆண்டு) கூறு கின்றது. பஞ்சநதிவாணன் என்பது திருவையாறு (ஐ+ஆறு = பஞ்ச+நதி) கோவிலில் அமர்ந்த சிவனின் பெயர். பொலனறுவைக் கல்வெட்டைப் பொறித்த நல்லூருடையான் பஞ்சநதிவாணனும் நல்லூர்ப்பெருமணம் சந்திரசேகரன் பஞ்சநதிவாணனும் ஒருவர் தானா தெரியவில்லை.

மோகனூர் என்பது தமிழகத்தின் நாமக்கல் மாவட்டத்திலுள்ள ஊர். அதைச்சோழநாட்டு மேற்கெல்லையாகச் சொல்வது மரபு. திருப்பூவணம் மதுரைக்கு அருகே தேவாரமுதலிகள் மூவராலும் பாடல்பெற்ற தலம். திருப்பூவண தேவன், மோகனூரைச் சேர்ந்த சோழநாட்டுப் பிரமுகன் ஆகக்கூடும்.

பதினான்காம் நூற்றாண்டில் கணக்கதிகாரம் நூலை எழுதிய காரி நாயனார் சோழநாட்டிலிருந்த முகரி எனும் ஊரைச் சேர்ந்தவர். அதன் அமைவிடம் தெரியவில்லை. முகரி ஆறு (பொன்முகலி ஆறு – சுவர்ணமுகி நதி) பாயும் திருக்காளத்தியும் அப்போது சோழராட்சியின் கீழ் இருந்ததால், முகரிநாடு என்பது அத்தலத்தைச் சூழ்ந்த பகுதியும் ஆகலாம். முகரிநாட்டைச் சேர்ந்த நிலக்கிழானின் மகள் கற்பகம், பொலனறுவையில் ஒரு மண்டபம் அமைக்க உதவிபுரிந்தாள் என்ற தகவல், சோழர் கால நிருவாகத்தையும் அதில் பெண்களின் வகிபாகத்தையும் மறுவாசிப்புச் செய்வதற்குக் கிடைக்கும் மிக முக்கியமான சான்றாகும்.

குறிப்புக்களின் படி, 1077ஆம் ஆண்டுடன் இலங்கை சோழரிடமிருந்து முதலாம் விசயபாகுவால் மீட்கப்பட்டுவிட்டது. ஆனால் சோழரோடு நல்லுறவைப் பேணிய ஐந்நூற்றுவர் முதலிய வணிககணங்கள், சோழநாட்டவர் இலங்கையில் தொடர்ந்தும் தங்கியிருந்தார்கள், அரசியல் – பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்கள் என்பது விசயபாகுவின் மறைவிற்குப் பின் பொறிக்கப்பட்ட வேளைக்காரக் கல்வெட்டிலிருந்தும், மகாவம்சம் முதலிய நூல்களிலிருந்தும் தெரியவருகின்றது. சோழராட்சி முடிவடைந்த நூற்றைம்பது ஆண்டுகளுக்குப் பின் படையெடுத்த கலிங்க மாகோனே சோழரின் ஆசீர்வாதத்துடன் இலங்கையைக் கைப்பற்றியவன் தான் என்பதை அண்மையில் கண்டறியப்பட்ட கிவுலக்கடவைக் கல்வெட்டும் உறுதிப்படுத்தியிருக்கிறது.

பேரா.சி.பத்மநாதன் முதலிய பல அறிஞர்களின் கருத்துப்படி, ஐந்தாம் சிவாலயம் 12ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது. நாம் மேலே பார்த்த சோழப்பிரமுகர்கள் அமைத்த மண்டபமும் அதற்கு அண்மித்த காலத்திலேயே அமைக்கப்பட்டிருக்கவேண்டும். ஆக, இன்று நின்றுகொண்டிருக்கும் இந்த நான்கு தூண்களும் குறைந்தது 800 ஆண்டுகள் பழைமையானவை. அக்காலத்தில் வாழ்ந்த நான்கு பிரமுகரின் பெயர் பொறித்த இக்கல்வெட்டுக்கள் இயற்கை - செயற்கைக் காரணிகளின் தாக்குதல்களையும் மீறி நிமிர்ந்து நின்றுகொண்டிருக்கின்றன. அந்த நிமிர்வுக்குக் காரணம், ஆண்டுகள் பலநூறு கடந்தும் எம்மை இங்கு நிறுத்தியவர்களின் பெயரை உலகறியச் சொல்லிவிட்டோம் எனும் இறுமாப்பா? அல்லது, மூன்று ஆடவருக்கு ஈடாக நின்று ஒரு பெண்மணி அமைத்த மண்டபம் அது என்ற பெருமிதமா?



வானவன் மாதேவீச்சரம் போலவே பொலனறுவை செல்லும் அதிக சுற்றுலாப்பயணிகள் வழிபட்டுச் செல்லும் கோவிலாக ஐந்நூற்றுவ ஈச்சரமும் மாறிவருகின்றது. வாய்ப்புக் கிடைப்பவர்கள், அல்லது அங்கு வெளிநாட்டுப் பயணிகளை வழிப்படுத்தும் சந்தர்ப்பம் கிடைப்பவர்கள், அருகே சோழப் பிரமுகர்கள் அமைத்த மண்டபத்தையும் பார்த்துவரச் சொல்லுங்கள்.

நன்றி: வி. துலாஞ்சனன்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு
437.345.4203


AFFORDABLE
REFRIGERATION
SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install
used & new
Walk in Cooler
Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643


வங்கிக் கடன்
தொல்லைகளிலிருந்து
விடுதலை
NEW LIFE FRESH START
PAST DUE NOTICE
Save 80%
கடன் 80% குறைய நடவடிக்கை
Reduce your debts upto 80%.
கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
Stop all interest on your debts.
கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, legal action & garnishments.
உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
Protect all your assets (House, Car, RRSP, RESP).
மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
Make one monthly patment to all of your creditors.
வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
GIve you solutions without bankruptcy.
CRC CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca
Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation
Over 20 Years Experience
in the field of Insolvency
Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# தழைத்து ஓங்கும் தமிழ்த் தேசியம்

**பழ. நெடுமாறன்**

04.03.2024




உலகில் வாழும் மக்கள் பல்வேறு தேசிய இனங்களாகப் பகுக்கப்பட்டுள்ளனர்.

தேசிய இனம் என்பதற்குரிய இலக்கணம் என்ன? என்ற கேள்வி எழுகிறது. **மரபினம், நாடு, மதம், மொழி** ஆகியவற்றில் எதன் அடிப்படையில் தேசிய இனம் தீர்மானிக்கப்படுகிறது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

1. **மரபினம்** (Race): என்பது உயிரியலை அடிப்படையாகக் கொண்டதாகும். உடல் அளவு, மண்டை ஓடுகளின் நீள, அகல, பருமன், மூளையின் கன அளவு, இரத்த உறவு ஆகியவற்றின் அடிப்படையில் மரபினத்தைப் பொதுவாக நான்கு பெரும் பிரிவுகளாக மானிட இயலார் பிரித்துள்ளனர். இவை மரபினங்கள் என அழைக்கப்படுகின்றன.

2. **நாடு**: ஒரு நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் ஒரே தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களா என்ற கேள்வி எழுகிறது. எடுத்துக்காட்டாக சுவிட்சர்லாந்தில் செர்மானியர், பிரஞ்சுக்காரர், இத்தாலியர் வாழ்வதால் சுவிட்சர்லாந்தியர் என்ற புதிய தேசிய இனமாக அவர்கள் ஒன்றுபட்டுவிட வில்லை. மேற்கண்ட மூன்று இனத்தவரும் அவரவர்கள் மொழியின் அடிப்படையில் தனித்தனி தேசிய இனங்களாகத் தனித்தனிப் பகுதிகளில் சுயாதிக்க உரிமையுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

3. **மதம்**: ஒரு தேசிய இனத்திற்கு அடிப்படையாக மதம் இருக்க முடியுமா? என்ற கேள்விக்கான விடையையும் நாம் ஆராய்வோம்.

மேற்கே அல்ஜீரியாவிலிருந்து கிழக்கே இந்தோனேசியா வரை உள்ள பல நாடுகளில் இசுலாம் மதத்தைப் பின்பற்றுபவர்கள் வாழ்கிறார்கள். அடிப்படையில் ஒரே மதத்தைப் பின்பற்றுபவர்களாக இருந்தாலும் அவர்களை ஒரே தேசிய இனமாகக் கருத வாய்ப்பில்லை. அவர்களும் அப்படி உருவாகவில்லை.

அரேபிய மொழி பேசும் முசுலீம்கள் அரேபியர் என்றும், துருக்கி மொழி பேசும் முசுலீம்கள் துருக்கியர் என்றும், பாரசீகம் பேசும் முசுலீம்கள் பாரசீகர் (ஈரான்) என்றும், புஷ்டு மொழி பேசும் முசுலீம்கள் புஷ்டுக்கள் என்றும், சிந்தி மொழி பேசும் முசுலீம்கள் சிந்திகள் என்றும், வங்காள மொழி பேசும் முசுலீம்கள் வங்காளியர் என்றும், இந்தோனேசிய மொழி பேசும் முசுலீம்கள் இந்தோனேசியர்கள் என்றும், மலாய் மொழி பேசும் முசுலீம்கள் மலேசியர் என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

அந்தந்த மொழி பேசும் முசுலீம்கள் அவரவர் மொழிகளின் அடிப்படையில் அமைந்த தேசிய இனங்களாகத்தான் தங்களைக் கருதுகிறார்கள்.

4. **மொழி**: மரபினம், நாடு, மதம் ஆகிய மூன்றின் அடிப்படையில் தேசிய இனம் உருவாக முடியாது. மொழியின் அடிப்படையில்தான் ஒரு தேசிய இனம் உருவாக முடியும். ஒரு தேசிய இன உருவாக்கத்திற்குக் கீழ்க்கண்ட 6 அம்சங்கள் காரணங்களாக உள்ளன.

**1. நில எல்லை 2. அரசு, 3. ஒருபடித்தான வாழ்க்கைத் தன்மை, 4. இலக்கிய உடைமை, 5. பொதுப் பழக்க வழக்கங்கள், 6. சமூக மரபு நிலை.**

இந்த வரையறுப்பின் அடிப்படையில் தமிழர்கள் தனித்தேசிய இனத்தவரா? என்ற வினாவிற்கான விடையை ஆராய்வோம்.

1. **நில எல்லை**: இந்த அடிப்படையில் பார்த்தால் தமிழர்கள் வாழும் நாட்டிற்குத் திட்டவட்டமான எல்லைகள் தொல்காப்பியர் கால முதலே வரையறுக்கப்பட்டுள்ளன. தொல்காப்பியத்தின் சிறப்பாயிரத்தில் "வட வேங்கடம், தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தொல்காப்பியர் காலம் முதல் பாரதி காலம்வரை தோன்றிய தமிழ் இலக்கியங்கள் அனைத்திலும் தமிழ் நாட்டின் எல்லைகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. வேங்கடம் முதல் குமரிவரை தமிழர்கள் வாழும் நிலப்பரப்பு சிற்சில மாறுதல்களுடன் அன்று முதல் இன்றுவரை அப்படியே நிலவி வருகிறது.

2. **அரசு**: சங்க காலத்திலிருந்து தமிழ்நாட்டில் சேர, சோழ, பாண்டிய அரசுகளும் பிற மன்னர்களின் அரசுகளும் ஆட்சி செலுத்தி வந்துள்ளன. தமிழர்கள் தங்களுக்கென தனியான அரசுகளை அன்று தொட்டு அமைத்து வாழ்ந்தனர் என்பது புலனாகிறது. தமிழ்நாட்டை வெவ்வேறு அரசுகள் ஆண்ட போதிலும் சோழ நாட்டுத் தேசியம், பண்பாடு; சேரநாட்டுத் தேசியம், பண்பாடு; பாண்டிய நாட்டுத் தேசியம், பண்பாடு; எனத் தனித்தனி தேசிய உணர்வுகளும் தனித்தனிப் பண்பாடுகளும் உருவாகி விடவில்லை. பல்வேறு அரசர்கள் ஆண்ட பகுதிகளில் வாழ்ந்த தமிழர்கள் அனைவரையும் தமிழ் மொழியும், பண்பாடும், பழக்க வழக்கங்களும் இணைத்து வைத்தன. மக்கள் அனைவரும் தமிழர்களாகவே வாழ்ந்தார்கள். அரசுகளும் தமிழர் அரசுகளாகவே இருந்தன.

3. **ஒருபடித்தான வாழ்க்கைத் தன்மை**: தமிழ்நாடு பல மன்னர்களால் ஆளப்பட்டாலும்கூட அவர்களின் கீழிருந்த பகுதிகளில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை என்பது எத்தகைய வேறுபாடும் இல்லாமல் ஒருபடித்தானதாக அமைந்திருந்தது. தமிழ் இலக்கியங்களில் குறிக்கப்படும் தமிழர்களின் அக, புற வாழ்க்கை முறைகளும் கடைப்பிடித்த பழக்க வழக்கங்களும் ஒரே மாதிரியாகத்தான் அமைந்திருந்தன.

4. **இலக்கிய உடைமை**: மொழி ஒரு தேசிய இனத்தை உருவாக்கியதைப்போல அந்த மொழியின் இலக்கியங்களும் அந்தத் தேசிய இனத்திற்குரிய பண்பாடுகளை உருவாக்குகின்றன. பிற இனப் பண்பாடுகளின் ஊடுருவலின் விளைவாக சங்கப் புலவர்களின் பாடல்கள் அழிந்துபடும் நிலை தோன்றிய போது அவற்றைத் தொகுத்துப் பேணிய மூவேந்தர்களின் செயல்களில் தேசியத் தன்மை உண்டு. இதைப் பற்றித் தமிழறிஞர் திரு. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் "உண்மையில் சங்க இலக்கியங்கள் தேசியக் கவிதைகளே, தேசியக் கவிதைகள் என்பது நாட்டு மக்களிடம் செல்வாக்குப் பெற்றவை என்ற பொருளில் அல்ல; ஒரு வலுவான தேசிய இனத்தின் குரல் அக்கவிதைகளின் கருவில் அமைந்து கிடக்கிறது" என்ற பொருளில்தான் என்று குறிப்பிட்டுள்ளார்.

5. **பொதுப் பழக்க வழக்கங்கள்**: தென்புலத்தாரைத் தெய்வமாக கருதி வழிபடும் வழக்கம், நடுகல் நாட்டி வணங்கும் வழக்கம் போன்ற தமிழர்களின் பொதுப் பழக்கங்கள் ஒரு தேசியத் தன்மையின் அடிப்படையில் அமைந்தவையாகும். இது போன்ற பழக்க வழக்கங்கள் தமிழர்களை ஒன்று படுத்தியுள்ளன.

6. **சமூக மரபு**: தமிழர்கள் மரபுவழியில் நிலையான தன்மை கொண்டிருந்தனர். உடல் அமைப்பு, பண்பாட்டுக் கூறுகள், ஒழுக்க நியதிகள் ஆகியவற்றில் அவர்களிடம் ஒன்றுபட்ட தன்மை இருந்தது. எனவே தமிழர்கள் தனித்தேசிய இனத்தவரே என்பது இதன்மூலம் உறுதியாகப் பெறப்படும்.

ஒரு தேசிய இனத்திற்கு மொழியே அடிப்படையாக அமைகிறது. உலகில் பெரும்பாலான மக்கள் மொழியின் அடிப்படையிலேயே தங்கள் தேசிய இனத்தை அறிமுகப்படுத்திக் கொள்கின்றனர். ஒரு தேசிய இனத்தைச் சுட்டிக் காட்டும் சிறந்த அடையாளமாக மொழியே விளங்குகிறது.

தமிழர்களும் மொழியின் மூலமாகவே தங்களை அடையாளப் படுத்திக் கொண்டனர். தமிழர்களைப் போலவே தொன்மையான இனத்தவரான கிரேக்கரும் மொழியின் அடிப்படையிலேயே தங்களை அடையாளப்படுத்திக் கொண்டனர். சீனர், பாரசீகர், ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர், அராபியர் போன்ற பலரும் அவ்வாறே அழைக்கப்பட்டனர்.

"தமிழ் எனும் சொல் மக்கள் கூட்டத்தையும் நாட்டையும் குறிக்க வந்திருக்கலாம்" என கே. சிவராசப்பிள்ளை கருதுகிறார்.

தமிழ் இனத்தைப் பொறுத்தவரை அகச் சான்றுகளை வைத்து நோக்கின் மொழியைக் கொண்டே தமிழினம் பெயர் பெற்றுள்ளமை தெளிவாகும். மொழியைச் சார்ந்தே இனம், நாடு, பண்பு ஆகியவற்றைக் கண்டனர். தமிழர் - தமிழ் - தமிழகம் - தமிழ் நாடு, தமிழ் உலகம் என்பன மொழி, இனம், பண்பு ஆகியவற்றின் கருத்தைக் குறிக்க எழுந்த பிற வடிவங்களேயாகும்.

"பழந்தமிழ் நூற்களில் பயின்றுவரும் திணை, குடி, குலம், கணம், இனம் ஆகிய சொற்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடைய பொருள்களை உடையனவாக விளங்குகின்றன. விழுத் திணை, தொல்குடி, நல்லினம் போன்ற சொற்கள் தொடக்கத்தில் கால்வழி என்ற பொருளைத் தந்தன. காலப் போக்கில் இனம் என்ற சொல் மட்டும் மிகுந்த பொருளைத் தரும் சொல்லாக மாறி விட்டது.

தமிழில் வழங்கும் தேசிய இனம் என்ற சொல் ஆங்கிலத்திலுள்ள Nation என்ற சொல்லுக்குரிய நேரடியான தமிழ் மொழி பெயர்ப்பாகும். நாட்டினம் என்ற சொல்லோ, தேசிய இனம் என்ற சொல்லோ 19ஆம் நூற்றாண்டுவரை தமிழ் இலக்கியங்களில் கையாளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். தேசிய இனம் பற்றிய சிந்தனை ஏதாவது ஒரு வடிவில் தொன்மைக் காலம் தொட்டே தமிழகத்தில் இருந்து வந்துள்ளது. எனினும், அதை விளக்குவதற்குரிய கலைச் சொல் உருவாகவில்லை.

"நாட்டவர், நாட்டகம் எனப் பழந்தமிழில் வழங்கிய சொற்களை இன்று வழங்கும் நாட்டினம் என்ற சொல்லுக்கு இணையானவையாகக் கருதலாம்."

நாடு என்ற சொல்லே நாட்டினத்தைக் குறிக்க வருவதாகத் தமிழறிஞர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் கருதுகிறார்.

Nation என்ற சொல்லுக்கு ஆங்கிலப் பேரகராதி பின்வரும் பொருள் தருகிறது. "பொது மரபினாலோ, பொது மொழியாலோ, பொது வரலாற்றாலோ பரந்து விரிந்துபட்ட மக்கள் ஒரு குழுவாக இணைந்து தங்களுக்கென்று வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் அரசை நிறுவி வாழ்பவர்."

"அந்த மண்ணிலேயே பிறந்து அந்த மண்ணிலேயே வாழ்ந்து மடியும் கூட்டம்" என்ற பொருள்களோடு வேறு பல பொருள்களையும் தருகிறது. இந்த இரு பொருள்களே Nation என்ற சொல்லுக்கு நெருங்கிய தொடர்புடையன. 'நாடு' என்ற சொல் நாட்டினத்தைக் குறிக்கும் என்று முனைவர் தெ.பொ.மீ. முன்னே கூறிய கருத்து இங்கே வலுப்பெறுகிறது.

"பொறையொருங்கு மேல் வருங்கால் தாங்கி இறைவர்க்கு
இறையொருங்கு நேர்வது நாடு" (குறள் 733)

என்ற குறள் விளக்கும் கருத்தில் நாட்டினம் என்ற பொருளே தொக்கி நிற்கிறது.

மேலும், நாடு என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துக்கள் அனைத்தும் ஒரு நாட்டினத் தன்மையை (தேசிய இனப்பான்மை) அல்லது ஒரு நாட்டினம் பெற்றிருக்க வேண்டிய சிறப்புக் கூறுகளை விளக்கிக் காட்டும் போக்கிலேயே அமைந்துள்ளன.

"வரையறுக்கப்பட்ட எல்லை" (குறள் 737)

"(அதில்) ஒரே அரசு" (குறள் 735)

"வேந்தமைவுடைய தன்மை" (குறள் 740)

"தன்னிறைவுடைய நிலைமை (நாடாவளம்)" (குறள் 739)

"மக்களின் அரசப்பற்று"


"மக்களின் ஒருமைப்பாட்டுணர்வு" (குறள் 733)

"இன்ப வாழ்வு காணும் மக்கள்" (குறள் 738)

ஆகியன ஒரு நாட்டுக்கு இன்றியமையாதன என்று வள்ளுவர் கூறுகிறார். ஒரு நாட்டினத்தை வரையறுப்பதற்கும் மேற்கண்ட கூறுகள் இன்றியமையாதன என்று இன்றைய சமூகவியலாளர் கருதுகின்றனர்.

கிறது. "தமிழ் மக்களின் வாழ்க்கையில் பழமையுணர்வு மரபு வழிப்பட்ட தன்மை பேரிடம் பெற்றதைப் போலவே" இலக்கியங் களிலும் பழமையுணர்வு காலந்தோறும் வலுப்பெற்று வந்தது. இலக்கியங்களில் பழமையை நினைவு கூர்வதில் இலக்கிய இலக்கண மரபுகள், பழந்தமிழ் இலக்கியங்கள், புலவர்கள், சமய கால நிகழ்வுகள், பெருமைகள் ஆகியன இடம்பெற்ற அள விற்குப் பழந்தமிழ் அரசியலோ, இனப் பழமையோ, நாட்டு எல் லைகளோ இடம் பெறவில்லை. எனவே தமிழ்நாட்டு (தேசிய) உணர்வு பண்பாட்டு வழிப்பட்டதாக மலர்ந்தது. இவ்வரலாற் றைத் தொகுத்துக் காணும்போது தொல்காப்பியர் காலத்தி லிருந்து பேராசிரியர் சுந்தரம் பிள்ளை காலம் வரையில் வளர்ந்து வந்திருக்கும் தமிழ் நாட்டுணர்வைப் "பண்பாட்டு வழிப்பட்ட நாட்டுணர்வு என்று கூறலாம்."

## மொழியே உயிர்க்கூறு




தமிழ் உணர்வு வெறும் மொழியுணர்வு மட்டுமல்ல; இன உணர்வையும் நாட்டுணர்வையும் சேர்த்தே வெளிப் படுத்துகிறது என்பதை முனைவர் ப. கிருஷ்ணன் பின்வருமாறு விளக்குகிறார். "மொழி, இனம், நாடு ஆகிய மூன்றுணர் வுகளும் தனித்தனியானவை போல் தோன்றினும், நாட்டு (தேசிய) உணர்வு என்ற கோணத்தில் நோக்கும்போது இவை ஒன்றுடன் ஒன்று இணைந்தும் பிணைந்தும் வருபவையே அகும். தமிழ்நாட்டுணர்வைப் (தேசியத்தை) பொறுத்த வரை யில் இவ்வுணர்வைத் தோற்றுவிப்பதற்கு மொழியே உயிர்க் கூறாக (Vital Criteria) இருந்திருக்கிறது. மொழியின் மூலமே இனமும் நாடும் பெயர் பெறுவதாலும் மொழி மக்களின் வாழ் வோடும் இடங்களோடும் ஒன்றி வருவதாலும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க இயலாத அளவிற்கு இம்மூன்றுணர்வுகளும் பிணைந்திருக்கின்றன. எனவே தமிழ் நூல்களில் காணப் பெறும் தமிழுணர்வை வெறும் மொழி நோக்கில் மட்டும் காணாமல் தமிழர் வாழ்வின் உள்ளியக்கமாகவும் காண்பதே மிகவும் பொருத்தமுடையது.

தமிழ் நாட்டுணர்வு மொழி வழியே உருப்பெற்றதெனினும் ஒவ் வொரு காலத்திலும் முதன்மை பெற்றிருந்த உணர்வுகள் கலந்தே வந்திருக்கின்றன. குறிப்பாக அரசு, மொழி, மதம், பண் பாடு, சமூகம் ஆகியன தமிழ்நாட்டுணர்வில் கலந்திருக் கின்றன.

நில எல்லைகளை வற்புறுத்தியும் அரசியலுணர்வுக்கு (கோனு ணர்வுக்கு) முதன்மை தந்தும் இரட்டைக் காப்பியங்களின் காலம் வரையில் வளர்ந்து வந்த தமிழ்நாட்டுணர்வு (Territorial and Political Nationalism) சமய காலத்தில் மாற்றம் பெறுகிறது. சங்க இலக்கியங்களில் காணப்படும் இடப்பற்றும் (Soil Attachment) கோனாட்சி உணர்வும் சமயங்களின் செல்வாக் கால் சமயகால இலக்கியங்களில் வெகுவாக மறைந்துவிட்டன. சமய இலக்கியங்களில் தமிழ்நாடு என்ற ஒருமை நோக்கில் பாடப்பட்ட பாடல்கள் பல இருப்பினும் அவை அரசியல் நோக்கில் பாடப்பட்டவை அல்ல் சமய/பண்பாட்டு நோக்கில் பாடப்பட் டவையாகும். அதே நிலை சமயக் காலத்தையடுத்த சிற்றிலக் கியக் காலத்திலும், அதனையடுத்த காலங்களிலும் தொடர்


## பண்பாட்டுத் தேசியம்

"பண்டைய தமிழ்நாட்டில் சேர, சோழ, பாண்டிய வேந்தர் களுடன், வேளிர்கள், குறுநில மன்னர்கள் ஆகியோரும் தத் தமக்கேயுரிய நிலப்பகுதிகளில் தனியாட்சி செலுத்தி வந்தனர். அக்குறுநில மன்னர்களின் எண்ணிக்கை 12 என வரலாற் றாசிரியர் ஸ்மித் கூறுகிறார். சங்க இலக்கியங்களில் 300க்கு மேற்பட்ட அரசர்களின் பெயர்கள் காணப்படுகின்றன."

தொல்காப்பியப் பாயிரத்தில் "வடவேங்கடந் தென்குமரி யாயிடைத் தமிழ் கூறு நல்லுலகத்து" எனத் தமிழகத்தின் எல்லை தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. அகண்ட இந்த நிலப் பரப்பு சங்க காலத்திலிருந்து வெள்ளையர் வரும் காலம்வரை ஒரு ஆட்சியின் கீழ் ஒருபோதும் இருந்ததில்லை. களப்பிரர், பல்லவர், பிற்காலச் சோழர், பிற்காலப் பாண்டியர் போன்ற தமிழ் மன்னர் குலங்களின் ஆட்சியிலும் அதற்குப்பின் அன்னியர் களான முசுலீம்கள், நாயக்க மன்னர்கள், மராட்டியர்கள் போன் றவர்களின் ஆட்சிக் காலங்களிலும் ஒரு பேரரசு உருவாக வில்லை.

பிற்காலச் சோழரின் ஆட்சியில் சோழப் பேரரசை உருவாக்கும் முயற்சி ஓரளவு வெற்றி பெற்றது. சோழப் பேரரசு வடக்கே கிருஷ்ணா நதி முதல் தெற்கே இலங்கை வரை விரிந்து பரந்திருந்தது. முதலாம் இராசராசன், இராசேந்திரன், முதலாம் குலோத்துங்கன் காலம்வரை நீடித்த இந்தப் பேரரசைப் பிற் காலப் பாண்டியர்கள் தகர்த்துவிட்டனர். அவர்கள் உருவாக்க முயன்ற பாண்டியப் பேரரசும் கி.பி. 1311ஆம் ஆண்டு மாலிக் காபூர் படையெடுப்பினால் தகர்ந்தது. சோழர்-பாண்டியர் ஆகி யோர் இடைவிடாது தமக்குள் போராடிக் கொண்டதன் விளை வாக இரு அரசுகளுமே பலவீன மடைந்தன. இதன் விளைவாக அன்னியர் படையெடுத்துத் தமிழகத்தைக் கைப்பற்றும் நிலை எற்பட்டது.

பல்வேறு மன்னர் குலங்கள் தமிழ்நாட்டின் பல பகுதிகளை ஆண்டுவந்த போதிலும் அனைத்துப் பகுதித் தமிழரையும் அணைக்கும் அம்சமாகத் தமிழ்மொழி திகழ்ந்தது. தமிழர் களை அடையாளப்படுத்தி ஒன்றுபடுத்தும் கருவியாக மொழி




விளங்கிற்று.

பாணர்களும், புலவர்களும் எல்லைகளைத் தாண்டி பல நாடு களுக்குச் சென்று அந்தந்த மன்னர்களிடம் தங்கள் புலமைத் திறனைக் காட்டிப் பரிசில் பெற்றனர். அரச குலங்கள் ஒன்றுடன் ஒன்று திருமண உறவு பூண்டன. வெவ்வேறு அந்தந்த நாட்டு மக்களும் தமக்குள் திருமண உறவு கொண்டனர். வணிகர்கள் எந்தவிதமான தங்குதடையுமின்றி அனைத்து நாடுகளுக்கும் சென்று வாணிகம் செய்து பொருளீட்டினர். சமண, பௌத்த, சைவ, வைணவத் துறவிகளும் அவ்வாறே அனைத்து நாட்டு மன்னர்கள், மக்களின் ஆதரவு பெற்றுத் தொண்டு புரிந்தனர்.

அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய சைவ சமயக் குரவர்களும், பன்னிரு ஆழ்வார்களும் எல்லை கடந்து எல்லா நாடுகளுக்கும் சென்று பக்தி நெறியைப் பரப்பினார்கள்.

ஆக மொத்தத்தில் பல்வேறு மன்னர்களின் ஆட்சியின் கீழ் தமிழ்நாட்டின் பலபகுதிகள் இருந்தாலும் மொழி, பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் தமிழர்கள் ஒன்றுபட்டிருந்தனர். இனவழித் தேசிய உணர்வு அந்தந்தக் காலக் கட்டத்தில் உரு வாகாமல் இருந்தாலும், பண்பாட்டு அடிப்படையில் உருவான உணர்வு பரவியிருந்தது. மொழி அடிப்படையில் அமைந்த இந் தப் பண்பாட்டுத் தேசிய உணர்வுதான் மொழிக்கும் மக்களுக் கும் அரணாகத் திகழ்ந்தது.

கி.பி. 14ஆம் நூற்றாண்டுவரை தமிழகம் வடநாட்டுப் பேரரசு எதற்கும் உட்படாமல் தனித்தே திகழ்ந்தது. அசோகர் பேரரசு முதல் அக்பர் பேரரசுவரை அவர்களின் ஆளுகைக்குட்படாத ஒரு நாடாகத் தமிழகம் விளங்கிற்று. ஆனால் அன்னியரின் வாள்முனைக்கு அடிமைப்படாத தமிழகம் வடமொழிப் பண் பாட்டிற்கு அடிமைப்பட்டது. சமற்கிருதம் பேசிய பார்ப்பனர் தங் களின் உடல் வலிமையால் தமிழகத்தை வெல்லவில்லை. மாறாகப் பண்பாட்டுப் படையெடுப்பு நடத்தி நமது மொழி யையும், இனத்தையும், நாட்டையும் சீரழிக்க முயன்றனர். அவர்களின் இந்த முயற்சியைத் தொல்காப்பியர் காலம் முதல் தமிழர்கள் எதிர்த்துப் போராடி வந்திருக்கின்றனர்.

தொல்காப்பியம், திருக்குறள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, கீழ்க் கணக்கு நூல்கள் முதலியன தொகுக்கப்பட்டதற்கு அடிப் படையே தமிழ்மொழியையும், இலக்கியங்களையும் அழியாது பாதுகாக்க வேண்டும் என்கிற தமிழ்த் தேசிய உணர்வுதான் காரணமாகும். பழந்தமிழ் நூல்கள் இவ்வாறு தொகுக்கப் படாமல் போயிருந்தால் நமது இலக்கியங்கள் முற்றாக அழிந்து போயிருக்கும் என்பதில் ஐயமில்லை. இலக்கியங்கள் அழிந் திருப்பின் மொழி அழிந்திருக்கும். தமிழ் இனத்தின் தனித் தன்மை அழிந்திருக்கும். நல்லவேளையாக வடமொழியின் பண்பாட்டுப் படையெடுப்பிலிருந்து சில சேதாரங்களுடன் நாம் தப்பினோம்.

இத்தொகுப்பு நடவடிக்கைகளில் மன்னர்கள் காட்டிய ஆர்வ மானது இதற்கு ஒரு சமூக - பொருளாதார - அரசியல் இயைபு, அன்றைய தேவையாக இருந்தது என்பதைக் காட்டுகிறது. அது என்ன தேவை?

வடமொழிப் பண்பாட்டுப் படையெடுப்பிலிருந்து தமிழ் இலக் கியங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வே அந்தத் தேவையாகும். இத்தொகை நூல்கள் தொகுக்கப்படாமல் போயி ருந்தால் ஆயிரக்கணக்கான தமிழ்ப் பாடல்கள் அழிந்து போயி ருக்கும் என்பதில் சந்தேகமில்லை. சங்கப் பாடல்கள் தொகுப்பு என்பதை அடிப்படையில் இலக்கிய வரலாற்றில் முக்கிய ஒரு நிகழ்வாக நாம் கருத வேண்டும்.

சைவத் திருமுறைகளும் வைணவர்களது நாலாயிரத் திவ் வியப் பிரபந்தமும் அண்மையில் தொகை நூல்கள் என்று கருதப்பட்டன. நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்களது பாடல்கள் திருமுறைகளாகவும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமாகவும்

தொகுக்கப்பட்டதற்குச் சமூகப் பொருளாதார நிர்ப்பந்தங்கள் - மதப் பண்பாட்டுத் தேவைகள் ஆகியவை அடிப்படையாக அமைந்திருந்தன. இவை தொகுக்கப்படாமல் போயிருந்தால் சீரிய செந்தமிழ் இசைக் கருவூலங்கள் அழிந்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

சைவத் திருமுறைகளைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி. வைணவ ஆழ்வார்ப் பாசுரங்களைத் தொகுத்தவர் நாதமுனி. இவற்றைத் தொகைப்படுத்திய இருவரும் பாடல்களைச் சேகரித்த அதே வேளையில் அவை படைக்கப்பட்ட இசைமுறைகளையும் அறிந்து கொள்வதில் கவனம் செலுத்தினர். இப்பாடல்களில் இசைக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் தொகைகளின் பயன்பாட்டை வெளிக்காட்டுவதாக அமைந்தது. திருமுறைகளும் நாலாயிர திவ்வியப் பிரபந்தமும் தொகுக்கப்படாமல் போயிருந்தால் பழந்தமிழ் பண்களையும் இசையையும் நாம் இழந்திருப்போம் என்பதில் ஐயமில்லை.

நமது புலவர்கள் தமிழின் தனித்தன்மையைக் காக்க இடைவிடாது போராடி வந்துள்ளனர். தொல்காப்பியர், திருவள்ளுவர், சங்கப்புலவர்கள், இளங்கோ அடிகள், சேக்கிழார், திருத்தக்கதேவர், கம்பர், தேவாரம் பாடிய மூவர், மாணிக்கவாசகர், ஆழ்வார்கள் போன்றவர்கள் வடமொழிக் கலப்பு இல்லாத தமிழில் எழுதினார்கள். வடசொற்களை தமிழ்ப்படுத்தியும், தமிழ்ப்பண்பாட்டிற்கு ஏற்பவும் நூல்கள் படைக்கப்பட்டன. இந்தப் போக்கு 20ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்தது. இன்னமும் தொடர்கிறது.

வடமொழிக் கலாச்சாரத்தின் விளைவாக மணிப்பிரவாள நடை, சாதியப் பிரிவுகள், தீண்டாமை போன்ற வேண்டாதவை தமிழ்நாட்டில் புகுந்து மொழி, சமுதாயச் சீரழிவுகளை ஏற்படுத்தின. தமிழர்கள் வணங்கி வந்த தெய்வங்கள் ஆரிய தெய்வங்களுடன் இணைக்கப்பட்டன. கோயில்களில் சமற்கிருத வழிபாட்டு முறைகள் திணிக்கப்பட்டன. மன்னர்கள், கடவுள்கள், ஊர்கள், மலைகள், ஆறுகள் ஆகியவற்றின் பெயர்கள் வடமொழியில் மாற்றப்பட்டன. தமிழிசையும், பண்களும் வடமொழிப் பெயர் பெற்றன. தமிழர்களுக்கேயுரிய ஆடற்கலை பரதநாட்டியமாயிற்று. தொன்மையான தமிழிசை கர்நாடக சங்கீதமாயிற்று. தமிழ்ப் பண்கள் இராகங்களாக உருமாற்றம் பெற்றன. சுருக்கமாகக் கூறினால் தமிழ்நாட்டில் வடமொழிப் பண்பாட்டின் தாக்கம் சகல துறைகளிலும் ஆதிக்கம் செலுத்த இடைவிடாது முயன்றது. ஆனால் அதற்குத் தொடர்ந்து எதிர்ப்பையும் தமிழர் தெரிவித்தே வந்தனர்.

“தமிழ்த் தேசியத்திற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்த அறிஞர் பெருமக்கள் ஆற்றிய அரிய தமிழ்ப் பணிகளும் செறிந்த பங்களிப்பும் வியப்பை அளிக்கின்றன் விம்மிதம் மீதுர்கிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டு - தமிழ் மொழியின் வரலாற்றில் தனித்தன்மை கொண்டது. வித்தக விளைச்சலுக்கு வீரிய உரமளித்தது. நூற்றுக்கும் மேற்பட்ட தமிழறிஞர்கள் தோன்றி, தமிழின் வளர்ச்சிக்கும் தமிழின விழிப்புக்கும் ஊட்டம் தந்தனர். அவர் தம் சிந்தனைகள் மற்றும் சீரிய பணிகளின் விளைவுகள், இருபதாம் நூற்றாண்டிலும் நீண்டு படர்ந்தன.”

19ஆம் நூற்றாண்டில் இராமலிங்க வள்ளலார், நீதிபதி வேதநாயகர், பேராசிரியர் சுந்தரனார், கோபால கிருஷ்ண பாரதியார் போன்றவர்கள் தோன்றித் தமிழ் மறுமலர்ச்சிக்கும், சமய மறுமலர்ச்சிக்கும் வித்திட்டனர்.

18, 19ஆம் நூற்றாண்டுகளில் பெஸ்கி (எ) வீரமாமுனிவர், டாக்டர் கால்டுவெல், ஜி.யு.போப் போன்ற மேனாட்டு அறிஞர்கள் தமிழின் தொன்மையையும் பெருமையையும் உலகம் உணரச் செய்தனர்.

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மறைமலையடிகள், பரிதிமாற்கலைஞர் ஆகியோர் வட மொழியின் மரணப் பிடியிலிருந்து தமிழை மீட்டனர். அவர்களைத் தொடர்ந்து தேவநேயப் பாவாணர் முதல் சாலையார், சாலினியார், இலக்குவனார், பெருஞ்சித்திரனார் வரை எண்ணற்ற தமிழறிஞர்கள் தனித்தமிழை வளர்த்தனர்.

சி.வை.தாமோதரனார், உ.வே. சாமிநாத அய்யர் போன்றோர் ஏட்டுச் சுவடிகளிலிருந்த பழம் தமிழ் நூற்களை அச்சு வடிவத்தில் கொண்டுவந்து உயிர்ப்பித்தனர்.

பாண்டித்துரைத் தேவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தையும், உமாமகேசுவரனார் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தையும் தோற்றுவித்துத் தமிழ்க் கல்வியிலும் தமிழ் ஆராய்ச்சியிலும் மறுமலர்ச்சி ஏற்படுத்தினர்.

பாரதி முதல் பாரதிதாசன் வரை எண்ணற்ற கவிஞர்கள் தமிழின் சிறப்புக் குறித்தும், தமிழரின் மேன்மை குறித்தும் கவிதைகள் பாடி தமிழ்த் தேசியத்தை வளர்த்தார்கள்.

மேற்கண்ட அறிஞர் பெருமக்கள் ஒரு நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக எடுத்துக்கொண்ட அரிய முயற்சிகளின் விளைவாகத் தமிழ்த் தேசிய உணர்வுக்கு வலுவான அடித்தளம் இடப்பட்டது.

“தமிழ்த் தேசியம் உருவாவதற்குரிய தமிழ்ப் பண்பாட்டின் சிந்தனைக் கருவூலங்களைத் தமிழ்ப் பெருமக்களுக்கு வழங்கி, தமிழின வரலாற்றுப் போக்கில் திருப்புமுனையைப் படைத்த இப்பெருமக்களையும், அத்துறையில் தம்மை ஈகம் செய்து கொண்ட மற்ற அறிஞர்களையும் தமிழ் உலகம் என்றென்றும் ஏற்றிப் போற்றக் கடமைப்பட்டது.

பழஞ்சுவடிகள் சிலவற்றை, தாமோதரனாருக்கும் முன்னரே, அச்சாக்கி வெளியிடும் அரிய பணியில் ஈடுபட்ட சில தமிழ்ப் பெருமக்களில் தமிழீழம் ஆறுமுக நாவலர், முகவை இராமானுசக் கவிராயர், களத்தூர் வேதகிரி முதலியார், புதுவை நயனப்ப முதலியார், திருவேங்கடாசல முதலியார், சரவணப் பெருமாளய்யர், திருமயிலை சண்முகம் பிள்ளை, தொல்காப்பிய எழுத்ததி



காரத்தை, நச்சினார்க் கினியார் உரையுடன் பதிப்பித்த மழவை மகாலிங்கய்யர், சிலப்பதிகாரத்தைப் பதிப்பித்த சோடாசாவதானம் சுப்புராயுலு செட்டியார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர்.

1937ஆம் ஆண்டில் கட்டாய இந்தித் திணிப்பை எதிர்த்து தமிழ்நாட்டில் பெரும் போராட்டம் வெடித்தது. தமிழறிஞர்களான கி.ஆ.பெ. விசுவநாதம், மறைமலையடிகள், நாவலர் சோமசுந்தர பாரதியார், கா. சுப்பிரமணியபிள்ளை, தா.வே. உமாமகேசுவரனார் போன்றவர்களும் பெரியார், அறிஞர் அண்ணா, அண்ணல் தங்கோ, சி.டி. நாயகம், பட்டுக்கோட்டை அழகிரிசாமி போன்ற தமிழர் தலைவர்களும் ஒன்றுகூடி இந்தி ஆதிக்கத்திலிருந்து தமிழைக் காக்கப் போராடினார்கள். இந்தப் போராட்டத்தில்தான் “தமிழ்நாடு தமிழருக்கே” என்ற முழக்கம் பிறந்தது. இந்த முழக்கம் தமிழ்த் தேசிய உணர்வுக்கு உரமிட்டது.

1965ஆம் ஆண்டு தமிழக மாணவர்கள் இந்தித் திணிப்புக்கு எதிராகக் கொதித்தெழுந்து தமிழக வரலாறு காணாத பெரும் போராட்டத்தை நடத்தினர். பல இளைஞர்கள் தீக்குளித்து உயிர்த் தியாகம் செய்தனர். காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டுக்கு ஏராளமானவர்கள் பலியானார்கள். ஆனால், தமிழ் அரியணையில் அமர முடியவில்லை. மாறாக, ஆங்கிலம் கல்விமொழியாக இன்றைக்குத் தமிழகத்தில் ஆட்சி செய்கிறது. இதற்காகவா இத்தனை பேர் உயிர்த் தியாகம் செய்தார்கள்? போராடினார்கள்?

## தமிழீழப் படுகொலை

1983ஆம் ஆண்டு சூலை மாதம் இலங்கையில் 3,000 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட நிகழ்ச்சி தமிழ்நாட்டைக் குலக்கியது. தமிழகம் ஆவேசம் அடைந்தது. சிற்றூர்களிலிருந்து பெரு நகரங்கள் வரை மக்கள் கொதித்தெழுந்து போராடினார்கள். இயற்கையாகப் பீறிட்டு எழுந்த இந்த உணர்வு தமிழ்த் தேசியமாக உருவெடுத்தது. தமிழீழ விடுதலைப் போராட்டம் வீறுகொண்டு வெற்றியை நோக்கிச் செல்லத் தொடங்கியது. இதைக் கண்டு இந்திய அரசு அதிகக் கலக்கமடைந்தது. இந்திய - இலங்கை உடன்பாடு என்ற பெயரால் இந்தியப் படை அனுப்பப்பட்டு ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கும் முயற்சி நடைபெற்றது. தமிழ்நாட்டில் தமிழத் தேசிய உணர்வாளர்களுக்கு எதிராகக் கடுமையான அடக்குமுறைச் சட்டங்கள் ஏவப்பட்டன. ஆனாலும், தமிழ்த் தேசிய எழுச்சி மேலும் வளர்ந்ததே தவிர, குன்றவில்லை.

2009ஆம் ஆண்டில் இந்தியா உள்பட 20 நாடுகள் ஒன்றுகூடி சிங்கள அரசுக்கு ஆயுதங்களை அள்ளிக்கொடுத்தும், நிதியை வாரிக் கொடுத்தும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்குத் துணை நின்றன. முள்ளிவாய்க்கால் பகுதியில் ஏறத்தாழ ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். மூன்று இலட்சம் தமிழர்கள் முள்வேலி முகாம்களில் அடைக்கப்பட்டார்கள். வரலாறு கண்டறியாத இந்த கொடுமையை ஏன்? என்று தட்டிக்கேட்க உலக நாடுகள் எதுவும் முன்வரவில்லை. தமிழ்நாட்டில் உள்ள 8 கோடி தமிழ் மக்களும் அன்று ஒன்றுபட்டு நின்று போராடியிருந்தால், இந்திய அரசு பணிந்திருக்கும். பல்லாயிரக்கணக்கான ஈழத் தமிழர்களின் உயிர்களை நாம் காப்பாற்றியிருந்திருக்க முடியும். ஆனால், நமது ஒற்றுமைக் குறைவினால் ஈழத் தமிழர்கள் பெரும் இழப்பிற்கு ஆளானார்கள்.

தமிழிழத்தில் நமது இளைஞர்களும் இளம் பெண்களும் வாழவேண்டிய வயதில் தாயகம் மீட்புப் போரில் சாவை இன்முகத்துடன் அணைத்துக்கொண்டிருக்கிறார்கள். புதிய புறநானூறு அங்கே எழுதப்பட்டு வருகிறது. புலிகளின் போராட்டம் தமிழீழ மண்ணை மீட்கும் போராட்டம் மட்டுமல்ல, உலகத் தமிழர்களின் விடிவுக்கான முதல் கட்டப் போராட்டமாகும். இந்த காலகட்டத்தில் தமிழ்த் தேசிய எழுச்சியை கட்டிக் காக்கவும், வளர்க்கவும் நாம் தவறுவோமானால், வருங்காலத் தலைமுறை நம்மை ஒருபோதும் மன்னிக்காது. காலம் அற்புதமாகக் கனிந்துள்ளது. இப்போது உருவாகியிருப்பதைப் போன்ற சிறந்த வாய்ப்பு மீண்டும் வரப்போவதில்லை. கிடைத்தற்கரிய வாய்ப்பை நழுவ விடுவோமானால் நம்மைப் போன்ற ஏமாளிகள் வேறு யாரும் இல்லை.

கடந்த 20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த எண்ணற்றத் தமிழறிஞர்களும், கவிஞர்களும், தலைவர்களும் கண்ட கனவை நனவாக்குவது நமது கடமையாகும். அவர்கள் நமக்கு ஊட்டியிருக்கிற தமிழ்த் தேசிய உணர்வு என்னும் பதாகையை உயர்த்திப் பிடித்து நமது இலக்கை நோக்கி நாம் முன்னேறியாக வேண்டும்.

அரசியல், சமூகவியல், பொருளியல் ஆகிய துறைகளில் தமிழ்த் தேசியத்தை நிலைபெறச் செய்வதும், இந்த அடிப்படையில் புதிய தமிழகத்தைக் கட்டமைப்பதும் நமது ஒரே குறிக்கோளாக இருக்கவேண்டும். சுருங்கக் கூறின் நமது வாழ்வியல் நெறியாகத் தமிழ்த் தேசியமே விளங்கவேண்டும்.

## குறுந்தேசியவாதம்

அதேவேளையில் தமிழ்த் தேசியம் என்பது குறுந்தேசியவாதமாகிவிடக் கூடாது. “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற உன்னதமான நோக்கத்தினை உலகிற்கு அளித்தவர்கள் தமிழர்கள். எனவே, அதை மறந்துவிடாமல் தமிழ்நாட்டில் வாழும் சிறுபான்மை தேசிய இனமக்களை நம்முடன் அரவணைத்துக் கொண்டு நாம் செல்லவேண்டும். பல நூற்றாண்டுகளுக்கு முன்னாள் தமிழ்நாட்டிற்கு வந்து குடியேறி இந்த நாட்டையே தங்கள் நாடாகக் கொண்டு வாழ்ந்த வருபவர்களை வெளியேற்ற வேண்டும் எனக் கூறுபவர்கள் உண்மையான தமிழ்த் தேசியவாதிகளாக இருக்க முடியாது.

ஒரேயொரு மொழியைப் பேசும் தேசிய இன மக்களைக் கொண்ட நாடு உலகத்தில் எங்கும் கிடையாது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். எந்த நாடாக இருந்தாலும் அந்த நாட்டில் சிறுபான்மை தேசிய இனத்தவர் வாழ்வது தவிர்க்க முடியாததாகும்.

இந்தியாவின் பிற மாநிலங்களில் இலட்சக்கணக்கான தமிழர்கள் பன்னெடுங்காலமாக வாழ்ந்து வருகிறார்கள். இலங்கை, பர்மா, மலேசியா, கம்போடியா, இந்தோனேசியா, வியட்நாம், மொரீசியசு, தென்னாப்பிரிக்கா, போன்ற நாடுகளில் பெரும் எண்ணிக்கையிலும் மற்றும் 70க்கும் மேற்பட்ட நாடுகளில் சிறு எண்ணிக்கையிலும் ஏராளமான தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். மேற்கண்ட நாடுகள் பலவற்றில் தமிழர்கள் குடியரசுத் தலைவர்களாகவும், தலைமையமைச்சர்களாகவும், அமைச்சர்களாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும், அதிகாரிகளாகவும், படைத்தளபதிகளாகவும் பொறுப்புகள் வகித்து, அந்தந்த நாட்டிற்குப் பெருமைத் தேடித் தந்திருக்கிறார்கள். தமிழினம் இன்று உலகம் தழுவிய இனமாகும். எனவே குறுந்தேசியவாதம் பேசி வெளிமாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் வாழும் தமிழர்களைச் சிறுமைப்படுத்திவிடக் கூடாது.

தமிழ்த் தேசிய உணர்வை நமது தலைமுறையிலேயே நிலைநிறுத்தி ஆகவேண்டும். இந்தத் தலைமுறையைச் சேர்ந்த நாம் நமது தொண்டினாலும், தியாகத்தினாலும் இதை நிறைவேற்றுவொமானால், வரப்போகிற நமது தலைமுறையினர் உரிமை கொண்ட மக்களாக வாழ்ந்து தமிழர்களின் பொற்காலத்தைப் படைப்பார்கள் என்பது திண்ணம்.




எம் கனேடிய கலைஞர்களோடு தென்னிந்திய மற்றும் தாயக
கலைஞர்கள் இணைந்து தாய் தேசத்தில் கல்வியால் மேம்பட்ட
ஒரு சமூகத்தை உருவாக்கும் காலப் பணிக்காக நடாத்தும்...
KNN FINANCIAL CORPORATION
ஆதரவில்..
27 YEARS
வன்னிச் சங்கத்தின்
வன்னி விழா
இசையும் உதவும் திசையும்
Vanni Vizha -2024
வனிதா குகேந்திரனின் நெறியாள்கையில்
வன்னியின் வீரத்தமிழச்சி
குருவிச்சி நாச்சியார்
நாட்டிய நாடகம்
METROPOLITAN CENTRE
3840 FINCH AVE E, SCARBOROUGH
(KENNEDY AND FINCH)
MARCH -23
SATURDAY
5:30 PM
SUPER SINGER
பின்னணிப் பாடகர்
ஹரிஹரசுதன்
ரேணுகாதேவி விக்னேஸ்வரன் வழங்கும்
ஓம் சக்தி நடனம்
எழுத்து பாடகர் இசையமைப்பாளர்
கந்தப்பு ஜெயந்தன்
Shiapaaz
GET YOUR TICKET!
தொடர்புகளுக்கு:
416-644-1113
VCAREKIDS.ORG
FB.COM/VCAREKIDS
Ticket க்களை பெற்றுக்கொள்ள:
சிவா: 416-520-1214
சுதன்: 416-558-1917
CHILDREN (5-12) : $ 10
ADULT : $ 30
VVIP AVAILABLE
PROFESSIONALISM
RESPONSIVENESS
QUALITY
KNN FINANCIAL CORPORATION
416-494-3334.
www.knnincometax.com
RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Experts In The Local Market
416-270-1111
www.remaxace.com
LKA AUTOREPAIRS
Always behind your wheels
2070 Steeles Ave. E
Brampton, On
L6T 1A7
N.T.Patrick
Cell: 647.267.3212
Ph. 905.451.0758
lka.bramton@gmail.com
MORTGAGE FINANCIAL SOLUTIONS
www.nesan.ca
NESAN
416-908-5656
WE DEAL WITH ALL BANKS
68 கடன் அட்டைகளுடன் 1008 தலைவலிகளையும் தவிர்க்க
ஒரே தீர்வு
REFINANCE
New Mortgages & 2nd Mortgages
Siva Ratnasingam
Dr. ReFinance
Division of ceylingo Financial Group
Call: 416-520-1214
KT Group of Companies LTD.
Integrated Facilities Management
Commercial Cleaning
Security Services
Restoration Services
Employment Services
WWW.PALMYRAHOMES.CA
PALMYRA HOMES
Build your home with spacious floorplans and modern finishes.
Personalize to suit your needs and preferences.
416 • 930 • 9898
300 - 5200 FINCH AVENUE EAST TORONTO, ON M1S 4Z4
Krishna
LIVE TELECAST
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
Sri Nadarajasundram
Sales Representative
416-276-6666
YOUR LUXURY
CUSTOM HOME BUILDER
"Redefining Luxury Living"
artreum HOMES
416 900 6000
info@artreum.ca
www.artreum.ca
நந்தா உணவகம்
NANTHA TAKEOUT & CATERING
416 - NANTHA -1
416 - 626 - 8421
Best Caters in Town
RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage
RAISING YOUR VALUE
(416) 287-2222
www.remaxcommunity.ca
ஈழமுரசு
உதயன்
செந்தாமரை
அனலை எக்ஸ்பிரஸ்
Analai Express
செய்தி
Seithy.com
சங்கத்தமிழ்
CTR

# வெளிவந்துவிட்டது

## உலக வணிகம்
## ULAGA VANIKAM

## 2024




## விளம்பரமின்றி வியாபாரமில்லை

தங்கள் வணிகத்தை மேம்படுத்திக்கொள்ள உலக வணிகத்தில்
உங்கள் விளம்பரமும் இடம்பெற அழையுங்கள்

www.ulagavanikam.ca

**437-345-4203**



# இருள் விலகிய காலம்




உறக்கம் கலைந்து சோமன் கண் விழித்தான். எவ்வளவு நேரம் தூங்கிக் கொண்டிருந்தான் என்பது அவனுக்கு ஞாபகத் தில் இல்லை.

கிடந்தபடியே தலையைத் திருப்பி வீதியைப் பார்த்தான். வீதி ஆளரவமற்றுப்போய்க் கிடந்தது.

அவன் அந்த இடிந்த கட்டிடத்துக்கு வந்தது நேற்றா, அல்லது நேற்றைய முன்தினமா, அதுவும் கூட அவ்வளவாக ஞாபகத் தில் இல்லை. ஏதோ கனவு கண்டு மறந்தும் மறக்காமல் இருப் பது மாதிரியும் இருந்தது.

அது ஒரு கடையாக இருந்திருக்க வேண்டும். வீதியோரத் திலேயே கிடந்தது. இடிபாடுகளுக்குள் சிக்கி சில பொருட்கள் எடுக்கப்படாமல் வெளித்தெரிந்தன. உட்சுவரில் ஆங்காங்கு “ஷெல் பீஸ்” பட்ட வடுக்கள். ஓடுகளும், கல்லுகளும், பனஞ் சலாகைகளும், மரந்தடிகளும் கும்பல் கும்பலாயும் அங்கொன் றும் இங்கொன்றுமாயும் சிதறிப் போயிருந்தன. முன்பக்கத் தாழ்வாரப் “பிளேற்” உடைபட்டு கொங்கிறீற்றுக்குள் இடப்பட்ட இரும்புக் கம்பிகள் தெரியக் கிடந்தது. அதுதான் அவனது வெயில் மழைக் காப்பிடமாய்ப் போனது.



கிடந்தபடியே மேலே பார்த்தான். சரிந்திருந்த சுவரினூடே நிர்மலமாய் நீலமும், சாம்பல் நிறமும் கலந்த நிறத்தில் காலையா மாலையா என்று கூடக் கூறமுடியாதளவுக்கு வானம். வெளிர் நீலம் பூசப்பட்ட கடையில் உட்பக்க சுவரோர மூலையில் அவனது உடமையென்று சொல்லக்கூடிய ஒரு தோற்பை இருந் தது. அதற்குள் அதன் கொள்ளளவுக்கும் மீறிய பொருட்களைத் திணித்திருந்தமையால் பை விம்மிப் புடைத்து ஆங்காங்கு உள்ளிருக்கும் பொருட்களின் உறுத்தல்கள் தெரிந்தன.

சுவரின் அடிப்பாகத்தில் இருந்து பல்லி ஒன்று மேல் நோக்கி இளைப்பாறிப் போனது. இத்தனைக்கும் இது எப்படி உயிர்வாழ முடிந்தது? இந்தச் “ஷெல்” மழைக்குள் அது எவ்வாறு உயிர் தப் பியது? என்று நினைக்கக் கூட அவனுக்கு சக்தியோ அவகாசமோ அல்லது அவசியம் இல்லையோ பார்வையை மீண்டும் வீதிக்குச் செலுத்தினான். உடல் அப்படியே இருக்க தலை மட்டும் திரும்பிக்கொண்டது.

இப்போது வீதியில் ஒரு வயதான பெண்ணும், ஒரு பதினேழு வயதிற்குள் மதிக்கத்தக்க இளம் பெண்ணும் போய்க்கொண் டிருந்தார்கள். அந்த வயதான அம்மா நீலக்கட்டம் போட்ட சோலை கட்டியிருந்தாள். தலையில் ஏதோ சுமைகள் அழுத்த இடது கைமேலே பிடித்திருந்தது. மறு கையில் கறுப்பு நிறத்தில் பெட்டி ஒன்று தொங்கியது. அந்தப் பெண் சைக்கிளை உருட்டிய படி சென்றாள். சைக்கிளின் பின் கரியலில் உரப்பையில் நிரம் பிய சாமான்கள் கிடந்தன. இருவரும் வேகமாய்ப் போய் சந் தியால் திரும்ப சந்தியில் நின்ற பாலை மரம் மறைக்கப் பார்வை யில் இருந்தும் விலகிப் போனார்கள்.

சோமனுக்கு உடலெல்லாம் மசமசவென்று உடையோடு ஒட் டியது. வாய் கசகசவென்றிருந்தது. கால், கை, முதுகெல்லாம் ஏதோ ஊர்வதும் கடிப்பதும் போலிருந்தது.

கடைசியாய் எப்போது சாப்பிட்டேன் என்றுகூட அவனுக்கு நினைவில் இல்லை.

வானத்தைப் பார்த்து மலங்க மலங்க விழித்தான். கொஞ்சம் கொஞ்சமாய் நினைவு திரும்பியபோது – முன்பிருந்த வாழ்வு சீரழிந்து உருப்படாமல் போனது. நெஞ்சுக்குள் வலித்தது. இப்படி எத்தனை காலம் இடம் பெயர்ந்து இடம்பெயர்ந்து முகவரி இழந்து முடங்கிப் போய்க் கிடப்பது. மனைவி பிள்ளைகளது ஞாபகம் இதயத்தைக் கிழித்துப் போட்டது. அழ வேண்டும் போல் இருந்தது. தொண்டை கம்மியது. கண்களில் தேங்கி நின்ற கண்ணீர் கன்னங்களில் வழிந்தது.

தீவகத்தில் பிறந்து வளர்ந்த வனப்பான நினைவுகள் மனசை குடைந்தன. ஈரக்கடல் நனைக்கும் அந்தத் தீவுத்திடலின் தூரங் களிலெல்லாம் அவள் ஓடி விளையாடும் நாட்களும் பின்னாளில் துளசியைக் கல்யாணம் செய்து கொண்ட அந்த வசீகரப் பொழுதுகளும் கண்களில் நிழலாடின.

இளநீல நிறக் கண்களும், மஞ்சள் நிறக் கால் கைகளில் பொன்னிற ரோமங்களும் ஐந்தரை அடிக்குக்கிட்ட வளர்ந் திருந்த தோற்றமும் கொண்டு எந்தவொரு ஆண்மகளையும் கவர்ந்து விடுமளவிற்கு கவர்ச்சியாய் இருந்தாள் துளசி. அவள் சோமனையும் கவர்ந்து விட்டதில் எந்தவித ஆச்சரியமும் இருக்கவில்லை.

ஆனால் அவனது தகப்பன் செல்லத்துரையருக்கு மட்டும் அவ ளைப் பிடித்துப் போகவில்லை. “ஏன்ரா கழுதை! உனக்கு ஊரில வேற பொட்டையள் கிடைக்கேல்லையே. அவளைப் போய் செய்யப் போறன் எண்டுறாய்?…”

அவது எதுவுமே பேசவில்லை. அவரது எதிர்ப்புக்களை எல்லாம் பொருட்படுத்தாமல் ஒருநாள் துளசியைக் கல்யாணம் செய்து கொண்டான்.

ஒன்றை இழந்துதானே இன்னொன்றைப் பெறவேண்டுமாம். தந்தையின் அன்பை இழந்து துளசியின் துணையைத் தேடிக் கொண்டு தனிக்குடித்தனம் போய்விட்டான்.

பின்னாளில் ஒருமுறை தாய் மட்டும் வந்து அவர்கள் இருவரையும் வீட்டுக்கு வரும்படி கூறி அழுதுவிட்டுப் போனாள்.

துளசி எவ்வளவு வற்புறுத்தியும் அவன் தகப்பனின் முகத்தில் விழிப்பதற்கு மறுத்துவிட்டான். அவளும் அடிக்கடி கேட்பாள். அவள் சம்மதிக்காமல் விடவே அலுத்துப்போய் அவளும் விட்டு விட்டாள்.

தகப்பன் ஏன் அவளை வெறுத்தார் என்பது கடைசி வரைக்கும் அவனுக்குத் தெரியவில்லை.

அதன் பின் ஒரு நாள் சிறீலங்கா இராணுவத்தின் முற்றுகைக் குள் தீவகம் நசிந்து போனதால், பிறந்த மண்ணை விட்டு வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்குத் தள்ளப்பட்ட போது, சிறுபிள்ளை போல் தேம்பித் தேம்பி அழுதான்.

துளசி கலங்கிய கண்களோடு பின்னால் நடந்துவர ஒரு பொம்மையைப் போல் முன்னால் நகர்ந்து பண்ணைப் பாலத் தைத் கடந்து இருவரும் போனார்கள்.

பிறகு தாய் தந்தையினரின் நிலை பற்றியே தெரியாமல் போனது. அவர்கள் தீவகத்தை விட்டு வந்தார்களா?

அல்லது பிறந்த ஊரை விட்டு வர முடியாமல் தவித்துப் போய் தனித்துக் கிடந்தார்களா? தனித்துக் கிடந்தவர்களை இரா ணுவம் என்ன பண்ணியதோ? எதுவும் தெரியாமல் போன தோடு அவர்களைப் பற்றிய நினைவுகளும் மெல்ல மெல்லக் குறையத் தொடங்கியது.

அதன்பின் குழந்தைகளோடு வலிகாமத்தில் வாழ்ந்த வாழ்க்



கையையும் குலைத்து கிளாலிக் கடல்நீரேரி கடந்து கிளிநொச்சிக்கு வந்தார்கள். வந்த மறு வாரமே ஒரு பலசரக்குக் கடையில் அவன் உதவியாளனாகச் சேர்ந்து கொண்டதோடு கடை முதலாளியின் காணியிலேயே சிறு கொட்டிலையும் கட்டிக் கொண்டான்.

சோமன் கடையை விட்டு வரும் வரையும் துளசி பிள்ளைகளோடு மணிக்கணக்காய் காத்துக் கிடப்பாள். அந்த வேளைகளில் நினைவுகள் அலைகளிக்கும். ஒவ்வொரு இடமாய்க் குந்தியெழும்பும் அவல வாழ்க்கையை நினைத்து கல்லாகிப் போவாள். அவள் அப்படி கலங்கிப் போயிருக்கும் சில வேளைகளில் படலைச் சத்தம் கேட்கும். கண்களைத் துடைத்தபடி எழுந்து பார்ப்பாள். சோமன் வந்துகொண்டிருப்பான்.

அன்றும் வழமைபோல் அவன் கடைக்குப்போய் விட்டிருந்தான். துளசியும், பிள்ளைகளும் அவனுக்காகச் காத்துக்கிடந்தார்கள்.

“டும்… டுடும்… டம்… டமார்…” என்ற பேரொலிகளோடு கிளிநொச்சி நகரே “ஷெல்” மழையில் குளித்தது. கட்டிடங்கள் இடிந்து கற்கள் சொரிந்து விழும் சத்தங்கள்; மரங்கள் சொரிந்து விழும் சத்தங்கள் - ஓடுபவர்கள் - ஒருவரை ஒருவர் பற்றிக்கொண்டு விழுபவர்கள் - அலறுபவர்கள் - அமளிதுமளிப்பட்டு வேகமாய் விரையும் வாகனங்கள் இத்தனையும் ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட கொடூரத்தின் விளைவுகளே.



சோமன் வேலை பார்த்த கடைக்கருகிலும் சலீர் பளீரென சத்தங்கள். காதடைக்க வெளியே பாய்ந்து பெறி பிடித்தவனாய் ஓடினான். பிரதான தார்ச்சாலையில் இருந்து இறங்கி வீட்டை நோக்கி போகும் ஒற்றையடிப்பாதையில் மூச்சிரைக்க விரைந்தான்.

அவனுக்கு முன்னாலும் எதிரிலும் நிறையப் போர் ஓடினார்கள். நகரெங்கும் ஆங்காங்கே பெரும் சத்தங்கள் கேட்ட வண்ணமேயிருந்தன.

இளைக்க இளைக்க ஓடி வந்தவன் படலை திறந்து பார்வையைக் கொட்டில் இருந்த பக்கம் பரப்பினான். கொட்டிலின் மேலாக, பக்கத்தில் நின்றிருந்த வேப்பமரம் முறிந்து விழுந்து கிடந்தது.

கால்கள் இயங்க மறுத்தம் தள்ளாடியபடி. அருகில் சென்றான். நெஞ்சு திக் திக்னென்று வேகமாய் அடித்தது. கிளைக்குள் துளசியும் பிள்ளைகளும் குலைந்து போய்க் கிடந்தார்கள். மூச்சையற்று விடும் போல் இருந்தது… “ஆ… ஆ…” என்று சத்தம் தொண்டைக்குள்ளேயே அடங்கிப் போக அலறினான்.

அந்தச் சம்பவங்கள் நடந்து இரண்டு மாதங்கள் கடந்து விட்டன. அதன் பிறகு தன்னியல்பிழந்து திரிந்தான். நடந்து நடந்து திருமுறிகண்டி கடந்து வந்தான். ஒரு நாளைக்கு ஒரு நேரம் கூட உண்பது குறைவு, சில வேளைகளில் இரண்டு நாள் கழித்தும் சாப்பிடுவான்.

தெருவோர மர நிழல்களும். இடிபாடடைந்த கட்டிடங்களும் அவனுக்குப் புகலிடமளித்தன.

“பீம்… பீம்” எங்கோ மிக அருகில் “கிபீர்” விமானங்கள் ஒன்றன் பின் ஒன்றாய் குண்டுத் தாக்குதல் செய்து கொண்டு வட்டமடித்துப் போனதால் அவன் நினைவு கலைந்தது.

அவை தூரப் போய்விட்ட பின்னும் இரைச்சல் இன்னும் அவன் காதுகளில் கேட்ட வண்ணமேயிருந்தது.

குளிர் காற்று வீசியது. வானத்தை அண்ணார்ந்து பார்த்தான். கருமுகில்கள் திரண்டு கொண்டு வந்தன. மரங்கள் பேயாட்டம் ஆடின, உடல் சிலிர்த்தது, தெற்குப் புறமிருந்து சோவென்ற சத்தத்தோடு மழை பெய்து கொண்டு வந்தது. அவன் கிடந்த படியே கிடந்தான். பெரிய பெரிய துளிகளாய் விழுந்தன. அவன் கிடந்த படியெ கிடந்தான். மழை பெய்து கொண்டிருந்தது. அவன் கிடந்தபடியே கிடந்தான். தார் வீதியில் மழைத்துளியின் தெறிப்பு ஒரு அடி உயரத்துக்கும் மேலாக வெள்ளைத் தூறலாய் தெரிந்தது.

வெள்ளம் பாயுமளவிற்கு பெரும் மழை பொழிந்தது.

அவன் கிடந்த கட்டிடத்திற்கருகில் இருந்த ஓடையில் செம்பாட்டு நிறத்தில் வெள்ளம் பாய்ந்தது.

வானம் மூடிக் கிடந்தது. இப்போதைக்கு விடும் மழை போல் தெரியவில்லை. ஆனால் அவன் கிடந்த படியெ கிடந்தான்.

வெள்ளத்தில் அள்ளுண்டு என்னென்னமோ வெல்லாம் போயின.

அவன் தலையில் இருந்து வடிந்த தண்ணீர் கடவாய் வழியே வாய்க்குள் போய் உவர்த்தது.

திடீரென்று எங்கோ இருந்து ஒரு பெரும் காற்றுக்குச் சுழல் வீசியடித்தது.

மழைச்சாரல் ஒருபாடாய்ப் பெய்யாமல் சிதறிப் பெய்தது.

காற்றுச் சுழன்றடித்ததால் தென்புறமிருந்து வந்த மழை முகிற் கூட்டம் கலைந்து போவது நன்றாய்த் தெரிந்தது.

முகிற் கூட்டத்தினிடையே நிர்மலமான வானத்தின் ஒரு ஊடு தெரிந்தது. மழைச் சாரலும் மெதுவாய் நின்று முழுதாய் ஓய்ந்து போனது. காற்று மட்டும் விடாமல் அடித்துக் கொண்டேயிருந்தது.

ஓடி ஒளிந்த கரு முகில்களுக்கிடையே சூரியனின் ஒளிக்கீற்றொன்று அவன் முகத்தில் விழுந்து தகதகத்தது. களைப்பும் சோர்வும் நீங்கியது போலிருந்தது.

நன்றி: முல்லைக்கோணேஸ்

**முக்கிய அறிவித்தல்**
**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**
sangathamilcanada@gmail.com

# 31ம் நாள் நினைவுப் பகிர்வு



மண்ணில்
04.03.1938

விண்ணில்
23.02.2024

## அமரர் பாலசுந்தரம் சீவரட்ணம்

காரைநகரை பிறப்பிடமாகவும், உருத்திரபுரம் – தமிழீழம், மார்க்கம் – கனடாவை வதிவிடமாகவும்,

யாழ். காரைநகரைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி உருத்திரபும், கனடா மார்க்கம் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட பாலசுந்தரம் சீவரத்தினம் அவர்கள் 23.02.2024 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சீவரட்ணம் (அதிபர்), பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், MAK கந்தையா (தொழிலதிபர்), மீனாச்சி கந்தையா, யுகனேஸ்வரி கந்தையா தம்பதிகளின் அன்பு மருமகனும்,

சந்திரதேவி பாலசுந்தரம் அவர்களின் அன்புக் கணவரும்,

ரமேஷ், பிரகாஷ், காலஞ்சென்ற ஜெகதீஸ், குமதினி (ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

நந்தினி ரமேஷ், சுகந்தி பிரகாஷ், கோகுலானந்தன் பசுபதி ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,

காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், லீலாவதி (ஆசிரியை), ஜீவமணி (ஆசிரியர்), ஜெயமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

காலஞ்சென்ற சந்திரேஷ்வேரி, சந்திரகுமார், சந்திரகுமாரி, காலஞ்சென்ற சந்திரசூரியகுமாரி, சந்திரசூரியகாந்தி, சந்திரசூரியகுமார் (தொழிலதிபர்), சந்திரசூரிய இந்திராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

பிரதீபா, பிரவீணா, ஆபிஷா, ஆதித்தியன், ஆஷா, சாருஜென், அனிஷயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அமரர் பாலசுந்தரம் அவர்களினது இறுதிக்கிரியைகள் 26.02.2024 அன்று மார்க்கம் - கனடாவில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தகவர்: சந்திரதேவி - மனைவி, ரமேஷ் - மகன், பிரகாஷ் - மகன், குமதினி - மகள்

தொடர்புகளுக்கு: 647-871-2337

– நினைவுகளுடன் குடும்பத்தினர் –

# 14 வருடங்களாகத் தொடரும் தென் தமிழீழ மக்களின் காணி மீட்புப் போராட்டம்!



02.03.2024

யுத்தத்தால் இடம்பெயர்ந்த, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான தமிழர்கள், மீண்டும் தமது சொந்த நிலத்தில் மீளக் குடியேற அதிகாரிகள் தொடர்ந்து தடை விதித்து வருவதாக குற்றஞ்சாட்டுகின்றனர்.

யுத்தம் நிறைவுக்கு வந்த கடந்த 2009ஆம் ஆண்டு முதல், கடந்த 14 வருடங்களாக சொந்த நிலத்தில் மீளக்குடியேறுவதற்கான தமது போராட்டம் தொடர்வதாக அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீள்குடியேற்றுவதற்கும், காணிகளை விடுவிப்பதற்கும், வடமாகாணத்தில் எஞ்சியிருக்கும் இடைத்தங்கள் முகாமில் தங்கியுள்ளவர்களை மீள் குடியேற்றுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருதாக வெளிவிவார அமைச்சர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் விசேட பிரிவில் பெப்ரவரி 27ஆம் திகதி உரையாற்றியிருந்தார்.

அம்பாறை, பொத்துவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கனகர் கிராமத்தைச் சேர்ந்த 278 குடும்பங்கள், தமது சொந்தக் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி அமைச்சர் உரையாற்றிய தினத்திற்கு முதல்நாள் (பெப்ரவரி 26) கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தன.

கனகர் கிராமத்தில் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்த மக்கள், பொத்துவில் பிரதேச செயலகம் முன்பாகவும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

தமக்கு சொந்தமான நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகளை வன பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் விடுவிக்க மறுப்பதாக அந்த மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பல வருட போராட்டத்தின் பின்பு இந்த வருடம் தைப்பொங்கல் தினத்தன்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் 73 பேருக்கு மாத்திரம் காணி உரிமை பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும், ஏனையவர்களுக்கும் காணி உரிமையை வழங்குமாறு அந்த மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

"தயவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். எங்களைப் போட்டு வதைக்காதீர்கள். எங்களுக்கு இருப்பதற்கு காணி இல்லை ஒரு குடும்பத்திற்குள் 3, நான்கு குடும்பங்கள் இருக்கு. கிராம சேவகர் உள்ளிட்ட அனைவருக்கும் தெரியும் எங்களது நிலைப்பாடுகள். எங்களுடைய காணியை மாத்திரம் தாருங்கள். வேறு ஒன்றையும் நாம் அரசாங்கத்திடம் கேட்கவில்லை." என போராட்டத்தில் ஈடுபட்ட தாய் ஒருவர் கோரியுள்ளார்.

போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடிய பொத்துவில் பிரதேச செயலாளர் எம். ஐ. பிர்னாஸ், 73 பேருக்கு காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ள விடயத்தை சுட்டிக்காட்டியதோடு, ஏனைய மக்களுக்கான காணிகள் அடையாளம் கண்டு, அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

**மீள்குடியேறும் முயற்சி**

நாட்டில் இடம்பெற்ற மோதல் காரணமாக 1990ஆம் ஆண்டு, கனகர் கிராமத்தைச் சேர்ந்த 278 குடும்பங்கள் அங்கிருந்து வெளியேறி, திருக்கோயில், பொத்துவில் உள்ளிட்ட பிரதேசங்களில் அமைந்துள்ள உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தங்கியிருந்தனர்.

யுத்தம் நிறைவடைந்த பின்னர், 2009ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில், கனகர் கிராமத்துக்கு அந்த மக்கள் திரும்பிய வேளை, தாம் வாழ்ந்த மற்றும் விவசாயம் செய்த காணிகளின் ஒரு பகுதியை வன பாதுகாப்புத் திணைக்களம் தமக்குரியது எல்லையிட்டிருந்ததோடு எஞ்சிய பகுதி இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்துள்ளது.

இந்த நிலையில் அங்கிருந்து திரும்பிச் சென்ற மக்கள் சட்ட ரீதியாக தமது காணிகளை விடுவிக்கும் முயற்சிகளை முன்னெடுத்ததாக பிராந்திய ஊடவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் தமது பிரச்சினைக்கு உரிய தீர்வு கிடைக்காத நிலையில், காணிகளை விடுவிக்குமாறு கனகர் கிராம மக்கள் அவ்வப்போது போராட்டங்களை முன்னெடுத்தபோதிலும் எவரும் அந்த மக்களுக்கு உரிய தீர்வினை வழங்கவில்லை என அந்த பிரதேச ஊடகவியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த நிலையில், கடந்த 2018ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதி முதல் அந்த மக்கள் ஆரம்பித்த தொடர் போராட்டம் 500 நாட்களை நெருங்கிய நிலையில் 2020ஆம் ஆண்டு இறுதியில் அரசியல்வாதிகள் மற்றும் பிரதேச அரச அதிகாரிகள் வழங்கிய வாக்குறுதியை அடுத்து நிறைவுக்கு வந்தது.

அப்போதைய சிறீலங்கா ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் வடக்கு கிழக்கு மாகாண மக்களின் நிலங்களை விடுவிக்கும் வேலைத் திட்டத்தின் ஓரங்கமாக பொத்துவில் கனகர் கிராம மக்களின் காணியும் விடுவிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

முதற்கட்டமாக எல்லைகளை கண்டறியும் செயற்பாடுகளை நில அளவைத்திணைக்களம் ஆரம்பித்திருந்தது. எனினும் அந்தப் பணி பின்னர் கிடப்பில் போட்டப்பட்டது.

எவ்வாறெனினும் இதுவரை தமது பூர்வீக காணிகளை விடுவிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என அந்த மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

**கிராம் எப்போது உருவாக்கப்பட்டது?**

கனகர் கிராமம் சமுளை மரங்கள் நிறைந்த சமுளஞ்சேனையாகத்தான் இருந்திருக்க வேண்டுமென பிரதேச ஊகடவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். 1950ஆம் ஆண்டு காலப் பகுதியில் காடுகள் வெட்டப்பட்டு, சேனைப்பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

1960 - 1980ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொஞ்சம் கொஞ்சமாக குடும்பங்கள் குடியேறிய நிலையில் முழு கிராமமாக அந்த பிரதேசம் மாறியுள்ளது.

1981ஆம் ஆண்டு, ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பொத்துவில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், அமைச்சருமான காலஞ்சென்ற எம்.சி.கனகரெத்தினம் தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் ஊடாக, 30 வீடுகளை அமைத்து, கனகர் கிராமம் என்ற பெயரையும் சூட்டியுள்ளார்.

அதன் பின்னர் குடும்பங்கள் விரிவடையவே குடியிருப்புகளும் பெருகியுள்ளன.

1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிராமத்தில் சுமார் 278 குடும்பங்கள் வசித்து வந்துள்ளதோடு, ஒரு குடும்பத்திற்கு மூன்று முதல் ஐந்து ஏக்கர் வரையில் காணிகள் இருந்ததாகவும் கனகர் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.



கனகர் கிராமம் தற்போது பெரும் காடுபோல் காட்சியளித்தாலும், பாழடைந்து இடிந்துபோயுள்ள நிலையில் குடியிருப்புகள் காணப்படுவதாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.



தமிழீழத்தில் அமைதிப்படை என்ற போர்வையில்
இந்தியப்படை புரிந்திட்ட அடக்குமுறைக்கு எதிராக
19.03.1988 அன்றிலிருந்து 19.04.1988 வரையிலான
சாகும்வரை உண்ணா நோன்புப் போராட்டத்தில்
உயிர் நீத்த நாட்டுப்பற்றாளர்

# ஈகைச்சுடர் அன்னை பூபதி